# அழகப்பா பல்கலைக்கழகம்

தேசியத் தர நிர்ணயக் குழுவின் மூன்றாம் சுற்றுத் தர மதிப்பீட்டில் A+(CGPA: 3.64) தகுதியும்
மனிதவள மேம்பாட்டு அமைச்சகம் - பல்கலைக்கழக மானியக்குழுவின் முதல் தரப்
பல்கலைக்கழகம் மற்றும் தன்னாட்சித் தகுதியும் பெற்றது)

காரைக்குடி - 630003

## தொலைநிலைக்கல்வி இயக்ககம்

பி.லிட். (தமிழ்)
இரண்டாம் பருவம்
107 22

# நன்னூல் - சொல்லதிகாரம்

**Author:**

**DR. M.CHITHAMBARAM**, *Associate Professor in Tamil, Tamil Research Centre, Alagappa Government Arts College , Karaikudi-630003*

"The copyright shall be vested with Alagappa University"

All rights reserved. No part of this publication which is material protected by this copyright notice may be reproduced or transmitted or utilized or stored in any form or by any means now known or hereinafter invented, electronic, digital or mechanical, including photocopying, scanning, recording or by any information storage or retrieval system, without prior written permission from the Alagappa University, Karaikudi, Tamil Nadu.

Information contained in this book has been published by VIKAS® Publishing House Pvt. Ltd. and has been obtained by its Authors from sources believed to be reliable and are correct to the best of their knowledge. However, the Alagappa University, Publisher and its Authors shall in no event be liable for any errors, omissions or damages arising out of use of this information and specifically disclaim any implied warranties or merchantability or fitness for any particular use.

**Reviewer : Prof. M. KARMEGAM (Retd)** *Professor &Head, Department of Tamil Alagappa Govt Arts College, Karaikudi – 630003*

VIKAS®

Vikas® is the registered trademark of Vikas® Publishing House Pvt. Ltd.

VIKAS® PUBLISHING HOUSE PVT. LTD.
E-28, Sector-8, Noida - 201301 (UP)
Phone: 0120-4078900 • Fax: 0120-4078999
Regd. Office: A-27, 2nd Floor, Mohan Co-operative Industrial Estate, New Delhi-110044
• Website: www.vikaspublishing.com • Email: helpline@vikaspublishing.com

**Work Order No. AU/DDE/DE1-15/Printing of Course Materials/2020 Dated 5.2.2020 Copies1500**

# பாடத்திட்டம்

நோக்கம்:

மரபிலக்கணம் அறிதல் - நன்னூல் சொல்லதிகாரத்தில் பெயர், வினை, இடை, உரி, பொதுவியலை விளக்கி நிறுத்தற்குறிகள் இட வேண்டிய நெறிமுறைகளை விளக்குதல்.

பிரிவு – 1

கூறு 1 - சொல் பொதுவிலக்கணம்

கூறு 2 - திணை – பால் - வழக்குச் சொற்கள்

கூறு 3 - பெயர்ச்சொல் - பொது இலக்கணம் - பிரிப்பு முறைகள்

கூறு 4 - ஆகுபெயர்

பிரிவு 2

கூறு 5 - வேற்றுமை

கூறு 6 - வினைச்சொல் - பொது இலக்கணம்

கூறு 7 - வினைச் சொல்லின் வகைகள்

கூறு 8 - வினைமுற்று வகைகள்

பிரிவு – 3

கூறு 9 - எச்சம் வகை – ஒழிபு

கூறு 10 - பாதுவியல் எச்சம்,தொகைநிலை, தொகாநிலைத் தொடர்மொழிகள்,வழுவமைதி-

கூறு 11 - பொதுவியல் - பிற்பகுதி – வினா - விடை மரபு, பொருள்கோள், போன்றன

பிரிவு 4

கூறு 12 - இடைச்சொற்களின் வகை - விரி

கூறு 13 - உரிச்சொல் வகை - விரி

கூறு 14 - நடைமுறைத் தமிழ் - நிறுத்தற் குறிகள் - கால், அரை, முக்காற் புள்ளிகள்ஂ மேற்கோள், வியப்பு, வினாக் குறிகள் - தேவையும் நெறிமுறைகளும்

# தாள் - 10722

## இலக்கணம் - நன்னூல் - சொல்லதிகாரம்

### பிரிவு – 1 நன்னூல் - பெயரியல்

பயன்: சொல் எழுத்துக்களினால் ஆகி வருவுது என அறிதல்.

எழுத்துக்களின் சேர்க்கை ஒரு பொருளை உணர்த்தினால் சொல் எனப்படும் என அறிதல்

சொல்லினது பொதுவாகிய இலக்கணத்தை அறிந்து பயன்கொள்ளல்

தமிழில் அமைந்துள்ள மூவகை மொழிகள் பற்றியும் அவை பொருள் உணர்த்தி நிற்கும் விதம் பற்றியும் அறிதல்

திணை பிரிப்பு முறையினை தெரிதல்

திணைக்கோட்பாட்டின் அடிப்படையிலான பால் பிரிவினைத் தெரிந்து பயன்கொள்ளல்

வழக்கு இன்னதென்பதனையும் அதன் வகைகளையும் அறிதல்

பெயர்ச்சொற்களின் வகைகளை அறிந்து அவை மொழியில் பயின்று வரும் தன்மையையும் அதன் வகைப்பாடுகளையும் அறிந்து பயன்கொள்ளல்

ஒரு பெயர் பிறிதொன்றிற்கு ஆகி வருதலையும் அவ்வாறு ஆகி வரும் பெயர்களின் தன்மையையும் ஆகுபெயர் என்பதன் வழி அறிதல்

# 10722 - இலக்கணம் நன்னூல் - சொல்லதிகாரம்

குறிப்பு

## கூறு – 1

## நன்னூல் - பெயரியல் - சொல் - பொது இலக்கணம

நன்னூல் சொல்லதிகாரம் பெயரியல், வினையியல், பொதுவியல், இடையியல், உரியியல் எனப்பெறும் ஐந்து இயல்களைத் தன்னுட் கொண்டமைந்ததாகும். பெயரியல், வினையியல், இடையியல், உரியியல் என்பன முறையே அவ்வவ் இயல்களின் இலக்கணத்தை உணர்த்தி நின்றன. நடுவாய் அமைந்த பொதுவியல் முன்னே அமைந்த பெயரியலுக்கும் வினையியலுக்கும் பின்வரும் இடையியல் உரியியலுக்கும் பொதுவான இலக்கணத்தை உணர்த்தி நின்றது.

பெயரியல் எனப்பெறும் இவ் அதிகாரம் சொல்லின்கூறுபாடும் அதன் இயல்பும் உணர்த்துதல்நுதலிற்று.

ஒருமொழி, தொடர்மொழி, பொதுமொழி என்னும் இக்கூற்றினதாகி இருதிணையையும் அவற்றினது கூறுபாட்டான்வரும். ஆண்பால், பெண்பால், பலர்பால், ஒன்றன்பால், பலவின்பால் எனப்பெறும் ஐம்பாற்பொருளையும் தன்னையும் தன்மை, முன்னிலை, படர்க்கை என்னும் மூன்றிடத்தினும்வழக்கின்கண்ணும்செய்யுளின்கண்ணும் வெளிப்படையானும் குறிப்பானும் விளக்குவது சொல்லாகும்.

முச்சகம் நிழற்று முழுமதி முக்குடை

அச்சுதன் அடிதொழுது அறைகுவன் சொல்லே.

இவ்வதிகாரம் யாது உணர்த்துதற்காக எழுந்தது என்பது, அதிகாரம் பெயர் முறையானே விளங்கும். ஆயின்,இவ்வதிகாரம்என்ன பெயர்த்தோ எனின், சொல்லிலக்கணம் உணர்த்திற்றாதலால் சொல்லதிகாரம் என்னும் பெயர்த்து. சொல்லப்படுதலாற் சொல்லெனக்கொள்க.மேலதிகாரத்தோடு இதற்கு இயைபு என்னையோவெனின், அது வருஞ்சூத்திரத்தானேவிளங்கும்.

இவ்வதிகாரத்துள், ஏனை ஓத்தினாற் சொல்லிலக்கணம் உணர்த்தினானோவெனின், ஐவகை ஓத்தினான் உணர்த்தினானென்க.

அவற்றுள், இம்முதல் ஓத்து என்னுதலியதோவெனின், ஓத்துநுதலிய தூஉம்ஓத்தினது பெயர் உரைப்பவே விளங்கும். ஆயின்,இவ்வோத்துஎன்னபெயர்த்தோவெனின், பெயர்ச்சொற்களது இயல்பு உணர்த்திற்றாதலாற்பெயரியல் என்னும் பெயர்த்து.

இவ் ஓத்தினுள், இத்தலைச்சூத்திரம் என்னுதலிற்றோ எனின், ஒருசாரார்வேண்டும் சிறப்புப்பாயிரம் உணர்த்துதல் நுதலிற்று.

குறிப்பு

இம்மூன்று உலகத்திலுள்ள உயிர்கட்கெல்லாம் நிழலைப் பண்ணாநின்றநிறைந்த மதியைப்போன்ற மூன்றுகுடையையுடையனான கேடில்லாதானுடையஅடிகளைவணங்கிச் சொல்லிலக்கணத்தை யான் சொல்லுவேன்.

ஒருநூலுக்கு எடுத்துக்கோடற்கண்ணே வணக்கம் சொல்லுதலன்றிஅதிகாரந்தோறும் சொல்லவேண்டியது யாதோவெனின், நூலொன்றேயெனினும்அதிகாரங்கள் பொருளான் வேறுபடுதலானும் முன்னை ஒருசாரார் ஒரோவதிகாரத்தை ஒருநூலாக்கிப் பாயிரமுழுதும் பகர்தலானும்,ஆதியும் அந்தமும் நடுவு மங்கலமும், ஓதிய முறைமையின் உரைப்பர் ஆயிடின், ஏதமில்லாத இருநிலக்கிழத்தி தான் இன்புற, நீதியம் பனுவல்கண் நிலவும் என்பவேஎன்ப ஆகலானும்,கற்றதனாய அடையும் சிறந்த உயர்ந்த பயனானது குற்றமற்றுமுற்றவுணர்ந்தஒருவன் பொற்றாள் இணைமலர்போற்றல்என்பவாகலானும் சொன்னாரெனக்கொள்க.

## சொல்லின் பொது இலக்கணம்:

ஒருமொழி தொடர்மொழி பொதுமொழி என்றா

இரு திணை ஐம்பால் பொருளையும் தன்னையும்

மூவகை இடத்தும் வழக்கொடு செய்யுளின்

வெளிப்படை குறிப்பின் விரிப்பது சொல்லே

இந்நூற்பா சொல்லின்கூறுபாடும் அதனியல்பும் உணர்த்துதல்நுதலிற்று.

ஒருமொழியும் தொடர்மொழியும் பொதுமொழியும் என்னும்இக்கூற்றினதாகி இருதிணையையும் அவற்றின் கூறுபாட்டான் வரும்பொருளையும்,தன்னையும் மூன்றிடத்தினும் வழக்கின்கண்ணும் செய்யுளின்கண்ணும் வெளிப்படையானும் குறிப்பானும் விளக்குவது, சொல்லாகும்.

## மூவகை மொழிகள்:

ஒருமொழி ஒரு பொருளன ஆம் தொடர்மொழி

பல பொருளன பொது இருமையும் ஏற்பன

ஒருமொழி எனப்படுவது பகுப்பிலவாய்நின்று ஒருபொருளைஉணர்த்துவனவாகும

. தொடர்மொழி என்பது இரண்டும் பலவுமானமொழிகள்தொகைநிலைவகையானும் தொகாநிலைவகையானும்

தொடர்ந்து நின்றுபலபொருளையுணர்த்துவன ஆகும்;பொதுமொழி எனப்படுவது ஒன்றாய் நின்றுஒருபொருளையுணர்த்தியும், தொடர்மொழியாய் நின்று பல பொருளையுணர்த்தியும்இருமைக்கும் பொதுவாய் நிற்பனவாகும்

குறிப்பு

ஒருமொழி:

நம்பி நங்கை

சாத்தன், சாத்தி

நிலம், நீர்

மணி பொன்;

- பெயர்ச்சொல்

வந்தான், வந்தாள்,வந்தார்,

போனான், போனாள், போனார்,

வந்தது, வந்தன - வினைச்சொல்

தில், மன்;

- இடைச்சொல்

தஞ்சம்

தவ

- உரிச்சொல்

## தொடர்மொழி:

தொடர்மொழி எனப்படுவது தொடர்ந்தமொழி ஆகும். தொடருதல் என்பது மொழிகள் தம்முள் பொருள்நோக்குடையவாதல்.பொருள்நோக்குடையவாதல் என்பதுதொகைநிலைவகையானும் தொகாநிலைவகையானும் தம்முட் பொருள் கொண்டுமுற்றல். அவை எவ்வாறு பொருள்கொண்டு முற்றும் எனின், அடை, பொருள்கொண்டு முற்றும்; பொது,சிறப்புக்கொண்டுமுற்றும்; பெயர், வினையும் பெயரும் வினாவும் கொண்டு முற்றும்;தெரிநிலைமுற்றும் குறிப்புமுற்றும் பெயரெச்சமும், பெயர்கொண்டுமுற்றும்;வினையெச்சம், முற்றுவினையும் பெயரெச்சவினையும் தொழிற்பெயரும், சிறுபான்மைவினையெச்சமும் கொண்டு முற்றும்; இடைச்சொல்லும் உரிச்சொல்லும் உருபுகளும்,பெயரும் வினையும் கொண்டுமுற்றும். அவற்றுள், அடை

பொருள்கொண்டு முற்றுமாறுகருங்குவளை என்பது. பொதுச் சிறப்புக் கொண்டு முற்றுமாறு போல அமையும்.

குறிப்பு

குன்றக் கூகை,

கொல்யானை,

குளிர்மதி;

கருங்குதிரை,

பெருங் குளிர்;

குயின்மொழி,

மயிலியல்;

கபிலபரணர்,

கைகால்;

பொற்றொடி,

புனைகோதை

என்பன தொகைநிலைத் தொடர்மொழிகள்.

கொற்றனை,

கொற்றனால்,

கொற்றற்கு,

கொற்றனில்,

கொற்றனது,

கொற்றன்கண்;

ஓணனுண்டான்,

கொற்றாகொள்,

உண்டசாத்தன்,

உண்டுவந்தான்,

உண்டானூரன்,

பூணன்பொன்னன்.

அதுகொல் றோழி காமநோயே

நனிபே தையே நயனில் கூற்றம்

வந்தேன்வந்தேன்

குறிப்பு

**தொகாநிலைத் தொடர்மொழிகள்.**

ஒருசொல்முன் ஒருசொல் வருங்கால் தொகைநிலை தொகாநிலையாகியஇவ்விரண்டன் பகுதிகளுள் ஒன்றுபற்றியன்றி வாராதெனக்கொள்க.

எட்டு,

கொட்டு,

கொண்மூ,

தாமரை,

வேங்கை,

குறுஞ்சூலி,

ஆனை வணக்கி

முயன்மோவாய்,

முதியாள்கூந்தல்,

சிறியாணங்கை,

எழுந்திருந்தான்,

வாரா நின்றான்,

உரைத்திட்டான்

என்னும் தொடக்கத்தன.

மேற்கண்ட சொற்கள் முறையே, எள்ளைத்து, கொள்ளைத்து,கொள்ளைமூ, தாவுகின்றமரை, வேகின்றகை, குறிதாகிய சூலினையுடையவள், ஆனையைவணக்குவான், முயலினதுமோவாய், முதியாளது கூந்தல், சிறியாளாகிய நங்கை, எழுந்துபின்இருந்தான், வந்துபின் நின்றான், உரைத்துஇட்டான், இவ்வாறு பலபொருளை உணர்த்தினவாய்நிற்றலால்பொதுமொழிகள்ஆகும்.

வெற்பன்,பொருப்பன், குழையன், கரியனென்றற் றொடக்கத்தன பலபொருளுணர்த்தின எனினும்,

குறிப்பு

அவை தொடர்மொழிகளாகாது பகுபதமாகும்.

சேனை,குழாம், தொறு, பல, பலர், சில, சிலர், வந்தார், வந்தன என்பனவும்பொருள் பலவேனும் பொருளியைபாகிய ஒருபொருளை உணர்த்தியதான் ஒருமொழியாம்

இதற்கு இவ்வாறன்றி, ஒருபொருளைத் தருவனஒருமொழி; பலபொருளைத் தருவன தொடர்மொழி;

ஒரு பொருளதாகக்கொள்ளவும்பலபொருளதாகக் கொள்ளவும் வருவன பொது மொழியென்பதும் பொருத்தப்பாடு உடையதாகும்

அவன், சாத்தன்,கொற்றன், நிலம், நீர்; - பெயர்ச்சொல்

வந்தான், சென்றான், வந்தது, நின்றது- வினைச்சொல்

தில், மன்; - இடைச்சொல்

தஞ்சம், தவ– உரிச்சொல்

தனியேநின்று ஒருபொருள்தந்த ஒருமொழிகள்

அவர்கள், பலர்,சிலர்,

அவை, பல, சில,

சேனை, குழாம், தொறு,

வந்தன,போயின

- என்பன தனியேநின்று பலபொருள்தந்த தொடர்மொழிகள்.

பொதுமொழி: ஒரு நோக்கில் ஒருசொல்லாய் நின்று ஒருபொருள் தருவதாகவும் மற்றொரு நோக்கில் பல சொல்லாய் நின்று பல பொருள் தருவதாகவும் அமைவது பொதுமொழி எனப்படும்.

அவர், அரசர், வந்தார்

- என்பன ஒருவரை உயர்த்துச்சொல்லியவழிஒருமொழியாகவும் பலரைக் குறித்தவழி தொடர்மொழியாய் நிற்றலின் தனியேநின்ற பொதுமொழிகள்.

வேங்கை புலி – ஒரு மொழி

வேங்கை – வேம் + கை ( வேகும் கை) – தொடர்மொழி

ஆகையால் வேங்கை தொடர்மொழி

தாமரை – ஒருமொழி

தா + மரை – தாவுகின்ற மான் - தொடர்மொழி

ஆகையால் தாமரை பொதுமொழி

சேரன் திருமணக்குட்டுவன், சோழன் கரிகாற்பெருவளத்தான், பாண்டியன் நெடுஞ்செழியன்.

குறிப்பு

- என்பன தொடர்மொழியாய் நின்று ஒருபொருள் தந்த ஒருமொழி.

கொற்றிமகன் உவாப்பதினான்கு, பதினொன்று

- என்பன தொடர்மொழியாய்நின்று பலபொருள்தந்த தொடர் மொழித்தொடர்மொழிகள்.

எட்டு,கொட்டு, கொண்மூ, வேங்கை

- என்பன தொடர்மொழியாய்நின்று பலபொருள்தந்தனவும் ஒரு மொழியாய்நின்று ஒருபொருள்தந்தனவுமாக நின்றதொடர்மொழிப் பொதுமொழிகள்.

பயிற்சி வினாக்கள்:

1 சொல்லின் பொது இலக்கணம் குறித்து எழுதுக.

ஒருமொழி தொடர்மொழி பொதுமொழி என்றா
இரு திணை ஐம்பால் பொருளையும் தன்னையும்
மூவகை இடத்தும் வழக்கொடு செய்யுளின்
வெளிப்படை குறிப்பின் விரிப்பது சொல்லே

ஒருமொழியும் தொடர்மொழியும் பொதுமொழியும் என்னும் இக்கூற்றினதாகி இருதிணையையும் அவற்றின் கூறுபாட்டான் வரும்பொருளையும் மூன்றிடத்தினும் வழக்கின்கண்ணும்செய்யுளின்கண்ணும் வெளிப்படையானும் குறிப்பானும் விளக்குவது, சொல்லாகும்.

2. தொடர் மொழி என்பதனை சுட்டி உரைக்க.

## தொடர்மொழி:

தொடர்மொழி எனப்படுவது தொடர்ந்தமொழி ஆகும். தொடருதல் என்பது மொழிகள் தம்முள் பொருள்நோக்குடையவாதல்.பொருள்நோக்குடையவாதல் என்பது தொகைநிலைவகையானும் தொகாநிலைவகையானும் தம்முட் பொருள் கொண்டுமுற்றல். அவை எவ்வாறு பொருள்கொண்டு முற்றும் எனின், அடை, பொருள்கொண்டு முற்றும்; பொது,சிறப்புக்கொண்டுமுற்றும்; பெயர், வினையும் பெயரும் வினாவும் கொண்டு முற்றும்;தெரிநிலைமுற்றும் குறிப்புமுற்றும் பெயரெச்சமும், பெயர்கொண்டுமுற்றும்;வினையெச்சம், முற்றுவினையும் பெயரெச்சவினையும் தொழிற்பெயரும்,

சிறுபான்மைவினையெச்சமும் கொண்டு முற்றும்; இடைச்சொல்லும் உரிச்சொல்லும் உருபுகளும்,பெயரும் வினையும் கொண்டுமுற்றும். அவற்றுள், அடை பொருள்கொண்டு முற்றுமாறுகருங்குவளை என்பது பொதுச் சிறப்புக் கொண்டு முற்றுமாறு போல அமையும்.

**குறிப்பு**

குன்றக் கூகை

3.பொதுமொழி என்பதனை விளக்குக.

பொதுமொழி: ஒரு நோக்கில் ஒருசொல்லாய் நின்று ஒருபொருள் தருவதாகவும் மற்றொரு நோக்கில் பல சொல்லாய் நின்று பல பொருள் தருவதாகவும் அமைவது பொதுமொழி எனப்படும்.

அவர், அரசர், வந்தார்

என்பன ஒருவரை உயர்த்துச்சொல்லியவழிஒருமொழியாகவும் பலரைக் குறித்தவழி தொடர்மொழியாய் நிற்றலின் தனியேநின்ற பொதுமொழிகள்.

வேங்கை புலி – ஒரு மொழி
வேங்கை – வேம் + கை ( வேகும் கை) – தொடர்மொழி
ஆகையால் வேங்கை தொடர்மொழி
தாமரை – ஒருமொழி
தா + மரை – தாவுகின்ற மான் - தொடர்மொழி
ஆகையால் தாமரை பொதுமொழி

### கூறு – 2

## திணை – பால் - வழக்குச் சொற்களின் வகை

### திணை - பாகுபாடு

மக்கள் தேவர் நரகர் உயர்திணை

மற்று உயிர் உள்ளவும் இல்லவும் அ.ஃறிணை

மக்களும் தேவரும் நரகரும் உயர்திணையாகும்; அவரை ஒழித்துநின்றஊர்வன தவழ்வன, தத்துவன, நடப்பன, பறப்பன, நிற்பனவான விலங்கு ஆதி உயிருள்ளனவும் நீர், வளி, தீ, என்றற் தொடக்கத்து உயிரில்லனவுமானகாட்சிமுதற்பொருளும், அணு, உயிர், ஆகாயம் என்னும் தொடக்கத்துக் கருத்துமுதற்பொருளும், கோடு, சினை, தோல், பூ, மெய், வாய், கண், மூக்கு, செவி,ஓசை,நாற்றம், ஒளி, சுவை, ஊற்றுத் தொடக்கத்துக் காட்சிச் சினைப்பொருளும், உணர்தல்,காண்டல், செய்தல், துய்த்தல், தொடக்கத்துக் கருத்துச்

சினைப்பொருளுமாகியஎல்லாப்பொருளும் அ.ஃ.றிணையாம் என்பார் ஆறுமுக நாவலர்

குறிப்பு

உயரென்பது மிகுதி; திணை என்பது பொருள்; உயர்ந்த திணை உயர்திணையென வினைத்தொகை. உயர்திணையல்லாத திணை அ.ஃ.றிணை. இது பண்புத்தொகை. ஆண்பாலும் பெண்பாலும் அடங்குதற்கு மக்கள், தேவர், நரகரெனக் கதிமேல்வைத்து ஓதினாரென்க. தேவரை முன்வையாது இவ்வாறு வைத்த காரணம் என்னையோ எனின், மக்களுள் பிறந்தே தானமும் தவமுமியற்றி வானமும் வீடும் எய்தல் சிறப்பினான், முன்னே மக்களையும், அவ்வாறல்லது எய்தற்கு அருமைச்சிறப்பினான் அவர்பின்னே தேவரையும்,தீவினையால் வருதலின் இழிபினான் அவர்பின்னே நரகரையும் வைத்தாரென்க. இன்னும் மானிடமென்பதும், ஞாயிறு, திங்கள், செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி, சனி, கதிர், மதிதிரு என்றற் தொடக்கத்து வாய்பாட்டான் வரும்பெயர்களும் அ.ஃ.றிணைமுடிபினவாம் என்றற்கும் அவ்வாறு வைத்தாரெனக்கொள்க என்பதும் ஆறுமுக நாவலர் உரையாகும்.

மகன்வந்தான், மகள்வந்தாள், மக்கள்வந்தார்;

தேவன் வந்தான்,தேவிவந்தாள், தேவர்வந்தார்;

நரகன்வந்தான், நரகிவந்தாள்,நரகர்வந்தார் - உயர்திணை.

யானைவந்தது, யானைகள்வந்தன;

மரம் வளர்ந்தது,மரங்கள்வளர்ந்தன; நீர்வந்தது, நெருப்பெழுந்தது - அ.ஃ.றிணை.–

## உயர்திணை – பால் பாகுபாடு

ஆண் பெண் பலர் என முப் பாற்று உயர்திணை

ஆண்பாலும் பெண்பாலும் பலர்பாலும் என்று மூன்று பாலினை உடைத்தாகும் உயர்திணை.

ஆடவர்,காளையர் முதலிய ஆண்பன்மையையும், பெண்டிர், மங்கையர் முதலிய பெண்பன்மையையும், மக்கள் அவர் முதலிய அவ்விருவர் பன்மையையும் அடக்கிப் பலர்பால் என்றார் . பின் பலவின்பால் என்பதும் அது.

## அ.ஃ.றிணை பால் பாகுபாடு:

ஒன்றே பல என்று இரு பாற்று அ.ஃ.றிணை

ஒன்றன்பாலும் பலவின்பாலும் என்று இரண்டு பாலினை உடைத்தாகும் அ∴றிணை .

குறிப்பு

அ∴றிணை யுள்ளும், களிறு, சேவல் என்பன முதலிய ஆண்பாலும், பிடி, பேடை முதலிய பெண்பாலும் உள எனினும், அவ் ஆண்பாலும் பெண்பாலும், உயிர் உள்ளனவற்றுள், புழு,மரம் முதலிய சிலவற்றிற்கும் மட்டுமே உள்ளன. உயிர் இல்லாதனவும் அ∴றிணையின்கண் அமையும் என்பதனாலும் அவற்றுள் ஆண், பெண் பகுப்பு முறை இல்லை என்பதனாலும் அப்பகுப்பு ஒழித்து எல்லாவற்றிற்கும் பொருந்த ஒன்றன்பால் என்றார் நன்னூலார்.

**பேடு:**

பெண்மை விட்டு ஆண் அவாவுவ பேடு ஆண்பால்

ஆண்மை விட்டு அல்லது அவாவுவ பெண்பால்

இருமையும் அ∴றிணை அன்னவும் ஆகும்

பெண்மை விட்டு ஆண்தன்மை மிக்கிருந்தால்பேடு ஆண்பால் ஆண் தன்மையை விட்டு பெண் தன்மை மிக்கிருந்தால்பேடுகள் உயர்திணை பெண்பாலாகும் இவ்விருவகைப் பேடுகளும் உயர்திணையாம் அன்றி அ∴றிணையை ஒப்பனவும் ஆகும் .

பெண்ணவா யாணிந்த பேடி யணியாளோ

- கண்ணவாத் தக்க கலம்

- எனப் பெண் இலக்கணம் சிறந்தமையினாலே பெண்பால்பட்டது.

ஆண்பால்பட்டதற்கும், அ∴றிணையை ஒத்து நின்றதற்கும் இலக்கியம் வந்தவழிக் காண்க என்பர் உரையாசிரியர்கள்

**படர்க்கைச் சொற்கள்:**

படர்க்கை வினைமுற்று நாமம் குறிப்பின்

பெறப்படும் திணை பால் அனைத்தும்: ஏனை

இடத்து அவற்று ஒருமைப் பன்மைப் பாலே

படர்க்கை வினைமுற்றுச் சொல்லையும் படர்க்கைப் பெயர்ச்சொல்லையும் முன் குறித்தால் பெறப்படும் திணைபால் அனைத்தும், அவ் இருவகைச் சொல்லும் கருவியாக இருதிணையும் ஐம்பாலும் பெறப்படும்.

ஏனை இடத்து (வினைமுற்று நாமம் குறிப்பின் ) அதாவது ஒழிந்த தன்மை முன்னிலைகளின் வினைமுற்றுச் சொல்லையும் பெயர்ச்சொல்லையும் முன் குறித்தால், அவற்று ஒருமைப்பால்

பன்மைப்பால் பெறப்படும். பின் அந்நால்வகைச் சொல்லும் கருவியாக இருதிணை ஐம்பாலுள் ஒருமைப்பாலும் பன்மைப்பாலும் பெறப்படும்.

குறிப்பு

அவன் - ஆண்பால்

அவள் - பெண்பால்

அவர்– பலர்பால்

அது– ஒன்றன் பால்

அவை – பலவின்பால்

**படர்க்கை வினைமுற்றுகள்:- திணை, பால் உணர்த்தல்:**

நடந்தான் -ஆண்பால்

நடந்தாள்- பெண்பால்

நடந்தார்– பலர்பால்

நடந்தது– ஒன்றன் பால்

நடந்தன – பலவின்பால்

- படர்க்கை வினைமுற்றுச் சொல்லும் படர்க்கைப் பெயர்ச் சொல்லும், முன்பு தம்மை

உணர்த்திப் பின்பு இருதிணை ஐம்பால் பொருளையும் உணர்த்தின.

**தன்மை வினை முற்றுச் சொற்கள்:**

நடந்தேன் - ஒருமை

நடந்தேம் - பன்மை

**தன்மைப் பெயர்ச்சொல்**

யான் - ஒருமை

யாம் - பன்மை

முன்னிலை வினைமுற்றுச் சொல்:

நடந்தாய் - ஒருமை

நடந்தீர்—பன்மை

குறிப்பு

முன்னிலைப் பெயர்ச்சொல்:

நீ - ஒருமை

நீர்—பன்மை

- என்பன முன்னே தம்மை உணர்த்திப் பின்பு இருதிணை ஐம்பாலுள் ஒருமைப்பாலும் பன்மைப்பாலும் உணர்த்தின.

மூவிடங்களுள் ஒன்றற்குரிய வினைமுற்றும் பெயரும் தம்மையும் பொருளையும் இப்படி உணர்த்தும். எனவே இவ்விடங்களுக்குப் பொதுவாகிய வினைமுற்றுக்களும் பெயர்களும் பொதுமை நீங்கி ஓரிடத்திற்கு உரியவாகியும்,எச்சவினை முதலியனவும் இடைச்சொல்லும் உரிச்சொல்லும் பெயர்வினைகளைச் சார்ந்தும், இப்படியே தம்மையும் பொருளையும் உணர்த்தும் என்பதனை அறிக.

**மூவிடம்:**

தன்மை முன்னிலை படர்க்கை மூவிடனே

மூவிடம் தன்மை முன்னிலை படர்க்கை என்பதாகும்.

யான் - தன்மை

நீ— முன்னிலை

அவன் - படர்க்கை

வந்தேன்- தன்மை

வந்தாய் - முன்னிலை

வந்தான் - படர்க்கை

**வழக்கு இன்னது என்பது:**

இலக்கணம் உடையது இலக்கணப்போலி

மரூஉ என்று ஆகும் மூவகை இயல்பும்

இடக்கரடக்கல் மங்கலம் குழூஉக்குறி

எனும் முத் தகுதியோடு ஆறாம் வழக்கியல்

இலக்கணமுடையது இலக்கணப்போலி மரூஉ என்னும் மூவகை இயல்பு வழக்கோடுஇடக்கரடக்கல், மங்கலம், குழூஉக்குறி எனும் மூன்று தகுதி வழக்கும் சேர்த்து வழக்கியல் ஆறாம்.

குறிப்பு

## இயல்பு வழக்கு:

இலக்கணம் உடையது என்பது இலக்கணநெறியால் வருவது.. இலக்கணப்போலி என்பது இலக்கணம் இல்லையாயினும், இலக்கணம் உடையது போல் தொன்றுதொட்டு வழங்கப்பட்டு வருவது. மரூஉ என்பது தொன்றுதொட்டு வருதல் இன்றி இடையிலே சில எழுத்துக் கெட்டும் சில எழுத்துத் திரிந்தும், சில எழுத்துத் தோன்றியும், இலக்கணத்தில் சிதைந்து தானே மருவி வழங்குவது. இம்மூன்றும், எப்பொருட்கு எச்சொல் அமைந்ததோ அப்பொருளை அச்சொல்லால் கூறுதலால் இயல்பு வழக்கு எனப்பட்டன.

## இலக்கணம் உடையது:

நிலம், நீர், தீ, காற்று, வானம் - இலக்கணம் உடையன

## இலக்கணப்போலி:

இல்முன் - முன்றில்

நகர்ப்புறம் - புறநகர்

புறவுலா - உலாப்புறம்

கோவில் - கோயில்

பொதுவில் - பொதியில் - இலக்கணப் போலி

**மரூஉ**.:

அருமருந்தன்னபிள்ளை -அருமந்த பிள்ளை

மலையமானாடு - மலாடு

சோழநாடு - சோணாடு

பாண்டியனாடு - பாண்டிநாடு

மரவடி - மராடி

குளவாம்பல் - குளாம்பல் - மரூஉ.

குறிப்பு

## தகுதி வழக்கு:

இடக்கரடக்கல் என்பது, நன்மக்களிடத்தே சொல்லத் தகாத சொல்லை, அவ்வாய்பாடு மறைத்துப் பிற வாய்பாட்டாற் சொல்வது.

மலம் கழீஇ வருதும் என்பதைக் கால்கழீஇ வருதும் எனல்

பீ என்பதனை பகரவீ என்றும் பவ்வீ என்றும் கூறல்

மங்கலம் என்பது மங்கலம் இல்லாததை ஒழித்து மங்கலமாகச் சொல்வது

செத்தாரைத் துஞ்சினார் எனல்

ஓலையைத் திருமுகம் எனல்

இடுகாட்டை நன்காடு எனல்.

குழூஉக்குறி என்பது, ஒவ்வொரு கூட்டத்தார் யாதாயினும் ஒரு காரணம்பற்றி ஒரு பொருளினது சொற்குறியை ஒழித்து வேறொரு சொற்குறியால் சொல்வது.

பொற்கொல்லர் பொன்னைப் பறி எனல்

வேடர் கள்ளை, சொல் விளம்பி எனல்

யானைப் பாகர் ஆடையைக் கரை எனல்

மேற்கண்ட மூன்றும், அப்பொருளை அறிதற்கு அமைந்த சொல்லால் சொல்வது தகுதியன்று, வேறு ஒரு சொல்லால் சொல்வது தகுதி என்று நினைத்துக் கூறுதலால், தகுதி வழக்கு எனப்பட்டன.

## செய்யுள் இன்னது என்பது:

பல்வகைத் தாதுவின்உயிர்க்கு உடல் போல்பல

சொல்லால் பொருட்குஇடன் ஆக உணர்வினின்

வல்லோர் அணிபெறச் செய்வன செய்யுள்.

தோல், இரத்தம், இறைச்சி, மேதை, எலும்பு, மச்சை, சுவேதநீர் என்னும் எழுவகைத் தாதுக்களினால் உயிர்க்கு இடமாக இயற்றப்பட்ட உடம்பு போல,இயற்சொல், திரிசொல், திசைச் சொல், வடசொல் என்னும் நால்வகைச் சொற்களால் பொருளுக்கு இடமாக, கல்விஅறிவினால் செய்யுள் செய்ய வல்லவர் அலங்காரம் பெறச்செய்வன செய்யுளாகும் .

எழுத்தால் ஆனது சொல் எனவே, எழுத்து, சொல்,பொருள், அணி நான்கினாலும் உண்டாவது செய்யுள் என்பதாயிற்று.

குறிப்பு

”வருங்குன்ற மொன்றுரித் தோன்றில்லை யம்பல வன்மலயத்

திருங்குன்ற வாண ரிளங்கொடி யேயிட ரெய்த லெம்மூர்ப்

பருங்குன்ற மாளிகை நுண்கள பத்தொளி பாய நும்மூர்க்

கருங்குன்றம் வெண்ணிறக் கஞ்சுக மேய்க்குங் கனங்குழையே.

இக் கட்டளைக் கலித்துறை, இடம் அணித்தென்னும் பொருளுக்கு இடமாகித், தன்மை உவமை உருவக அணிகளும் பிறவும் உடைத்தாய் வந்தது.

அகர முதல எழுத்தெல்லாம் ஆதி

பகவன் முதற்றே உலகு

இக் குறள் வெண்பா கடவுள் வாழ்த்து என்னும் பொருளுக்கு இடமாகி எடுத்துக்காட்டு உவமை அணியும் நயமும் உடையதாய் அமைந்தது.

## வெளிப்படை, குறிப்பு:

ஒன்றொழி பொதுச்சொல் விகாரம் தகுதி

ஆகுபெயர் அன்மொழி வினைக்குறிப்பே

முதல் தொகை குறிப்போடு இன்ன பிறவும்

குறிப்பில் தருமொழி அல்லன வெளிப்படை

இருதிணை ஆண்பெண்ணுள் ஒன்றனை ஒழிக்கும் பொதுச் சொல்லும்,வலித்தல் முதலாகிய ஒன்பது விகாரச்சொல்லும்,மூவகைத் தகுதி வழக்குச்சொல்லும்,ஆகுபெயர்ச்சொல்லும், அன்மொழித்தொகைச் சொல்லும், வினைக்குறிப்புச் சொல்லும், முதற்குறிப்புச்சொல்லும், தொகைக்குறிப்புச் சொல்லும் ,இம்முதல் தொகை அல்லாத பல வழியாலும் வரும் குறிப்புச்சொல்லும் இவை போல்வன பிறவும் குறிப்பினால் இருதிணைஐம்பால் பொருள்களைத்தரும் சொற்களாம். இவை அல்லன எல்லாம் வெளிப்படையால் அப்பொருள்களைத் தரும் சொற்களாம். அவை முறையே நிலம், நீர், தீ, காற்று என்பன போன்று வெளிப்படையாக வரும்.

ஆயிரம் மக்கள் பொருதார் - மக்கள் என்னும் பொதுப்பெயரும்,பொருதார் என்னும் பொதுவினையும் உயர்திணைப் பெண்பாலை ஒழித்து, ஆண்பாலைக் குறிப்பால் உணர்த்தின.

குறுத்தாட்பூதம், மரைமலர்- இவ்விகாரச் சொற்கள், குறுந்தாள், தாமரை என்பனவற்றைக் குறிப்பால் உணர்த்தின.

கால்கழீஇ வருதும், திருமுகம், பறி - இத்தகுதி வழக்குச் சொற்கள், மலங்கழுவி வருதும், ஓலை, பொன் என்பனவற்றைக் குறிப்பால் உணர்த்தின.

## குறிப்பு

புளிதின்றான்,கடுத்தின்றான்- இவ்வாகுபெயர்கள், அவற்றின் பழத்தைக் குறிப்பால் உணர்த்தின.

பொற்றொடி தந்தபுனைமடல், அறற் கூந்தற்கில்லை அருள்- இவ் அன்மொழித் தொகைகள், அவற்றையுடைய மகளிரைக் குறிப்பால் உணர்த்தின.

இவன் இப்போது பொன்னன் - பொன்னன் என்பது பெயர்ப்பொருளை ஒழித்து, வினைக்குறிப்புப் பொருளைக் குறிப்பால் உணர்த்திற்று.

அறத்தா றிதுவென வெள்ளைக் கிழிபு -இம்முதற்குறிப்புச் சொற்கள் ."அறத்தா றிதுவென வேண்டா சிவிகை பொறுத்தானோ டூர்ந்தா னிடை என்னும் பாட்டைக் குறிப்பால் உணர்த்தின.

அலங்குளைப் புரவி யைவரொடு சினைஇ - ஐவர் என்னும் தொகைக் குறிப்புச்சொல் பாண்டவரைக் குறிப்பால் உணர்த்திற்று.

கற்கறித்து நன்கட்டாய்,

நீயீர் பெரிதுமறிதிர்

பாயா வேங்கை

உவர்க்கட லன்ன செல்வரு முளரே கிணற்றூற் றன்ன நீயுமாருளையே

பல்சான்றீரே பல்சான்றீரே கயன்முள் ளன்ன நரை முதிர் திரைகவுட் பயனின் மூப்பிற் பல்சான் றீரே

- இவை முதலானவை எல்லாம் பல வழியாலும் வரும் குறிப்புச்சொற்கள்.

இன்ன பிறவும் என்றதனால், தெரிநிலைவினை, குறிப்பு வினையாலணையும் பெயர்களும், தெரிநிலை வினைமுற்றாலும் குறிப்பு வினை முற்றாலும் வரும் எச்சங்களும், செய்யும் என்னும் முற்றும், கேட்குந போல முதலியவாக அ∴றிணை இடத்துச் சொல்லப்படுவனவும், ஆகிய இவை முதலானவை குறிப்பால் பொருள் உணர்த்தும் எனக்கொள்க.

### சொற்பாகுபாடு :

அதுவே,

இயற்சொல் திரிசொல் இயல்பின் பெயர்வினை

என இரண்டாகும்: இடைஉரி அடுத்து

நான்குமாம்:திசைவடசொல் அணுகாவழி



மேற்காட்டிய சொல் இயற்சொல்லும் திரிசொல்லும் என்னும் தன்மையையுடைய பெயர்ச்சொல்லும் வினைச்சொல்லும் என்று இரண்டாகும். இவற்றுடன் இடைச் சொல்லும் உரிச்சொல்லும் அடுத்து நான்குமாகும்.இவற்றுடன் திசைச்சொல்லும் வடசொல்லும் சேரா இடத்து.

எனவே, அதுவே எனக் குறித்து சொல், பெயர் இயற்சொல், பெயர்த் திரிசொல்,வினை இயற்சொல், வினைத் திரிசொல், இடை இயற்சொல், இடைத் திரிசொல், உரி இயற்சொல், உரித் திரிசொல் என எண்வகைப்படும் என்பதும், திசைச்சொல்லும் வடசொல்லும் சேர்ந்த இடத்துப் பத்துவகைப்படும் என்பதும் பெறப்படும்.

## இயற்சொல்:

செந்தமிழ் ஆகித் திரியாது யார்க்கும்

தம்பொருள் விளக்கும் தன்மைய இயற்சொல்

செந்தமிழ் நிலத்து மொழியாகி, திரிசொல்போல் ஆகாது கற்றோருக்கும் கல்லாதோருக்கும் ஒப்பத் தம்பொருளை விளக்கும் தன்மையை உடைய உலகவழக்கே இயற்சொல்லாகும் .

இயற்சொல் - இயல்பால் பொருள் உணரும் சொல்.

மண், பொன் - பெயர் இயற்சொல்.

நடந்தான் , வந்தான் - வினை இயற்சொல்.

அவனை, அவனால் - ஐ ஆல் என்பன இடை இயற்சொல்.

அழகு , அன்பு - உரி இயற்சொல்.

செந்தமிழ் நாடாவது பாண்டி வளநாடு; தமிழ் முனிவராகிய அகத்தியருக்கும் தமிழை வளர்த்த பாண்டியர்களுக்கும், சங்கப் புலவர்களுக்கும் உறைவிடம் அதுவாதலால் என்றறிக.

## திரிசொல்:

ஒரு பொருள் குறித்த பல சொல்லாகியும்

பல பொருள் குறித்த ஒரு சொல்லாகியும்

அரிதுணர் பொருளன திரிசொல் ஆகும்

குறிப்பு

ஒரு பொருளைக் கருதிய பலசொற்களாயும், பலபொருள்களைக் கருதிய ஒரு சொல்லாகியும், அரிதாகக் கற்றோர் அறியும் பொருளனவாய் வருவன திரிசொல்லாகும்.

அரிதுணர் பொருளன என்றதனால், ஒரு பொருள் குறித்த பல சொற்கள் உள்ளும், பலபொருள் குறித்த ஒரு சொற்கள் உள்ளும், இயற்சொல் ஒழியக் கொள்ளல் வேண்டும்.

திரிசொல்,,இயற்சொல்லின் வேறுபட்ட சொல், திரிதல்- வேறுபடுதல், வேறுபடுதல் என்றது இயற்சொல்போல இயல்பால் உணரப்படாது அரிதின் உணரப்படுதலை.

கிள்ளை, சுகம், தத்தை - கிளி என்னும் ஒரு பொருள் குறித்த பலபெயர்த் திரிசொல்.

வாரணம் - யானையும்,கோழியும்,சங்கும் முதலாகிய பல பொருள் குறித்த ஒரு பெயர்த் திரிசொல்

படர்ந்தான்,சென்றான் என்பன போயினான் என்னும் ஒருபொருள் குறித்த பல வினைத் திரிசொல். வரைந்தான், என்பது நீக்கினான், கொண்டான் என்னும் பல பொருள் குறித்த ஒரு வினைத் திரிசொல்.

சேறும், வருதும் - றும், தும் என்னும் விகுதிகள், தன்மைப் பன்மை எதிர் காலம் என்னும் ஒரு பொருள் குறித்த பல இடைத் திரிசொல்,

கொல் - ஐயமும் அசைநிலையுமாகிய பலபொருள் குறித்த ஓர் இடைத் திரிசொல்.

சால உறு, தவ, நனி, கூர், கழி - மிகுதி என்னும் ஒரு பொருள் குறித்த பல உரித் திரிசொல்

கடி - காப்பு, கூர்மை, அச்சம், கரிப்பு, விளக்கம், சிறப்பு,மணம் முதலிய பலபொருள் குறித்த ஓர் உரித்திரி சொல்

## திசைச்சொல்:

செந்தமிழ் நிலம்சேர் பன்னிரு நிலத்தினும்

ஒன்பதிற்று இரண்டில் தமிழொழி நிலத்தினும்

தம் குறிப்பினவே திசைச்சொல் என்ப

செந்தமிழ் நிலத்தைச் சேர்ந்த பன்னிரண்டு கொடுந்தமிழ் நிலங்களிலும்,பதினெண் மொழிகளுள்ளே தமிழ்நிலம் நீங்கலாக ஏனைய நிலங்களிலும் உள்ளோர்,தம்குறிப்பினவாய் அத்திசைகளினின்றும்

செந்தமிழ் நிலத்து வந்து வழங்குவன திசைச்சொல் என்று சொல்லுவர் புலவர்.

குறிப்பு

கொடுந்தமிழ்நாடு பன்னிரண்டையும்

தென்பாண்டி குட்டங் குடங்கற்கா வேண்பூழி

பன்றி யருவா வதன்வடக்கு - நன்றாய

சீத மலாடு புனனாடு செந்தமிழ்சேர்

ஏதமில் பன்னிருநாட் டெண்.

என்னும் வெண்பாவால் அறியலாம். புனல் நாடென்பது சோழநாடாகும்.

இவற்றுள், செந்தமிழ்ப் பாண்டிநாட்டுக்குத் தென்திசையிலுள்ள தென்பாண்டிநாட்டார் ஆவினைப் பெற்றம் என்றும் சோற்றைச் சொன்றி என்றும்,

குட்ட நாட்டார் தாயைத் தள்ளை என்றும்,

குட நாட்டார் தந்தையை அச்சன் என்றும்,

கற்காநாட்டார் வஞ்சரைக் கையர் என்றும்,

வேணாட்டார் தோட்டத்தைக் கிழார் என்றும்,

பூழிநாட்டார் சிறுகுளத்தைப் பாழி என்றும்,

அருவா நாட்டார் செய்யைச் செறு என்றும், சிறுகுளத்தைக் கேணி என்றும்,

அருவா வடதலையார் புளியை எகின் என்றும்,

சீதநாட்டார் தோழனை எலுவன் என்றும், தோழியை இகுளை என்றும் வழங்குவர் .

இனித் தமிழ்நிலத்தைச் சூழ்ந்த பதினேழ் நிலத்தையும்,

”சிங்களஞ் சோனகஞ் சாவகஞ் சீனந் துளுக்குடகங்

கொங்கணங் கன்னடங் கொல்லந் தெலுங்கங் கலிங்கம் வங்கங்

கங்க மகதங் கடாரங் கவுடங் கடுங்குசலந்

தங்கும் புகழ்த்தமிழ் சூழ்பதி னேழ்புவி தாமிவையே

என்பதனால் அறியலாம்.

அந்தோ என்பது சிங்களச் சொல்.

எருத்தைப் பாண்டில் என்பது தெலுங்குச் சொல்

குறிப்பு

மாமரத்தைக் கொக்கு என்பது துளுவச்சொல்.

**வடசொல்:**

பொது எழுத்தானும் சிறப்பு எழுத்தானும்

ஈர் எழுத்தானும் இயைவன வடசொல்

ஆரியத்திற்கும் தமிழிற்கும் பொதுவெழுத்தாலும் ஆரியத்திற்கே உரிய சிறப்பு எழுத்துத் திரிந்த எழுத்தாலும் இவ் இரண்டு எழுத்தினாலும்,செந்தமிழ்ச் சொல்லை ஒப்பனவாகி வடதிசையில் இருந்து செந்தமிழ் நிலத்து வந்து வழங்குவன வட சொல்லாகும்.

அமலம், கமலம், மேரு, காரணம், காரியம் - பொது எழுத்தால் அமைந்தன.

சுகி, போகி, சுத்தி - சிறப்பெழுத்தால் வந்தன.

அரன், அரி,கடினம், சலம் - ஈரெழுத்தாலும் இயைந்தன.

பயிற்சி வினாக்கள்:

1 திணைப்பாகுபாடு குறித்து எழுதுக.

மக்கள் தேவர் நரகர் உயர்திணை

மற்று உயிர் உள்ளவும் இல்லவும் அ.்.றிணை

மக்களும் தேவரும் நரகரும் உயர்திணையாகும்; அவரை ஒழித்துநின்றஊர்வன தவழ்வன தத்துவன நடப்பன பறப்பன நிற்பனவான விலங்காதி உயிருள்ளனவும் நீர் வளி தீ என்றற்றொடக்கத்து உயிரில்லனவுமானகாட்சிமுதற்பொருளும், அணு, உயிர், ஆகாயமென்னும் தொடக்கத்துக் கருத்துமுதற்பொருளும், கோடு சினை தோல் பூ மெய் வாய் கண் மூக்குச் செவி ஓசைநாற்றம் ஒளி சுவை ஊற்றுத் தொடக்கத்துக் காட்சிச் சினைப்பொருளும், உணர்தல் காண்டல் செய்தல் துய்த்தற் தொடக்கத்துக் கருத்துச் சினைப்பொருளுமாகியஎல்லாப்பொருளும் அ.்.றிணையாம்என்பார் ஆறுமுக நாவலர்

குறிப்பு

2.படர்க்கைச் சொற்களைச் சுட்டியுரைக்க.

படர்க்கைச் சொற்கள்:

படர்க்கை வினைமுற்று நாமம் குறிப்பின்

பெறப்படும் திணை பால் அனைத்தும்: ஏனை

இடத்து அவற்று ஒருமைப் பன்மைப் பாலே

படர்க்கை வினைமுற்றுச் சொல்லையும் படர்க்கைப் பெயர்ச்சொல்லையும் முன் குறித்தால் பெறப்படும் திணைபால் அனைத்தும், அவ் இருவகைச் சொல்லும் கருவியாக இருதிணையும் ஐம்பாலும் பெறப்படும்.

ஏனை இடத்து (வினைமுற்று நாமம் குறிப்பின் ) அதாவது ஒழிந்த தன்மை முன்னிலைகளின் வினைமுற்றுச் சொல்லையும் பெயர்ச்சொல்லையும் முன் குறித்தால் , அவற்று ஒருமைப்பால் பன்மைப்பால்பெறப்படும். பின் அந்நால்வகைச் சொல்லும் கருவியாக இருதிணை ஐம்பாலுள் ஒருமைப்பாலும் பன்மைப்பாலும் பெறப்படும்.

அவன் - ஆண்பால்

அவள் - பெண்பால்

அவர்– பலர்பால்

அது– ஒன்றன் பால்

அவை – பலவின்பால்

படர்க்கை வினை முற்றுகள்:- திணை, பால் உணர்த்தல்.

நடந்தான் -ஆண்பால்

நடந்தாள்- பெண்பால்

நடந்தார்– பலர்பால்

நடந்தது– ஒன்றன் பால்

நடந்தன – பலவின்பால்

- படர்க்கை வினைமுற்றுச் சொல்லும் படர்க்கைப் பெயர்ச் சொல்லும், முன்பு தம்மை

உணர்த்திப் பின்பு இருதிணை ஐம்பால் பொருளையும் உணர்த்தின.

குறிப்பு

3.வழக்கு என்பது குறித்து விளக்குக.

வழக்கு:

இலக்கணம் உடையது இலக்கணப்போலி

மரூஉ என்று ஆகும் மூவகை இயல்பும்

இடக்கரடக்கல் மங்கலம் குழூஉக்குறி

என்னும் முத் தகுதியோடு ஆறாம் வழக்கியல்

இலக்கணமுடையது இலக்கணப்போலி மரூஉ என்னும் மூவகை இயல்பு வழக்கோடு இடக்கரடக்கல், மங்கலம், குழூஉக்குறி எனும் மூன்று தகுதி வழக்கும் சேர்த்து வழக்கியல் ஆறாம்.

இயல்பு வழக்கு

இலக்கணம் உடையது என்பது இலக்கணநெறியால் வருவது.இலக்கணப்போலி என்பது இலக்கணம் இல்லையாயினும், இலக்கணம் உடையது போல் தொன்றுதொட்டு வழங்கப்பட்டு வருவது. மரூஉ என்பது தொன்றுதொட்டு வருதல் இன்றி இடையிலே சில எழுத்துக் கெட்டும் சில எழுத்துத் திரிந்தும், சில எழுத்துத் தோன்றியும், இலக்கணத்தில் சிதைந்து தானே மருவி வழங்குவது. இம்மூன்றும், எப்பொருட்கு எச்சொல் அமைந்ததோ அப்பொருளை அச்சொல்லால் கூறுதலால் இயல்பு வழக்கு எனப்பட்டன.

இலக்கணம் உடையது:

நிலம், நீர் தீ, காற்று, வானம் - இலக்கணம் உடையன

இலக்கணப்போலி:

இல்முன் - முன்றில்

நகர்ப்புறம் - புறநகர்

புறவுலா - உலாப்புறம்

கோவில் - கோயில்

பொதுவில்- பொதியில் - இலக்கணப் போலி

மரூஉ.:

அருமருந்தன்னபிள்ளை -அருமந்த பிள்ளை

மலையமானாடு - மலாடு சோழநாடு- - சோணாடு

பாண்டியனாடு - பாண்டிநாடு

மரவடி - மராடி

குளவாம்பல் - குளாம்பல் - மரூஉ.

தகுதி வழக்கு:

இடக்கரடக்கல் என்பது, நன்மக்களிடத்தே சொல்லத் தகாத சொல்லை , அவ்வாய்பாடு மறைத்துப் பிற வாய்பாட்டாற் சொல்வது

மலம் கழீஇ வருதும் என்பதைக் கால்கழீஇ வருதும் எனல்

பீ என்பதனை பகரவீ என்றும் பவ்வீ என்றும் கூறல்

மங்கலம் என்பது மங்கலம் இல்லாததை ஒழித்து மங்கலமாகச் சொல்வது

செத்தாரைத் துஞ்சினார் எனல்

ஓலையைத் திருமுகம் எனல்

இடுகாட்டை நன்காடு எனல்.

குழூஉக்குறி என்பது, ஒவ்வொரு கூட்டத்தார் யாதாயினும் ஒரு காரணம்பற்றி ஒரு பொருளினது சொற்குறியை ஒழித்து வேறொரு சொற்குறியால் சொல்வது .

பொற்கொல்லர் பொன்னைப் பறி எனல்

வேடர் கள்ளை சொல் விளம்பி எனல்

யானைப் பாகர் ஆடையைக் கரை எனல்

மேற்கண்ட மூன்றும், அப்பொருளை அறிதற்கு அமைந்த சொல்லால் சொல்வது தகுதியன்று, வேறு ஒரு சொல்லால் சொல்வது தகுதி என்று நினைத்துக் கூறுதலால், தகுதி வழக்கு எனப்பட்டன.

4.செய்யுளின் இலக்கணத்தைத் தருக.

செய்யுளின் இலக்கணம்:

பல்வகைத் தாதுவின்உயிர்க்கு உடல் போல்பல
சொல்லால் பொருட்குஇடன் ஆக உணர்வினின்

வல்லோர் அணிபெறச் செய்வன செய்யுள்.

குறிப்பு

தோல், இரத்தம், இறைச்சி, மேதை, எலும்பு, மச்சை, சுவேதநீர் என்னும் எழுவகைத் தாதுக்களினால் உயிர்க்கு இடமாக இயற்றப்பட்ட உடம்பு போல,இயற்சொல், திரிசொல், திசைச் சொல், வடசொல் என்னும் நால்வகைச் சொற்களால் பொருளுக்கு இடமாக, கல்விஅறிவினால் செய்யுள் செய்ய வல்லவர் அலங்காரம் பெறச்செய்வன செய்யுளாகும்.

எழுத்தால் ஆனது சொல் எனவே, எழுத்து, சொல்,பொருள், அணி நான்கினாலும் உண்டாவது செய்யுள் என்பதாயிற்று.

”வருங்குன்ற மொன்றுரித் தோன்றில்லை யம்பல வன்மலயத்

திருங்குன்ற வாண ரிளங்கொடி யேயிட ரெய்த லெம்மூர்ப்

பருங்குன்ற மாளிகை நுண்கள பத்தொளி பாய நும்மூர்க்

கருங்குன்றம் வெண்ணிறக் கஞ்சுக மேய்க்குங் கனங்குழையே.

இக் கட்டளைக் கலித்துறை, இடம் அணித்தென்னும் பொருளுக்கு இடமாகித், தன்மை உவமை உருவக அணிகளும் பிறவும் உடைத்தாய் ,வந்தது.

அகர முதல எழுத்தெல்லாம் ஆதி

பகவன் முதற்றே உலகு

இக் குறள் வெண்பா கடவுள் வாழ்த்து என்னும் பொருளுக்கு இடமாகி எடுத்துக்காட்டு உவமை அணியும் நயமும் உடையதாய் அமைந்தது.

5.ஒன்றொழி பொதுச்சொல் விளக்கியுரைக்க.

இருதிணை ஆண்பெண்ணுள் ஒன்றனை ஒழிக்கும் பொதுச் சொல் ஒன்றொழி பொதுச்சொல் எனப்படும்.

ஆயிரம் மக்கள் பொருதார் - மக்கள் என்னும் பொதுப்பெயரும்,பொருதார் என்னும் பொதுவினையும் உயர்திணைப் பெண்பாலை ஒழித்து, ஆண்பாலைக் குறிப்பால் உணர்த்தின

6.சொல்லின் பாகுபாடுகளை விவரி.

சொற்பாகுபாடு :

அதுவே,

இயற்சொல் திரிசொல் இயல்பின் பெயர்வினை

என இரண்டாகும்: இடைஉரி அடுத்து

நான்குமாம்: திசைவடசொல் அணுகாவழி

மேற்காட்டிய சொல் இயற்சொல்லும் திரிசொல்லும் என்னும் தன்மையையுடைய பெயர்ச்சொல்லும் வினைச்சொல்லும் என்று இரண்டாகும். இவற்றுடன் இடைச் சொல்லும் உரிச்சொல்லும் அடுத்து நான்குமாகும்.இவற்றுடன் திசைச்சொல்லும் வடசொல்லும் சேரா இடத்து.

குறிப்பு

எனவே, அதுவே எனக் குறித்து சொல், பெயர் இயற்சொல், பெயர்த் திரிசொல்,வினை இயற்சொல், வினைத் திரிசொல், இடை இயற்சொல், இடைத் திரிசொல், உரி இயற்சொல், உரித் திரிசொல் என எண்வகைப்படும் என்பதும், திசைச்சொல்லும் வடசொல்லும் சேர்ந்த இடத்துப் பத்துவகைப்படும் என்பதும் பெறப்படும்..

## இயற்சொல்:

செந்தமிழ் ஆகித் திரியாது யார்க்கும்

தம்பொருள் விளக்கும் தன்மைய இயற்சொல்

செந்தமிழ் நிலத்து மொழியாகி, திரிசொல்போல் ஆகாது கற்றோருக்கும் கல்லாதோருக்கும் ஒப்பத் தம்பொருளை விளக்கும் தன்மையை உடைய உலகவழக்கே இயற்சொல்லாகும் .

இயற்சொல் - இயல்பால் பொருள் உணரும் சொல்.

மண், பொன் - பெயர் இயற்சொல்.

நடந்தான், வந்தான் - வினை இயற்சொல்.

அவனை, அவனால் - ஐ ஆல் என்பன இடை இயற்சொல்.

அழகு, அன்பு - உரி இயற்சொல்.

செந்தமிழ் நாடாவது பாண்டி வளநாடு; தமிழ் முனிவராகிய அகத்தியருக்கும் தமிழை வளர்த்த பாண்டியர்களுக்கும், சங்கப் புலவர்களுக்கும் உறைவிடம் அதுவாதலால் என்றறிக

## திரிசொல்:.

ஒரு பொருள் குறித்த பல சொல்லாகியும்

பல பொருள் குறித்த ஒரு சொல்லாகியும்

அரிதுதுணர் பொருளன திரிசொல் ஆகும்

ஒரு பொருளைக் கருதிய பலசொற்களாயும், பலபொருள்களைக் கருதிய ஒரு சொல்லாகியும், அரிதாகக் கற்றோர் அறியும் பொருளனவாய் வருவன திரிசொல்லாகும்.

அரிதுணர் பொருளன என்றதனால், ஒரு பொருள் குறித்த பல சொற்கள் உள்ளும், பலபொருள் குறித்த ஒரு சொற்கள் உள்ளும், இயற்சொல் ஒழியக் கொள்ளல் வேண்டும்.

**குறிப்பு**

திரிசொல்,,இயற்சொல்லின் வேறுபட்ட சொல், திரிதல் - வேறுபடுதல், வேறுபடுதல் என்றது இயற்சொல்போல இயல்பால் உணரப்படாது அரிதின் உணரப்படுதலை.

"கிள்ளை, சுகம், தத்தை - கிளி என்னும் ஒரு பொருள் குறித்த பலபெயர்த் திரிசொல்.

வாரணம் - யானையும்,கோழியும்,சங்கும் முதலாகிய பல பொருள் குறித்த ஒரு பெயர்த் திரிசொல்

படர்ந்தான்,சென்றான் என்பன போயினான் என்னும் ஒருபொருள் குறித்த பல வினைத் திரிசொல், வரைந்தான் என்பது நீக்கினான், கொண்டான் என்னும் பல பொருள் குறித்த ஒரு வினைத் திரிசொல்.

சேறும், வருதும் - றும், தும் என்னும் விகுதிகள், தன்மைப் பன்மை எதிர் காலம் என்னும் ஒரு பொருள் குறித்த பல இடைத் திரிசொல்,

கொல் - ஐயமும் அசைநிலையுமாகிய பலபொருள் குறித்த ஓர் இடைத் திரிசொல்.

சால உறு, தவ, நனி, கூர், கழி - மிகுதி என்னும் ஒரு பொருள் குறித்த பல உரித் திரிசொல்

கடி - காப்பு, கூர்மை, அச்சம், கரிப்பு, விளக்கம், சிறப்பு,மணம் முதலிய பலபொருள் குறித்த ஓர் உரித்திரி சொல்.

## திசைச்சொல்:.

செந்தமிழ் நிலம்சேர் பன்னிரு நிலத்தினும்
ஒன்பதிற்று இரண்டில் தமிழொழி நிலத்தினும்
தம் குறிப்பினவே திசைச்சொல் என்ப

செந்தமிழ் நிலத்தைச் சேர்ந்த பன்னிரண்டு கொடுந்தமிழ் நிலங்களிலும்,பதினெண் மொழிகளுள்ளே தமிழ்நிலம் நீங்கலாக ஏனைய நிலங்களிலும் உள்ளோர்,தம்குறிப்பினவாய் அத்திசைகளினின்றும் செந்தமிழ் நிலத்து வந்து வழங்குவன திசைச்சொல் என்று சொல்லுவர் புலவர்.

கொடுந்தமிழ்நாடு பன்னிரண்டையும்

தென்பாண்டி குட்டங் குடங்கற்கா வேண்பூழி

குறிப்பு

பன்றி யருவா வதன்வடக்கு - நன்றாய

சீத மலாடு புனனாடு செந்தமிழ்சேர்

ஏதமில் பன்னிருநாட் டெண்.

என்னும் வெண்பாவால் அறியலாம்.. புனல் நாடென்பது சோழநாடாகும்.

இவற்றுள், செந்தமிழ்ப்பாண்டிநாட்டுக்குத் தென்திசையிலுள்ள தென்பாண்டிநாட்டார் ஆவினைப் பெற்றம் என்றும் சோற்றைச் சொன்றி என்றும்,

குட்ட நாட்டார் தாயைத் தள்ளை என்றும்,

குட நாட்டார் தந்தையை அச்சன் என்றும்,

கற்காநாட்டார் வஞ்சரைக் கையர் என்றும்,

வேணாட்டார் தோட்டத்தைக் கிழார் என்றும்,

பூழிநாட்டார் சிறுகுளத்தைப் பாழி என்றும்,

அருவா நாட்டார் செய்யைச் செறு என்றும், சிறுகுளத்தைக் கேணி என்றும்,

அருவா வடதலையார் புளியை எகின் என்றும்,

சீதநாட்டார் தோழனை எலுவன் என்றும், தோழியை இகுளை என்றும் வழங்குவர்.

இனித் தமிழ்நிலத்தைச் சூழ்ந்த பதினேழ் நிலத்தையும்,

”சிங்களஞ் சோனகஞ் சாவகஞ் சீனந் துளுக்குடகங்

கொங்கணங் கன்னடங் கொல்லந் தெலுங்கங் கலிங்கம் வங்கங்

கங்க மகதங் கடாரங் கவுடங் கடுங்குசலந்

தங்கும் புகழ்த்தமிழ் சூழ்பதி னேழ்புவி தாமிவையே

என்பதனால் அறியலாம்

அந்தோ என்பது சிங்களச் சொல்.

எருத்தைப் பாண்டில் என்பது தெலுங்குச் சொல்

மாமரத்தைக் கொக்கு என்பது துளுவச்சொல்.

வடசொல்:

பொது எழுத்தானும் சிறப்பு எழுத்தானும்

ஈர் எழுத்தானும் இயைவன வடசொல்

குறிப்பு

ஆரியத்திற்கும் தமிழிற்கும் பொதுவெழுத்தாலும் ஆரியத்திற்கே உரிய சிறப்பு எழுத்துத் திரிந்த எழுத்தாலும் இவ் இரண்டு எழுத்தினாலும்,செந்தமிழ்ச் சொல்லை ஒப்பனவாகி வடதிசையில் இருந்து செந்தமிழ் நிலத்து வந்து வழங்குவன வட சொல்லாகும்.

அமலம், கமலம், மேரு, காரணம், காரியம் - பொது எழுத்தால் அமைந்தன.

சுகி, போகி, சுத்தி - சிறப்பெழுத்தால் வந்தன.

அரன், அரி,கடினம், சலம் - ஈரெழுத்தாலும் இயைந்தன.

## கூறு: 3

## பெயர்ச்சொல் - பொது இலக்கணம் - விளக்கம்

### பெயர்ச்சொல்:

இடுகுறி காரணம் மரபோடு ஆக்கம்

தொடர்ந்து தொழிலல காலம் தோற்றா

வேற்றுமைக்கு இடனாய்திணைபால் இடத்தொன்று

ஏற்பதும் பொதுவும் ஆவன பெயரே

பெயர் இடுகுறியாகவோ காரணப்பெயராகவோ மரபினையும் ஆக்கப்பாட்டினையும் உடையதாய் வரும். வினையாலணையும் பெயர் நீங்கலாகப் பிற பெயர்கள் காலம்காட்டாது. எட்டுவேற்றுமையும் சார்தற்கு இடமாகிஇரு திணையிலும் ஐம்பாலிலும் மூவிடத்திலும் ஒன்றனை ஏற்பனவும், பலவற்றினை ஏற்பனவும் ஆகி வரும்.

மரம், விள, பனை - இடுகுறி மரபு.

அவன்,அவள், விலங்கு, பறவை - காரணக்குறி மரபு.

பொன்போலும் கள்ளிப் பொறிபறக்குங் கானலிலே

என்பேதை செல்லற் கியைந்தனளே - மின்போலும்

ஆனவேன் முட்டைக்கு மாறாய தெவ்வர்போங்

கானவேன் முட்டைக்குங் காடு

என்னும் பொய்யாமொழிப் புலவர் பாட்டில் வேட்டுவக் குமரன் தன்பெயர் முட்டை என்றது இடுகுறியாக்கம் .

குறிப்பு

பொன்னன், பூணன்,மலைமகள் மகனே மாற்றோர் கூற்றே என்பன காரணக் குறியாக்கம்.

நடந்தவனை, நடந்தோனை என்பன வினையாலணையும் காரணக்குறி - காலம் காட்டின.

மரம், பனை முதலாகிய இடுகுறிப் பெயரும், அவன், அவள் முதலாகிய காரணப் பெயரும்,அவ் இலக்கணங்களோடு தோன்றிய பொருள்களுக்கு எல்லாம் தொன்றுதொட்டு மரபு பற்றி வருவன,முட்டை முதலாகிய இடுகுறிப்பெயரும், பொன்னன் முதலாகிய காரணப் பெயரும், மரபு போலத் தொன்று தொட்டு வருதல் இன்றி நடுவிலே ஒருவரால் ஆக்கப்பட்டு வருவன ஆகும்.

## உயர்திணை – ஆண்பாற்பெயர்கள்:

உயர்திணைப்பெயர்,ஆண்பாற்பெயர், பெண்பாற்பெயர், பலர்பாற்பெயர் என்னும் மூன்று வகைப்படும். அவற்றுள் இந் நூற்பா ஆண்பாற் பெயர்களை உணர்த்தி நின்றது.

அவற்றுள்,

கிளை எண் குழூஉ முதல் பல் பொருள் திணை தேம்

ஊர் வான் அகம் புறம் முதல நிலன் ஆண்டு

இருது மதி நாள் ஆதிக் காலம்

தோள் குழல் மார்பு கண் காது முதல் உறுப்பு

அளவு அறிவு ஒப்பு வடிவு நிறம் கதி

சாதி குடி சிறப்பு ஆதிப் பல்குணம்

ஓதல் ஈதல் ஆதிப் பல்வினை

இவை அடை சுட்டு வினா பிற மற்றோடு

உற்ற னவ்ஈறு நம்பி ஆடூஉ

விடலை கோ வேள் குரிசில் தோன்றல்

இன்னன ஆண் பெயர் ஆகும் என்ப,

குறிப்பு

மேலே ஆண்பாற் பெயர் எனக் குறிக்கப்பட்டவற்றுள்கிளை எண் குழூஉ முதல் பல்பொருளோடு ஐந்திணையும் தேயமும் ஊரும் வானும் அகமும் புறமும் முதலியனவாகிய இடங்களோடும், வருடமும் பருவமும் மாதமும் நாள்மீனும் முதலாகிய காலங்களோடும், புயமும் மயிரும் மார்பும் கண்ணும் காதும் முதலாகிய அவயவங்களோடும், அளவும் அறிவும் ஒப்பும் வடிவும் நிறமும் நாற்கதியும் சாதியும் குடியும் சிறப்பும் முதலாகிய பலகுணங்களோடும் ஓதுதலும் கொடுத்தலும் முதலாகிய பலதொழில்களோடும், இவற்றை அடைந்த சுட்டும் வினாவும் பிறவும் மற்றும் ஆகிய நான்கனோடும் பொருந்திய னகரமெய் ஈற்றுப் பெயர்களும்,நம்பி, ஆடூஉ, விடலை, கோ, வேள், குரிசில், தோன்றல் முதலாகச் சொல்லப்பட்ட இப்பெயர்களும் இவை போல்வன பிறவும், உயர் திணை ஆண்பால் பெயர்களாகும்.

**பொருளால் வருபெயர்களாவன :-**

தமன், நமன், நுமன், எமன் - கிளையால் வரு பெயர்.

ஒருவன் - எண்ணால் வருபெயர்.

அவையத்தான், அத்திகோசத்தான் - குழூஉவால் வருபெயர்.

பொருளன், பொன்னன், முடியன் - முதல் என்றதனால் வருபெயர்.

**இடத்தால் வரு பெயர்களாவன :-**

வெற்பன், பொருப்பன் - குறிஞ்சித் திணையால் வருபெயர்.

மறவன், எயினன் - பாலைத் திணையால் வருபெயர்.

இடையன், ஆயன் - முல்லைத் திணையால் வருபெயர்.

ஊரன், மகிழ்நன் - மருதத் திணையால் வருபெயர்.

சேர்ப்பன், துறைவன் - நெய்தல் திணையால் வருபெயர்.

சோழியன், கொங்கன் - தேயத்தால் வருபெயர்.

கருவூரான், மதுரையான்- ஊரால் வருபெயர்.

வானத்தான், அகத்தான், புறத்தான் - வான் முதலிய மூன்றாலும் வருபெயர்.

மண்ணகத்தான், பாதலத்தான் - முதல் என்றதனால் வருபெயர்.

**காலத்தால் வருபெயர்களாவன :**

மூவாட்டையான் , பிரபவன் - வருடத்தால் வருபெயர்.

வேனிலான், காரான் - பருவத்தால் வருபெயர்.

தையான், மாசியான் - மாதத்தால் வருபெயர்.

ஆதிரையான், ஓணத்தான் - நாள்மீனால் வருபெயர்.

நெருநலான், காலையான் - ஆதி என்றதனால் வருபெயர்.

குறிப்பு

**சினையால் வருபெயர்களாவன :-**

திணிதோளன்,செங்குஞ்சியன், வரைமார்பன், செங்கண்ணன்,குழைக்காதன் - தோள்முதலிய ஐந்து உறுப்பாலும் வருபெயர்.

குறுந்தாளன், நெடுங்கையன் - முதல் என்றதனால் வருபெயர்.

குணத்தால் வருபெயர்களாவன :-

பெரியன், சிறியன் - அளவால் வருபெயர்.

அறிஞன், புலவன் - அறிவால் வருபெயர்.

பொன்னொப்பான், மணியனையான் - ஒப்பால் வருபெயர்.

கூனன்,குறளன் - வடிவால் வருபெயர்.

கரியன், செய்யன் - நிறத்தால் வருபெயர்.

மானுடன்,தேவன் - கதியால் வருபெயர்.

அந்தணன், வேளாளன் - சாதியால் வருபெயர்.

சேரன், சோழன், பாண்டியன் - குடியால் வருபெயர்.

ஆசிரியன்,படைத்தலைவன் - சிறப்பால் வருபெயர்.

நல்லன், தீயன் - ஆதியென்றதனால் வருபெயர்.

**தொழிலால் வருபெயர்களாவன :-**

ஓதுவான்,ஈவான் - ஓதல் முதலாகிய இரண்டாலும் வருபெயர்.

கணக்கன், தச்சன் - ஆதி என்றதனால் வருபெயர்.

**சுட்டால் வருபெயர் முதலானவை :-**

அவன், இவன், உவன் - சுட்டு இடைச்சொல்லால் வருபெயர்.

எவன், ஏவன்,யாவன் - வினா இடைச்சொல்லால் வருபெயர்.

பிறன், மற்றையான் - பிற மற்று என்பவற்றால் வருபெயர்.

குறிப்பு

நம்பி முதலாகிய ஏழு பெயர்களும் உரைக்கிடையில் காண்க :

இன்னன என்றதனால்,

வில்லி, வாளி, கிள்ளி, சென்னி, ஏந்தல்,செம்மல்,ஏனாதி,காவிதி,குடுமி,அண்ணல் என உயர்திணை ஆண்பால் பொருள் குறித்து வருவன எல்லாம் கொள்க.

சுட்டு, வினா, பிற, மற்று என்னும் இந்நான்கு இடைச்சொல்லையும் பற்றி வரும் பெயர்கள், பொருள் ஆதி ஆறனுள்ளே, சொல்லுவான் குறிப்பின்படி ஒன்றில் அடங்கும்.

## உயர்திணை – பெண்பால் பெயர்கள்:

கிளை முதல் ஆகக் கிளந்த பொருள்களுள்

ளவ்வொற்று இகரக் கு ஏற்ற ஈற்றவும்

தோழி செவிலி மகடூஉ நங்கை

தையலோடு இன்னன பெண்பால் பெயரே

மேலைச் சூத்திரத்துக் கிளை முதலாகப் பகுத்துச் சொல்லப்பட்ட அறுவகைப் பொருள்களுள், ளகரமெய்யும் இகரஉயிரும் பொருந்துதற்கு ஏற்ற அவ் இரண்டு ஈற்றுப் பெயர்களும், தோழி, செவிலி, மகடூஉ, நங்கை, தையலோடு இவை போல்வன பிறவும், உயர்திணைப் பெண்பால் பெயர்களாம்.

## பொருளால் வருபெயர்;-

தமள், நமள், நுமள், எமள்,

ஒருத்தி

அவையத்தாள், அவையத்தி -

பொன்னாள், பொன்னி

## இடத்தால் வருபெயர்:-

குறத்தி, எயிற்றி, ஆய்ச்சி, உழத்தி, பரத்தி

மலையாட்டி, சோழிச்சி கருவூராள், கருவூரி

குறிப்பு

வானத்தாள், வானத்தி

அகத்தாள், அகத்தி

புறத்தாள், புறத்தி

மண்ணகத்தாள், மண்ணகத்தி.

**காலத்தால் வருபெயர்:-**

மூவாட்டையாள்

வேனிலாள்

தையாள்

ஆதிரையாள்

நெருநலாள்

**சினையால் வருபெயர்:**

திணிதோளாள், திணிதோளி

சுரி குழலாள், சுரிகுழலி

நெடுமார்பாள், நெடுமார்பி

தடங்கண்ணாள், தடங்கண்ணி

குழைக்காதாள். குழைக்காதி

குறுந் தாளாள், குறுந்தாளி

**குணத்தால் வருபெயர் :-**

பெயரியள்
புலமையள்

பொன்னொப்பாள்

கூனள், கூனி

கரியள்

மானுடத்தி

பார்ப்பினி

படைத்தலைவி

குறிப்பு

நல்லள்.

**தொழிலால் வருபெயர் :-**

ஓதுவாள்

ஈவாள்

தச்சிச்சி.

**சுட்டால் வருபெயர் முதலானவை :-**

அவள், இவள், உவள்,

எவள், ஏவள், யாவள்

பிறள்,

மற்றையாள்.

தோழி முதலிய ஐந்துபெயரும் உரைக்கிடையிற் காண்க :-

இன்னன என்றதனால்,

பேதை, பெதும்பை, இகுளை, மடந்தை, மாது, பாங்கி, பெண்டு, பெண்டாட்டி என உயர்திணைப் பெண்பால் குறித்து வருவன எல்லாம் கொள்க.

கிளந்த கிளை முதல் உற்ற ர ஈற்றவும்
கள் என் ஈற்றின் ஏற்பவும் பிறவும்
பல்லோர் பெயரின் பகுதி ஆகும்

முன்னே சொல்லப்பட்ட சுற்றம் முதலாகிய அறுவகைப் பொருளையும் பொருந்திய ரகரமெய் ஈற்றுப் பெயர்களும், கள் என்னும் விகுதியை ஈறாகவுடைய பெயர்களுள் இவ் இடத்துக்குப் பொருந்தி வருவனவும்,இவை போல்வன பிறவும், உயர்திணைப் பலர்பால் பெயர்களாம்.

'கள்' விகுதி அ.்.றிணைப் பன்மைக்கும் வருதலால், ஏற்பவும் என்றார்.

தமர், நமர், நுமர், எமர், இருவர், மூவர் எனப் பொருளாதி ஆறனோடும் ஒட்டுக.

கோக்கள், மனுக்கள் என்றல் தொடக்கத்தன பகுதிப்பொருள் விகுதி ஈற்றுப் பெயர்கள்.

தமர்கள், நமர்கள் என்றல் தொடக்கத்தன விகுதிமேல் விகுதி ஈற்றுப் பெயர்கள்.

குறிப்பு

பிற என்றமையால்,

மாந்தர், மக்கள், மகார், சிறார், வேளிர் எனப் பலர்பாலைக் குறித்து வருவன எல்லாம் கொள்க.

## அ.்.றிணை – ஒன்றற்பாற் பெயர்:

வினா சுட்டுடனும் வேறும் ஆம் பொருள்

ஆதி உறு து சுட்டு அணை ஆய்தம்

ன்று என் எண் இன்னன ஒன்றன் பெயரே

வினாவிலும் சுட்டிலும் மறைந்து அவற்று உடனாகியும் வேறும் ஆம் வினாவவும் சுட்டவும் படாது வேறாகியும் வரும் பொருளாதி ஆறனையும் பொருந்திய துவ்விகுதி ஈற்றுப் பெயரும், ஒன்று என்னும் எண் ஆகு பெயரும்,இவை போல்வன பிறவும்,அ.்.றிணைஒருமைப்பால் பெயராகும்.

எது, ஏது, யாது

அது, இது, உது

எனவும் வினாவிலும் சுட்டிலும் மறைந்து அவற்று உடனாகிப் பொருளாதி ஆறையும் பொருந்திய துவ்விகுதி ஈற்றுப் பெயர்கள் வரும்.

குழையது, நிலத்தது, மூலத்தது, கோட்டது, குறியது, ஆடலது என வினாவவும் சுட்டவும் படாது வேறாகிப் பொருளாதி ஆறையும் பொருந்திய துவ்விகுதி ஈற்றுப் பெயர்கள் வரும்.

அ.்.து, இ.்.து, உ.்.து எனச் சுட்டோடு கூடிய ஆய்தத்தைப் பொருந்திய துவ்விகுதி ஈற்றுப் பெயர்கள் வரும்.

ஒன்று என எண் ஆகுபெயர் வரும்.

இன்னன என்றமையால்,

பிறிது, மற்றையது என அ.்.றிணை ஒருமைப் பொருள் குறித்து வருவன எல்லாம் கொள்க.

குறிப்பு

## அ.்.றிணை – பன்மைப் பெயர்:

முன்னர் அவ்வொடு வருவையவ்வும்
சுட்டுஇறு வவ்வும் கள் இறு மொழியும்
ஒன்றுஅல் எண்ணும் உள்ள இல்ல
பல்ல சில்ல உள இல பல சில
இன்ன உம் பலவின் பெயர் ஆகுமே

முன்னே சொல்லப்பட்ட வினாச்சுட்டுடனும் வேறுமாம் பொருளாதி ஆறனோடும் ஏற்றபடி வரும் வை விகுதி ஈற்றுப் பெயர்களும் அகர ஈற்றுப் பெயர்களும் வகரமெய் ஈற்றுச் சுட்டுப்பெயர்களும் கள் இறு மொழியும் கள் என்னும் பகுதிப்பொருள் விகுதி ஈற்றுப் பெயர்களும்இரண்டு முதலாகிய எண் ஆகுபெயர்களும் உள்ள இல்ல பல்ல சில்ல உள இல பல சில என்பனவாகிய குறிப்புவினையால் அணைந்த எட்டுப்பெயர்களும் இவை போல்வன பிறவும் அ.்.றிணைப் பன்மைப்பால் பெயர்களாகும்.

எவை, ஏவை, யாவை

அவை,இவை, உவை

நெடியவை, கரியவை - வை விகுதிப் பெயர்கள் வரும்.

பொருள, பொருளன;

அகத்த, அகத்தன;

மூலத்த, மூலத்தன;

கோட்ட,கோட்டன;

கரிய கரியன;

ஓதுவ, ஓதுவன

- என அன் சாரியை பெற்றும் பெறாதும் அகரவிகுதிப் பெயர்கள் வரும்.

அவ், இவ், உவ் என வகர மெய் ஈற்றுச் சுட்டுப் பெயர்கள் வரும்.

யானைகள், குதிரைகள் எனக் கள் விகுதிப் பெயர்கள் வரும்.

இரண்டு, மூன்று, பத்து, நூறு என எண் ஆகுபெயர்கள் வரும்.

உள்ள முதலாகிய எட்டும் உரைக்கிடையில் காண்க.

குறிப்பு

இன்னவும் என்றமையால்,

யா, பிற, மற்றைய என அஃறிணைப் பன்மைப் பொருள் குறித்து வருவன எல்லாம் கொள்க.

இவ் ஐம்பால் பெயர்களுள்,

ஆண்பால்பெயர்க்கு னவ்வீறு - அன், ஆன், மன், மான், ன் இவ் ஐந்தும்;

பெண்பால் பெயர்க்கு ளவ்வொற்று - அள், ஆள், ள் இம்மூன்றும்;

பலர்பால் பெயர்க்கு ரவ் வீற்று - எனவே, அர், ஆர், மார், ர் இந்நான்கும், அடங்கும்.

## அஃறிணை இருபாற் பொதுப்பெயர்:

பால் பகா அஃறிணைப் பெயர்கள் பால் பொதுமைய

அஃறிணைப் பெயர்களுள் இப்படிப் பால் பகுக்கப்படாத பெயர்கள் அனைத்தும், அஃறிணை இருபாற்கும் பொதுப் பெயர்களாகும்.

பால்பகா அஃறிணைப் பெயர் எனினும் அஃறிணை இயற்பெயர் எனினும் ஒன்றேயாம்.

பறவை வந்தது, பறவைகள் வந்தன.

மரம் வளர்ந்தது, மரங்கள் வளர்ந்தன.

இவை, பறவை, அலரி எனப் பகுபதமும், மரம், பனை எனப் பகாப்பதமுமாக வரும்.

## பொதுப்பெயர்:

முதற்பெயர் நான்கும் சினைப்பெயர் நான்கும்

சினைமுதற்பெயர் ஒரு நான்கும் முறை இரண்டும்

தன்மை நான்கும் முன்னிலை ஐந்தும்

எல்லாம் தாம் தான் இன்னன பொதுப் பெயர்

முதல் பெயராகிய நான்கு பெயரும், சினைப்பெயராகிய நான்கு பெயரும், சினை முதற்பெயராகிய நான்கு பெயரும், முறைப் பெயராகிய இரண்டு பெயரும், தன்மைப் பெயராகிய நான்கு பெயரும், முன்னிலைப் பெயராகிய ஐந்துபெயரும், எல்லாம். தாம், தான், என்னும் மூன்று பெயரும், இவை போல்வன பிறவும் இருதிணைக்கும் பொதுப்பெயர்களாகும்.

குறிப்பு

இன்னன என்றமையால்,

சூரியன் உதித்தான், சூரியன் உதித்தது.

சந்திரன் உதித்தான், சந்திரன் உதித்தது.

- என ஒருபொருளையே உயர்திணைப் பொருளாக்கியும் அ.்.றிணைப் பொருளாக்கியும் கூறும் பொதுப்பெயர் முதலானவையும்;

ஊமை வந்தான், ஊமை வந்தாள் என உயர்திணை இருபாலையும் உணர்த்தும் பொதுப்பெயர் முதலானவையும் தன்மை முன்னிலை வினையாலணையும் பெயர்களும், பிறவும் வரும் என்பது தெரியவருகிறது.

## முதற்பெயர் முதலிய நான்கு:

ஆண்மை பெண்மை ஒருமை பன்மையின்

ஆம்: அந் நான்மைகள் ஆண் பெண் முறைப்பெயர்

ஆண்மை முதலாகிய இந்நான்கு பாலும் காரணமாக, அம்முதற்பெயர் சினைப்பெயர் சினை முதற்பெயர் என்னும் மூன்றும் ஒவ்வொன்று நந்நான்காகும், ஆண்மை பெண்மை என்னும் இருபாலும் காரணமாக முறைப்பெயர் இரண்டாகும்.

சாத்தன் - ஆண்மை முதற் பெயர்,

சாத்தி - பெண்மை முதற் பெயர்.

கோதை - ஒருமைமுதற்பெயர்,

கோதைகள்- பன்மை முதற்பெயர்.

முடவன் - ஆண்மைச் சினைப்பெயர்.

முடத்தி - பெண்மைச் சினைப்பெயர்.

செவியிலி- ஒருமைச் சினைப்பெயர்.

செவியிலிகள் - பன்மைச் சினைப்பெயர்.

முடக்கொற்றன் - ஆண்மைச் சினைமுதற் பெயர்.

முடக்கொற்றி - பெண்மைச் சினை முதற்பெயர்.

கொடும்புற மருதி - ஒருமைச்சினைமுதற் பெயர்.

கொடும்புறமருதிகள் - பன்மைச் சினைமுதற் பெயர்.

தந்தை - ஆண்மை முறைப்பெயர்

குறிப்பு

தாய் - பெண்மை முறைப் பெயர்.

அவற்றுள்,

ஒன்றே இரு திணைத் தன் பால் ஏற்கும்

முதற்பெயர் முதலாகச் சொல்லப்படும் இருபத்தாறும் பிறவுமாகிய பொதுப்பெயர்களுள் ஒவ்வொன்றே இருதிணையிலும் தன்தன் பால்களை ஏற்றுவரும்.

ஆண்மைப் பொதுப்பெயர் உயர்திணை ஆண்பாலையும் அ∴றிணை ஆண்பாலையும்,பெண்மைப் பொதுப்பெயர் உயர்திணைப் பெண்பாலையும் அ∴றிணைப் பெண்பாலையும், ஒருமைப் பொதுப்பெயர் உயர்திணை ஆண் ஒருமை பெண் ஒருமைகளையும் அ∴றிணை ஒருமையையும், பன்மைப் பொதுப்பெயர் உயர்திணைப் பன்மையையும் அ∴றிணைப் பன்மையையும் ஏற்கும்.

## முதற்பெயர் நான்கு:-

சாத்தன் இவன், சாத்தன் இவ் எருது - ஆண்மை முதற்பெயர் இருதிணை ஆண்பாற்கும் பொதுவாயிற்று.

சாத்தி இவள், சாத்தி இப்பசு - பெண்மை முதற்பெயர் இருதிணைப் பெண்பாற்கும் பொதுவாயிற்று.

கோதை இவன், கோதை இவள், கோதை இது - ஒருமை முதற்பெயர் இருதிணை ஒருமை மூன்றற்கும் பொதுவாயிற்று.

கோதைகள் இவர், கோதைகள் இவை - பன்மை முதற்பெயர் இரு திணைப் பன்மைக்கும் பொதுவாயிற்று.

சினைப்பெயர் நான்கு :-

முடவன் இவன், முடவன் இவ் எருது - ஆண்மைச்சினைப் பெயர் இருதிணை ஆண்பாற்கும் பொது ஆயிற்று.

முடத்தி இவள், முடத்தி இப்பசு - பெண்மைச் சினைப்பெயர் இருதிணைப் பெண்பாற்கும் பொதுவாயிற்று.

செவியிலி இவன், செவியிலி இவள், செவியிலி இது - ஒருமைச் சினைப்பெயர் இருதிணை ஒருமை மூன்றற்கும் பொதுவாயிற்று.

செவியிலிகள் இவர், செவியிலிகள் இவை - பன்மைச் சினைப்பெயர் இருதிணைப் பன்மைக்கும் பொதுவாயிற்று.

குறிப்பு

### சினை முதற்பெயர் நான்கு:-

முடக்கொற்றன் இவன், முடக்கொற்றன் இவ் எருது - ஆண்மைச் சினைமுதற்பெயர் இருதிணை ஆண்பாற்கும் பொதுவாயிற்று.

முடக்கொற்றி இவள், முடக்கொற்றி இப்பசு - பெண்மைச் சினைமுதற்பெயர் இருதிணைப் பெண்பாற்கும் பொதுவாயிற்று.

கொடும்புறமருதி இவன், கொடும்புறமருதி இவள்,கொடும்புறமருதி இது - ஒருமைச் சினைமுதற்பெயர் இருதிணை ஒருமை மூன்றற்கும் பொதுவாயிற்று.

கொடும்புறமருதிகள் இவர், கொடும்புறமருதிகள் இவை - பன்மைச் சினைமுதற்பெயர் இருதிணைப் பன்மைக்கும் பொதுவாயிற்று.

### முறைப்பெயர் இரண்டு:-

தந்தை இவன், தந்தை இவ் எருது - ஆண்மை முறைப் பெயர் இருதிணை ஆண்பாற்கும் பொதுவாயிற்று.

தாய் இவள், தாய் இப்பசு - பெண்மை முறைப்பெயர் இருதிணைப் பெண்பாற்கும் பொதுவாயிற்று.

### தன்மைப்பெயர் நான்கு:-

யான் நம்பி, யான் நங்கை, யான்பூதம் - யான் என்னும் தன்மைப்பெயர் இருதிணை ஒருமை மூன்றற்கும் பொதுவாயிற்று. நான் என்பதனோடும் இவ்வாறு ஒட்டுக.

யாம் மக்கள், யாம்பூதங்கள் - யாம் என்னும் தன்மைப்பெயர் இருதிணைப் பன்மைக்கும் பொது வாயிற்று நாம் மக்கள், நாம் பூதங்கள் என்றும் வரும்.

### முன்னிலைப்பெயர் ஐந்து :-

நீ நம்பி, நீ நங்கை, நீபூதம் - நீ என்னும் முன்னிலைப் பெயர் இருதிணை ஒருமை மூன்றற்கும் பொதுவாயிற்று.

நீர்மக்கள், நீர்பூதங்கள் - நீர் என்னும் முன்னிலைப் பெயர் இருதிணைப் பன்மைக்கும் பொது வாயிற்று. எல்லீர், நீயிர், நீவிர் என்பவற்றோடும் இவ்வாறு சேர்த்துக் கொள்ளல் வேண்டும்.

### எல்லாம், தாம், தான்:-

அவர் எல்லாம், அவை எல்லாம் - எல்லாம் என்பது இருதிணைப் பன்மைக்கும் பொதுவாயிற்று.

அவர்தாம், அவைதாம் - தாம் என்பது இருதிணைப் பன்மைக்கும் பொதுவாயிற்று.

அவன் தான், அவள் தான், அதுதான் - தான் என்பது இருதிணை ஒருமை மூன்றிற்கும் பொதுவாயிற்று.

குறிப்பு

## தன்மை, முன்னிலை, படர்க்கைப் பெயர்கள்:

தன்மை யான் நான் யாம் நாம், முன்னிலை

எல்லீர் நீயிர் நீவிர் நீர் நீ

அல்லன படர்க்கை: எல்லாம் எனல் பொது

தன்மைப்பெயர் நான்காவன யான், நான், யாம், நாம் என்பனவாம், முன்னிலைப்பெயர் ஐந்தாவன எல்லீர், நீயிர், நீவிர், நீர், நீ என்பனவாம். இவ் ஒன்பதும் அல்லாத பெயர்கள் எல்லாம் படர்க்கை இடத்திற்கு உரியனவாகும். அவற்றுள் எல்லாம் என்னும் பெயர் ஒன்றும் மூவிடத்திற்கும் உரித்தாகும்.

## எல்லாம் என்பது மூவிடத்தும் வருமாறு :-

யாம் எல்லாம், நீர் எல்லாம், அவர் எல்லாம், அவை எல்லாம் என வரும்.

வினையின் பெயரே படர்க்கை வினையால்

அணையும்பெயரே யாண்டும் ஆகும்

வினைப்பெயர்கள் படர்க்கை இடத்திற்கே உரியவாகும், வினையாலணையும் பெயர்கள் தனித்தனி மூவிடத்திற்கும் உரியவாகும்.

வினைப்பெயர் எனினும் தொழிற்பெயர் எனினும் ஒன்றேயாம்.

யான் உணல், நீ உணல், அவன் உணல் எனவும்

உண்டேனை, உண்டாயை, உண்டானை - எனவும் வரும்.

வினையாலணையும் பெயரே யாண்டுமாகும் என்றது வினையாலணையும் பெயருக்கு,'அல்லன படர்க்கை' என்றதனால் எய்தியது விலக்கி இடம் வகுத்தது.

வினையின் பெயரே படர்க்கை என்றது, சில வினைப் பெயருக்கு 'அல்லன படர்க்கை' என்றதனால் எய்திய இடம் இங்கே யாண்டுமாகும் என்பதனால் இகந்துபடாமல் காத்தது.

இங்கே வினையின் பெயர் என்றது எல்லாவினைப் பெயரையும் அன்று, யான் உணல், நீ உணல், அவன் உணல் என்பதன்வழி, வரும் வினைப்

குறிப்பு

பெயர். யானுண்டேன், நீயுண்டாய், அவனுண்டான் என வரும் முற்று வினைபோன்று, யான், நீ, அவன் என்னும் மூவிடப் பெயர்களுக்குப் பயன் நிலையாகி அவ்வப் பெயரோடும் ஒன்றுபட்டு நிற்பதினால் அவ் இடத்திற்கு உரியவாம் எனக் கொள்ளல் அமையும். ஆதலால் இவ்வினைப் பெயருக்கு எய்திய இடம் இகந்துபடும் என்பதால் இகந்து படமால் காக்க வேண்டியதாயிற்று. எனதுணல், நினதுணல், அவனதுணல் என்றும்,உணல்என்றும், வேறுபட்டு நிற்கும் வினைப்பெயர்கட்கு எய்திய இடம் இகந்துபடுதல் இல்லை என்பதை அறிதல் வேண்டும்.

தான் யான் நான் நீ ஒருமை, பன்மை தாம்

யாம் நாம் எலாம் எலீர் நீயிர் நீர் நீவிர்

தான், யான், நான், நீ என்னும் நான்கும் இருதிணை முக்கூற்று ஒருமைப் பெயர்களாம், தாம், யாம், நாம், எல்லாம், எல்லீர், நீயிர், நீர், நீவிர் என்னும் எட்டும் இருதிணை இருகூற்றுப் பன்மைப் பெயர்களாம்.

இருதிணை முக்கூற்று ஒருமை என்றது உயர்திணை ஆண் ஒருமை, உயர்திணைப் பெண் ஒருமை, அஃறிணை ஒருமைகளையே குறிக்கும்.

இருதிணை இருகூற்றுப்பன்மை என்பது உயர்திணைப் பன்மை அஃறிணைப் பன்மைகளை,

ஒருவன் ஒருத்திப் பெயர் மேல் எண்ணில

ஒன்று என்னும் எண்ணால் ஒருவன் ஒருத்தி என்று வருமே அன்றி அதற்கு மேல் வாராது, அதாவது இருவன், இருத்தி, மூவன், முத்தி என்பன போன்று வாராது.

ஒருவர் என்பது உயர் இரு பாற்றாய்

பன்மை வினை கொளும் பாங்கிற்று என்ப

ஒருவர் என வழங்கும் சொல் உயர்திணை ஆண், பெண் இவ் இருபாற்கும் பொதுவாய், அத்திணைப் பன்மைவாய்பாட்டு வினையைக் கொண்டுமுடியும்.

ஆடவருள் ஒருவர் அறத்தின்வழி நிற்பார்; பெண்டிருள் ஒருவர் கொழுநன்வழி நிற்பார் என வரும். இங்கே, ஒருவர் நிற்பான் நிற்பாள் எனப் பகுதிக்கேற்ப ஒருமைச் சொல்லைக் கொள்ளாது. ஒருவர் நிற்பார் என விகுதிக் கேற்பப் பன்மைச் சொல்லையே கொண்டுமுடியும்.

உரையிற்கோடல் என்பதால், உயர்த்தல் பொருட்டு ஆர் என்னும் இடைச் சொல்லை ஈற்றில் பெற்ற இருதிணைப் பொதுப்பெயரும், பால்பகா அஃறிணைப்பெயரும் சிறுபான்மை உயர்திணைப் பெயரும் பன்மைச் சொல்லோடு முடியும்.

சாத்தனார் வந்தார்,

முடவனார் வந்தார்,

முடக்கொற்றனார் வந்தார்,

குறிப்பு

தந்தையார் வந்தார்,

-என இருதிணைப் பொதுப்பெயர்கள் பன்மைச் சொல்லொடு முடிந்தன.

நரியார் வந்தார் எனப் பால்பகா அ.்.றிணைப் பொதுப்பெயர் பன்மைச் சொல்லொடு முடிந்தது.

நம்பியார் வந்தார்,

நங்கையார் வந்தார்,

இறைவனார் வந்தார்,

அகத்தியனார் வந்தார்,

தொல்காப்பியனார் வந்தார்,

- என உயர்திணைப் பெயர்கள் பன்மைச் சொல்லொடு முடிந்தன.

பயிற்சி வினாக்கள்:

1.பெயர்ச்சொல்லின் பொது இலக்கணத்தை விளக்குக.

பெயர்ச்சொல்

இடுகுறி காரணம் மரபோடு ஆக்கம்
தொடர்ந்து தொழிலல காலம் தோற்றா
வேற்றுமைக்கு இடனாய்திணைபால் இடத்தொன்று
ஏற்பதும் பொதுவும் ஆவன பெயரே

பெயர் இடுகுறியாகவோ காரணப்பெயராகவோ மரபினையும் ஆக்கப்பாட்டினையும் உடையதாய் வரும்..வினையாலணையும் பெயர் நீங்கலாகப் பிற பெயர்கள் காலம்காட்டாது, எட்டுவேற்றுமையும் சார்தற்கு இடமாகிஇரு திணையிலும் ஐம்பாலிலும் மூவிடத்திலும் ஒன்றனை ஏற்பனவும், பலவற்றினை ஏற்பனவும் ஆகி வரும்.

மரம், விள, பனை - இடுகுறி மரபு.

அவன்,அவள், விலங்கு, பறவை - காரணக்குறி மரபு.

பொன்போலும் கள்ளிப் பொறிபறக்குங் கானலிலே

என்பேதை செல்லற் கியைந்தனளே - மின்போலும்

ஆனவேன் முட்டைக்கு மாறாய தெவ்வர்போங்

குறிப்பு

கானவேன் முட்டைக்குங் காடு

என்னும் பொய்யாமொழிப் புலவர் பாட்டில் வேட்டுவக் குமரன் தன்பெயர் முட்டை என்றது இடுகுறியாக்கம் .

பொன்னன், பூணன்,மலைமகள் மகனே மாற்றோர் கூற்றே என்பன காரணக் குறியாக்கம் .

நடந்தவனை, நடந்தோனை என்பன வினையாலணையும் காரணக்குறி - காலம் காட்டின.

மரம், பனை முதலாகிய இடுகுறிப் பெயரும், அவன், அவள் முதலாகிய காரணப் பெயரும்,அவ் இலக்கணங்களோடு தோன்றிய பொருள்களுக்கு எல்லாம் தொன்றுதொட்டு மரபு பற்றி வருவன,,முட்டை முதலாகிய இடுகுறிப்பெயரும், பொன்னன் முதலாகிய காரணப் பெயரும், மரபு போலத் தொன்று தொட்டு வருதல் இன்றி நடுவிலே ஒருவரால் ஆக்கப்பட்டு வருவன ஆகும்.

2.உயர்திணை ஆண்பாற் பெயர்கள் குறித்து எழுதுக.

உயர்திணை – ஆண்பாற்பெயர்கள்:

உயர்திணைப் பெயர், ஆண்பாற்பெயர், பெண்பாற்பெயர், பலர்பாற்பெயர் என்னும் மூன்ற வகைப்படும். அவற்றுள் இந் நூற்பா ஆண்பாற் பெயர்களை உணர்த்தி நின்றது.

அவற்றுள்,

கிளை எண் குழூஉ முதல் பல் பொருள் திணை தேம்

ஊர் வான் அகம் புறம் முதல நிலன் ஆண்டு

இருது மதி நாள் ஆதிக் காலம்

தோள் குழல் மார்பு கண் காது முதல் உறுப்பு

அளவு அறிவு ஒப்பு வடிவு நிறம் கதி

சாதி குடி சிறப்பு ஆதிப் பல்குணம்

ஓதல் ஈதல் ஆதிப் பல்வினை

குறிப்பு

இவை அடை சுட்டு வினா பிற மற்றோடு

உற்ற னவ்ஈறு நம்பி ஆடூஉ

விடலை கோ வேள் குரிசில் தோன்றல்

இன்னன ஆண் பெயர் ஆகும் என்ப.

மேலே ஆண்பாற் பெயர் எனக் குறிக்கப்பட்டவற்றுள்கிளை எண் குழூஉ முதல் பல்பொருளோடு ஐந்திணையும் தேயமும் ஊரும் வானும் அகமும் புறமும் முதலியனவாகிய இடங்களோடும், வருடமும் பருவமும் மாதமும் நாள்மீனும் முதலாகிய காலங்களோடும், புயமும் மயிரும் மார்பும் கண்ணும் காதும் முதலாகிய அவயவங்களோடும், அளவும் அறிவும் ஒப்பும் வடிவும் நிறமும் நாற்கதியும் சாதியும் குடியும் சிறப்பும் முதலாகிய பலகுணங்களோடும்) ஒதுதலும் கொடுத்தலும் முதலாகிய பலதொழில்களோடும், இவற்றை அடைந்த சுட்டும் வினாவும் பிறவும் மற்றும் ஆகிய நான்கனோடும் பொருந்திய னகரமெய் ஈற்றுப் பெயர்களும்,நம்பி, ஆடூஉ, விடலை, கோ, வேள், குரிசில், தோன்றல் முதலாகச் சொல்லப்பட்ட இப்பெயர்களும் இவை போல்வன பிறவும், உயர் திணை ஆண்பால் பெயர்களாகும்.

பொருளால் வருபெயர்களாவன :-

தமன், நமன், நுமன், எமன் - கிளையால் வரு பெயர்.

ஒருவன் - எண்ணால் வருபெயர்.

அவையத்தான், அத்திகோசத்தான் - குழூஉவால் வருபெயர்.

பொருளன், பொன்னன், முடியன் - முதல் என்றதனால் வருபெயர் .

இடத்தால் வரு பெயர்களாவன :-

வெற்பன், பொருப்பன் - குறிஞ்சித் திணையால் வருபெயர் .

மறவன், எயினன் - பாலைத் திணையால் வருபெயர் .

இடையன், ஆயன் - முல்லைத் திணையால் வருபெயர்.

ஊரன், மகிழ்நன் - மருதத் திணையால் வருபெயர்.

சேர்ப்பன், துறைவன் - நெய்தல் திணையால் வருபெயர் .

சோழியன், கொங்கன் - தேயத்தால் வருபெயர் .

கருவூரான், மதுரையான்- ஊரால் வருபெயர் .

குறிப்பு

வானத்தான், அகத்தான், புறத்தான் - வான் முதலிய மூன்றாலும் வருபெயர்.

மண்ணகத்தான், பாதலத்தான் - முதல் என்றதனால் வருபெயர்.

காலத்தால் வருபெயர்களாவன :

மூவாட்டையான் , பிரபவன் - வருடத்தால் வருபெயர்.

வேனிலான், காரான் - பருவத்தால் வருபெயர் .

தையான், மாசியான் - மாத்ததால் வருபெயர்.

ஆதிரையான், ஓணத்தான் - நாள்மீனால் வருபெயர்.

நெருநலான், காலையான் - ஆதி என்றதனால் வருபெயர் .

சினையால் வருபெயர்களாவன :-

திணிதோளன்,செங்குஞ்சியன், வரைமார்பன், செங்கண்ணன்,குழைக்காதன் - தோள்முதலிய ஐந்து உறுப்பாலும் வருபெயர்.

சூறுந்தாளன், நெடுங்கையன் - முதல் என்றதனால் வருபெயர்.

குணத்தால் வருபெயர்களாவன :-

பெரியன், சிறியன் - அளவால் வருபெயர் .

அறிஞன், புலவன் - அறிவால் வருபெயர் .

பொன்னொப்பான், மணியனையான் - ஒப்பால் வருபெயர்.

கூனன்,குறளன் - வடிவால் வருபெயர் .

கரியன், செய்யன் - நிறத்தால் வருபெயர் .

மானுடன்,தேவன் - கதியால் வருபெயர்.

அந்தணன், வேளாளன் - சாதியால் வருபெயர்.

சேரன், சோழன், பாண்டியன் - குடியால் வருபெயர்.

ஆசிரியன்,படைத்தலைவன் - சிறப்பால் வருபெயர் .

நல்லன், தீயன் - ஆதியென்றதனால் வருபெயர்.

தொழிலால் வருபெயர்களாவன :-

ஓதுவான்,ஈவான் - ஓதல் முதலாகிய இரண்டாலும் வருபெயர்.

கணக்கன், தச்சன் - ஆதி என்றதனால் வருபெயர்.

.சுட்டால் வருபெயர் முதலானவை :-

குறிப்பு

அவன், இவன், உவன் - சுட்டு இடைச்சொல்லால் வருபெயர் .

எவன், ஏவன்,யாவன் - வினா இடைச்சொல்லால் வருபெயர்.

பிறன், மற்றையான் - பிற மற்று என்பவற்றால் வருபெயர்.

நம்பி முதலாகிய ஏழு பெயர்களும் உரைக்கிடையில் காண்க :

இன்னன என்றதனால்,

வில்லி, வாளி, கிள்ளி, சென்னி, ஏந்தல்,செம்மல்,ஏனாதி,காவிதி,குடுமி,அண்ணல் என உயர்திணை ஆண்பால் பொருள் குறித்து வருவன எல்லாம் கொள்க.

3.உயர்திணைப் பெண்பாற் பெயர்கள் குறித்து விவரி.

உயர்திணை – பெண்பாற் பெயர்கள்:

கிளை முதல் ஆகக் கிளந்த பொருள்களுள்

ளவ்வொற்று இகரக் கு ஏற்ற ஈற்றவும்

தோழி செவிலி மகடூஉ நங்கை

தையலோடு இன்னன பெண்பால் பெயரே

மேலைச் சூத்திரத்துக் கிளை முதலாகப் பகுத்துச் சொல்லப் பட்ட அறுவகைப் பொருள்களுள், ளகரமெய்யும் இகரஉயிரும் பொருந்துதற்கு ஏற்ற அவ் இரண்டு ஈற்றுப் பெயர்களும், தோழி,செவிலி, மகடூஉ, நங்கை, தையலோடு இவை போல்வன பிறவும், உயர்திணைப் பெண்பால் பெயர்களாம்.

பொருளால் வருபெயர்;-

தமள், நமள், நுமள், எமள்,

ஒருத்தி

அவையத்தாள், அவையத்தி -

பொன்னாள், பொன்னி

இடத்தால் வருபெயர்:-

குறத்தி, எயிற்றி, ஆய்ச்சி, உழத்தி, பரத்தி

குறிப்பு

மலையாட்டி, சோழிச்சி

கருவூராள், கருவூரி

வானத்தாள், வானத்தி

அகத்தாள், அகத்தி

புறத்தாள், புறத்தி

மண்ணகத்தாள், மண்ணகத்தி.

காலத்தால் வருபெயர்:-

மூவாட்டையாள்

வேனிலாள்

தையாள்

ஆதிரையாள்

நெருநலாள்

சினையால் வருபெயர்:

திணிதோளாள், திணிதோளி

சுரி குழலாள், சுரிகுழலி

நெடுமார்பாள், நெடுமார்பி

தடங்கண்ணாள், தடங்கண்ணி

குழைக்காதாள்,குழைக்காதி

குறுந்தாளாள், குறுந்தாளி

குணத்தால் வருபெயர் :

பெயரியள்

புலமையள்

பொன்னொப்பாள்

கூனள், கூனி

கரியள்

மானுடத்தி

குறிப்பு

பார்ப்பினி

படைத்தலைவி

நல்லள்.

தொழிலால் வருபெயர் :-

ஓதுவாள்

ஈவாள்

தச்சிச்சி.

சுட்டால் வருபெயர் முதலானவை :-

அவள், இவள், உவள்,

எவள், ஏவள், யாவள்

பிறள்,

மற்றையாள்.

தோழி முதலிய ஐந்துபெயரும் உரைக்கிடையிற் காண்க :-

இன்னன என்றதனால்,

பேதை, பெதும்பை, இகுளை, மடந்தை, மாது, பாங்கி, பெண்டு, பெண்டாட்டி என உயர்திணைப் பெண்பால் குறித்து வருவன எல்லாம் கொள்க..

4.இருதிணைப் பொதுப்பெயர்கள் குறித்து விவரி.

முதற்பெயர் நான்கும் சினைப்பெயர் நான்கும்
சினைமுதற்பெயர் ஒரு நான்கும் முறை இரண்டும்
தன்மை நான்கும் முன்னிலை ஐந்தும்
எல்லாம் தாம் தான் இன்னன பொதுப் பெயர்

முதல் பெயராகிய நான்கு பெயரும், சினைப்பெயராகிய நான்கு பெயரும், சினை முதல்பெயராகிய நான்கு பெயரும், முறைப் பெயராகிய இரண்டு பெயரும், தன்மைப் பெயராகிய நான்கு பெயரும், முன்னிலைப் பெயராகிய ஐந்துபெயரும், எல்லாம். தாம், தான், என்னும் மூன்று

பெயரும், இவை போல்வன பிறவும்,இருதிணைக்கும் பொதுப்பெயர்களாகும்.

குறிப்பு

இன்னன என்றமையால்,

சூரியன் உதித்தான், சூரியன் உதித்தது;

சந்திரன் உதித்தான், சந்திரன் உதித்தது

- என ஒருபொருளையே உயர்திணைப் பொருளாக்கியும் அ∴றிணைப் பொருளாக்கியும் கூறும் பொதுப்பெயர் முதலானவையும்;

ஊமை வந்தான், ஊமை வந்தாள் என உயர்திணை இருபாலையும் உணர்த்தும் பொதுப்பெயர் முதலானவையும் தன்மை முன்னிலை வினையாலணையும் பெயர்களும், பிறவும் வரும் என்பது தெரியவருகிறது.

ஆண்மை பெண்மை ஒருமை பன்மையின்

ஆம்: அந் நான்மைகள் ஆண் பெண் முறைப்பெயர்

ஆண்மை முதலாகிய இந்நான்கு பாலும் காரணமாக, அம்முதற்பெயர் சினைப்பெயர் சினை முதற்பெயர் என்னும் மூன்றும் ஒவ்வொன்று நந்நான்காகும், ஆண்மை பெண்மை என்னும் இருபாலும் காரணமாக முறைப்பெயர் இரண்டாகும்.

சாத்தன் - ஆண்மை முதற் பெயர்,

சாத்தி - பெண்மை முதற் பெயர்.

கோதை - ஒருமைமுதற்பெயர்,

கோதைகள்- பன்மை முதற்பெயர்.

முடவன் - ஆண்மைச் சினைப்பெயர்.

முடத்தி - பெண்மைச் சினைப்பெயர்.

செவியிலி- ஒருமைச் சினைப்பெயர்.

செவியிலிகள் - பன்மைச் சினைப்பெயர்.

முடக்கொற்றன் - ஆண்மைச் சினைமுதற் பெயர்.

முடக்கொற்றி - பெண்மைச் சினை முதற்பெயர்.

கொடும்புற மருதி - ஒருமைச்சினைமுதற் பெயர்.

கொடும்புறமருதிகள் - பன்மைச் சினைமுதற் பெயர்.

குறிப்பு

தந்தை - ஆண்மை முறைப்பெயர்

தாய் பெண்மை முறைப் பெயர்.

அவற்றுள்,

ஒன்றே இரு திணைத் தன் பால் ஏற்கும்

முதற்பெயர் முதலாகச் சொல்லப்படும் இருபத்தாறும் பிறவுமாகிய பொதுப்பெயர்களுள் ஒவ்வொன்றே இருதிணையிலும் தன்தன் பால்களை ஏற்றுவரும்.

ஆண்மைப் பொதுப்பெயர் உயர்திணை ஆண்பாலையும் அஃறிணை ஆண்பாலையும்,பெண்மைப் பொதுப்பெயர் உயர்திணைப் பெண்பாலையும் அஃறிணைப் பெண்பாலையும், ஒருமைப் பொதுப்பெயர் உயர்திணை ஆண் ஒருமை பெண் ஒருமைகளையும் அஃறிணை ஒருமையையும், பன்மைப் பொதுப்பெயர் உயர்திணைப் பன்மையையும் அஃறிணைப் பன்மையையும் ஏற்கும்.

முதற்பெயர் நான்கு:-

சாத்தன் இவன், சாத்தன் இவ் எருது - ஆண்மை முதற்பெயர் இருதிணை ஆண்பாற்கும் பொதுவாயிற்று.

சாத்தி இவள், சாத்தி இப்பசு - பெண்மை முதற்பெயர் இருதிணைப் பெண்பாற்கும் பொதுவாயிற்று.

கோதை இவன், கோதை இவள், கோதை இது - ஒருமை முதற்பெயர் இருதிணை ஒருமை மூன்றற்கும் பொதுவாயிற்று.

கோதைகள் இவர், கோதைகள் இவை - பன்மை முதற்பெயர் இரு திணைப் பன்மைக்கும் பொதுவாயிற்று.

சினைப்பெயர் நான்கு :-

முடவன் இவன், முடவன் இவ் எருது - ஆண்மைச்சினைப் பெயர் இருதிணை ஆண்பாற்கும் பொது ஆயிற்று.

முடத்தி இவள், முடத்தி இப்பசு - பெண்மைச் சினைப்பெயர் இருதிணைப் பெண்பாற்கும் பொதுவாயிற்று.

செவியிலி இவன், செவியிலி இவள், செவியிலி இது - ஒருமைச் சினைப்பெயர் இருதிணை ஒருமை மூன்றற்கும் பொதுவாயிற்று.

செவியிலிகள் இவர், செவியிலிகள் இவை - பன்மைச் சினைப்பெயர் இருதிணைப் பன்மைக்கும் பொதுவாயிற்று.

சினை முதற்பெயர் நான்கு:-

முடக்கொற்றன் இவன், முடக்கொற்றன் இவ் எருது - ஆண்மைச் சினைமுதற்பெயர் இருதிணை ஆண்பாற்கும் பொதுவாயிற்று.

முடக்கொற்றி இவள், முடக்கொற்றி இப்பசு - பெண்மைச் சினைமுதற்பெயர் இருதிணைப் பெண்பாற்கும் பொதுவாயிற்று.

குறிப்பு

கொடும்புறமருதி இவன், கொடும்புறமருதி இவள்,கொடும்புறமருதி இது - ஒருமைச் சினைமுதற்பெயர் இருதிணை ஒருமை மூன்றற்கும் பொதுவாயிற்று.

கொடும்புறமருதிகள் இவர், கொடும்புறமருதிகள் இவை - பன்மைச் சினைமுதற்பெயர் இருதிணைப் பன்மைக்கும் பொதுவாயிற்று.

முறைப்பெயர் இரண்டு:-

தந்தை இவன், தந்தை இவ் எருது - ஆண்மை முறைப் பெயர் இருதிணை ஆண்பாற்கும் பொதுவாயிற்று.

தாய் இவள், தாய் இப்பசு - பெண்மை முறைப்பெயர் இருதிணைப் பெண்பாற்கும் பொதுவாயிற்று.

.தன்மைப்பெயர் நான்கு:-

யான் நம்பி, யான் நங்கை, யான்பூதம் - யான் என்னும் தன்மைப்பெயர் இருதிணை ஒருமை மூன்றற்கும் பொதுவாயிற்று. நான் என்பதனோடும் இவ்வாறு ஒட்டுக.

யாம் மக்கள், யாம்பூதங்கள் - யாம் என்னும் தன்மைப்பெயர் இருதிணைப் பன்மைக்கும் பொது வாயிற்று நாம மக்கள், நாம் பூதங்கள் என்றும் வரும்.

முன்னிலைப்பெயர் ஐந்து :-

நீ நம்பி, நீநங்கை, நீபூதம் - நீ என்னும் முன்னிலைப் பெயர் இருதிணை ஒருமை மூன்றற்கும் பொதுவாயிற்று.

நீர்மக்கள், நீர்பூதங்கள் - நீர் என்னும் முன்னிலைப் பெயர் இருதிணைப் பன்மைக்கும் பொது வாயிற்று. எல்லீர், நீயிர், நீவிர் என்பவற்றோடும் இவ்வாறு சேர்த்துக் கொள்ளல் வேண்டும்.

எல்லாம், தாம், தான்:-

அவர் எல்லாம், அவை எல்லாம் - எல்லாம் என்பது இருதிணைப் பன்மைக்கும் பொதுவாயிற்று.

அவர்தாம், அவைதாம் - தாம் என்பது இருதிணைப் பன்மைக்கும் பொதுவாயிற்று.

அவன் தான், அவள் தான், அதுதான் - தான் என்பது இருதிணை ஒருமை மூன்றிற்கும் பொதுவாயிற்று.

குறிப்பு

தன்மை யான் நான் யாம் நாம், முன்னிலை

எல்லீர் நீயிர் நீவிர் நீர் நீ

அல்லன படர்க்கை: எல்லாம் எனல் பொது

தன்மைப்பெயர் நான்காவன யான், நான், யாம், நாம் என்பனவாம், முன்னிலைப்பெயர் ஐந்தாவன எல்லீர், நீயிர், நீவிர், நீர், நீ என்பனவாம் ,இவ் ஒன்பதும் அல்லாத பெயர்கள் எல்லாம் படர்க்கை இடத்திற்கு உரியனவாகும். அவற்றுள் எல்லாம் என்னும் பெயர் ஒன்றும் மூவிடத்திற்கும் உரித்தாகும்.

எல்லாம் என்பது மூவிடத்தும் வருமாறு :-

யாம் எல்லாம், நீர் எல்லாம், அவர் எல்லாம், அவை எல்லாம் என வரும்.

வினையின் பெயரே படர்க்கை வினையால்

அணையும் பெயரே யாண்டும் ஆகும்

வினைப்பெயர்கள் படர்க்கை இடத்திற்கே உரியவாகும், வினையாலணையும் பெயர்கள் தனித்தனி மூவிடத்திற்கும் உரியவாகும்.

வினைப்பெயர் எனினும் தொழிற்பெயர் எனினும் ஒன்றேயாம்.

யான் உணல், நீ உணல், அவன் உணல் எனவும்

உண்டேனை, உண்டாயை, உண்டானை - எனவும் வரும்.

வினையாலணையும் பெயரே யாண்டுமாகும் என்றது வினையாலணையும் பெயருக்கு,'அல்லன படர்க்கை' என்றதனால் எய்தியது விலக்கி இடம் வகுத்தது.

வினையின் பெயரே படர்க்கை என்றது, சில வினைப் பெயருக்கு 'அல்லன படர்க்கை' என்றதனால் எய்திய இடம் இங்கே யாண்டுமாகும் என்பதனால் இகந்துபடாமல் காத்தது.

இங்கே வினையின் பெயர் என்றது எல்லாவினைப் பெயரையும் அன்று, யானுணல், நீயுணல், அவனுணல் என்பதன்வழி, வரும் வினைப் பெயர். யானுண்டேன், நீயுண்டாய், அவனுண்டான் என வரும் முற்று வினைபோன்று, யான், நீ, அவன் என்னும் மூவிடப் பெயர்களுக்குப் பயன் நிலையாகி அவ்வப் பெயரோடும் ஒன்றுபட்டு நிற்பதினால் அவ் இடத்திற்கு உரியவாம் எனக் கொள்ளஅமையும்; ஆதலால் இவ்வினைப் பெயருக்கு எய்திய இடம் இகந்துபடும் என்பதால் இகந்து படமால்

காக்க வேண்டியதாயிற்று. எனதுணல், நினதுணல், அவனதுணல் என்றும், உணல்என்றும், வேறுபட்டு நிற்கும் வினைப்பெயர்கட்கு எய்திய இடம் இகந்துபடுதல் இல்லை என்பதை அறிதல் வேண்டும்.

**குறிப்பு**

தான் யான் நான் நீ ஒருமை, பன்மை தாம்

யாம் நாம் எலாம் எலீர் நீயிர் நீர் நீவிர்

தான், யான், நான், நீ என்னும் நான்கும் இருதிணை முக்கூற்று ஒருமைப் பெயர்களாம் , தாம் , யாம், நாம், எல்லாம், எல்லீர். நீயிர், நீர், நீவிர் என்னும் எட்டும் இருதிணை இருகூற்றுப் பன்மைப் பெயர்களாம்.

இருதிணை முக்கூற்று ஒருமை என்றது உயர்திணை ஆண் ஒருமை உயர்திணைப் பெண் ஒருமை அ.ஃ.றிணை ஒருமைகளை ஆகும்.

இருதிணை இருகூற்றுப்பன்மை என்றது உயர்திணைப் பன்மை அ.ஃ.றிணைப் பன்மைகளை.

## கூறு – 4

### ஆகுபெயர்

பெயர்களின் வகைப்பாடுகளில் குறிப்பிடத்தக்கது ஆகுபெயர் என்பதாகும். இவ் ஆகுபெயர் தொன்று தொட்டு வருவதாகும்.

பொருள் முதல் ஆறோடு அளவை சொல் தானி

கருவி காரியம் கருத்தன் ஆதியுள்

ஒன்றன் பெயரான் அதற்குஇயை பிறிதைத்

தொன் முறை உரைப்பன ஆகுபெயரே

ஆக்க ஆகும் பெயர் ஆகுபெயர் எனப்பெறும் என்பார் மயிலைநாதர், வழக்கின்கண்ணும் செய்யுளின் கண்ணும் பயின்று வருவனவற்றின் இடையே தோன்றியவாறு ஆக்கப்படுவன அல்ல என்பது சங்கர நமச்சிவாயர் தரும் பொருளாகும்.

பொருள், இடம்,காலம், சினை, குணம், தொழில் என்னும் ஆறுடனே, இவற்றின் பகுதியவாகிய நால்வகை அளவையும் சொல்லும், தானியும்,காரணமும், காரியமும், வினை முதலும், ஆதியாக வரும் பொருள்களுள், ஒரு பொருளினது இயற்பெயரால் அப்பொருளினுக்கு இயைந்த பிறிது ஒரு பொருளைத், தொன்று தொட்டுவரும் முறையே சொல்லப்பட்டு வருவன ஆகுபெயர்களாம்.

குறிப்பு

### பொருள் ஆகுபெயர்:

தாமரை புரையுங் காமர்சேவடி - தாமரை என்னும் முதற்பொருளின்பெயர்அதன் சினைப்பொருளாகிய மலருக்கு ஆகிவருதலால் பொருள் ஆகுபெயர்.

### இட ஆகுபெயர்:

அகன் அமர்ந்து செய்யாள் உறையும் - அகம் என்னும் உள் இடப்பெயர் அங்கு இருக்கின்ற மனத்திற்கு ஆகிவருதலால் இட ஆகுபெயர்.

### காலவாகு பெயர்:

கார் அறுத்தது - கார் என்னும் மழைக்காலப் பெயர் அக்காலத்து விளையும் பயிருக்கு ஆகிவருதலால் காலவாகு பெயர்.

### சினையாகு பெயர்:

வெற்றிலை நட்டான் - வெற்றிலை என்னும் சினைப்பெயர் அதன் முதலாகிய கொடிக்கு ஆகிவருதலால் சினையாகு பெயர்.

### குணவாகுபெயர்:

நீலம் சூடினாள் - நீலம் என்னும் நிறக்குணப்பெயர் அதனையுடைய குவளை மலருக்கு ஆகிவருதலால் குணவாகுபெயர்.

### தொழிலாகுபெயர்:

வற்றலோடு உண்டான் - வற்றல் என்னும் தொழிற்பெயர் அதனைப் பொருந்திய உணவிற்கு ஆகிவருதலால் தொழிலாகுபெயர்.

### எண்ணலளவை ஆகுபெயர்:

காலாலே நடந்தான் - கால் என்னும் எண்ணல் அளவைப்பெயர் அவ் அளவைக் கொண்ட உறுப்பிற்கு ஆகிவருதலால் எண்ணலளவை ஆகுபெயர்.

### எடுத்தலளவை ஆகுபெயர்:

இரண்டுவீசை தந்தான் - வீசை என்னும் எடுத்தல் அளவைப்பெயர் அவ் அளவைக்கொண்ட பொருட்கு ஆகிவருதலால் எடுத்தலளவை ஆகுபெயர்.

குறிப்பு

**முகத்தலளவை ஆகுபெயர்:**

நாழி உடைந்தது - நாழி என்னும் முகத்தல் அளவைப்பெயர் அவ் அளவு கருவிக்கு ஆகிவருதலால் முகத்தலளவை ஆகுபெயர்.

**நீட்டலளவை ஆகுபெயர்:**

கீழைத்தடி விளைந்தது - தடி என்னும் நீட்டல் அளவைப்பெயர் அதனால் அளக்கப்பட்ட கழனிக்கு ஆகிவருதலால் நீட்டலளவை ஆகுபெயர்.

**சொல்லாகுபெயர்:**

இந்நூற்கு உரை செய்தான் - உரை என்னும் சொல்லின்பெயர் அதன் பொருளுக்கு ஆகிவருதலால் சொல்லாகுபெயர்.

**தானியாகுபெயர்:**

விளக்கு முறிந்தது - விளக்கு என்னும் தானியின்பெயர் அதற்குத் தானமாகிய தண்டிற்கு ஆகிவருதலால் தானியாகுபெயர்.

**கருவியாகுபெயர்:**

திருவாசகம் - அடை அடுத்த வாசகம் என்னும் முதல்கருவியின் பெயர், அதன் காரியமாகிய ஒரு நூலிற்கு ஆகிவருதலால் கருவியாகுபெயர்.

**காரியவாகுபெயர்:**

இந்நூல் அலங்காரம் - அலங்காரம் என்னும் காரியத்தின் பெயர் அதனை உணர்த்துதற்குக் கருவியாகிய நூலிற்கு ஆகிவருதலால் காரியவாகுபெயர்.

**கருத்தாவாகுபெயர்:**

இந்நூல் திருவள்ளுவர் - திருவள்ளுவர் என்னும் கருத்தாவின் பெயர் அவரால் செய்யப்பட்ட நூலிற்கு ஆகிவருதலால் கருத்தாவாகுபெயர்.

ஆதி என்றதனால், காளை வந்தான், பாவை வந்தாள் என வரும் உவமை ஆகுபெயர் முதலானவையும், தேவர் முதலியோர் பெயரை மக்களுக்கு இட்டு வழங்குவனவும் அமையும்.

மேலும்,இவ்ஆகுபெயர், விடாத ஆகுபெயர், விட்ட ஆகுபெயர் எனவும், இருமடி ஆகுபெயர், மும்மடி ஆகுபெயர், நான்மடி ஆகுபெயர் எனவும், அடையடுத்த ஆகுபெயர் எனவும், இருபெயரொட்டு ஆகுபெயர் எனவும் பெயர்பெற்று வழங்கும்.

## விடாத ஆகு பெயர்:

கடுத் தின்றான், புளித் தின்றான் என்றவழி கடுவும் புளியும்,சுவையாகிய தத்தம் பொருளை விடாது நின்று தம்பொருளின் வேறு அல்லாத காய்கனி என்னும் பொருளை உணர்த்தலால், விடாத ஆகு பெயர்.

குறிப்பு

## விட்ட ஆகுபெயர்:

அவ்வூர் வந்தது என்றவழி, ஊர் என்பது, இடமாகிய தன் பொருளைவிட்டுத், தன்னிடத்துள்ள மனிதரை உணர்த்தலால் விட்ட ஆகுபெயர்.

## ஒருமடி ஆகுபெயர்:

புளி தின்றான் என்றவழி, புளி என்னும் சுவைப்பெயர் அதனை உடைய பழத்திற்கு ஆதலால் ஒருமடி ஆகுபெயர்.

## இருமடி ஆகுபெயர்:

புளி முளைத்தது என்றவழி புளி என்பது, சுவைப்பெயர் பழத்திற்கு ஆகிப், பழத்தின்பெயர் மரத்திற்கு ஆதலால், இருமடி ஆகுபெயர்

கார் வந்தது என்றவழி,கார் என்பது,நிறப்பெயர் மேகத்திற்காய், மேகத்தின்பெயர் அது பெய்யும் பருவத்திற்கு ஆதலால் இருமடி ஆகுபெயர்.

## மும்மடி ஆகுபெயர்:

கார் அறுத்தது என்பதில் கார் என்பது நிறப்பெயர் மேகத்திற்காய், மேகத்தின் பெயர் பருவத்திற்காய், அப்பருவத்தின் பெயர் அதில் விளையும் பயிருக்கு ஆதலால், மும்மடி ஆகுபெயர்.நான்மடி ஆகுபெயர் வந்தவழிக் கண்டுகொள்க.

## அடையடுத்த ஆகுபெயர்:

வெற்றிலை நட்டான், மருக்கொழுந்து நட்டான், அறுபதம் முரலும் என்பதில் இலை,கொழுந்து, பதம் என்னும் சினைப்பெயர்கள், முறையே வெறுமை, மரு, ஆறு என்னும் அடை அடுத்து, முதற்பொருள்களுக்கு ஆதலால், அடையடுத்த ஆகுபெயர்.

## இருபெயர் ஒட்டாகுபெயர்:

வகரக்கிளவி, மக்கட்சுட்டு என்பன ஒரு பொருட்கு இருபெயர் ஒட்டி நிற்க, அவற்றுள் ஒருபெயர் ஆகுபெயராக நிற்றலால், இருபெயர் ஒட்டாகுபெயர்,

குறிப்பு

வகரக்கிளவி என்பதில் கிளவிஎன்பது சொல்லை உணர்த்தும்போது இயற்பெயர்; சொற்குக் கருவி ஆகிய எழுத்தை உணர்த்தும்போது ஆகுபெயர். வகரக்கிளவி வகரமாகிய எழுத்து எனப் பொருள்படும். மக்கட் சுட்டு என்பதில் சுட்டு என்பது நன்கு மதிப்பை உணர்த்தும்போது இயற்பெயர்; நன்கு மதிக்கப்படுதலை உடைய பொருளை உணர்த்தும்போது ஆகுபெயர். மக்கட்சுட்டு மக்களாகிய நன்கு மதிக்கப்படுபொருள் எனப் பொருள்படும்.

வெற்றிலை முதலியனவற்றைப் பொற்றொடி முதலியனபோல அன்மொழித்தொகைப் பெயர் என்று கொள்ளலாகாதோ என வினா எழுப்பும் ஆறுமுகநாவலர் :- அன்மொழித்தொகைப் பெயர், செய்யுள் செய்யும் புலவன் ஒருவரை வியப்பு முதலிய காரணத்தினாலே தன் கூற்றாகவேனும் பிறர் கூற்றாகவேனும் பாடும் இடத்து அங்கங்கே வருவது அன்றி ஆகுபெயர் போல நியதிப்பெயராய் வருவது அன்று; ஆதலால் ஆகுபெயரும் அன்மொழித் தொகையும் ஒன்று எனக் கொள்ளலாகாது. அங்ஙனமாயினும், ஆகுபெயரும் அன்மொழித் தொகைப்பெயரும் தம் பொருள் உணர்த்தாது பிறிது பொருள் உணர்த்துதலால் ஒக்குமாதலின், அவை தம்முள் வேற்றுமையாதோ எனின் :- ஆகுபெயர் ஒன்றன் பெயரால் அதனோடு இயைபு பற்றிய பிறிது ஒன்றை உணர்த்தி ஒருமொழியிடத்து வருவதாம்; அன்மொழித் தொகை இயைபு வேண்டாது இருமொழியும் தொக்க தொகை ஆற்றலினாலே பிறிது பொருள் உணர்த்தி இரு மொழியிடத்து வருவதாம்; இவை தம்முள் வேற்றுமை என்க. “இருபெயர் ஒட்டாகுபெயர் இருமொழியிடத்து வந்தது அன்றோ எனின் :- வகரக்கிளவி, மக்கட்சுட்டு என்னும் இருபெயர் ஒட்டாகு பெயர்களுள், வகரமும் மக்களும் ஆகிய அடைமொழிகள், கிளவி, சுட்டு என்னும் இயற்பெயர்ப் பொருளை விசேடித்து நில்லாது, எழுத்தும் பொருளும் ஆகிய ஆகுபெயர்ப் பொருளை விசேடித்து நிற்கக், கிளவி, சுட்டு என்பனவே ஆகுபெயர்ப் பொருளை உணர்த்த, இருபெயரும் ஒட்டி நிற்கும்; ஆதலால் இருபெயர் ஒட்டாகுபெயர் இருமொழி இடத்து வந்தது அன்று என்க.இனிப் “பொற்றொடி“ என்னும் அன்மொழித்தொகையிலே பொன் என்னும் அடைமொழி,அப்படி அன்மொழித்தொகைப் பொருளாகிய பெண்ணை விசேடித்து நில்லாது, தொடியையே விசேடித்து நிற்க, அவ் இருமொழியும் தொக்க தொகை ஆற்றலினாலே அன்மொழித்தொகைப் பொருளை உணர்த்துதலும் அறிக. இக்கருத்தே பற்றி மக்கட்சுட்டு முதலியவற்றைப் பின்மொழி ஆகுபெயர் என்பாரும் உள்ளன விடையிறுப்பார்.

பயிற்சி வினாக்கள்:

1.ஆகுபெயர் என்றால் என்ன?

பெயர்களின் வகைப்பாடுகளில் குறிப்பிடத்தக்கது ஆகுபெயர் என்பதாகும். இவ் ஆகுபெயர் தொன்று தொட்டு வருவதாகும்.

குறிப்பு

பொருள் முதல் ஆறோடு அளவை சொல் தானி
கருவி காரியம் கருத்தன் ஆதியுள்
ஒன்றன் பெயரான் அதற்குஇயை பிறிதைத்
தொன் முறை உரைப்பன ஆகுபெயரே

ஆக்க ஆகும் பெயர் ஆகுபெயர் எனப்பெறும். என்பார் மயிலைநாதர், வழக்கின்கண்ணும் செய்யுளின் கண்ணும் பயின்று வருவனவற்றின் இடையே தோன்றியவாறு ஆக்கப்படுவன அல்ல என்பது சங்கர நமச்சிவாயர் தரும் பொருளாகும்.

பொருள், இடம்காலம், சினை, குணம், தொழில் என்னும் ஆறுடனே, இவற்றின் பகுதியவாகிய நால்வகை அளவையும் சொல்லும், தானியும்,காரணமும், காரியமும், வினை முதலும், ஆதியாக வரும் பொருள்களுள், ஒரு பொருளினது இயற்பெயரால் அப்பொருளினுக்கு இயைந்த பிறிது ஒரு பொருளைத், தொன்று தொட்டுவரும் முறையே சொல்லப்பட்டு வருவன ஆகுபெயர்களாம்.

2. ஆகுபெயரின் வகைகளை விளக்கி எழுதுக.

பொருள் ஆகுபெயர்.

தாமரை புரையுங் காமர்சேவடி - தாமரை என்னும் முதற்பொருளின் பெயர்அதன் சினைப்பொருளாகிய மலருக்கு ஆகிவருதலால் பொருள் ஆகுபெயர்.

இட ஆகுபெயர்

அகன் அமர்ந்து செய்யாள் உறையும் - அகம் என்னும் உள் இடப்பெயர் அங்கு இருக்கின்ற மனத்திற்கு ஆகிவருதலால் இட ஆகுபெயர்.

காலவாகு பெயர்.

கார் அறுத்தது - கார் என்னும் மழைக்காலப் பெயர் அக்காலத்து விளையும் பயிருக்கு ஆகிவருதலால் காலவாகு பெயர்.

சினையாகு பெயர்.

வெற்றிலை நாட்டான் - வெற்றிலை என்னும் சினைப்பெயர் அதன் முதலாகிய கொடிக்கு ஆகிவருதலால் சினையாகு பெயர்.

குணவாகுபெயர்.

நீலம் சூடினாள் - நீலம் என்னும் நிறக்குணப்பெயர் அதனையுடைய குவளை மலருக்கு ஆகிவருதலால் குணவாகுபெயர்.

குறிப்பு

தொழிலாகுபெயர்.

வற்றலோடு உண்டான் - வற்றல் என்னும் தொழிற்பெயர் அதனைப் பொருந்திய உணவிற்கு ஆகிவருதலால் தொழிலாகுபெயர்.

எண்ணலளவை ஆகுபெயர்.

காலாலே நடந்தான் - கால் என்னும் எண்ணல் அளவைப்பெயர் அவ் அளவைக் கொண்ட உறுப்பிற்கு ஆகிவருதலால் எண்ணலளவை ஆகுபெயர்.

எடுத்தலளவை ஆகுபெயர்.

இரண்டுவீசை தந்தான் - வீசை என்னும் எடுத்தல் அளவைப்பெயர் அவ் அளவைக்கொண்ட பொருட்கு ஆகிவருதலால் எடுத்தலளவை ஆகுபெயர்.

முகத்தலளவை ஆகுபெயர்.

நாழி உடைந்தது - நாழி என்னும் முகத்தல் அளவைப்பெயர் அவ் அளவு கருவிக்கு ஆகிவருதலால் முகத்தலளனவு ஆகுபெயர்.

நீட்டலளவை ஆகுபெயர்.

கீழைத்தடி விளைந்தது - தடி என்னும் நீட்டல் அளவைப்பெயர் அதனால் அளக்கப்பட்ட கழனிக்கு ஆகிவருதலால் நீட்டலளவை ஆகுபெயர்.

சொல்லாகுபெயர்.

இந்நூற்கு உரை செய்தான் - உரை என்னும் சொல்லின்பெயர் அதன் பொருளுக்கு ஆகிவருதலால் சொல்லாகுபெயர்.

தானியாகுபெயர்.

விளக்கு முரிந்தது - விளக்கு என்னும் தானியின்பெயர் அதற்குத் தானமாகிய தண்டிற்கு ஆகிவருதலால் தானியாகுபெயர்.

கருவியாகுபெயர்.

திருவாசகம் - அடை அடுத்த வாசகம் என்னும் முதல்கருவியின் பெயர், அதன் காரியமாகிய ஒரு நூலிற்கு ஆகிவருதலால் கருவியாகுபெயர்.

காரியவாகுபெயர்.

இந்நூல் அலங்காரம் - அலங்காரம் என்னும் காரியத்தின் பெயர் அதனை உணர்த்துதற்குக் கருவியாகிய நூலிற்கு ஆகிவருதலால் காரியவாகுபெயர்.

குறிப்பு

கருத்தாவாகுபெயர்.

இந்நூல் திருவள்ளுவர் - திருவள்ளுவர் என்னும் கருத்தாவின் பெயர் அவரால் செய்யப்பட்ட நூலிற்கு ஆகிவருதலால் கருத்தாவாகுபெயர்.

ஆதி என்றதனால், காளை வந்தான், பாவை வந்தாள் என வரும் உவமை ஆகுபெயர் முதலானவையும், தேவர் முதலியோர் பெயரை மக்களுக்கு இட்டு வழங்குவனவும் அமையும்.

மேலும்,இவ்ஆகுபெயர், விடாத ஆகுபெயர், விட்ட ஆகுபெயர் எனவும், இருமடி ஆகுபெயர், மும்மடி ஆகுபெயர், நான்மடி ஆகுபெயர் எனவும், அடையடுத்த ஆகுபெயர் எனவும், இருபெயரொட்டு ஆகுபெயர் எனவும் பெயர்பெற்று வழங்கும்.

விடாத ஆகு பெயர்.

கடுத் தின்றான், புளி தின்றான் என்றவழி கடுவும் புளியும்,சுவையாகிய தத்தம் பொருளை விடாது நின்று தம்பொருளின் வேறு அல்லாத காய்கனி என்னும் பொருளை உணர்த்தலால், விடாத ஆகு பெயர்.

விட்ட ஆகுபெயர்.

அவ்வூர் வந்தது என்றவழி, ஊர் என்பது, இடமாகிய தன் பொருளைவிட்டுத், தன்னிடத்துள்ள மனிதரை உணர்த்தலால் விட்ட ஆகுபெயர்.

ஒருமடி ஆகுபெயர்

புளி தின்றான் என்றவழி, புளி என்னும் சுவைப்பெயர் அதனை உடைய பழத்திற்கு ஆதலால் ஒருமடி ஆகுபெயர்.

இருமடி ஆகுபெயர்

புளி முளைத்தது என்றவழி புளி என்பது, சுவைப்பெயர் பழத்திற்கு ஆய்ப், பழத்தின்பெயர் மரத்திற்கு ஆதலால், இருமடி ஆகுபெயர்

கார் வந்தது என்றவழி ,கார் என்பது,நிறப்பெயர் மேகத்திற்காய், மேகத்தின்பெயர் அது பெய்யும் பருவத்திற்கு ஆதலால் இருமடி ஆகுபெயர்.

மும்மடி ஆகுபெயர்:

கார் அறுத்தது என்பதில் கார் என்பது நிறப்பெயர் மேகத்திற்காய், மேகத்தின் பெயர் பருவத்திற்காய், அப்பருவத்தின் பெயர் அதில்

குறிப்பு

விளையும் பயிருக்கு ஆதலால், மும்மடி ஆகுபெயர்.நான்மடி ஆகுபெயர் வந்தவழிக் கண்டுகொள்க.

அடையடுத்த ஆகுபெயர்.

வெற்றிலை நட்டான், மருக்கொழுந்து நட்டான், அறுபதம் முரலும் என்பதில் இலை,கொழுந்து, பதம் என்னும் சினைப்பெயர்கள், முறையே வெறுமை, மரு, ஆறு என்னும் அடை அடுத்து, முதற்பொருள்களுக்கு ஆதலால், அடையடுத்த ஆகுபெயர்.

இருபெயர் ஒட்டாகுபெயர்,

வகரக்கிளவி, மக்கட்சுட்டு என்பன ஒரு பொருட்கு இருபெயர் ஒட்டி நிற்க, அவற்றுள் ஒருபெயர் ஆகுபெயராக நிற்றலால், இருபெயர் ஒட்டாகுபெயர்,

வகரக்கிளவி என்பதில் கிளவிஎன்பது சொல்லை உணர்த்தும்போது இயற்பெயர்; சொற்குக் கருவி ஆகிய எழுத்தை உணர்த்தும்போது ஆகுபெயர். வகரக்கிளவி வகரமாகிய எழுத்து எனப் பொருள்படும். மக்கட் சுட்டு என்பதில் சுட்டு என்பது நன்கு மதிப்பை உணர்த்தும்போது இயற்பெயர்; நன்கு மதிக்கபடுதலை உடைய பொருளை உணர்த்தும்போது ஆகுபெயர். மக்கட்சுட்டு மக்களாகிய நன்கு மதிக்கப்படுபொருள் எனப் பொருள்படும்.

# பிரிவு – 2 நன்னூல்

குறிப்பு

**பயன்:பொருளை வேற்றுமைப்படுத்தலின் இன்றியமையாமையை அறிதல்**

**தமிழில் இடம்பெற்றுள்ள வேற்றுமை உருபுகளை அறிந்து பயன்கொள்ளல்**

**வேற்றுமை உருபுகளை பயன்கொள்ளும் விதத்தினைக் கற்றுப்பயன்படுத்தல்**

**செயலின் இன்றியமையாமையை வினை என்பதன் வழி அறிதல்**

**வினைச்சொல்லின் பொது இலக்கணம் தெரிதல்**

**வினைச்சொல்லின் வகைகளையும் அதன் பயன்களையும் கற்று உணர்தல்**

**காலம் காட்டும் வினைமுற்றுகளை அறிதல்**

**வினைமுற்றுகளின் வகைகளை உணர்ந்து அவற்றைத் தகுந்த இடத்தும் பயன்படுத்தும்**

**மொழித்திறனை அடைதல்**

## கூறு – 5 வேற்றுமை

பெயர்கள் காலம் காட்டும் விகுதிகளை ஏற்காது, ஆனால் வேற்றுமை உருபுகளை ஏற்கும். எனவேதான் பெயரியலின் இறுதியில் வேற்றுமை பற்றிய செய்திகளை விளக்கியுரைக்கிறார் நன்னூலார். பொருளை வேற்றுமைப்படுத்தி உரைப்பதால் இது வேற்றுமை எனப்பட்டது,

ஏற்கும் எவ்வகை பெயர்க்கும் ஈறாய்ப் பொருள்

வேற்றுமை செய்வன எட்டே வேற்றுமை

தம்மை ஏற்றுக்கொள்ளுதற்கு உரிய எவ்வகைப்பட்ட பெயர்களுக்கும் இறுதியாய்வரும். அப் பெயர்ப்பொருளை வேற்றுமைப் படுத்துவனவாய் அமையும்.அவ்வேற்றுமைகள் எட்டே ஆகும்.

தன்னை ஏற்ற பெயர்ப் பொருளுக்கு வேற்றுமை என்னும் செயலைச் செய்யும் கருத்தா ஆகிய உருபை வேற்றுமை என்றது காரிய ஆகுபெயர்.வேற்றுமை என்னும் பண்புப்பெயர் பண்பிக்கு ஆகாமையால் பண்பாகுபெயர் அன்றாயிற்று .

பெயரே ஐ ஆல் கு இன் அது கண்

குறிப்பு

விளி என்று ஆகும் அவற்றின் பெயர்முறை

எட்டு வேற்றுமை எனப் பட்டவைகளின் பெயர்கள் பெயரும் ஐயும் ஆலும் குவ்வும் இன்னும் அதுவும் கண்ணும் விளியும் என்றும் சொல்லப்பட்டவை ஆகும்.

ஐ - இரண்டாம் வேற்றுமை

ஆல் - மூன்றாம் வேற்றுமை

கு – நான்காம் வேற்றுமை

இன் - ஐந்தாம் வேற்றுமை

அது – ஆறாம் வேற்றுமை

கண் – ஏழாம் வேற்றுமை

விளி – எட்டாம் வேற்றுமை

ஆறன் உருபும் ஏற்கும் அவ் உருபே

பெயராய் நிற்கும் அவ்எழுவாய் உருபே,ஐ முதலாகிய ஆறு வேற்றுமை உருபுகளையும் ஏற்கும்.

முதல் மற்றும் எட்டாம் வேற்றுமைகள் உருபேற்காது. ஏனைய ஆறு வேற்றுமைகள் உருபேற்கும். ஆறாம் வேற்றுமையின் பிறிதோர் உருபு 'அ' என்பதாகும். ஆறன் உருபாகிய அது பிற உருபுகளையும் ஏற்கும்.

நீயிர் நீவிர் நான் எழுவாய் அல பெறா

நீயிர், நீவீர், நான் ஆகிய இம்மூன்று பெயர்களும் எழுவாய் அல்லாத வேற்றுமைகளை ஏற்காது.

## முதல் வேற்றுமை:

அவற்றுள்,

எழுவாய் உருபு திரிபு இல் பெயரே

வினை பெயர் வினாக்கொளல் அதன் பயனிலையே

முன் சொல்லப்பட்ட எட்டு வேற்றுமைகளுள், முதல் வேற்றுமையின் உருபாவது ஐ முதலிய உருபு ஏற்றுத் திரிதல் இல்லாத

குறிப்பு

பெயரேயாகும்.வினையையும் பெயரையும் வினாவையும் கொள்ள வருதல் அவ் உருபினது பொருள் நிலையாம்.

எனவே, அத் திரிபு இல்லாத பெயர் தானே தன் பொருளை வினைமுதற் பொருளாக வேற்றுமை செய்யும் என்பதாயிற்று.

இவ் எழுவாய் கொள்ளும் பெயர், இன்னது,இத்தகைய அளவிற்று என்னும் பொருள் படவரும் பெயராகும்.

சாத்தன் வந்தான்; கொற்றன் வாழ்க - இவை தெரிநிலைவினை கொள வந்தன.

அவன் பெரியன், ஆ உண்டு-இவை குறிப்புவினை கொள வந்தன.

சாத்தனிவன், கொற்றனவன் - இவை இன்னது என்னும் பொருள்பட வரும் பெயர் கொள வந்தன. ஆ ஒன்று, யானை நூறு - இவை இவ் அளவிற்று என்னும் பொருள்படவரும் பெயர் கொள வந்தன.

அவன் யார்; ஆ யாது - இவை வினாக்கொள வந்தன.

வினைமுதற் பொருளாவது ஒரு தொழில் நிகழ்ச்சியிலே தன்வயத்ததாகக் குறிக்கப்படும் பொருளாம். வினைமுதல், செய்பவன், கருத்தா என்பனஒருபொருள் குறித்த சொற்கள் ஆகும்.

சாத்தன் வந்தான் என்றவழி, தொழில் நிகழ்ச்சி வருதல், அத்தொழில் நிகழ்ச்சியிலே தன்வயத்த தாகக் குறிக்கப்படும் பொருள் சாத்தன் ஆதலால், சாத்தன் வினைமுதற் பொருள்.

இவ் எழுவாய்க்கு, ஐ முதலியன போன்ற உருபு இல்லையாயினும், உரையிற்கோடல் என்னும் உத்தியினாலே சிறுபான்மை ஆனவன், ஆகின்றவன்,ஆவான், என்பவன் முதலிய ஐம்பால் சொற்களும் சொல் உருபுகளாக வரும்.

சாத்தன் ஆனவன் வந்தான்; சாத்தியானவள் வந்தாள், சாத்தரானவர் வந்தார்; யானை ஆனது வந்தது; யானை ஆனவை வந்தன என வரும்.

### இரண்டாம் வேற்றுமை:

இரண்டாவதன் உருபு ஐயே: அதன் பொருள்

ஆக்கல் அழித்தல் அடைதல் நீத்தல்

ஒத்தல் உடைமை ஆதி ஆகும்

இரண்டாம் வேற்றுமை உருபு ஐ என்பதாகும். அதன் பொருள் ஆக்கல், அழித்தல், அடைதல், நீத்தல், ஒத்தல், உடைமை என்னும் தொடக்கத்தன ஆகும்.

வீட்டைக் கட்டினான், குடத்தை வனைந்தான் - ஆக்கல்

கோட்டையை இடித்தான், குடத்தை உடைத்தான் - அழித்தல்

குறிப்பு

கோயிலை அடைந்தான், ஊரை அடைந்தான் - அடைதல்

அரசைத் துறந்தான், மனைவியைத் துறந்தான் - நீத்தல்

பொன்னை ஒத்தான், புலியைப் போன்றவன்- ஒத்தல்

கல்வியை உடையான், பொருளை உடையான் - உடைமை

ஆதி என்றமையால் வீட்டை விரும்பினான், நூற்பொருளை அறிந்தான் எனவும் வருதல் உண்டு,விரும்புதலும் அறிதலும் வினை முதல் தொழில்கள். பொருளாகிய வீடும் நூற்பொருளாகிய வினை முதலின் தொழில்களுக்குச் செயற்படு பொருளாகவும் வரும்.

இச் செயற்படு பொருள் கருத்திற் செயப்படுவது,கருத்தின்றிச் செயப்படுவது, இருமையில் செயப்படுவது என மூன்று வகைப்படும்.

சோற்றை உண்டான் - கருத்தில் செய்தல்

சோற்றைக் குழைத்தான் - கருத்தின்றிச் செய்தல்

பதரையும் நெல்லையும் கொண்டான்- பதர்- கருத்தின்றிக் கொண்டது

நெல்- கருத்தில் கொண்டது

இனிச் செயப்படு பொருளை இயற்றப்படுவது, எய்தப்படுவது, வேறுபடுத்தப்படுவது என மூன்றாகப் பிரிப்பர். அவை மேற்காட்டிய ஆறு வகைகளுள் அடங்கும்.

## மூன்றாம் வேற்றுமை:

மூன்றாவதன் உருபு ஆல் ஆன் ஓடு ஒடு

கருவி கருத்தா உடனிகழ்வு அதன் பொருள்

மூன்றாம் வேற்றுமையின் உருபு முன்சொல்லப்பட்ட ஆல்மட்டுமன்றி ஆனும் ஓடும் ஒடுவுமாம்; அவ் உருபுகளின் பொருள்களாவன; கருவிப்பொருளும், வினைமுதல்பொருளும்; ( கருத்தாப் பொருள் ) உடன் நிகழ்ச்சிப் பொருளும் ஆகியன ஆகும்.

இந்நான்கு உருபுகளுக்கும் மூன்று பொருள்களுமாம் எனக் கூட்டிச் சொன்னார் ஆயினும், ஏற்புழிக் கோடல் என்னும் உத்தியால், அவ் உருபுகளுள், ஆல், ஆன் உருபுகளுக்குக் கருவியும் வினைமுதலும், ஓடு, ஒடு உருபுகளுக்கு உடன் நிகழ்ச்சியும் சிறந்தன ஆகும்.

வாளால் வெட்டினான், வாளான் வெட்டினான் - .கருவி

அரசனாலாகிய கோயில், அரசனானாகிய கோயில் - கருத்தா

மைந்தனோடு தந்தை வந்தான், மைந்தனொடு தந்தை வந்தான் - உடனிகழ்ச்சி

குறிப்பு

கருவியாவது வினைமுதல் தொழில்பயனைச் செயப்படுபொருளில் சேர்ப்பது, கருவி, காரணம், ஏது என்பன ஒரு பொருட்சொற்கள்.

வாளால் பகைவனை வெட்டினான் என்பதில் வாளைப்பற்றி வீசுதல் வினைமுதலினது தொழில்; பகைவன் உடம்பு அறுதல் அத்தொழிற்குப் பயன்; அப்பயனைப் பகைவனாகிய செயப்படுபொருளிலே சேர்ப்பது வாள்.எனவே வாள் கருவிப்பொருள் ஆகும்.

அக் கருவிப்பொருள் முதற்கருவியும் துணைக்கருவியும் என இருவகைப்படும். அவற்றுள், முதற்கருவியானது செயப்படுபொருளோடு ஒற்றுமை உடையது.

துணைக்கருவியாவது முதற்கருவிக்குத் துணையாய் அது காரியப்படும் அளவும் உடன் நிகழ்வது

மண்ணால் குடத்தை வனைந்தான் - குடமாகிய காரியத்தோடு ஒற்றுமை உடையது மண்ணாதலால், மண் முதற் கருவி.

திரிகையால் குடத்தை வனைந்தான் - மண்ணாகிய முதற்கருவிக்குத் துணையாய் அது குடமாகக் காரியப்படுமளவும் உடன் நிகழ்வது திரிகை ஆதலால் திரிகை துணைக்கருவி.

இக்கருவிப்பொருள் அகக்கருவி, புறக்கருவி ஒற்றுமைக்கருவி என மூன்றாயும் வரும் எனக் கொள்க.

மனத்தால் நினைந்தான் - அகக்கருவி

வாளால் வெட்டினான் - புறக்கருவி

அறிவால் அறிந்தான் - ஒற்றுமைக் கருவி

எழுவாய் வேற்றுமையில் வரும் வினைமுதற்பெயர் தன் விகுதி வினையினாலே முடியும்; இம்மூன்றாம் வேற்றுமையில் வரும் வினைமுதற்பெயர் செயப்படுபொருள் விகுதி வினையினாலே முடியும்; இதுவே அவ் இரண்டற்கும் வேறுபாடாகும்.

குயவன் குடத்தை வனைந்தான் - குயவன் என்னும் எழுவாய்க் கருத்தாத் தனக்குரிய ஆன் விகுதி வினையினாலே முடிந்தது.

குயவனால் பானை வனையப்பட்டது - குயவன் என்னும் மூன்றன் உருபின் கருத்தாத் தனக்குரிய ஆன்விகுதி வினையினாலே முடியாது, செயப்படுபொருட்குரிய துவ்விகுதி வினையினாலே முடிந்தது.

**குறிப்பு**

அவ் இருவகை வினைமுதலும், இயற்றும் வினைமுதல், ஏவும் வினைமுதலும் என இருவகைப்படும்.

இயற்றும் வினைமுதலாவது கருவியைத் தொழிற்படுத்துவது ஆகும்.

ஏவும் வினைமுதலாவது அவ் இயற்றும் வினை முதலினது தொழிலை உண்டாக்கும் தொழிலுடையது ஆகும்.

தச்சன் கோயில் கட்டினான்; தச்சனால் கோயில் கட்டப்பட்டது - தச்சன் இயற்றுதல் கருத்தா.

அரசன் கோயில் கட்டுவித்தான்; அரசனால் கோயில் கட்டுவிக்கப்பட்டது.- ஏவுதற் கருத்தா.

உடனிகழ்ச்சிப் பொருளாவது, வினைகொண்டு முடியும் பொருளின் தொழிலைத் தன்னிடத்தும் உடன் நிகழ்வதாக உடைய பொருளாம்.

மைந்தனோடு தந்தை வந்தான் என்றவழி, தந்தை வினைகொண்டு முடியும் பொருள். வருதல் அப்பொருளின் தொழில்; அவ்வருதல் தொழிலைத் தன்னிடத்தும் உடனிகழ்வதாகவுடைய பொருள் மைந்தன் ஆதலால் மைந்தன் உடனிகழ்ச்சிப் பொருள்.

உடனிகழ்ச்சிப் பொருள், தலைமைப்பொருளும், தலைமையில் பொருளும் என இருவகைப்படும்.

தலைமைப்பொருளாவது வினைகொண்டு முடியும் பொருளின் உயர்வுடையுது:

தலைமையில் பொருளாவது வினைகொண்டு முடியும் பொருளின் இழிவுடையது.

மன்னவனோடு மந்திரி வந்தான் - வினை கொண்டு முடியும் பொருள் மந்திரி; அப் பொருளின் உயர்வுடைய பொருள் மன்னவன் ஆதலால், உடனிகழ்ச்சிப் பொருள் தலைமைப் பொருளாயிற்று

மாணாக்கனோடு ஆசிரியன் வந்தான் - வினை கொண்டு முடியும் பொருள் ஆசிரியன், அப்பொருளின் இழிவுடைய பொருள் மாணாக்கன் ஆதலால், உடனிகழ்ச்சிப் பொருள் தலைமையில் பொருளாயிற்று.

ஆல், ஆன் உருபுகள் உடனிகழ்ச்சிப் பொருளிலும். ஒடு, ஒடு உருபுகள் வினைமுதற்பொருள் கருவிப் பொருள்களிலும் ஒரோ இடத்து அருகி வரும்.

குறிப்பு

தூங்குகையா னோங்கு நடைய

உறழ்மணியா னுயர் மருப்பின.

-என, ஆனுருபு உடனிகழ்ச்சிப் பொருளில் வந்தது

இவற்றிற்குத் தூங்கு கையோடு என்றும், உறழ் மணியோடு என்றும், பொருள் கொள்க. தூங்குகையா னோங்கு நடைய என்புழி, நடத்தலால் ஆகிய வேறு இடப்புணர்ச்சி, கைக்கும் யானைக்கும் உளதாதல் அறிக. உறழ்மணி யானுயர் மருப்பின, என்புழி, யானையினது உடைமை மணிக்கும் மருப்பிற்கும் உளதாயிற்று.

“கொடியொடு துவக்குண்டான்

ஊசியொடு குயின்ற தூசும் பட்டும்”

-என்பதில், கொடியொடு, ஊசியொடு என்பன, கொடியால், ஊசியால் எனப் பொருள்படுதலும், கொடி, ஊசி என்பன முறையே வினைமுதற்பொருள் கருவிப்பொருள் ஆதலும் காண்க.

சிறுபான்மை ஆல்,ஆன் உருபுகள் முதற்பொருள் மேல் ஏற்றிச் சொல்லப்படும் விவகாரத்தை உடைய சினைப்பொருளிலும், தொறுப் பொருளிலும் வரும்.

கண்ணாற் குருடன்;

காலால் முடவன்,

-என்புழிக், குருடன் முடவன் முதற்பொருள்கள்; அவைகளின் மேலேற்றிச் சொல்லப்படும் விகாரம் குருட்டுத் தன்மையும் முடத்தன்மையும்; அவ்விகாரத்தை உடைய சினைப்பொருள்கள் கண்ணும் காலும் ஆதல் காண்க.

‘ஊரானோர் தேவகுலம்’ - ஊர்தோறும் ஒவ்வொரு தேவகுலம் எனப் பொருள் கொள்ளப்படும்.

### நான்காம் வேற்றுமை:

நான்காவதனற்கு உருபு ஆகும் குவ்வே

கொடை பகை நேர்ச்சி தகவு அதுவாதல்

பொருட்டு முறை ஆதியின் இதற்குஇது இது எனல் பொருளே

நான்காம் வேற்றுமைக்கு உருபு முன் சொல்லப்பட்ட 'கு' ஒன்றே ஆகும். அவ் உருபின் பொருள்களாவன, கொடையும், பகையும், நட்பும், தகுதியும் ஆகும்.

**குறிப்பு**

முதல்காரணமும்,நிமித்த காரணமும் முறையும் முதலான பொருள்சொற்களின் புணர்ச்சியில் இதற்கு இது என்பதுபட வருவனவாகிய அவ்வுருபு ஏற்ற பெயர்ப்பொருள் வேறுபட்ட பலவுமாம்.

கொடை என்றமையால் கோடற்பொருளும், பகை நேர்ச்சி என்றமையால் பகைதொடர் பொருளும் நட்புத்தொடர் பொருளும், தகுதி என்றமையால் தகுதியுடைப் பொருளும், அதுவாதல் என்றமையால் முதற்காரண காரியப் பொருளும், பொருட்டு என்றமையால் நிமித்த காரணகாரியப் பொருளும், முறை என்றமையால் முறைக்கு இயைபொருளும், குவ்வுருபின் பொருள்களாகும் என்பது தெரியவரும்.

இரவலர்க்குப் பொன்னைக் கொடுத்தான் - கோடல்பொருள்.

பாம்புக்குப் பகை கருடன் - பகைத்தொடர் பொருள்.

சாத்தனுக்கு நட்பாளன் கொற்றன் - நட்புத்தொடர்பொருள்.

அரசர்க்கு உரித்து அருங்கலம் - தகுதியுடைப் பொருள்.

குண்டலத்திற்குப் பொன் - முதற்காரண காரியப் பொருள்.

கூலிக்கு வேலை செய்தான் - நிமித்தகாரண காரியப் பொருள்.

சாத்தானுக்கு மகன் கொற்றன் - முறைக்கு இயைபொருள்.

கோடற்பொருளாவது கொடுத்தல் தொழிலின் செயப்படு பொருளைத் தனக்கு உரியது ஆக்கிக் கொள்ளுதலையுடைய பொருளாம். கோடற்பொருள்,கோளிப்பொருள் என்பன ஒருபொருள் சொற்கள்.

இரவலர்க்குப் பொன்னைக் கொடுத்தான் - கொடுத்தலின் செயப்படுபொருள் பொன்; அதனைத் தனக்குரியதாக்கிக் கொள்ளுதலையுடைய பொருள் இரவலராதலால், இரவலர் கோடற் பொருள்.

மாணாக்கனுக்கு அறிவு கொடுத்தான் - அறிவாகிய செயப்படுபொருள் கொடுப்போன் பொருளாய்க் கொள்வோன் இடத்துச் செல்லாது ஆங்குத் தோன்றினும், அதனைத் தனக்குரியது ஆக்கிக் கொள்ளுதலால், மாணாக்கன் கோடற்பொருள்;

மாணாக்கனுக்கு நூற்பொருள் உரைத்தான் - சொல்லுதலின் செயப்படுபொருளாகிய நூற்பொருளை அறிதலையுடைய பொருளாகிய மாணாக்கனும் கோடற்பொருளே ஆகும்.

கோடல் பலவகைப்படும். அவை : கேளாது ஏற்றல், கேட்டே ஏற்றல், ஏலாது ஏற்றல்,ஈவோன் ஏற்றல், உயர்ந்தோன் ஏற்றல், இழிந்தோன் ஏற்றல், ஒப்போன் ஏற்றல், உணர்வின்று ஏற்றல், விருப்பாய் ஏற்றல், வெறுப்பாய் ஏற்றல் முதலியன ஆகும்..

குறிப்பு

ஆவிற்கு நீர் விட்டான் - கேளாது ஏற்றல்

வறியார்க் கீந்தான் - கேட்டே ஏற்றல்.

மாணாக்கனுக்கு அறிவு கொடுத்தான் - ஏலாது ஏற்றல்.

தனக்குச் சோறிட்டான் - ஈவோன் ஏற்றல்.

அரனுக்குக் கண்ணலர் கொடுத்தான் அரி - உயர்ந்தோன் ஏற்றல்

அரிக்குச் சக்கரங்கொடுத்தான் அரன் - இழிந்தோன் ஏற்றல்.

சோழனுக்கு விருந்திட்டான் சேரன் - ஒப்போன் ஏற்றல்.

சோற்றிற்கு நெய்விட்டான் - உணர்வின்று ஏற்றல்

மாணாக்கனுக்குக் கசையடி கொடுத்தான் ஆசிரியன் - விருப்பாய் ஏற்றல்.

கள்ளனுக்குக் கசையடி கொடுத்தான் அரசன் - வெறுப்பாய் ஏற்றல்.

கொடுத்தலும் பலவகைப்படும். அவை: வழக்கத்தில்கொடுத்தல், உரிமையில் கொடுத்தல், அச்சத்தில் கொடுத்தல், பாவனையில் கொடுத்தல், உவகையில் கொடுத்தல், வெகுளியில் கொடுத்தல், அவலத்தில் கொடுத்தல் முதலியன.

மருமகனுக்கு மகளைக் கொடுத்தான் - வழக்கத்தில் கொடுத்தல்.

மகனுக்கு அரசு கொடுத்தான் - உரிமையில் கொடுத்தல்.

அரசற்குத் திறை கொடுத்தான் - அச்சத்தில் கொடுத்தல்

தந்தை தாய்க்குத் திதி கொடுத்தான் - பாவனையில் கொடுத்தல்.

அவனுக்குப் பரிசு கொடுத்தான் - உவகையில் கொடுத்தல்

அவனுக்குத் தண்டனை கொடுத்தான் - வெகுளியில் கொடுத்தல்.

வாய்க்கரிசி இட்டான் - அவலத்தில் கொடுத்தல்.

ஒருபொருளின் இடத்துள்ள பகை தொடர்தற்கு இடமாகிய பொருளாம்.

பாம்புக்குப் பகை கருடன் என்பதில் கருடனிடத்துள்ள பகை தொடர்தற்கு இடம் பாம்பு ஆதலால் பாம்பு பகைத்தொடர் பொருள்.

நட்புத்தொடர் பொருளாவது ஒரு பொருளின் இடத்துள்ள நட்புத் தொடர்தற்கு இடமாகிய பொருளாம்.

குறிப்பு

சாத்தானுக்கு நண்பன் கொற்றன் என்பதில் கொற்றன் இடத்துள்ள நட்புத் தொடர்தற்கு இடம் சாத்தன் ஆதலால் சாத்தான் நட்புத்தொடர் பொருள்.

வைவதில் தீமைதொடர் பொருளும் வாழ்த்துவதில் நன்மை தொடர்பொருளும் பகைநேர்ச்சிகளில் அடங்கும். அவை :-

தீயோர்க்குக் கேடு உண்டாகுக,

நல்லோர்க்குச் செல்வம் உண்டாகுக என வரும்.

தகுதியுடைப் பொருளாவது தன்னோடு பொருந்துதற்குத் தகுதியாகிய பொருளை உடைய பொருளாகும்.

அரசர்க் குரித்து அருங்கலம் என்றபோது அரசரோடு பொருந்துதற்குத் தகுதியாகிய பொருள் அருங்கலம்; அப்பொருளை உடையபொருள் அரசர் ஆதலால் அரசர் தகுதியுடைப் பொருள்.

முதல் காரண காரியப் பொருளாவது முதல் காரணத்தால் ஆகும் பொருளாகும்.

குண்டலத்திற்குப் பொன் என்பதில் பொன் முதற்காரணம், அதனால் ஆகிய காரியம் குண்டலமாதலால் குண்டலம் முதற்காரணகாரியப் பொருள்.

நிமித்தகாரண காரியப் பொருளாவது நிமித்தகாரணத்தால் ஆகும் பொருளாம். கூலிக்கு வேலை செய்தான் என்பதில், வேலை நிமித்த காரணம்; அதனாலாகிய காரியம் கூலி ஆதலால் கூலி நிமித்த காரண காரியப்பொருள்.

முறைக்கு இயை பொருளாவது பிறப்பினால் ஒரு பொருளின் முறைக்குத் தான் இயைந்து நிற்கும் பொருளாம்.

சாத்தனுக்கு மகன் கொற்றன் என்றபோது கொற்றன் இடத்துள்ள மகன் என்னும் முறைக்குத் தான் இயைந்து நிற்கும் பொருள் சாத்தன் ஆதலால் சாத்தன் முறைக்கு இயை பொருள் ஆகும்.

ஆதி என்றதனால் -

மழைக்கு மின்னல் - உற்பாதத்தால் குறிக்கப்படுவது

அவனுக்கு இது போதும் - குறைவின்மையைக் கொள்வது,

பிறவும் வரும். உற்பாதம் என்பது மேல்விளையும் நன்மை தீமையை அறிவிக்கும் குறி ஆகும்.

குவ்வுருபு நிற்றற்கு உரிய சில இடங்களிலே, பொருட்டு, நிமித்தம் என்பனவும், குவ்வுருபின்மேல் ஆக என்பதும்சொல்லுருபுகளாக வரும்.

கூழின்பொருட்டு வேலை செய்தான்;

கூலியின் நிமித்தம் வேலை செய்தான்;

கூலிக்காக வேலை செய்தான், என வரும்.

குறிப்பு

**ஐந்தாம் வேற்றுமை:**

ஐந்தாவதன் உருபு இல்லும் இன்னும்

நீங்கல் ஒப்பு எல்லை ஏதுப் பொருளே

ஐந்தாம் வேற்றுமையின் உருபாவன இல்லும்இன்னும் ஆகும். அவ்வுருபுகளின் பொருள்களாவனநீக்கப்பொருளும், ஒப்புப் பொருளும், எல்லைப் பொருளும், ஏதுப்பொருளுமாகிய அவ்வுருபுகளை ஏற்ற பெயர்ப்பொருள்கள் வேறுபட்ட இந்நான்குமாம்.

மலையின் வீழ் அருவி - நீக்கப்பொருள்.

காக்கையிற் கரிது களம்பழம் - ஒப்புப்பொருள்.

மதுரையின் வடக்குச் சிதம்பரம் - எல்லைப்பொருள்.

கல்வியிற் பெரியன் கம்பன் - ஏதுப்பொருள்.

நீக்கப் பொருளாவது, பிரிவை உண்டாக்கும் தொழில் இன்றிப் பிரிவைமாத்திரம் தன் இடத்துடைய பொருளாம்.

மலையின் வீழருவி என்றபோது அருவியின் வீழ்ச்சி பிரிவை உண்டாக்கும் தொழில் அது தன்னிடத்து இல்லாமல் அவ்வீழ்ச்சியால் ஆகிய பிரிவு ஒன்றையே தன்னிடத்து உடையது மலை எனவே மலை நீக்கப்பொருள்.

ஒப்புப் பொருளாவது, உவமேயப் பொருளிலும் தன்னிலும் இருக்கின்ற பொதுத் தன்மையால் உவமானமாகும் பொருளாம்.

காக்கையிற் கரிது களம்பழம் என்பதில் களம்பழம் உவமேயம்; உவமேயத்திலும் தன்னிலும் உள்ள பொதுத்தன்மை கருமை, அதனால் உவமானம் ஆகிய பொருள் காக்கை.எனவே காக்கை ஒப்புப்பொருள்.

எல்லைப் பொருளாவது,அறியப்படாத பொருளினது திசை அளவு, வழி அளவு, கால அளவு, பண்பு முதலியவற்றைக் குறிப்பித்தற்கு எல்லையாக நிற்கும் பொருளாம்.

மதுரையின் வடக்குச் சிதம்பரம் - அறியப்படாத சிதம்பரத்தினது திசையைக் குறிப்பித்தற்கு எல்லையாக நிற்பது அறியப்பட்ட பொருளாகிய மதுரை.எனவே மதுரை எல்லைப்பொருள்.

**குறிப்பு**

கச்சியின் திருத்தணிகை முக்காவதம் - அறியப்படாத திருத்தணிகையினது வழியளவை அறிவித்தற்கு எல்லையாக நிற்பது, அறியப்பட்ட பொருளாகிய கச்சி: கச்சி என்பது எல்லைப்பொருள்.

சாத்தனில் இரண்டாண்டு மூத்தவன் கொற்றன் - அறியப்படாத கொற்றனுடைய வயதினைக் குறிப்பித்தற்கு எல்லையாக நிற்கும் பொருள் அறியப்பட்ட சாத்தன்.எனவே சாத்தான் எல்லைப் பொருள்.

அரசரிற் பெரியர் அந்தணர்; ஆவின் இழிந்தது மேதி - அறியப்படாத அந்தணரும் மேதியுமாகிய பொருள்களின் உயர்வு தாழ்வுகளைக் குறிப்பித்தற்கு எல்லையாக நிற்கும் பொருள்கள் அறியப்பட்ட அரசரும், ஆவும். எனவே அரசரும் ஆவும் எல்லைப்பொருள்கள். இவ்வுயர்வு தாழ்வுகளை நீக்கப்பொருள் என்பாரும் உளர்.

ஏதுப்பொருளாவது, ஒரு பொருளின் பெருமை முதலியவற்றிற்கு ஏதுவாகும் பொருளாம். கல்வியிற் பெரியன் கம்பன் என்பதில் கம்பனுடைய பெருமைக்கு ஏதுக் கல்வி ஆதலால் கல்வி ஏதுப்பொருள்.

மாயையில் தோன்றிய துலகம் - முதற்காரணப் பொருள்

மண்ணுலகின் வேறு விண்ணுலகம் - வேற்றுமைக்கு எதிர்ப்பொருள்

பாவத்தின் வெறுக்கின்றான் - விடயப் பொருள்

போன்றவற்றிலும் ஐந்தனுருபு வரும்.

நீக்கப்பொருளிலும், எல்லைப் பொருளிலும், இன், இல் உருபுகளின்மேல், நின்று, இருந்து என்பவை, உம் பெற்றும் பெறாதும் சொல் உருபுகளாக வரும்.

ஊரினின்றும் போயினான்;

ஊரினின்று போயினான்

ஊரிலிருந்தும் போயினான்,

ஊரிலிருந்து போயினான்

- இவை நீக்கப் பொருள்.

காட்டினின்றும் ஊர்காவதம்

காட்டினின்றூர் காவதம்;

காட்டிலிருந்து மூர்காவதம்,

காட்டிலிருந் தூர்காவதம்

- இவை எல்லைப்பொருள்.

குறிப்பு

### ஆறாம் வேற்றுமை:

ஆறன் ஒருமைக்கு அதுவும் ஆதுவும்

பன்மைக்கு அவ்வும் உருபாம்: பண்பு உறுப்பு

ஒன்றன் கூட்டம் பலவின் ஈட்டம்

திரிபின் ஆக்கம் ஆம்: தற்கிழமையும்

பிறிதின்கிழமையும் பேணுதல் பொருளே

ஆறாம் வேற்றுமையினது வருமொழியின் ஒருமைக்கு அதுவேயன்றி ஆதுவும் ஆறன் பன்மைப் பொருண்மைக்கு அகரமும் உருபாம், அவற்றின் பொருள்களாவன, குணமும் தொழிலும் ஆகிய பண்பும்,உறுப்பும், ஒன்றன் கூட்டம் பலவின் ஈட்டம், திரிபின் ஆக்கமும் ஆகும். ஐந்து தற்கிழமைப் பொருள்களையும், அவை அல்லாத பிறிதின் கிழமைப் பொருள்களையும், உடையனவாக அவ் உருபுகளை ஏற்ற பெயர்ப்பொருள்கள் மேல் வரும்.

ஐந்து தற்கிழமைப் பொருள் : தொழில்,பண்பு, உறுப்பு, ஒன்றன் கூட்டம், திரிபின் ஆக்கம் ஆகும்.

பிறிதின் கிழமைப் பொருள்: : பொருள், இடம், காலம்

தற்கிழமைப் பொருளாவது தன்னோடு ஒற்றுமை உடையது.

பிறிதின் கிழமைப் பொருளாவது தன்னின் வேறு ஆயது ஆகும்.

### தற்கிழமை

சாத்தனது கருமை - குணம்,

சாத்தனது வரவு - தொழில் பண்புத் தற்கிழமை

சாத்தனது கை,

புலியது வால் உறுப்புத் தற்கிழமை

மாந்தரது தொகுதி,

நெல்லது குப்பை - ஒன்றன் கூட்டத் தற்கிழமை

நெல்லது குப்பை - ஒன்றன் கூட்டத் தற்கிழமை

படைகளது தொகுதி,

குறிப்பு

பறவைகளது கூட்டம் - பலவின் கூட்டத் தற்கிழமை

நெல்லினது பொரி

மஞ்சளது பொடி - ஒன்றுதிரிந்து ஒன்று ஆயதன்தற்கிழமை .

**பிறிதின் கிழமை**

சாத்தனது பசு

முருகனது வேல் - பொருட் பிறிதின் கிழமை

சாத்தனது வீடு

முருகனது குறிஞ்சி - இடப் பிறிதின் கிழமை

சாத்தனது நாள்

மாரனது வேனில் - காலப் பிறிதின் கிழமை .

எனாது கை, நினாது தலை, தனாது புறம் -அது உருபு, என கைகள், தனதாள்கள் அகர உருபு, இராகுவினது தலை, எனதுயிர் என ஆறனுருபு, உடையதும் உடைமைப்பொருளும் வேறாகாத ஒற்றுமைப் பொருளில் வந்தது.உற்பாதம் என்பது மேல்விளையும் நன்மை தீமையை அறிவிக்கும் குறி ஆகும்.இராகுவே தலையாதலாலும், நான் எனப்பட்டது உயிரே ஆதலாலும் ஒற்றுமைப் பொருளாயின.

இந்த ஆறன் உருபுகளுள் ஒன்று நிற்றற்குரிய இடத்தில் உடைய என்பது சொல்லுருபாக வரும்.

சாத்தனுடைய புதல்வன், சாத்தனுடைய புதல்வர் ;

சாத்தனுடைய வீடு , சாத்தனுடைய வீடுகள் என வரும்.

**ஏழாம் வேற்றுமை:**

ஏழன் உருபு கண் ஆதி ஆகும்

பொருள் முதல் ஆறும் ஓர்இரு கிழமையின்

இடனாய் நிற்றல் இதன் பொருள் என்ப

ஏழாம் வேற்றுமையின் உருபு முன் சொல்லப்பட்ட கண்ணே அன்றி அது முதலாகிய பிறவுமாம்.இது பொருள், இடம், காலம், சினை குணம்,

குறிப்பு

தொழில் என்னும் ஆறு பொருளிலும் தற்கிழமை, பிறிதின் கிழமைப் பொருளிலும் வரும்.

பொருள் - மணியின்கண் இருக்கின்றது ஒளி - தற்கிழமை –பொருள் இடமாயிற்று.

பொருள் - பனையின்கண் வாழ்கின்றது அன்றில் - பிறிதின் கிழமை பொருளிடமாயிற்று

இடம் - ஊரின் கண் இருக்கும் இல்லம்- .தற்கிழமை

இடம் - ஆகாயத்தின்கண் பறக்கின்றது பருந்து - பிறிதின் கிழமை

காலம் - நாளின்கண் நாழிகை உள்ளது - தற்கிழமை

காலம் - வேனிற்கண் பாதிரி பூக்கும் -பிறிதின் கிழமை

சினை - கையின்கண் உள்ளது விரல் - தற்கிழமை்

சினை - கையின்கண் விளங்குகிறது கடகம் - பிறிதின் கிழமை

குணம் - கறுப்பின்கண் மிக்குள்ளது அழகு - தற்கிழமை

குணம் -இளமையின் கண் வாய்த்தது செல்வம் - பிறிதின் கிழமை

தொழில் - ஆடற்கண் உள்ளது சதி- தற்கிழமை

தொழில் -ஆடற்கண் பாடப்பட்டது பாட்டு - பிறிதின் கிழமை

வினைமுதல் வழியாக வினைமுதல் தொழிற்கு ஆயினும் செயப்படுபொருள் வழியாகச் செயப்படுபொருளில் இருக்கின்ற பயனுக்கு ஆயினும் இடமாகும் பொருள் இடப்பொருள் , என்பர் வடநூலார்.

மணியின் கண் இருக்கின்றது ஒளி - ஒளிஎன்னும் வினைமுதலின் வழியாக அதனது இருத்தல் தொழிற்கு மணி இடம் ஆயிற்று.

கழுவின்கண் கள்ளனை ஏற்றினான் - கள்ளன் என்னும் செயப்படுபொருளின் வழியாக அச்செயப்படுபொருளில் இருக்கின்ற உயிர்ப் பிரிவாகிய பயனுக்குக் கழு இடம் ஆயிற்று .

இடப்பொருள் - தன்னிற் சிறிது இடமாவதும், தான் முழுதும் இடமாவதும், விடயமாவதும் என மூவகைப்படும்.

ஊர்க்கண் இருந்தான், பாயில் இருக்கின்றான் - ஒரோவழி மேவல்.

மணியின்கண் ஒளி, உயிரின்கண் உணர்வு, பாலின்கண் சுவை, தீயின் கண் சூடு, நீரின்கண் சீதம் - எங்கும் வியாபகம்.

கல்வியின்கண் ஆசை வைத்தான், குருவின் கண் அன்பு செய்தான் - விடயம்.

**குறிப்பு**

சிறுபான்மை ஏழன் உருபுகள், கூட்டிப் பிரித்தற்கு எல்லை ஆகும் பொருளிலும், பிரித்துக் கூட்டலில் குழுவாகும் பொருளிலும், ஒரு தொழில் காலத்தைக் குறிக்கும் பிறிது தொழிலாகும் பொருளிலும் வரும்.

மக்களில் உயர்ந்தோர் அந்தணர்: குறில் ஐந்தனுள் அஇஉஇம் மூன்றும் சுட்டு - கூட்டிப் பிரிக்கும் எல்லைப்பொருள்.

அறம்செயும் மகன் தேவருள் வைக்கப்படுவான்: கல்வியறிவு இல்லாதவன் விலங்கினுள் வைத்து எண்ணப்படுவான் - பிரித்துக்கூட்டும் குழுப்பொருள்.

பால் கறக்கையில் வந்தான்: பொருதற்கண் மழை பெய்தது - ஒருதொழில் காலத்தைக் குறிக்கும் பிறிது தொழில்

கண் கால் கடை இடை தலை வாய் திசை வயின்

முன் சார் வலம் இடம் மேல் கீழ் புடை முதல்

பின் பாடு அளை தேம் உழை வழி உழி உளி

உள் அகம் புறம் இல் இடப் பொருள் உருபே

கண் முதலாக இல் ஈறாகச் சொல்லப்பட்ட இவ் இருபத்தெட்டும் தம்மை ஏற்ற பெயர்ப்பொருளை இடப்பொருளாக வேற்றுமைசெய்யும் உருபுகளாம்.

கால் - ஊர்க்கால் நிவந்த பொதும்பர்

கடை - வேலின்கடை மணிபோல் திண்ணியான்

இடை - நல்லாரிடைப் புக்கு

தலை - வலைத்தலை மான் அன்ன நோக்கியர்

வாய் - குரை கடல் வாய் அமுதென்கோ

திசை - தேர்த்திசை இருந்தான்

வயின் - அவர்வயின் செல்வாய்

முன் - கற்றார் முன் தோன்றா கழிவிரக்கம்

சார் - காட்டுச்சாரோடுங் குறுமுயல்

வலம் - கைவலத்துள்ளது கொடுக்கும்

இடம் - இல்லிடப்பரத்தை

மேல் - தன்மேல் கடுவரை நீரிற் கடுத்து வரக் கண்டும் கடுப்பு - விரைவு

கீழ் - பிண்டிக் கண்ணார் நிழற் கீழ் எந்தம் அடிகள்

புடை - எயிற்புடை நின்றான்

முதல் - சுரன்முதல் வந்த வுரன்மாய் மாலை சுரன் - பாலை நிலம்

பின் - காதலிபின் சென்றதம்ம

பாடு - நம்பாடு அணையாத நாள்

அளை-கல்லளைச்சுனைநீர்

தேம் - தோழிக்குரியவைகோடாய்தேத்து கோடாய் கைத்தாய்,

உழை - அவனுழைவந்தான்

வழி - நின்றதோர் நறவேங்கை நிழல்வழி யசைந்தன்ன

உழி - உறைப்புழியோலைபோல

உளி - குயில்சேர்குளிர் காவுளிசேர் புறையும்

உள் - முல்லையங்குவட்டுள் வாழும்

அகம் - பயன்சாராப் பண்பில்சொற் பல்லாரகத்து

புறம் - செல்லுமென்னுயிர்ப் புறத்திறுத்த மருண்மாலை

இல் - ஊரிலிருந்தார்

குறிப்பு

இனிக் கண், கான் முதலியன இடவேறுபாடுகளை உணர்த்தும்போது ஒரு திறத்தனவாகிய உருபாகாது பல திறத்தனவாகிய இடங்களை உணர்த்தும் பெயர்களாம்.

கண்ணகன் ஞாலம் - கண்

அகத்திலிருந்தான் - அகம்

வீட்டின் புறத்திலிருந்தான் - புறம்

மேலிடத்திருந்தான் - இடம்

முன்னிருந்தான் - முன்

கடைநாள் - கடை

இடைச்சுரம் - இடை

தலையாயர் – தலை

தென்திசை – திசை

குறிப்பு

**எட்டாம் வேற்றுமை:**

எட்டன் உருபே எய்துபெயர் ஈற்றின்

திரிபு குன்றல் மிகுதல் இயல்பு அயல்

திரிபும் ஆம், பொருள் படர்க்கையோரைத்

தன் முகம் ஆகத் தான்அழைப் பதுவே

எட்டாம் வேற்றுமை விளி வேற்றுமை ஆகும். அதன் உருபுகளாவன: விளி அடைந்த பெயர் ஈற்றினுடைய திரிதல், கெடுதல், மிகுதல்,இயல்பாதல்,ஈற்று அயலெழுத்துத் திரிதல் என்பன ஆகும்.அவற்றின் பொருளாவது படர்க்கையில் உள்ளவரைத் தனக்கு எதிர்முகமாக அழைப்பதாகிய விளிக்கப்படு பொருளாகும்.

தான் அசைநிலை, விளித்தற்குக் கருவி ஆகிய உருபை விளி என்றது காரிய ஆகுபெயர்.

அன்னை – அன்னாய்,

நல்லாள் - நல்லாய் - ஈறு திரிதல்

அரசன் - அரச

சோழன்- சோழ - ஈறு குன்றுதல்

மகன் - மகனே,

அன்னை – அன்னையே - ஈறு மிகுதல்

நம்பி, தோழி - ஈறு இயல்பாதல்

மக்கள் - மக்காள்,

புலவர், புலவீர் - ஈற்றயல் திரிதல்

அப்பன் - அப்பா - ஈறு குன்றி ஈற்றயல் திரிதல்

அண்ணன் - அண்ணாவே - ஈறு குன்றி ஈற்றயல் திரிந்து ஈறு மிகுதல்

சிறு பான்மை வேளள், ஆ அய் என்று அளபெடுத்தும் வரும்.

## விளிக்கப்படும் பெயர்கள்:

இ உ ஊ வோடு ஐ ஓ ன ள ர ல

ய ஈற்று உயர்திணை ஓ ர அல் இவற்றோடு

ண.்.கான் ஆஈறு ஆகும் பொதுப் பெயர்

ஞ ந ஒழி அனைத்து ஈற்று அ.்.றிணை விளிப்பன

குறிப்பு

இகரமும் உகரமும் ஊகாரமும் ஐகாரமும் ஓகாரமும் என்னும் உயிர்களும் னளரலய என்னும் மெய்களும் ஆகிய பத்தெழுத்துக்களையும் இறுதியில் உடைய உயர்திணைப் பெயர்களும் விளியேற்கும்.இவற்றுள் ஓகார உயிரும் ரகரமெய்யுமாகிய இரண்டும் ஒழித்து நின்ற எட்டுடனே ணகரமும் ஆகாரமும் ஆகிய இரண்டும் கூடிய பத்தெழுத்துக்களும் இறுதியாகிய பொதுப்பெயர்களும் விளியேற்கும். ஞகர நகரங்களும் (ஈறாகாத எகரமும்) ஒழிந்த இருபத்தோர் எழுத்துக்களையும் ஈற்றில் உடைய அ.்.றிணைப்பெயர்களும் விளியேற்கும் பெயர்களாகும்.

## உயர்திணைப் பெயர்கள்:

நம்பி, வேந்து, ஆடூஉ, விடலை, கோ, ஐயன், வேள், வணிகர், தோன்றல், சேய்

பொதுப்பெயர்கள்:

சாத்தி, கூற்று, தந்தை, சாத்தன், கடவுள், தூங்கல், தாய், ஆண், பிதா

மக, புழு, தீ, முசு, பூ, நாரை, மண், தகர்.

## அ.்.றிணைப் பெயர்கள்:

இம் முப் பெயர்க்கண் இயல்பும் ஏயும்

இகர நீட்சியும் உருபாம் மன்னே

முன் விளிக்கப்படும் என்ற மூவகைப் பெயர்களிடத்தும்இயல்பாதலும் ஏகாரமிகுதலும் இகரம் ஈகாரமாதலும் பெரும்பாலும் விளி உருபுகளாகும்.

## உயர்திணைப் பெயர்: - இயல்பாதல்:

முனி கூறாய்

வேந்து கூறாய்,

ஆடூஉக்கூறாய்,

விடலை கூறாய்,

கோக்கூறாய்,

குறிப்பு

கோன் கூறாய்,

வேள் கூறாய்,

மாந்தர் கூறீர்,

தோன்றல் கூறாய்,

சேய் கூறாய் - இயல்பு

**உயர்திணைப் பெயர் - ஏகாரம் மிகுதல்:**

முனியே கூறாய்,

வேந்தே கூறாய் ,- ஏகாரம் மிகுதல்

**உயர்திணைப் பெயர் - இகரம் ஈகாரமாதல்.**

நம்பீ கூறாய் - இகரம் ஈகாரமாதல்.

**பொதுப்பெயர்:- இயல்பாதல்:**

பிதாக் கூறாய், ஆண் கூறாய் - இயல்பு

**பொதுப்பெயர் - – ஏகாரம் மிகுதல்:**

பிதாவே கூறாய்,

ஆணே கூறாய். – ஏகாரம் மிகுதல்

சாத்தீ கூறாய் - இகரம் ஈகாரமாதல்.

**அ.்.றிணைப்பெயர்: - இயல்பாதல்:**

விளக்கொடியை, புல்வாய் கொடியை - இயல்பு

**அ.்.றிணைப்பெயர் - – ஏகாரம் மிகுதல்:**

விளவே கொடியை, புல்வாயே கொடியை– ஏகாரம் மிகுதல்

**அ.்.றிணைப்பெயர் - இகரம் ஈகாரமாதல்:**

மந்தீ கொடியை - இகரம் ஈகாரமாதல், காட்டாது ஒழிந்த பெயர்களும் இப்படியே வரும்.

பெரும்பாலும் என்றதனால் இவ் உருபுகள் சிலவற்றிற்குப் பொருந்தாமை வருதலும் உண்டு என்பது பெறப்படும்.

குறிப்பு

## விளி உருபிற்குச் சிறப்பு விதிகள்

### ஐகார ஈற்றுப் பெயர்களுக்குச் சிறப்பு விதி:

ஐ இறு பொதுப் பெயர்க்கு ஆயும் ஆவும்

உருபாம் அல்லவற்று ஆயும் ஆகும்

ஐகார ஈற்றுப் பொதுப்பெயர்க்குப் பொது விதியால் இயல்பும் ஏகாரம்மிகுதலும் அன்றி ஐகாரம் ஆயும் ஆவும் ஆகத் திரிதலும்,உயர்திணை அஃறிணைப் பெயர்களுக்கு அவ் இரண்டு உருபுகளன்றி ஐகாரம் ஆ எனத் திரிதலும் விளி உருபுகள் ஆகும்.

அன்னை அன்னாய் - அன்னா பொதுப்பெயர்க்கு ஆயும் ஆவும் வந்தன.

விடலை - விடலாய்

நாரை - நாராய் எனவும் உயர்திணைப் பெயர்க்கும் அஃறிணைப் பெயர்க்கும் ஆய் வந்தது

உரையிற்கோடல் என்னும் உத்தியால்,'அன்னே யுன்னையல்லால் இனியாரை நினைக்கேனே' எனப் பொதுப்பெயர்க்கு ஐகாரம் ஏகாரமாகத் திரிதலும் உண்டு என்பது பெறப்படும்.

### னகர ஈற்று உயர்திணைப் பெயர்களின் விளி உருபுகள்

ஒரு சார் ன ஈற்று உயர்திணைப் பெயர்க்கண்

அளபு ஈறு அழிவு அயல் நீட்சி அதனோடு

ஈறு போதல் அவற்றோடு ஓ உறல்

ஈறு அழிந்து ஓ உறல் இறுதி ய ஆதல்

அதன் ஓடு அயல் திரிந்து ஏ உறல் ஈறு அழிந்து

அயல் ஏ ஆதலும் விளி உருபு ஆகும்

பொது விதி அன்றி னகரமெய்யீற்று உயர்திணைப் பெயர்களுள், சில அளபெடுத்தலும், சில ஈறு கெடுதலும், சில ஈற்று அயல் நீளுதலும்,சில ஈற்று அயல் நீண்டு ஈறு கெடுதலும் சில ஈறுகெட்டு ஈற்று அயல் நீண்டு ஓகார மிகுதலும் சில ஈறு கெட்டு ஓகார மிகுதலும்,

சில இறுதி னகர மெய் யகரமெய்யாதலும் சில ஈற்று னகர மெய் யகர மெய்யாகத் திரிந்து அயலில் ஆகாரம் ஓகாரமாய் ஏகாரம் மிகுதலும் சில ஈறு கெட்டு அயலில் அகரம் ஏகாரமாதலும் விளி உருபுகளாகும்.

**குறிப்பு**

அம்பர்கிழான் - அம்பர்கிழாஅன் - அளபாயிற்று.

புலவன் - புலவ - ஈறழிந்தது.

பெருமன் - பெருமான் - ஈற்றயல் நீண்டது.

மன்னன் - மன்னா - ஈற்றயல் நீண்டு ஈறு கெட்டது.

ஐயன் - ஐயாவோ - ஈற்றயல் நீண்டு ஈறுகெட்டு ஓகார மிக்கது.

திரையன் - திரையவோ - ஈறழிந்து ஓகாரம் மிக்கது.

வாயிலான் - வாயிலாய் - இறுதி யவ்வாயிற்று.

வாயிலான் - வாயிலோயே - இறுதி யவ்வாய்,ஈற்றயல்ஆகாரம் ஓகாரமாய் ஏகாரம்மிக்கது .

ஐயன் - ஐயே - ஈறழிந்து அயலில் அகரம் ஏகாரம் ஆயிற்று.

**ளகர ஈற்றுப் பெயர்கள்:**

ள.்.கான் உயர் பெயர்க்கு அளபு ஈறு அழிவு அயல்

நீட்சி இறுதி ய ஒற்று ஆதல்

அயல் இல் அகரம் ஏ ஆதலும் விளித்தனு

பொதுவிதியன்றி ளகரமெய் ஈற்றுயர்திணைப் பெயர்களுள், சில அளபெடுத்தலும் சில ஈறு கெடுதலும் சில ஈற்றயல் நீளுதலும் சில இறுதி ளவ் ஒற்று யவ் ஒற்றாதலும் சில ஈற்றயல் அகரம் ஏகாரம் ஆதலும், விளி உருபுகளாகும்.

வேள் - வேஎள் - அளபெடுத்தது.

எல்லாள் - எல்லா - ஈறு கெட்டது

மக்கள் - மக்காள் - ஈற்றயல் நீண்டது.

குழையாள் - குழையாய் - ளவ்வொற்று யவ் ஒற்றாயிற்று.

அடிகள் - அடிகேள் ஈற்றயல் அகரம் ஏகாரம் ஆயிற்று.

## ரகர ஈற்றுப் பெயர்கள்:

குறிப்பு

ர ஈற்று உயர் பெயர்க்கு அளபு எழல் ஈற்று அயல்

அகரம் இ ஈ ஆதல் ஆண்டை ஆ

ஈ ஆதல் அதனோடு ஏ உறல் ஈற்றுஏ

மிக்கு அயல் யாக்கெட்டு அதன் அயல் நீடல்

ஈற்றின் ஈர்உறல் இவையும் ஈண்டு உருபே

பொதுவிதி அன்றி ரகர மெய் ஈற்று உயர்திணைப் பெயர்களுள் சில அளபெடுத்தலும் சில ஈற்றயல் அகரம் இகரம் ஆதலும் ஈகாரம் ஆதலும் சில அவ் ஈற்றயல் ஆகாரம் ஈகாரமாதலும் சில அதனோடு ஏகாரம் ஏற்றுலும் சில ஈற்றில் ஏகாரம்மிக்கு அயலில் யாக் கெட்டு அதன் அயல் இகரம் ஈகாரமாதலும் சில ஈற்றில் ஈர் ஆதலும் இ ஆகிய இவையும் இவ்விடத்து விளி உருபுகளாகும்.

சிறார் - சிறாஅர் - அளபெடுத்தது.

தெவ்வர் - தெவ்விர் - ஈற்றயல் அகரம் இகரமாயிற்று.

நாய்கர் - நாய்கீர் - ஈற்றயல் அகரம் ஈகாரம் ஆயிற்று.

சான்றார் - சான்றீர் - ஈற்றயல் ஆகாரம் ஈகாரம் ஆயிற்று.

கணியார் - கணியீரே ஈற்றயல் ஆகாரம் ஈகாரமாய் ஏகாரம் மிக்கது.

நம்பியார் - நம்பீரே,ஈற்றில் ஏகாரம்மிக்கு அயல் யாக்கெட்டு அதன் அயல் இகரம் ஈகாரம் ஆயிற்று.

எமர் - எமரீர் ஈரேற்றது.

ஈண்டென்ற மிகையால் கடலாரே - கடலீரே; சாத்தியாரே, சாத்தியீரே எனவும், அஃறிணைப் பெயர் பொதுப்பெயர்களைச் சிறப்பித்து, ரவ்வீற்று .உயர்திணைப் பெயர்போலக் கூறினும் இவ்வுருபு ஏற்றல் கொள்க.

லகார ஈற்று உயர் பெயர்க்கு அளபு அயல் நீட்சியும்

யகார ஈற்றிற்கு அளபுமாம் உருபே

பொதுவிதி அன்றி லகரமெய் ஈற்று உயர்திணைப் பெயர்க்கு ( ஒருசார் ) சில அளபெடுத்தலும் ( ஒருசார் ) சில ஈற்றயல் நீளுதலும், யகாரவீற் (றுயர்பெயர்க்கு) யகரமெய்யீற்று உயர்திணைப் பெயர்க்கு அளபெடுத்தலும் விளி உருபுகள் ஆகும்.

மால் - மாஅல் - அளபு எடுத்தது.

தோன்றல் - தோன்றால் - ஈற்று அயல் நீட்சி

குறிப்பு

சேய் - சேஎய் - அளபு எடுத்தது.

-எனவும் அம்மூன்று உருபுகளும் வந்தன.

## னகர ஈற்று அஃறிணைப் பெயர்கள்:

ன ஈற்று உயர்திணை அல் இரு பெயர்க் கண்

இறுதி அழிவு அதனோடு அயல் நீட்சி

பொது விதி அன்றி னகரமெய்யீற்று அஃறிணைப்பெயர் பொதுப்பெயர்களிடத்து, சில ஈறு கெடுதலும் சில ஈறுகெடுதலுடனே ஈற்றயல் நீளுதலும் விளி உருபுகளாம்.

அலவன் - அலவ - ஈறு கெட்டது

கலுழன் - கலுழா - ஈறு கெட்டு ஈற்றயல் நீண்டது.

## அஃறிணைப் பொதுப்பெயர்கள்:

சாத்தன் - சாத்த - ஈறு கெட்டது.

கொற்றன் - கொற்றா - ஈறு கெட்டு ஈற்றயல் நீண்டது.

- எனவும் முறையே அஃறிணைப் பெயரிலும் பொதுப்பெயரிலும் அவ் இரண்டும் வந்தன

## ல, ள ஈற்று அஃறிணைப் பெயர்- பொதுப்பெயர்:.

ல ள ஈற்று அஃறிணைப் பெயர் பொதுப் பெயர்க் கண்

ஈற்று அயல் நீட்சியும் உருபு ஆகுமே

லகர, ளகர மெய்யீற்று அஃறிணைப் பெயர்க்கும் பொதுப்பெயர்க்கும் பொதுவிதியன்றி ஈற்றயல் எழுத்து நீளுதலும் விளி உருபாகும்.

முயல் - முயால்,

கிளிகள் - கிளிகாள்,

தூங்கல் - தூங்கால்,

மக்கள் - மக்காள்.

**புறனடை:**

அண்மையின் இயல்பும்ஈறு அழிவும் சேய்மையின்

அளபும் புலம்பின் ஓவும் ஆகும்

குறிப்பு

இயல்பாதலும் ஈறு கெடுதலும் அண்மை விளிக்கண்ணும், அளபெடுத்தல் தூர விளிக்கண்ணும், ஓகாரம்மிகுதல் புலம்பல் விளிக்கண்ணும் வரும்.

எனவே, மற்றை விளி உருபுகள் இம்மூன்றிடத்தும் கலந்துவரும் என்பது பெற்றாம்.

தம்பி, அரச – அண்மை விளி

மாஅள், சேஎய் - சேய்மை விளி

அய்யாவோ – புலம்பல் விளி

## விளி உருபு ஏலாப் பெயர்கள்:

நுவ்வொடு வினாச் சுட்டு உற்ற ன ள ர

வை துத் தாம் தான் இன்னன விளியா

நுவ்வுடனே மூன்று முதல் வினாவையும் மூன்று சுட்டையும் முறையே பொருந்திய ன,ள, ர என்னும் மூன்று ஈற்று உயர்திணைப்பெயர்களும், வை, து என்னும் இரண்டு ஈற்று அ.்.றிணைப் பெயர்களும், தான் என்னும் பொதுப்பெயரும்,இவை போல்வன பிறவும், விளிக்கப்படுவன அல்ல.

வை,து என்னும் இரண்டும் நுவ்வொடு பொருந்தா என்பார், ஒடுக்கொடுத்துப் பிரித்தார்.

மகர ஈற்றுப் பொதுப்பெயர் முன்னரே விலக்கப்பட்டமையால், இங்கே தாம் என்றது அசைநிலை.

கிளைப் பெயர் -நுமன், நுமள், நுமர்

வினாப் பெயர் - எவன், எவள், எவர், எவை, எது

யாவன், யாவள், யாவர், யாவை, யாது

ஏவன் , ஏவள் ஏவர், ஏவை, ஏது

சுட்டுப் பெயர் - அவன், அவள் அவர், அவை, அது

இவன், இவள் இவர், இவை, இது

உவன், உவள், உவர், உவை, உது

பொதுப் பெயர் - தான் எனவும் வரும் இப்பெயர்கள் விளி ஏலாதவையாகும்.

குறிப்பு

இன்னன என்றதனால்,

மற்றையான், மற்றையாள், மற்றையார், மற்றையது, மற்றையன, மற்றையவை, பிறன், பிறள், பிறர், பிறிது, பிற முதலியனவும் கொள்க.

## முதற் பொருளும் சினைப் பொருளும்:

முதலை ஐ உறின் சினையைக் கண் உறும்

அது முதற்கு ஆயின் சினைக்கு ஐ ஆகும்

முதலினை ஐ உருபு பொருந்தினால் சினையைக் கண் உருபு பொருந்தும், அது உருபு முதலுக்கு வரின் சினையினுக்கு ஐ உருபு வரும்.

இனி இரட்டுறமொழிதல் என்னும் உத்தியால், "அது, முதற்காயிற் சினைக்கையாகும்"என்னும் வாக்கியத்தில், அது என்பதற்கு அக்கண்ணுருபு எனவும் பொருளுரைத்துக் கொள்க.

யானையைக் காலின்கண் வெட்டினான்,

யானையது காலை வெட்டினான்,

யானையின் கண் காலை வெட்டினான் என வரும். எனவே, முதல் சினை இரண்டிலும் ஐ உருபு வருவது சிறப்பன்று என்பதாயிற்று.

## பிண்டப் பொருள்:

முதல் இவை சினை இவை என வேறு உள இல

உரைப்போர் குறிப்பின: அற்றே பிண்டமும்

சில பொது முதற்பொருள் சினைப் பொருள் என்று வேறுபடுத்த இயலாது பிண்டப் பொருள் அமையும்.அது உரைப்பவரின் குறிப்பால் உணரப்படும்.

யானையைக் குறித்தபோது யானை உண்டாக அதனுடைய கை, கால், கொம்பு முதலியவை வேறில்லையாம். அவ் அவயவத்தைக் குறித்தபோது அவை உண்டாக யானை வேறில்லையாம் , ஆதலால் இப்படிச் சொல்லப்பட்டன.

இனிப் பிண்டப்பொருள், நெல்லைப் பொலியின்கண் வாரினான், நெல்லினது பொலியை வாரினான் என வரும். பிண்டப்பொருளாகிய

பொலிக்குப்பையும் பிண்டித்த பொருளாகிய நெல்லும் வேறு ஆகாமையால், அவ் இரண்டன் இடத்தும் ஐ உருபு வருவது சிறப்பன்று என அறிக.

குறிப்பு

## உருபு மயக்கம்:

யாதன் உருபின் கூறிற்று ஆயினும்

பொருள் செல் மருங்கின் வேற்றுமை சாரும்

வேற்றுமையுள் ஒரு வேற்றுமை உருபு வரவேண்டிய இடத்துப் பிறிதோர் வேற்றுமை உருபு வந்து நிற்கும். இது உருபு மயக்கம் எனப்படும். இவ்வாறு ஒரு வேற்றுமைப் பொருள் மற்றொரு வேற்றுமை உருபால் சொல்லப்பட்டது ஆயினும் பொருள் செல் மருங்கின் வேற்றுமைசாரும்.எனவே பொருளுக்கு இயையாது மயங்கி வந்த உருபைப் பொருளுக்கு இயைந்த உருபாக அமைத்துக் கொள்க என்பதாம்.

நாகு வேயொடு நக்கு வீங்கு தோள்- வேய் உடனிகழ்ச்சிப் பொருள் ஆகாது செயப்படுபொருளாய் நிற்றலால், ஒடு உருபை ஐ உருபாகத் திரித்துக்கொள்க.

கிழங்கு மணற்கீன்ற முளை - மணல் கோடல் பொருள் ஆகாது இடப்பொருளாய் நிற்றலால், குவ் உருபைக் கண் உருபாகத் திரித்துக்கொள்க. பிறவும் அன்ன.

இனி உரையிற்கோடல் என்னும் உத்தியால் ஒரு வேற்றுமைப் பொருள் மற்றை வேற்றுமை உருபுகளோடு தகுதியாக வருதலும் உண்டு எனக் கொள்க அவை வருமாறு : -

வினைமுதற்பொருள் எழுவாய் உருபு மூன்றன் உருபுகளோடு அன்றிச், சிறுபான்மை நான்கன் உருபு ஆறன் உருபுகளோடும் வரும்.

அவர்க்குச் செய்யத்தகும் அக்காரியம் ; - கு

அவரது வரவு :- அது என வரும்.

செயப்படுபொருள் இரண்டன் உருபோடன்றிச் சிறுபான்மை எழுவாய் வேற்றுமை உருபு முதல் ஏழாம் வேற்றுமை உருபு ஈறாய் உருபுகள் எல்லாவற்றோடும் வரும்.

சூத்திரம் : எல்லா உருபொடுஞ் செயப்படு பொருள்எழும்.

செயற்படு பொருள்:

அரிசியாற் சோறாக்கினான்,

அரிசியைச் சோறாக்கினான் - ஆலும் ஐயும்

பழியின் அஞ்சும்

குறிப்பு

பழியை அஞ்சும் - இன்னும் ஐயும் .

நூலது குற்றம் கூறினான்

நூலைக் குற்றம் கூறினான் - அதுவும் ஐயும்

தூணின்கண் சார்ந்தான்

தூணைச் சார்ந்தான் - கண்ணும் ஐயும்

கருவிப்பொருள் மூன்றன் உருபு ஐந்தன் உருபுகளோடு அன்றிச் சிறுபான்மை எழுவாய் உருபு நான்கன் உருபு ஆறன் உருபுகளோடும் வரும்.

கண்ணது காட்சி - குவ்வும் அதுவும்

கோடற்பொருள் நான்கன் உருபோடு அன்றிச் சிறுபான்மை எட்டாம் வேற்றுமை ஒழிந்த எல்லா உருபுகளோடும் வரும்.

சூத்திரம் : எல்லா உருபொடுங் கொள்வோன் எழுமே .

செய்யவள்தவ்வையைக் காட்டி விடும்

செய்யவள்தவ்வைக்குக் காட்டி விடும் - ஐயும் குவ்வும்

நாகரது பலி

நாகர்க்குப் பலி – அதுவும் குவ்வும்

நாகரின்அன்பு செய்தான்

நாகர்க்குஅன்பு செய்தான் - இன்னும் குவ்வும்

ஐந்தாம் வேற்றுமைப் பொருள்களுள் நீக்கப் பொருள் சிறுபான்மை இரண்டன் உருபோடும், எல்லைப்பொருள் சிறுபான்மை நான்கன் உருபோடும் வரும்.

மதுரையை நீங்கினான் - ஐ நீக்கப்பொருள்

மதுரைக்கு வடக்குச் சிதம்பரம் - கு எல்லைப் பொருள்.

சம்பந்தப்பொருள் ஆறன் உருபோடு அன்றிச் சிறுபான்மை நான்கன் உருபு ஐந்தன் உருபு ஏழன் உருபுகளோடும் வரும்.

குறிப்பு

சூத்திரம் :- நான் கைந் தாறேழொடு குறைநடக்கும்

சாத்தனுக்கு மகன்- கு

மரத்தின்நீங்கின கொம்பு - இன்

உயிரின்கண்உணர்வு - கண் என வரும்.

இடப்பொருள் ஏழன் உருபோடு அன்றிச் சிறு பான்மை எழுவாய் உருபு இரண்டன் உருபு நான்கன் உருபுகளோடும் வரும் .

தூண் போதிகை தொட்டது ; எழுவாய், தூணைச் சார்ந்தான் ; - ஐ இன்றைக்கு, நாளைக்கு பகலைக்கு, அந்திக்கு சந்திக்கு மாலைக்கு, காலைக்கு ஊர்க்கு வீட்டிற்கு வருவன் ; கு என வரும்.

## உருபுகள் திரிதல்:

ஐஆன்குச் செய்யுட்கு அவ்வும் ஆகும்

ஆகா அ.ஃறிணைக்கு ஆன் அல்லாதன

ஐ, ஆன்,கு என்னும் மூன்று உருபுகளும் செய்யுளிடத்து ஒரோவழி அகரமாகத் திரிந்து வரும். அ.ஃறிணைப் பெயர்களில் ஆன் அல்லாத ஐயும் குவ்வும் அகரமாகத் திரியாது.

ஆகா அ.ஃறிணைக் கானல்லாதன எனவே, உயர் திணையிலே மூன்று உருபும் திரியும் என்பது பெற்றாம்.

காவலோனைக் களிறஞ்சும்மே

என்பது காவலோனக் களிறஞ்சும்மே

புலவரான் - புலவரான,

கடி நிலையின்றே யாசிரியற்கு - கடிநிலையின்றே யாசிரியற்க - உயர்திணையிலே மூன்று உருபும் திரிந்தன.

. புள்ளினான் - புள்ளினான - ஆன் உருபு ஒன்றும் அ.ஃறிணையிலே திரிந்தது.

**வேற்றுமைகளை முடிக்கும் சொல்:**

எல்லை இன்னும் அதுவும் பெயர் கொளும்

அல்ல வினைகொளும் நான்குஏழ் இருமையும்

புல்லும் பெரும்பாலும் என்மனார் புலவர்

குறிப்பு

எல்லைப் பொருட்டாகிய ஐந்தாம் வேற்றுமையும் ஆறாம் வேற்றுமையும் பெயரைக்கொண்டு முடியும்.ஏனைய எழுவாய் முதலிய வேற்றுமைகள் எல்லாம் வினையைக்கொண்டு முடியும். அவற்றுள் நான்காம் வேற்றுமையும் ஏழாம் வேற்றுமையும் வினையையே அன்றி வினையொடு பொருந்தும் பெயரையும்கொண்டு முடியும்.

பெரும்பாலும் என்றதனால்,வினைகொளற்கு உரியன சிறுபான்மை தொழிற்பெயரையும் வினையாலணையும் பெயரையும் கொண்டு முடிதலும் அவற்றுள் எழுவாய் வேற்றுமை வினைகொண்டு முடிதலே அன்றிச் சிறுபான்மை பெயரையும் வினாவையும்கொண்டு முடிதலும் கொள்க.

கருவூரின் கிழக்கு,

சாத்தனது கை,

-என எல்லை இன்னும் அதுவும் பெயர் கொண்டன.

சாத்தன் வந்தான், சாத்தனல்லான்

குடத்தை வனைந்தான், குடத்தை உடையன் ;

வாளால் வெட்டினான், வாளால் வலியன் ;

சாத்தனுக்குக் கொடுத்தான், சாத்தனுக்கு நல்லன் ;

நோயின் நீங்கினான், நோயிற் கொடியன் ;

அவையின்கண் இருந்தான், அவையின்கட் பெரியன் ;

கொற்றா கொள், கொற்றா வலியை என அல்லவை வினைகொண்டன.

பிணிக்கு மருந்து, மணியின்கணொளி என நான்காம் வேற்றுமையும் ஏழாம் வேற்றுமையும் வினையே அன்றிப் பெயரும் கொண்டன. இப்பெயர்கள், எல்லை இன்னும் அதுவும் கொள்ளும் பெயர்கள் போலாது,பிணிக்குக் கொடுக்கும் மருந்து, மணியின்கணிருக்கும் ஒளி என வினைவேண்டி நிற்றலின், வினையொடு பொருந்தும் பெயர்கள் ஆயின.

சாத்தன் வருதல், சாத்தன் வந்தவன்; குடத்தை வனைதல், குடத்தை வனைந்தவன் எனச் சிறுபான்மை தொழிற்பெயரும் வினையாலணையும் பெயரும் கொண்டன;

சாத்தனவன், சாத்தன் யாவன், சாத்தன் யார் என எழுவாய் வேற்றுமை சிறுபான்மை சுட்டுப்பெயரும் வினாப்பெயரும் வினா வினைக்குறிப்பும் கொண்டது.

குறிப்பு

பயிற்சி வினாக்கள்:

1.முதல் வேற்றுமை குறித்து எழுதுக.

முதல் வேற்றுமை:

அவற்றுள்,

எழுவாய் உருபு திரிபு இல் பெயரே

வினை பெயர் வினாக்கொளல் அதன் பயனிலையே

முன் சொல்லப்பட்ட எட்டு வேற்றுமைகளுள், முதல் வேற்றுமையின் உருபாவது ஐ முதலிய உருபு ஏற்றுத் திரிதல் இல்லாத பெயரேயாகும்.வினையையும் பெயரையும் வினாவையும் கொள்ள வருதல் அவ் உருபினது பொருள் நிலையாம்.

எனவே, அத் திரிபு இல்லாத பெயர் தானே தன் பொருளை வினைமுதற் பொருளாக வேற்றுமை செய்யும் என்பதாயிற்று.

இவ் எழுவாய் கொள்ளும் பெயர். இன்னது,இத்தகைய அளவிற்று என்னும் பொருள் படவரும் பெயராகும்.

சாத்தன் வந்தான்; கொற்றன் வாழ்க - இவை தெரிநிலைவினை கொள வந்தன.

அவன் பெரியன், ஆ உண்டு-இவை குறிப்புவினை கொள வந்தன.

சாத்தனிவன், கொற்றனவன் - இவை இன்னது என்னும் பொருள்பட வரும் பெயர் கொள வந்தன. ஆவொன்று யானை நூறு - இவை இவ் அளவிற்று என்னும் பொருள்படவரும் பெயர் கொள வந்தன.

அவன் யார்; ஆ யாது - இவை வினாக்கொள வந்தன.

வினைமுதற் பொருளாவது ஒரு தொழில் நிகழ்ச்சியிலே தன்வயத்ததாகக் குறிக்கப்படும் பொருளாம். வினைமுதல், செய்பவன், கருத்தா என்பனஒருபொருள் குறித்த சொற்கள் ஆகும்.

சாத்தன் வந்தான் என்றவழி, தொழில் நிகழ்ச்சி வருதல், அத்தொழில் நிகழ்ச்சியிலே தன்வயத்த தாகக் குறிக்கப்படும் பொருள் சாத்தன் ஆதலால், சாத்தன் வினைமுதற் பொருள்.

இவ் எழுவாய்க்கு, ஐ முதலியன போன்ற உருபு இல்லையாயினும், உரையிற்கோடல் என்னும் உத்தியினாலே சிறுபான்மை ஆனவன், ஆகின்றவன்,ஆவான், என்பவன் முதலிய ஐம்பால் சொற்களும் சொல் உருபுகளாக வரும்.

சாத்தன் ஆனவன் வந்தான்; சாத்தியானவள் வந்தாள், சாத்தரானவர் வந்தார்; யானை ஆனது வந்தது; யானை ஆனவை வந்தன என வரும்.

குறிப்பு

2.நான்காம் வேற்றுமை குறித்து கட்டுரை வரைக.

நான்காம் வேற்றுமை:

நான்காவதற்கு உருபு ஆகும் குவ்வே

கொடை பகை நேர்ச்சி தகவு அதுவாதல்

பொருட்டு முறை ஆதியின் இதற்குஇது இது எனல் பொருளே

நான்காம் வேற்றுமைக்கு உருபு முன் சொல்லப்பட்ட கு ஒன்றே ஆகும். அவ் உருபின் பொருள்களாவன, கொடையும், பகையும், நட்பும், தகுதியும் ஆகும்.

முதல்காரணமும்,நிமித்த காரணமும் முறையும் முதலான பொருள்சொற்களின் புணர்ச்சியில் இதற்கு இது என்பதுபட வருவனவாகிய அவ்வுருபு ஏற்ற பெயர்ப்பொருள் வேறுபட்ட பலவுமாம்.

கொடை என்றமையால் கோடற்பொருளும், பகை நேர்ச்சி என்றமையால் பகைதொடர் பொருளும் நட்புத்தொடர் பொருளும், தகுதி என்றமையால் தகுதியுடைப் பொருளும், அதுவாதல் என்றமையால் முதற்காரண காரியப் பொருளும், பொருட்டு என்றமையால் நிமித்த காரணகாரியப் பொருளும்,முறை என்றமையால் முறைக்கு இயைபொருளும், குவ்வுருபின் பொருள்களாகும் என்பது தெரியவரும்.

இரவலர்க்குப் பொன்னைக் கொடுத்தான் - கோடல்பொருள்.

பாம்புக்குப் பகை கருடன் - பகைதொடர் பொருள்.

சாத்தனுக்கு நட்பாளன் கொற்றன் - நட்புத்தொடர்பொருள்.

அரசர்க் குரித் தருங்கலம் - தகுதியுடைப் பொருள்.

குண்டலத்திற்குப் பொன - முதற்காரண காரியப் பொருள்.

கூலிக்கு வேலை செய்தான - நிமித்தகாரண காரியப் பொருள்.

சாத்தானுக்கு மகன் கொற்றன - முறைக்கு இயைபொருள்.

கோடற்பொருளாவது கொடுத்தல் தொழிலின் செயப்படு பொருளைத் தனக்கு உரியது ஆக்கிக் கொள்ளுதலையுடைய பொருளாம். கோடற்பொருள்,கோளிப்பொருள் என்பன ஒருபொருள் சொற்கள்.

குறிப்பு

இரவலர்க்குப் பொன்னைக் கொடுத்தான் - கொடுத்தலின் செயப்படுபொருள் பொன்; அதனைத் தனக்குரியதாக்கிக் கொள்ளுதலையுடைய பொருள் இரவலராதலால், இரவலர் கோடற் பொருள்.

மாணாக்கனுக்கு அறிவு கொடுத்தான் - அறிவாகிய செயப்படுபொருள் கொடுப்போன் பொருளாய்க் கொள்வோன் இடத்துச் செல்லாது ஆங்குத் தோன்றினும், அதனைத் தனக்குரியது ஆக்கிக் கொள்ளுதலால், மாணாக்கன் கோடற்பொருள்;

மாணாக்கனுக்கு நூற்பொருள் உரைத்தான் - சொல்லுதலின் செயப்படுபொருளாகிய நூற்பொருளை அறிதலையுடைய பொருளாகிய மாணாக்கனும் கோடற்பொருளே ஆகும்.

கோடல் பலவகைப்படும். அவை : கேளாது ஏற்றல், கேட்டே ஏற்றல், ஏலாது ஏற்றல்,ஈவோன் ஏற்றல், உயர்ந்தோன் ஏற்றல், இழிந்தோன் ஏற்றல், ஒப்போன் ஏற்றல், உணர்வின்று ஏற்றல், விருப்பாய் ஏற்றல், வெறுப்பாய் ஏற்றல் முதலியன ஆகும்..

ஆவிற்கு நீர் விட்டான் - கேளாது ஏற்றல்

வறியார்க்கு ஈந்தான் - கேட்டே ஏற்றல்.

மாணாக்கனுக்கு அறிவு கொடுத்தான் - ஏலாது ஏற்றல்.

தனக்குச் சோறிட்டான் - ஈவோன் ஏற்றல்.

அரனுக்குக் கண்ணலர் கொடுத்தான் அரி - உயர்ந்தோன் ஏற்றல்

அரிக்குச் சக்கரங்கொடுத்தான் அரன் - இழிந்தோன் ஏற்றல்.

சோழனுக்கு விருந்திட்டான் சேரன் - ஒப்போன் ஏற்றல்.

சோற்றிற்கு நெய்விட்டான் - உணர்வின்று ஏற்றல்

மாணாக்கனுக்குக் கசையடி கொடுத்தான் ஆசிரியன் - விருப்பாய் ஏற்றல்.

கள்ளனுக்குக் கசையடி கொடுத்தான் அரசன் - வெறுப்பாய் ஏற்றல்.

கொடுத்தலும் பலவகைப்படும். அவை: வழக்கத்தில்கொடுத்தல், உரிமையில் கொடுத்தல், அச்சத்தில் கொடுத்தல், பாவனையில் கொடுத்தல், உவகையில் கொடுத்தல், வெகுளியில் கொடுத்தல், அவலத்தில் கொடுத்தல் முதலியன.

மருமகனுக்கு மகளைக் கொடுத்தான் - வழக்கத்தில் கொடுத்தல்.

மகனுக்கு அரசு கொடுத்தான் - உரிமையில் கொடுத்தல்.

அரசற்குத் திறை கொடுத்தான் - அச்சத்தில் கொடுத்தல்

தந்தை தாய்க்குத் திதி கொடுத்தான் - பாவனையில் கொடுத்தல்.



அவனுக்குப் பரிசு கொடுத்தான் - உவகையில் கொடுத்தல்

அவனுக்குத் தண்டனை கொடுத்தான் - வெகுளியில் கொடுத்தல்.

வாய்க்கரிசி இட்டான் - அவலத்தில் கொடுத்தல்.

ஒருபொருளின் இடத்துள்ள பகை தொடர்தற்கு இடமாகிய பொருளாம்.

பாம்புக்குப் பகை கருடன் என்பதில் கருடனிடத்துள்ள பகை தொடர்தற்கு இடம் பாம்பு ஆதலால் பாம்பு பகைதொடர் பொருள்.

நட்புத்தொடர் பொருளாவது ஒரு பொருளின் இடத்துள்ள நட்புத் தொடர்தற்கு இடமாகிய பொருளாம்.

சாத்தானுக்கு நண்பன் கொற்றன் என்பதில் கொற்றன் இடத்துள்ள நட்புத் தொடர்தற்கு இடம் சாத்தன் ஆதலால் சாத்தான் நட்புத்தொடர் பொருள்.

வைவதில் தீமைதொடர் பொருளும் வாழ்த்துவதில் நன்மை தொடர்பொருளும் பகைநேர்ச்சிகளில் அடங்கும். அவை :-

தீயோர்க்குக் கேடு உண்டாகுக,

நல்லோர்க்குச் செல்வம் உண்டாகுக என வரும்.

தகுதியுடைப் பொருளாவது தன்னோடு பொருந்துதற்குத் தகுதியாகிய பொருளை உடைய பொருளாகும்.

அரசர்க் குரித்து அருங்கலம் என்றபோது அரசரோடு பொருந்துதற்குத் தகுதியாகிய பொருள் அருங்கலம்; அப்பொருளை உடையபொருள் அரசர் ஆதலால் அரசர் தகுதியுடைப் பொருள்.

முதல் காரண காரியப் பொருளாவது முதல் காரணத்தால் ஆகும் பொருளாகும்.

குண்டலத்திற்குப் பொன் என்பதில் பொன் முதற்காரணம், அதனால் ஆகிய காரியம் குண்டலமாதலால் குண்டலம் முதற்காரணகாரியப் பொருள்.

நிமித்தகாரண காரியப் பொருளாவது நிமித்தகாரணத்தால் ஆகும் பொருளாம். கூலிக்கு வேலை செய்தான் என்பதில், வேலை நிமித்த காரணம்; அதனாலாகிய காரியம் கூலி ஆதலால் கூலி நிமித்த காரண காரியப்பொருள்.

முறைக்கு இயை பொருளாவது பிறப்பினால் ஒரு பொருளின் முறைக்குத் தான் இயைந்து நிற்கும் பொருளாம்.

குறிப்பு

சாத்தனுக்கு மகன் கொற்றன் என்றபோது கொற்றன் இடத்துள்ள மகன் என்னும் முறைக்குத் தான் இயைந்து நிற்கும் பொருள் சாத்தன் ஆதலால் சாத்தன் முறைக்கு இயை பொருள் ஆகம்.

ஆதி என்றதனால் -

மழைக்கு மின்னல் - உற்பாதத்தால் குறிக்கப்படுவது

அவனுக்கு இது போதும் - குறைவின்மையைக் கொள்வது,

பிறவும் வரும். உற்பாதம் என்பது மேல்விளையும் நன்மை தீமையை அறிவிக்கும் குறி ஆகும்.

குவ்வுருபு நிற்றற்கு உரிய சில இடங்களிலே, பொருட்டு, நிமித்தம் என்பனவும், குவ்வுருபின்மேல் ஆக என்பதும்சொல்லுருபுகளாக வரும்.

கூழின்பொருட்டு வேலை செய்தான்;

கூலியின் நிமித்தம் வேலை செய்தான்;

கூலிக்காக வேலை செய்தான் என வரும்.

3.ஆறாம் வேற்றுமையின் தன்மைகளை விளக்குக.

ஆறாம் வேற்றுமை:

ஆறன் ஒருமைக்கு அதுவும் ஆதுவும்

பன்மைக்கு அவ்வும் உருபாம்: பண்பு உறுப்பு

ஒன்றன் கூட்டம் பலவின் ஈட்டம்

திரிபின் ஆக்கம் ஆம்: தற்கிழமையும்

பிறிதின்கிழமையும் பேணுதல் பொருளே

ஆறாம் வேற்றுமையினது வருமொழியின் ஒருமைக்கு அதுவேயன்றி ஆதுவும் ஆறன் பன்மைப் பொருண்மைக்கு அகரமும் உருபாம், அவற்றின் பொருள்களாவன, குணமும் தொழிலும் ஆகிய பண்பும்,உறுப்பும், ஒன்றன் கூட்டம் பலவின் ஈட்டம், திரிபின் ஆக்கமும் ஆகும். ஐந்து தற்கிழமைப் பொருள்களையும், அவை அல்லாத பிறிதின் கிழமைப் பொருள்களையும், உடையனவாக அவ் உருபுகளை ஏற்ற பெயர்ப்பொருள்கள் மேல் வரும்.

ஐந்து தற்கிழமைப் பொருள் : தொழில், பண்பு, உறுப்பு, ஒன்றன் கூட்டம், திரிபின் ஆக்கம் ஆகும்.

குறிப்பு

பிறிதின் கிழமைப் பொருள்: : பொருள், இடம், காலம்

தற்கிழமைப் பொருளாவது தன்னோடு ஒற்றுமை உடையது.

பிறிதின் கிழமைப் பொருளாவது தன்னின் வேறு ஆயது ஆகும்.

தற்கிழமை

சாத்தனது கருமை - குணம்,

சாத்தனது வரவு - தொழில் பண்புத் தற்கிழமை

சாத்தனது கை,

புலியது வால் உறுப்புத் தற்கிழமை

மாந்தரது தொகுதி,

நெல்லது குப்பை - ஒன்றன் கூட்டத் தற்கிழமை

படைகளது தொகுதி,

பறவைகளது கூட்டம் - பலவின் கூட்டத் தற்கிழமை

நெல்லினது பொரி

மஞ்சளது பொடி - ஒன்றுதிரிந்து ஒன்று ஆயதன்தற்கிழமை .

பிறிதின் கிழமை

சாத்தனது பசு

முருகனது வேல் - பொருட் பிறிதின் கிழமை

சாத்தனது வீடு

முருகனது குறிஞ்சி - இடப் பிறிதின் கிழமை

சாத்தனது நாள்

மாரனது வேனில் - காலப் பிறிதின் கிழமை .

எனாது கை, நினாது தலை, தனாது புறம் -அது உருபு, என கைகள், தனதாள்கள் அகர உருபு, இராகுவினது தலை, எனதுயிர் என ஆறனுருபு, உடையதும் உடைமைப்பொருளும் வேறாகாத ஒற்றுமைப் பொருளில் வந்தது.உற்பாதம் என்பது மேல்விளையும் நன்மை தீமையை

அறிவிக்கும் குறி ஆகும்.இராகுவே தலையாதலாலும், நான் எனப்பட்டது உயிரே ஆதலாலும் ஒற்றுமைப் பொருளாயின.

குறிப்பு

இந்த ஆறன் உருபுகளுள் ஒன்று நிற்றற்குரிய இடத்தில் உடைய என்பது சொல் உருபாக வரும்.

சாத்தனுடைய புதல்வன், சாத்தனுடைய புதல்வர் ;

சாத்தனுடைய வீடு, சாத்தனுடைய வீடுகள் என வரும்.

4.விளி உருபு ஏலாப் பெயர்களைச் சுட்டியுரைக்க.

விளி உருபு ஏலாப் பெயர்கள்:

நுவ்வொடு வினாச் சுட்டு உற்ற ன ள ர
வை துத் தாம் தான் இன்னன விளியா

நுவ்வுடனே மூன்று முதல் வினாவையும் மூன்று சுட்டையும் முறையே பொருந்திய ன,ள, ர என்னும் மூன்று ஈற்று உயர்திணைப்பெயர்களும்,வை, து என்னும் இரண்டு ஈற்று அஃறிணைப் பெயர்களும், தான் என்னும் பொதுப்பெயரும்,இவை போல்வன பிறவும், விளிக்கப்படுவன அல்ல.

ஐவ,து என்னும் இரண்டும் நுவ்வொடு பொருந்தா என்பார், ஒடுக்கொடுத்துப் பிரித்தார்.

மகர ஈற்றுப் பொதுப்பெயர் முன்னரே விலக்கப்பட்டமையால், இங்கே தாம் என்றது அசைநிலை.

கிளைப் பெயர் -நுமன், நுமள், நுமர்

வினாப் பெயர் -எவன், எவள், எவர், எவை, எது

யாவன், யாவள், யாவர், யாவை, யாது

ஏவன், ஏவள் ஏவர், ஏவை, ஏது

சுட்டுப் பெயர் - அவன், அவள் அவர், அவை, அது

இவன், இவள் இவர், இவை, இது

உவன், உவள், உவர், உவை, உது

பொதுப் பெயர் - தான் எனவும் வரும் இப்பெயர்கள் விளி ஏலாதவையாகும்.

குறிப்பு

இன்னன என்றதனால்,

மற்றையான், மற்றையாள், மற்றையார், மற்றையது, மற்றையன, மற்றையவை, பிறன், பிறள், பிறர், பிறிது, பிற முதலியனவும் கொள்க.

5.பிண்டப் பொருள் குறித்து எழுதுக.

பிண்டப் பொருள்:

முதல் இவை சினை இவை என வேறு உள இல

உரைப்போர் குறிப்பின: அற்றே பிண்டமும்

சில பொது முதற்பொருள் சினைப் பொருள் என்று வேறுபடுத்த இயலாது பிண்டப் பொருள் அமையும்.இஅது உரைப்பவரின் குறிப்பால் உணரப்படும்.

யானையைக் குறித்தபோது யானை உண்டாக அதனுடைய கை கால் கொம்பு முதலியவை வேறில்லையாம். அவ் அவயவத்தைக் குறித்தபோது அவை உண்டாக யானை வேறில்லையாம், ஆதலால் இப்படிச் சொல்லப்பட்டன.இனிப் பிண்டப்பொருள், நெல்லைப் பொலியின்கண் வாரினான், நெல்லினது பொலியை வாரினான் என வரும். பிண்டப்பொருளாகிய பொலிக்குப்பையும் பிண்டித்த பொருளாகிய நெல்லும் வேறு ஆகாமையால், அவ் இரண்டன் இடத்தும் ஐ உருபு வருவது சிறப்பன்று என அறிக.

## கூறு – 6

**வினையியல் - வினைச்சொல் - பொது இலக்கணம் - விளக்கம்**

**வினையியல**

**வினைச்சொல்:**

### தெரிநிலை வினையின் இலக்கணம்:

செய்பவன் கருவி நிலம் செயல் காலம்

செய்பொருள் ஆறும் தருவது வினையே

செய்பவன் கருவி நிலம் செயல் காலம் செய்பொருள் ஆறும் ஆகிய பொருளையும், தருவது தெரிநிலை வினைச்சொல்லாம்.

வினை என்றது ஆகுபெயர்.

நட வா முதலியன எல்லாம் தழுவுதற்குச் செய் என்றார்.

செய்பவன் என ஆண்பாலிலே சொன்னாரேனும்,ஒருமொழி ஒழிதன் னினங்கொளற் குரித்தே என்பதனால், ஐம்பாலும் சுட்டி நின்றது.

குறிப்பு

வனைந்தான் என்றவழி, குயவனாகிய செய்பவனும், மண்ணாகிய முதற்காரணமும், தண்ட சக்கரம் முதலிய துணைக்காரணங்களும் வனைதற்கு ஆதாரமாகிய இடமும், வனைதற்கு முதற் காரணமாகிய செயலும், இறந்தகாலமும், குடம் முதலிய செயப்படுபொருளும் தோன்றி நின்றன.

ஆறும் என்னும் முற்றும்மையை உயர்வுசிறப்பு உம்மையாக்கி, இழிந்தன சில உள அவையும் வேண்டுமேல் கொள்க எனப் பொருளுரைத்து, இன்னதற்கு, இது பயன் என்பவைகளும் கூட்டிக் கொள்க: அவை பிறர்க்கு வனைந்தான், பொருள் கருதி வனைந்தான் எனவும் வரும். இவ்விரண்டும் ,ஏதுவின் பாற்பட்டுக் கருவியுள் அடங்கவும் பெறும் ஆதலால், இழிந்தன ஆயின.

இன்னும் ஆறும் தருவது வினை என்றதற்கு, ”முற்றும்மை யொரோவழி யெச்சமு மாகும் என்னும் சூத்திரத்தால் இத்தொகையில் சில குறைந்து வரவும் பெறும் எனப் பொருளுரைத்துக் கொள்க. கொடி ஆடிற்று என்புழி, ஆடுதல் வினைக்குச் செயப்படுபொருள் குறைந்து வந்தது. முற்றுவினைகளிலே பகுதியால் செயலும்,விகுதியால் செய்பவனும், இடைநிலை முதலியவற்றால் காலமும் பெயரெச்ச வினையெச்சங்களிலே இம்முறையே செயலும் காலமும் வெளிப்படையாகவும் மற்றவை குறிப்பாகவும் தோன்றும் எனக் கொள்க என உரை வகுப்பார் ஆறுமுக நாவலர்.

## குறிப்பு வினையின் இலக்கணம்:

பொருள் முதல் ஆறினும் தோற்றிமுன் ஆறனுள்

வினை முதல் மாத்திரை விளக்கல் வினைக்குறிப்பே

குறிப்பு வினையாவதுபொருள் முதல் ஆறனுள் தோன்றி முன் சொல்லப்பட்ட செய்பவன் முதலாகிய ஆறனுள் செய்பவன் ஒன்றினை மட்டுமே குறித்து நிற்கும்.இவற்றுள் ொபருள் முதல் ஆறு எனப்படுபவை முறையே பொருள், இடம், காலம், சினை, குணம். தொழில் என்பன ஆகும்.

குழையினன், பொன்னினன் - பொருள்

அகத்தினன், புறத்தினன் - இடம்

ஆதிரையான், ஓணத்தான் - காலம்

குறுந்தாளன், செங்கண்ணன் - சினை

கரியன், நல்லன் - குணம்

கடுநடையன், இன்சொல்லன் - தொழில்

குறிப்பு

எனவும் வரும். இவற்றுள், விகுதியால் செய்பவன் விளங்கிற்று, மற்றவைகள், குறிப்பாக உண்டெனக் கொள்க. ஒன்றைக் குழையினன், ஒன்றாற் குழையினன் என வாராமையால், குழையினன் என்பதற்குக் கருவியும் செயப்படு பொருளும் இல்லை எனவும்,ஒன்றை உடையன் ஒன்றால் உடையன் என வருதலால், உடையன் என்பதற்கு ஆறும் உண்டெனவும் கொள்க.

இவை, பொருள் ஆதி ஆறால் ஒருபொருளை வழங்குதற்கு வரும் பெயராய் நில்லாது குழையையுடையன் ஆயினான்,ஆகின்றான், ஆவான் எனவும்.

அகத்தின்கண் இருந்தான், இருக்கின்றான், இருப்பான் எனவும்,

ஆதிரைநாளிற் பிறந்தான், பிறக்கின்றான், பிறப்பான் எனவும்,

குறுந்தாளையுடையன் ஆயினான், ஆகின்றான், ஆவான் எனவும்,

கருவண்ணமாய் இருந்தான், இருக்கின்றான், இருப்பான் எனவும்,

கடுநடையாக நடந்தான், நடக்கின்றான், நடப்பான் எனவும்,

-வருதலால் வினைக்குறிப்புச் சொல்லாயின. இவை முன்பு வினைக்குறிப்பாய்ப் பின்பு பொருள்களைவழங்குதற்கு உரிய பெயராய் வரின்,அவை குறிப்பு வினையாலணையும் பெயராம். இவ்வாறு தம்முள் வேறுபடும்.

### பயிற்சி வினாக்கள்:

**1.** ါ தெரிநிலைவினையின் இலக்கணத்தைத் தருக.

தெரிநிலை வினையின் இலக்கணம்:

> செய்பவன் கருவி நிலம் செயல் காலம்
>
> செய்பொருள் ஆறும் தருவது வினையே

செய்பவன் கருவி நிலம் செயல் காலம் செய்பொருள் ஆறும் ஆகிய பொருளையும், தருவது தெரிநிலை வினைச்சொல்லாம்.

வினை என்றது ஆகுபெயர்.

நட வா முதலியன எல்லாம் தழுவுதற்குச் செய் என்றார்.

செய்பவன் என ஆண்பாலிலே சொன்னாரேனும்,ஒருமொழி ஒழிதன் னினங்கொளற் குரித்தே என்பதனால், ஐம்பாலும் சுட்டி நின்றது.

குறிப்பு

வனைந்தான் என்றவழி, குயவனாகிய செய்பவனும், மண்ணாகிய முதற்காரணமும், தண்ட சக்கரம் முதலிய துணைக்காரணங்களும் வனைதற்கு ஆதாரமாகிய இடமும், வனைதற்கு முதற் காரணமாகிய செயலும், இறந்தகாலமும், குடம் முதலிய செயப்படுபொருளும் தோன்றி நின்றன.

2. குறிப்பு வினையின் இலக்கணத்தைத் தருக

பொருள் முதல் ஆறினும் தோற்றிமுன் ஆறனுள்
வினை முதல் மாத்திரை விளக்கல் வினைக்குறிப்பே

குறிப்பு வினையாவதுபொருள் முதல் ஆறனுள் தோன்றி முன் சொல்லப்பட்ட செய்பவன் முதலாகிய ஆறனுள் செய்பவன் ஒன்றினை மட்டுமே குறித்து நிற்கும்.இவற்றுள் ொபருள் முதல் ஆறு எனப்படுபவை முறையே பொருள், இடம், காலம், சினை, குணம். தொழில் என்பன ஆகும்.

குழையினன், பொன்னினன் - பொருள்

அகத்தினன், புறத்தினன் - இடம்

ஆதிரையான், ஓணத்தான் - காலம்

குறுந்தாளன், செங்கண்ணன் - சினை

கரியன், நல்லன் - குணம்

கடுநடையன், இன்சொல்லன் - தொழில்

எனவும் வரும். இவற்றுள், விகுதியால் செய்பவன் விளங்கிற்று, மற்றவைகள், குறிப்பாக உண்டெனக் கொள்க. ஒன்றைக் குழையினன், ஒன்றாற் குழையினன் என வாராமையால், குழையினன் என்பதற்குக் கருவியும் செயப்படு பொருளும் இல்லை எனவும்,ஒன்றை உடையன் ஒன்றால் உடையன் என வருதலால், உடையன் என்பதற்கு ஆறும் உண்டெனவும் கொள்க.

இவை, பொருள் ஆதி ஆறால் ஒருபொருளை வழங்குதற்கு வரும் பெயராய் நில்லாது குழையையுடையன் ஆயினான்,ஆகின்றான், ஆவான் எனவும்.

குறிப்பு

அகத்தின்கண் இருந்தான், இருக்கின்றான், இருப்பான் எனவும்,

ஆதிரைநாளிற் பிறந்தான், பிறக்கின்றான், பிறப்பான் எனவும்,

குறுந்தாளையுடையன் ஆயினான், ஆகின்றான், ஆவான் எனவும்,

கருவண்ணமாய் இருந்தான், இருக்கின்றான், இருப்பான் எனவும்,

கடுநடையாக நடந்தான், நடக்கின்றான், நடப்பான் எனவும்,

-வருதலால் வினைக்குறிப்புச் சொல்லாயின. இவை முன்பு வினைக்குறிப்பாய்ப் பின்பு பொருள்களைவழங்குதற்கு உரிய பெயராய் வரின்,அவை குறிப்பு வினையாலணையும் பெயராம். இவ்வாறு தம்முள் வேறுபடும்.

## கூறு:7

**வினையியல் வினைச்சொற்களின் வகைகளை அறிதல்**

**வினைச்சொற்களின் வகைகள்:**

**வினைச் சொற்களின் பாகுபாடு:**

அவை தாம்

முற்றும் பெயர் வினை எச்சமும் ஆகி

ஒன்றற்கு உரியவும் பொதுவும் ஆகும்

தெரிநிலையாயும் குறிப்பாயும் வரும் என்ற வினைச்சொற்கள் முற்று வினைச்சொற்களும் பெயரெச்ச வினைச்சொற்களும் வினையெச்ச வினைச்சொற்களும் ஆகித் திணை, பால், இடங்களுள் ஒன்றற்குச் சிறப்பாய் வருவனவும் பலவற்றிற்குப் பொதுமையின் நிற்பனவும் ஆகும்.

இனி,'ஒரு மொழியொழிதன் னினங்கொளற் குரித்தே' என்பதனால், பிறவழியால் ஒன்றற்குரியவும் பொதுவுமாய் நிற்பனவும் சில உள என்பது தெரியவரும்.

நடந்தான் -தன்வினை;

நடத்தினான்- பிறவினை;

வெளுத்தான் - தன்வினை, பிறவினை இரண்டற்கும் பொதுவினை.

நடந்தான் - உடன்பாட்டு வினை;

குறிப்பு

நடவான் - எதிர்மறைவினை;

சாவான், வேவான் - உடன்பாடு, எதிர்வினை மறைவினை இரண்டற்கும் பொதுவினை.

உண்டான் - செய்வினை;

உண்ணப்பட்டது – செயப்பாட்டுவினை;

புலிகொன்ற யானை, மீன் விழுங்கியவன் - செய்வினை செயப்பாட்டுவினை இரண்டற்கும் பொதுவினை.

தேடிய சாத்தன், தேடிய வந்தான் எனச் சொல் ஒன்றே பெயரெச்சம் வினையெச்சம் இரண்டற்கும் பொதுவாயின.

## பயிற்சி வினாக்கள்:

1. வினைச்சொற்களின் பாகுபாடு குறித்துச் சுட்டுக.

அவை தாம்

முற்றும் பெயர் வினை எச்சமும் ஆகி

ஒன்றற்கு உரியவும் பொதுவும் ஆகும்

தெரிநிலையாயும் குறிப்பாயும் வரும் என்ற வினைச்சொற்கள் முற்று வினைச்சொற்களும் பெயரெச்ச வினைச்சொற்களும் வினையெச்ச வினைச்சொற்களும் ஆகித் திணை, பால், இடங்களுள் ஒன்றற்குச் சிறப்பாய் வருவனவும் பலவற்றிற்குப் பொதுமையின் நிற்பனவும் ஆகும்.

இனி,'ஒரு மொழியொழிதன் னினங்கொளற் குரித்தே' என்பதனால், பிறவழியால் ஒன்றற்குரியவும் பொதுவுமாய் நிற்பனவும் சில உள என்பது தெரியவரும்.

நடந்தான் -தன்வினை;

நடத்தினான்- பிறவினை;

வெளுத்தான் - தன்வினை, பிறவினை இரண்டற்கும் பொதுவினை.

நடந்தான் - உடன்பாட்டு வினை;

நடவான் - எதிர்மறைவினை;

குறிப்பு

சாவான், வேவான் - உடன்பாடு, எதிர்வினை மறைவினை இரண்டற்கும் பொதுவினை.

உண்டான் - செய்வினை;

உண்ணப்பட்டது – செயப்பாட்டுவினை;

புலிகொன்ற யானை, மீன் விழுங்கியவன் - செய்வினை செயப்பாட்டுவினை இரண்டற்கும் பொதுவினை.

தேடிய சாத்தன், தேடிய வந்தான் எனச் சொல் ஒன்றே பெயரெச்சம் வினையெச்சம் இரண்டற்கும் பொதுவாயின.

## கூறு – 8

## வினைமுற்று – வகைகள்

**வினைமுற்று :**

பொது இயல்பு ஆறையும் தோற்றிப் பொருட்பெயர்

முதல் அறு பெயர் அலது ஏற்பில முற்றே

பலவகை வினைகளுக்கும் பொது இலக்கணமாகிய செய்பவன் முதலிய ஆறையும் தோன்றச் செய்து வரும். பொருட் பெயர் முதலிய அறுவகைப் பெயரையும் பயனிலையாக ஏற்பனவாகி, மற்று ஒன்றையும் ஏலாதனமுற்றுவினை வினைக்குறிப்புக்களாம்.

### தெரிநிலை வினைமுற்று:-

செய்தான் அவன்- பொருட்பெயர்

குளிர்ந்தது நிலம்.- இடப்பெயர்

வந்தது கார்- காலப்பெயர்

குவிந்தது கை - சினைப்பெயர்

பரந்தது பசப்பு- குணப்பெயர்

ஒழிந்தது பிறப்பு - தொழிற்பெயர்

குறிப்பு

## குறிப்புவினை முற்று:-

நல்லன் அவன்- .பொருட்பெயர்

நல்லது நிலம்- இடப்பெயர்

நல்லது கார்- காலப்பெயர்

நல்லது கை - சினைப்பெயர்

நல்லது பசப்பு- குணப்பெயர்

நல்லது பிறப்பு - தொழிற்பெயர்

மற்றைத் திணை பால் இடம் காலங்கள் தோறும் ஒட்டிக் கொள்ளலாம்.

## வினைமுற்றின் வகைகள்:

ஒருவன் முதல் ஐந்தையும் படர்க்கை இடத்தும்

ஒருமை பன்மையைத் தன்மை முன்னிலையினும்

முக் காலத்தினும் முரண முறையே

மூஐந்து இரு மூன்று ஆறு ஆய் முற்று

வினைப்பதம் ஒன்றே மூ ஒன்பான் ஆம்

ஆண்பால் முதலாகிய ஐம்பால் வினைமுற்றுக்களையும் படர்க்கை இடத்திலும், ஒருமை வினைமுற்றையும் பன்மை வினைமுற்றையும் தன்மை இடத்திலும் முன்னிலை இடத்திலும் வைத்து, முக்காலங்களாலும் மாற, சொல்லப்பட்ட முறையே, படர்க்கை வினைமுற்றுக்கள் பதினைந்தும், தன்மைவினை முற்றுக்கள் ஆறும், முன்னிலை வினைமுற்றுக்கள் ஆறும் ஆகி, தெரிநிலை வினைமுற்றுப்பதம் ஒன்றுமே இருபத்து ஏழாகும்.

## படர்க்கை வினைமுற்று: - 15

நடந்தான், நடந்தாள், நடந்தார்,நடந்தது, நடந்தன.

இறந்தகால வினைமுற்று - 5

நடக்கின்றான், நடக்கின்றாள்,நடக்கின்றார்,நடக்கின்றது,நடக்கின்றன.

நிகழ்காலவினைமுற்று- 5

நடப்பான், நடப்பாள், நடப்பார், நடப்பது, நடப்பன.

எதிர்கால வினைமுற்று – 5

-ஆகப் படர்க்கை வினைமுற்று - 15

குறிப்பு

**தன்மை வினை முற்று: - 6**

நடந்தேன், நடந்தோம்- இறந்தகால வினைமுற்று - 2

நடக்கின்றேன் , நடக்கின்றேம் - நிகழ்காலவினைமுற்று - 2

நடப்பேன் நடப்பேம் - இவை எதிர்கால வினைமுற்று- 2

ஆகத் தன்மை வினைமுற்று-6.

**முன்னிலை வினைமுற்று - 6**

நடந்தாய் , நடந்தீர்- இறந்தகாலவினை முற்று. - 2

நடக்கின்றாய், நடக்கின்றீர் - நிகழ்காலவினைமுற்று - 2

நடப்பாய் நடப்பீர் - எதிர்கால வினைமுற்று- 2

ஆக முன்னிலை வினைமுற்று - 6

ஆக வகை மூன்றுக்கும் முற்றுவினை - 27

**ஆண்பால் வினைமுற்று:**

அன் ஆன் இறு மொழி ஆண்பால் படர்க்கை

அன், ஆன் என்னும் இரு விகுதியையும் இறுதியில் உடைய மொழிகள், உயர்திணை ஆண்பால் படர்க்கை வினைமுற்றும் குறிப்பு முற்றும் ஆகும்

| இறந்தகாலத்தெரிநிலை | நிகழ்காலத்தெரிநிலை | எதிர்காலத்தெரிநிலை | குறிப்பு |
|---|---|---|---|
| நடந்தனன் | நடக்கின்றனன் | நடப்பன் | குழையன் |
| நடந்தான் | நடக்கின்றான் | நடப்பான் | குழையான் |

மற்றவைகளும் இப்படியே வரும்.

**பெண்பால் வினைமுற்று:**

அள் ஆள் இறு மொழி பெண்பால் படர்க்கை

அள், ஆள் என்னும் இரண்டு விகுதியையும் இறுதியில் உடைய மொழிகள் , உயர்திணைப் பெண்பால் படர்க்கை வினைமுற்றும் குறிப்பு முற்றும் ஆம்.

இறந்த காலத்தெரிநிலை நிகழ்காலத்தெரிநிலை எதிாகாலத்.தெரிநிலை குறிப்பு

குறிப்பு

நடந்தனள்நடக்கின்றனள் நடப்பள் குழையள்

நடந்தாள் நடக்கின்றாள் நடப்பாள் குழையாள்

மற்றவைகளும் இப்படியே வரும்.

**பலர்பால் வினைமுற்று:**

அர் ஆர் பவ்வூர் அகரம் மார் ஈற்ற

பல்லோர் படர்க்கை மார் வினையொடு முடிமே

அர், ஆர், ப, மார் என்னும் நான்கு விகுதிகளையும் இறுதியின் உடைய மொழிகள், உயர்திணைப் பலர்பால் படர்க்கை வினைமுற்றும் குறிப்பு முற்றும் ஆகும். இவற்றுள் மார் ஈற்று வினைமுற்றுப் பொது விதியால் பெயருடன் முடிவது அன்றி வினையுடனும் முடியும்.

'மாரெதிர்வும் பாந்தஞ் செலவொடு வரவும்' எனப் பதவியலுள் கூறினமையால் இவ்விரு விகுதியும் குறிப்பு முற்றிலே வாரா.

இறந்தக்காலத்தெரிநிலை நிகழ்காலத்தெரிநிலை எதிர்காலத்தெரிநிலை குறிப்பு

நடந்தனர் நடக்கின்றனர் நடப்பர் குழையர்

நடந்தார் நடக்கின்றார் நடப்பார் குழையார்

மற்றவைகளும் இப்படியே வரும்.

நடப்ப, எய்துப, மொழிப, அவர் எனப் பவ்விகுதி வரும்.

பெரிய வோதினுஞ் சிறிய வுணராப்

பீடின்று பெருகிய திருவிற்

பாடின் மன்னரைப் பாடன்மா ரெமரே

-என மார் ஈற்று வினைமுற்றுப் பெயருடன் முடிந்தது. பாடன்மார் என்பது பாடுவார் அல்லர் எனப்பொருள்படும்; 'அல்' எதிர்மறை இடைநிலை ஆகும்.

'ஆர்த்தார் கொண்மார் வந்தார்' என மார் ஈற்று வினைமுற்று வினையொடு முடிந்தது.

குறிப்பு

**ஒன்றன்பால் வினைமுற்று:**

து று டு குற்றியலுகர ஈற்ற
ஒன்றன் படர்க்கை டுக் குறிப்பின் ஆகும்

து ,று, டு என்னும் மூன்று விகுதிகளையும் இறுதியில்உடைய குற்றியலுகர ஈற்று மொழிகள், அ∴றிணை ஒன்றன்பால் படர்க்கை வினைமுற்றும் குறிப்புமுற்றும் ஆகும். இவற்றுள் டுவ் விகுதி குறிப்புவினைமுற்றில் அன்றித் தெரிநிலை வினைமுற்றில் வாராது.
றுவ் விகுதி இறந்தகால இடைநிலையோடு மாத்திரம் கூடி வரும்.

| | | | |
|---|---|---|---|
| இறந்த காலத்தெரிநிலை | நிகழ்காலத்தெரிநிலை | எதிர்காலத்தெரிநிலை | குறிப்பு |
| நடந்தது | நடக்கின்றது | நடப்பது | குழையது |
| கூயிற்று | ------ | ------ | அற்று |
| ------------ | ------ | | பொருட்டு |

றுவ் விகுதி, வந்தன்று, உண்டன்று, சென்றன்று எனத் த, ட, ற ஒற்று இடைநிலைகளின் முன்னும், புக்கன்று, விட்டன்று, பெற்றன்று என விகாரப் பட்டு இறந்தகாலம் காட்டும்.

கு, டு, று ஈற்றுப் பகுதிகளின் முன்னும், அன் சாரியை பெற்று வரும். இவை, முறையே வந்தது, உண்டது, சென்றது, புக்கது, விட்டது, பெற்றது எனப் பொருள்படும்.

றுவ் விகுதி, கூயிற்று. ஓடிற்று என இன் இடைநிலையின் முன் மாத்திரம் சாரியை பெறாது வரும்.

தந்தின்று என றுவ் விகுதி தகர இடைநிலையின் முன் இன் சாரியை பெற்றதன்றோ என வினா எழுப்பும் ஆறுமுக நாவலர் அது தந்தன்று என்னும் உடன் பாட்டுவினையை மறுத்தற்குத் தகர இடைநிலைக்கும் றுவ் விகுதிக்கும் இடையே இல் என்னும் எதிர்மறை இடைநிலை ஏற்று வந்த மறைவினை என்று அறிக என விளக்கம் செய்வார். தந்தின்று தந்தது இல்லை எனப் பொருள் படும்.

அற்று, இற்று, எற்று என்பவை சுட்டினும் வினாவினும் வந்த வினைக்குறிப்பு முற்றுகள். இவை முறையே அத் தன்மைத்து, இத்தன்மைத்து, எத்தன்மைத்து எனப் பொருள்படும்.

**பலவின்பால் வினைமுற்று:**

அ ஆ ஈற்ற பலவின் படர்க்கை

ஆவே எதிர்மறைக் கண்ணது ஆகும்

அ, ஆ என்னும் இருவிகுதிகளை இறுதியில் உடைய மொழிகள், அ∴றிணைப் பலவின்பால் படர்க்கை வினைமுற்றும் குறிப்புமுற்றும்

ஆகும். அவற்றுள் ஆகாரம் எதிர்மறையில் வருமன்றி உடன்பாட்டில் வாராது.

ஆவே எதிர்மறைக்கண்ணதாகும் என்றதனால், மற்றை விகுதி உடன்பாட்டிலும் எதிர்மறையிலும் வரும் என்பது பெறப்படும்.

குறிப்பு

அகரவிகுதி அன்சாரியை பெற்றும் பெறாதும் வரும்.

| இறந்தகாலத்தெரிநிலை | நிகழ்காலத்தெரிநிலை | எதிர்காலத்தெரிநிலை | குறிப்பு |
|---|---|---|---|
| நடந்தன | நடக்கின்றன | நடப்பன | கரியன |
| நடந்த | நடக்கின்ற | நடப்ப | கரிய |

நடந்தில, நடவாநின்றில, நடவா - அவை.

இல்லன, இல்ல என்னும் எதிர்மறை வினைக்குறிப்பு முற்றின்கண் பகுதியே எதிர்மறைப் பொருள் தந்து நிற்றலின், இதற்கு எதிர்மறை ஆகாரம் வேண்டாமையின் ஏற்புழிக்கோடல் என்னும் உத்தியால், இவ் எதிர்மறை விகுதி தெரிநிலைக்கே எனக் கொள்ளல் வேண்டும்.

இங்கே காட்டிய அன் பெறாத நடப்ப என்னும் பல அறி சொல்லின் இறுதி நோக்கி உயர்திணைப் பன்மைப் படர்க்கைக்கும் அ..றிணைப் பன்மைப் படர்க்கைக்கும் பொதுவினை எனக் கொள்ளாது ஒழிக. இதனுள் பகர ஒற்று எதிர்கால வினை இடைநிலை ஆதலால், இத் தொடக்கத்தன எல்லாம் பலபொருள் ஒருசொல் என்று உணர்க.

## இருதிணைப் பொதுவினை:

தன்மை முன்னிலை வியங்கோள் வேறு இலை
உண்டு ஈர் எச்சம் இரு திணைப் பொது வினை

தன்மைவினை வினைக்குறிப்பு முற்றுக்களும்,முன்னிலைவினை வினைக்குறிப்பு முற்றுக்களும், வியங்கோள் வினைமுற்றுக்களும்,வேறு,இல்லை,உண்டு என்னும் மூன்று வினைக் குறிப்புமுற்றுக்களும் பெயரெச்சவினை, வினைக்குறிப்புக்களும் வினைஎச்சவினை, வினைக் குறிப்புக்களும், உயர்திணை அ..றிணை என்னும் இருதிணைக்கும் பொது வினைகளாகும்.

செய்யும் என்னும் பெயரெச்சமே செய்யும் என்னும் முற்று ஆதலால், அம் முற்றும் இருதிணைப் பொதுவினையாய் வரும்.

குறிப்பு

## தன்மை ஒருமை வினைமுற்று:

கு டு து று என்னும் குன்றியலுகரமோடு

அல் அன் என் ஏன் ஆகும் ஈற்ற

இரு திணை முக்கூற்று ஒருமைத்தன்மை

குடுதுறு என்னும் குற்றியலுகர விகுதிகளும் அல், அன், என், ஏன் என்னும் நான்கு மெய் ஈற்று விகுதிகளும் ஆகிய இவ் எட்டு விகுதிகளையும் இறுதியிலே உடைய மொழிகள் இருதிணை இடத்தனவாகிய ஒருவன், ஒருத்தி, ஒன்று என்னும் மூன்று பால்களுக்கும் பொதுவாகிய ஒருமைத்தன்மை வினைமுற்றும் குறிப்பு முற்றும் ஆகும்.

கு,டு, து, று என்னும் நான்கும் தாமே காலங்காட்டுதலால் குறிப்புவினைக்கு வாராது. அல் விகுதி எதிர் கால இடைநிலைகளோடு மாத்திரம் வரும்.

கு - உண்கு - எதிர்கால வினைமுற்று

டு - உண்டு - இறந்த கால வினைமுற்று

து - வந்து வருது- இறந்த கால - எதிர்கால வினைமுற்று

று - சென்று, சேறு - இறந்த கால - எதிர்கால வினைமுற்று

அல் - உண்பல் - எதிர்கால வினைமுற்று

| இறந்த காலத்தெரிநிலை | நிகழ்காலத்தெரிநிலை | இறந்த காலத்தெரிநிலை | குறிப்பு |
|---|---|---|---|
| உண்டனன் | உண்ணாநின்றனன் | உண்பன் | தாரினன் |
| உண்டனென் | உண்ணாநின்றனென் | உண்பென் | தாரினென் |
| உண்டேன் | உண்ணாநின்றேன் | உண்பேன் | தாரினேன் |

மற்றவைகளும் இப்படியே வரும்.

## தன்மைப் பன்மை வினைமுற்று:

அம் ஆம் என்பன முன்னிலை யாரையும்

எம் ஏம் ஓம் இவை படர்க்கையாரையும்

உம்மூர் க ட த ற இரு பாலாரையும்

தன்னொடு படுக்கும் தன்மைப் பன்மை

குறிப்பு

தன்மைப் பன்மை வினைமுற்று என்பது தன்மை இடத்தினை மட்டும் அல்லாமல் முன்னிலையாரையும் படர்க்கையாரையும் தன்னோடு சேர்க்கும் தன்மையை உடையது ஆகும்.

தன்னிலையின் நிற்பதன்றி அம்,ஆம் என்னும் இவ்விரு விகுதிகளையும் இறுதியில் உடைய மொழிகள் முன்னிலை இடத்தாரையும் எம், ஏம், ஓம் என்னும் இம்மூன்று விகுதிகளையும் இறுதியில் உடைய மொழிகள் படர்க்கை இடத்தாரையும், கும், டும், தும், றும் என்னும் இந்நான்கு விகுதிகளையும் இறுதியில் உடைய மொழிகள் முன்னிலை, படர்க்கை என்னும் இரு இடத்தார்களையும் தன்னுடன் கூட்டும் உளப்பாட்டுத் தன்மைப் பன்மை வினைமுற்றும் குறிப்பு முற்றும் ஆகும். கும், டும், தும்,றும் என்னும் நான்கும் தாமே காலம் காட்டுதலால் குறிப்புவினைக்கு வாரா.

| இறந்தகாலத்தெரிநிலை | நிகழ்காலத்தெரிநிலை | எதிர்காலத்தெரிநிலை | குறிப்பு |
|---|---|---|---|
| உண்டனம் | உண்கின்றனம் | உண்பம் | தாரினம் |
| உண்டாம் | உண்கின்றாம் | உண்பாம் | தாரினாம் |
| உண்டனெம் | உண்கின்றனெம் | உண்பெம் | தாரினெம் |

- யானும் அவனும்.

உண்டேம் உண்கிறேம் உண்பேம் தாரினேம்

உண்டோம் உண்கின்றோம் உண்போம் தாரினோம்

இறந்த காலத்தெரிநிலை நிகழ்காலத்தெரிநிலை

---------- உண்கும் யானும் நீயுமவனும்

உண்டும் ----------

வந்தும் வருதும்

சென்றும் சேறும்

இவை சிறுபான்மை இம்முறை இன்றி மயங்கி வருதலும் உண்டு. மற்றவைகளும் இப்படியே வரும்.

செய்கு என் ஒருமையும் செய்கும்என் பன்மையும்
வினையோடு முடியினும் விளம்பிய முற்றே

செய்கு என்னும் தன்மை ஒருமைமுற்றும், செய்கும் என்னும் தன்மைப் பன்மை முற்றும், பெயருடனே அன்றி வினையொடும் முடியினும முற்றுக்களேயாம்.

**குறிப்பு**

உண்கு வந்தேன், உண்கும் வந்தேம் என வரும்.

முன்னிலை கூடிய படர்க்கையும் முன்னிலை

தன்மையோடு கூடிய முன்னிலை படர்க்கைகள் தன்மை ஆனாற்போல, முன்னிலையோடு கூடிய படர்க்கையும் முன்னிலையாம்.

உண்டனிர் குழையினிர் நீயும் அவனும்

உண்டீர் குழையீர்

உண்மின் --------------

இந் நூற்பா, முன்னிலைப் பன்மைமுற்றுக் கூறிய வழியே கூறாது, ஒன்றினம் முடித்தல், தன்னினம் முடித்தல் என்னும் உத்தியால், இங்கே கூறப்பட்டது.

**முன்னிலை ஒருமை வினைமுற்று:**

ஐ ஆய் இகர ஈற்ற மூன்றும்

ஏவலின் வரூஉம் எல்லா ஈற்றுவும்

முப்பால் ஒருமை முன்னிலை மொழியே

ஐ, ஆய், இ என்னும் மூன்று விகுதிகளை இறுதியில் உடைய வினைமுற்றுகளும், விகுதி குன்றாதும் குன்றியும் நிற்பனவாகிய ஏவலிலே வரும் இருபத்துமூன்று வினைமுற்றுகளும்,ஒருவன் ஒருத்தி, ஒன்று என்னும் மூன்று பால்களுக்கும் பொதுவாகிய முன்னிலை ஒருமை வினைமுற்றும் குறிப்பு முற்றும் ஆகும்.

இகர விகுதி எதிர்காலத்தை இடைநிலை இன்றித் தானே காட்டுதல் பதவியலில் பெறப்பட்டது.

ஏவல் வினைமுற்றுத் தெரிநிலைவினை ஒன்றற்கே உரிமையின், உம்மை கொடுத்துப் பிரித்தார்.

இறந்த காலத் தெரிநிலை நிகழ்.தெரி. எதிர் .தெரி. குறிப்பு.

உண்டனை உண்கின்றனை உண்பை குழையினைநீ

உண்டாய் உண்கின்றாய் உண்பாய் குழையாய்

உண்டி உண்ணாநின்றி சேறி வில்லி

குறிப்பு

ஆய், இ, அல், ஏல், ஆல் என்னும் விகுதிகளை இறுதியில் உடைய வினைச்சொற்களும், ஆய் விகுதி புணர்ந்து குன்றிப் பகுதி மாத்திரையாய் நிற்கும் வினைச்சொற்களும், முன்னிலை ஏவல் ஒருமைத் தெரிநிலை வினை முற்றுக்களாம்.

இவற்றுள் , அல், ஏல், ஆல் என்னும் மூன்று விகுதிகளும் எதிர்மறை இடத்து வரும்.

உண்ணாய் உண்ணுதி உண் நீ

உண்ணல் உண்ணேல் மறால்

எதிர்மறை ஏவல் ஒருமை வினைமுற்றுக்கள் உண்ணாதே, உண்ணாதி என, எதிர்மறை ஆகார இடைநிலையின் முன் தகர எழுத்துப்பேற்றோடு, ஏகார விகுதி இகர விகுதிகளுள் ஒன்று பெற்றும் வரும்.

முன்னிலை முன்னர் ஈயும் ஏயும்

அந்நிலை மரபின் மெய் ஊர்ந்து வருமே

முன்னிலை ஏவல் முற்றென முன் சொல்லப்பட்டவற்றிற்கு முன் ஈகாரமும் ஏகாரமும், அவ் இடத்து நிற்றற்கு உரிய மரபினை உடைய யாதானும் ஒரு மெய்யை ஊர்ந்து வரும்.

சென்றீ பெருமநிற் றகைக்குநர் யாரே.

அட்டிலோலை தொட்டனை நின்மே”

செல் - சென்றீ

நில் - நின்மே –

இங்கே,ஈயும் ஏயும் முறையே றகர ஒற்றையும் மகர ஒற்றையும் ஊர்ந்து வந்தன.

இவ் ஈகார ஏகாரங்கள் விகுதிகள் அல்ல; ஆய்விகுதி குறைந்த ஏவலில் வரும் முன்னிலை அசையாம். றகர ஒற்றும் மகர ஒற்றும் எழுத்துப் பேறு.

## முன்னிலைப் பன்மை வினைமுற்று:

இர் ஈர் ஈற்ற இரண்டும் இருதிணைப்

பன்மை முன்னிலை மின் அவற்று ஏவல்

இர்,ஈர் என்னும் இரண்டு விகுதிகளையும் இறுதியில் உடைய மொழிகள், இருதிணைக்கும் பொதுவாகிய பன்மை முன்னிலை வினைமுற்றும்

குறிப்பு

குறிப்புமுற்றும் ஆகும். மின்விகுதியை இறுதியிலுடைய மொழிகள் முன்னிலைப் பன்மை ஏவல் முற்றாகும்.

மின் விகுதி அன்றி,ஈர், உம் விகுதிகளும் முன்னிலைப்பன்மை ஏவலுக்கு வரும் எனக் கொள்க.

| | | | |
|---|---|---|---|
| இறந்தகாலத்தெரிநிலை | நிகழ்காலத்தெரிநிலை | எதிர்காலத் தெரிநிலை | குறிப்பு. |
| உண்டனிர் | உண்கின்றனிர் | உண்பிர் | குழையினிர் |
| உண்டீர் | உண்கின்றீர் | உண்பீர் | குழையீர் |

உண்மின், உண்ணீர், உண்ணும் என ஏவல் வினைமுற்று வந்தன.

**வியங்கோள் வினைமுற்று:**

க ய வொடு ரவ் வொற்று ஈற்ற வியங்கோள்

இயலும் இடம் பால் எங்கும் என்ப

க, ய என்னும் இரண்டு உயிர்மெய்யினையும் ரகர மெய்யினையும் இறுதியில் உடைய மொழிகள் வியங்கோள் முற்றுக்களாகும். அவை மூன்றிடங்களிலும் ஐம்பால்களிலும் வரும்.

வாழ்கஉண்க ஆடுக - யான், யாம், நீ, நீர், அவன், அவள், அவர், அது, அவை.

வாழிய உண்ணிய ஆடிய -யான், யாம், நீ, நீர், அவன், அவள், அவர், அது, அவை.

வாழியர்உண்ணியர் ஆடியர் -யான், யாம், நீ, நீர், அவன், அவள், அவர்,அது, அவை.

உரையிற் கோடல் என்னும் உத்தியால்,

நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க- அ

மக்கட் பதடியெனல் - அல்

மனத்துக்கண் மாசிலனாதல் – தல்

என அ, அல், தல் என்பனவும் வியங்கோள் விகுதிகளாய் வரும் எனக் கொள்க.

வியங்கோள் வினைமுற்று:

ஆறிரு தடந்தோள் வாழ்க அறுமுகம் வாழ்க–வாழ்த்தல்

குறிப்பு

நடக்க, வருக, உண்க - என உயர்ந்தோன் இழிந்தோனை இன்னது செய்க என விதித்தல்

"போற்றி யருளுக நின்னாதியாம் பாதமலர்"- வேண்டல்

"பரந்து கெடுக உலகியற்றியான்" - வைதல்.

விதித்தல் பொருள் தன்மையில் வராது.

வேறு இல்லை உண்டு ஐம **வேறு இல்லை உண்டு:** பால் மூவிடத்தன

வேறு, இல்லை,உண்டு என்னும் மூன்று வினைக்குறிப்பு முற்றுக்களும், ஐம்பாலுக்கும் மூவிடத்திற்கும் உரியனவாம்.

யான் வேறு, யாம்வேறு, நீ வேறு, நீர்வேறு,

அவன் வேறு, அவள் வேறு, அவர் வேறு,

அது வேறு, அவை வேறு;

யான் இல்லை, யாம்இல்லை, நீ இல்லை, நீர்இல்லை,

அவன் இல்லை, அவள் இல்லை, அவர் இல்லை,

அது இல்லை, அவை இல்லை

யான் உண்டு, யாம் உண்டு, நீ உண்டு, நீர்உண்டு

அவன் உண்டு, அவள் உண்டு,அவர் உண்டு

அது உண்டு, அவை உண்டு

இல்லை என்பது சிறுபான்மை இல் என நிற்றலும் உண்டு.

இனி, மொழிந்த பொருளோடு ஒன்ற அவ்வயின் மொழியாததனையும் முட்டின்று முடித்தல் என்னும் உத்தியால், வேண்டும், தகும், படும் என்னும் சொற்களும் ஐம்பான் மூவிடத்துக்கும் பொதுவாம் எனக் கொள்க. இம்மூன்றும் ஒரு பொருள்சொற்களாய்த் தொழிற்பெயராய்த் தேற்றப் பொருள்பட்டே நிற்கும்.

அவர் ஓதல் வேண்டும்;

நீ போதல்வேண்டும்;

யான் உண்ணல் வேண்டும்

இச் சோறு உண்ணத் தகும்;

இவரால் இக்காரியம் செய்யத்தகும்

குறிப்பு

வஞ்சரை அஞ்சப்படும்;

கற்றறிந்தோரைத் தலை நிலத்து வைக்கப்படும் எனவும் வரும்.

**பயிற்சி வினாக்கள்:**

1.இருதிணைப்பொது வினை குறித்து விவரி

தன்மை முன்னிலை வியங்கோள் வேறு இலை

உண்டு ஈர் எச்சம் இரு திணைப் பொது வினை

மேற்கண்டவற்றினைப் பாடப்பகுதியில் அந்தப் பகுதிகளில் அமைந்துள்ள தலைப்புகளின் அடிப்படையில் விரித்து எழுத வேண்டும்.

2.வியங்கோள் வினைமுற்று குறித்து எழுதுக.

வியங்கோள் வினைமுற்று:

க ய வொடு ரவ் வொற்று ஈற்ற வியங்கோள்

இயலும் இடம் பால் எங்கும் என்ப

க, ய என்னும் இரண்டு உயிர்மெய்யினையும் ரகர மெய்யினையும் இறுதியில் உடைய மொழிகள் வியங்கோள் முற்றுக்களாகும். அவை மூன்றிடங்களிலும் ஐம்பால்களிலும் வரும்.

வாழ்கஉண்க ஆடுக - யான், யாம், நீ, நீர், அவன், அவள், அவர், அது, அவை.

வாழிய உண்ணிய ஆடிய -யான், யாம், நீ, நீர், அவன், அவள், அவர், அது, அவை.

வாழியர் உண்ணியர் ஆடியர் -யான், யாம், நீ, நீர், அவன், அவள், அவர்,அது, அவை.

உரையிற் கோடல் என்னும் உத்தியால்,

நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க,- அ

மக்கட் பதடியெனல் - அல்

மனத்துக்கண் மாசிலனாதல் – தல்

என அ, அல், தல் என்பனவும் வியங்கோள் விகுதிகளாய் வரும் எனக் கொள்க.

குறிப்பு

வியங்கோள் வினைமுற்று:

ஆறிரு தடந்தோள் வாழ்க அ றுமுகம் வாழ்க—வாழ்த்தல்

நடக்க, வருக, உண்க - என உயர்ந்தோன் இழிந்தோனை இன்னது செய்க என விதித்தல்

"போற்றி யருளுக நின்னாதியாம் பாதமலர்" - வேண்டல்

"பரந்து கெடுக உலகியற்றியான்" - வைதல்.

விதித்தல் பொருள் தன்மையில் வராது.

3. வேறு, இல்லை, உண்டு என்பன குறித்து எழுதுக

வேறு இல்லை உண்டு:

வேறு இல்லை உண்டு ஐம் பால் மூவிடத்தன

வேறு, இல்லை,உண்டு என்னும் மூன்று வினைக்குறிப்பு முற்றுக்களும், ஐம்பாலுக்கும் மூவிடத்திற்கும் உரியனவாம்.

யான் வேறு, யாம்வேறு, நீ வேறு, நீர்வேறு,

அவன் வேறு, அவள் வேறு, அவர் வேறு,

அது வேறு, அவை வேறு;

யான் இல்லை, யாம்இல்லை, நீ இல்லை, நீர்இல்லை,

அவன் இல்லை, அவள் இல்லை, அவர் இல்லை,

அது இல்லை, அவை இல்லை

யான் உண்டு, யாம் உண்டு, நீ உண்டு, நீர்உண்டு

அவன் உண்டு, அவள் உண்டு,அவர் உண்டு

அது உண்டு, அவை உண்டு

இல்லை என்பது சிறுபான்மை இல் என நிற்றலும் உண்டு.

இனி, மொழிந்த பொருளோடு ஒன்ற அவ்வயின் மொழியாததனையும் முட்டின்று முடித்தல் என்னும் உத்தியால், வேண்டும், தகும், படும் என்னும் சொற்களும் ஐம்பான் மூவிடத்துக்கும் பொதுவாம் எனக்

கொள்க. இம்மூன்றும் ஒரு பொருள்சொற்களாய்த் தொழிற்பெயராய்த் தேற்றப் பொருள்பட்டே நிற்கும்.

குறிப்பு

அவர் ஓதல் வேண்டும்;

நீ போதல்வேண்டும்;

யான் உண்ணல் வேண்டும்

இச் சோறு உண்ணத் தகும்;

இவரால் இக்காரியம் செய்யத்தகும்

வஞ்சரை அஞ்சப்படும்;

கற்றறிந்தோரைத் தலை நிலத்து வைக்கப்படும் எனவும் வரும்.

# பிரிவு -3

**பயன்: எஞ்சி நிற்பது எச்சம் என்பதனையும் இது தான் முடிதற்குப் பிறிதொன்றினை எதிர்பார்த்து நிற்பது என்பதனையும் அறிதல்**

குறிப்பு

**எச்சத்தின் வகைகளை அறிந்து பயன்கொள்ளல்**

**பொருட்புணர்ச்சியில் உருபுகள் தொக்கிநிற்பதும் உண்டு என்பதனையும் அவ்வாறு தொக்கி நிற்பது தொகை எனப்படும் என்பதனையும் அறிதல்**

**தொகைவகைகளின் தன்மைகளையும் அவை உணர்த்தி நிற்கும் பொருள்களையும்அறிதல்**

**தொகாநிலைத் தொடர்மொழிகளை அறிதல்**

**வழு என்பதனையும் வழுவமைதி என்பதனையும் அறிந்து அவற்றைத் தகுந்த இடத்துப் பயன்படுத்திப் பயன் கொள்ளல்**

**வினா விடை மரபுகளை அறிதல்**

**பொருள்கோளின் தன்மைகளையும் வகைகளையும் அறிந்து பயனடைதல்**

## கூறு - 9

### பெயரெச்சம் :

செய்த செய்கின்ற செய்யும் என் பாட்டில்

காலமும் செயலும் தோன்றிப் பாலோடு

செய்வது ஆதி அறு பொருட்பெயரும்

எஞ்ச நிற்பது பெயரெச்சமே

பெயரெச்சம் செய்த, செய்கின்ற,செய்யும் என்று சொல்லப்படும் மூவகை வாய்பாட்டில் வரும். இறப்பு, நிகழ்வு, எதிர்வு என்னும் மூன்று காலங்களும் தொழிலும் தோற்றி வரும். பால், செய்பவன், கருவ,ி நிலம், செயல், காலம், செயப்படுபொருள் என்னும் அறுவகைப் பொருள் பெயர்களுள் ஏதேனும் ஒன்று எஞ்ச நிற்கும்.

நிற்பது என்பது தொகுதி ஒருமை.

ஏற்புழிக்கோடலால், தோன்றி என்பது வரைக்கும் தெரிநிலையுடன்பாட்டிற்கும்,ஏனைய விதி தெரிநிலையும் குறிப்புமாகிய உடன்பாடு எதிர்மறை இரண்டற்கும் பொருந்தும்.

| இறந்த காலம் | நிகழ்காலம் | எதிர்காலம் |
|---|---|---|
| உண்ட | உண்கின்ற | உண்ணும் |

குறிப்பு

- சாத்தன் .... வினைமுதல் .

கலம்- கருவி.

இடம் - நிலம்.

ஊண்- தொழில்.

நாள் - காலம்.

சோறு- செயப்படுபொருள்.

வேலாண் முகத்த களிறு

மூவிலையவேல்,

உள்ளபொருள்,

கரியகுதிரை,

புதியநட்பு

எனக் குறிப்புவினைப் பெயரெச்சம் வரும்.

உண்ணாத குதிரை,

உண்கலாத குதிரை,

உண்கிலாத குதிரை

- என எதிர்மறைத் தெரிநிலை வினைப் பெயரெச்சம் வரும்.

இல்லாத பொருள்,

அல்லாத குதிரை

- என எதிர்மறைக் குறிப்புவினைப் பெயரெச்சம் வரும்.

இங்கே உண்ட என்பது, உணல் என்னும் தொழிலும் இறந்த காலமும் தோன்றி, அத்தொழில் நிகழ்த்துதற்கு வேண்டும் பால் தோன்றாமையும் அப்பாலுடனே பெயர் ஒழிய நின்றமையும் அறிக.

அறுபொருட்பெயரும் என்ற உம்மையால், இன்னதற்கு, இது பயன் என்னும் இருபொருள்பெயர் எஞ்ச நிற்பனவும் பிறபெயர் எஞ்ச நிற்பனவும் கொள்க.

குறிப்பு

களை கட்ட பயிர் - இது இன்னதற்கு என்னும் பெயர் எஞ்ச நின்றது.

களை கட்ட கூலி - இது இதுபயன் என்னும் பெயர் எஞ்ச நின்றது.

உண்ட களைப்பு, ஆறு சென்ற வியர், உண்ட எச்சில்,

குடிபோன ஊர், பழமுதிர்ந்த கோடு

பொன் பெரிய நம்பி,

எனவும், பிறபெயர்கள் எஞ்ச நின்றன.

"நின்முகங்காணு மருந்தினேன்" என்றவழி, காட்சியை மருந்து என்றமையால் தொழிற்பெயர் எஞ்ச நின்றது.

## செய்யும் என்னும் வாய்பாட்டுப் பெயரெச்சம்:

செய்யும் என் எச்ச ஈற்று உயிர்மெய் சேறலும்

செய்யுளுள் உம் உந்து ஆகலும் முற்றேல்

உயிரும் உயிர்மெய்யும் ஏகலும் உளவே

செய்யும் என்னும் வாய்பாட்டுப் பெயர் எச்சத்தினுடைய இறுதியிலுள்ள உயிர்மெய் கெடுதலும், செய்யுளிடத்து உம் விகுதி உந்து எனத் திரிதலும், அது முற்றாயின் அதன் இறுதி உயிராயினும் உயிர் மெய்யாயினும் கெடுதலும் உளவாம்.

செய்யுளுள்உம் உந்தாம் என்றமையால் மற்றவிதிகள் வழக்குச் செய்யுள் இரண்டு இடத்துமாம் , என்பதும், முற்றேல் எனவே, செய்யும் என்னும் பெயரெச்சம் முற்றுவினையுமாம் என்பதும் பெறப்படும்.

ஆம்பொருள், போம் போது - வழக்கு

ஆம்பொருள்கள்ஆகுமவை யார்க்குமழிப் புண்ணாவாம் "வாம் புரவி வழுதி" எனச் செய்யுளினுள் செய்யும் என் எச்சத்து ஈற்று உயிர்மெய் கெட்டன. இவை மகர ஒற்று நிற்றலின், வினைத்தொகை ஆகாது.

"தென்கடற் திரைமிசைப் பாயுந்து, - பாயும், என்பது பாயுந்து என உம் உந்தாயிற்று

"நீர்க்கோழி கூப்பெயர்க்குந்து" - கூப்பெயர்க்கும் என்பது கூப்பெயர்க்குந்து என உம் உந்தாயிற்று

இவைபோம் என வழக்கில், ஆகும் போகும் என்பன முற்றாய இடத்து, ஆம், போம் என ஈற்று உயிர்மெய் கெட்டன.

சாரனாட என் தோழியுங் கலுழ்மே,'அம்பலூரு மவனொடு மொழிமே எனச் செய்யுளில், கலுழும், மொழியும் என்பன, முற்று ஆய இடத்துக், கலுழ்ம், மொழிம் என உயிரும் உயிர்மெய்யும் கெட்டன.

குறிப்பு

செய்யும் என்னும் முற்று என்றாயினும் செய்யும் என்னும் ஏவல்முற்று என்றாயினும் விதவாது , பொதுமையின் முற்றேல் என்றமையின். மாமறை மாக்கள் வருகுவங் கேண்மோ. "முதுமறை யந்தணிர் முன்னிய துரைமோ" எனக்கேளும் உரையும் என்னும் ஏவல்முற்றும் இவ்வாறு உயிரும் உயிர்மெய்யும் கெட்டு வருதல் கொள்க.

இவை இங்ஙனம் ஆதலால்,'சொற்றொறு மிற்றிதன் பெற்றி'(சூத்திரம்.461) என்னும் சூத்திரத்தால், ஆடுவாமோ என்னும் தன்மைப் பன்மைமுற்றும்"பொன்னூசல் ஆடாமோ" என எதிர்கால இடைநிலை கெட்டு வருதலும் உண்டு.

## வினையெச்சம் :

தொழிலும் காலமும் தோன்றிப் பால்வினை

ஒழிய நிற்பது வினையெச்சம்

வினையெச்சம் தொழிலும் காலமும் விளக்கும். வினைமுற்றுதற்கு வேண்டும் பால் ஒன்றும் தோன்றாது அப்பாலுடனே வினை எஞ்ச நிற்கும்.

வினை எனப் பொதுப்படக் கூறினமையால், உடன்பாடும் எதிர்மறையும் பற்றி வரும் தெரிநிலையும் குறிப்பும் ஆகிய வினைமுற்றும், பெயர் எச்சமும், வினையெச்சமும், வினையாலணையும் பெயரும் தொழிற் பெயருமாகிய ஐவகை வினைச்சொற்களும் இதனுள் அடங்கும் என்பது தெரியவரும்.

உண்டுவந்தான் - தெரிநிலைவினையெச்சம்.

அருளின்றிச்செய்தான் - குறிப்புவினையெச்சம்.

இவற்றுள், உண்டு என்பது, உணல் என்னும் தொழிலும் இறந்தகாலமும் தோன்றி, அத் தொழில் நிகழ்த்துதற்கு வேண்டும் பால் தோன்றாமையும் அப்பாலுடனே வினை ஒழிய நின்றது.

## வினையெச்ச வாய்பாடுகள்:

செய்து செய்பு செய்யாச் செய்யூச்

செய்தெனச் செயச் செயின் செய்யிய செய்யியர்

வான் பான் பாக்கு இன வினையெச்சம் பிற

ஐந்து ஒன்று ஆறும்முக் காலமும் முறை தரும்

செய்து என்பது முதல் செய்யியர் என்பது ஈறாகிய ஒன்பது வாய்பாட்டால் வருவனவும், வான், பான், பாக்கு என்னும் மூன்று விகுதிகளைக் கொண்டு வருவனவும்இவைபோல்வன பிறவும் வினைஎச்ச வினைகளாம். முன்னைய ஐந்தும், நடு நின்ற ஒன்றும், பின்னைய ஆறும் இறந்தகாலமும் நிகழ்காலமும் எதிர்காலமும் முறையே காட்டும்.

குறிப்பு

செய்து, செய்பு, செய்யா, செய்யூ, செய்தென - இறந்தகால வினையெச்சங்கள்

செய – நிகழ்கால வினையெச்சம்

செயின், செய்யிய, செய்யியர், வான், பான், பாக்கு – எதிர்கால வினையெச்சங்கள்

இறந்த காலம்:

செய்து– கண்டு

செய்பு – காண்குபு

செய்யா- காணா

செய்யூ- காணூஉ

செய்தென– கண்டென

நிகழ் காலம்:

செய – காண

எதிர்காலம்:

செயின் - காணின்

செய்யிய - காணிய

செய்யியர் - காணியர்

வான் - காணுவான்

பான் - காண்பான்

பாக்கு– காண்பாக்கு

இவற்றுள் செய்து, செய்தென என்னும் இரண்டும் இடைநிலையாலும் ஏனையன இறுதிநிலையாலும் காலம் காட்டும்.

வான், பான், பாக்கு என்பன அவ்வவ் எச்ச விகுதிகளை உடைய மொழிகளை உணர்த்திநின்ற குறிப்புச் சொல் ஆகும்.

குறிப்பு

இன என்றமையால்,

ஆடிக் கொண்டான்,

போய்க் கொண்டான் எனச் செய்து என் வாய்பாடு பற்றி இகர விகுதியும் யகரமெய் விகுதியும் வரும் என்பதும்,

தழீஇக் கொண்டான் என விகுதி விகாரப்பட்டு வரும் என்பதும்

புக்கு வந்தான் எனப் பகுதி விகாரப்பட்டு வரும் என்பதும்,

உணற்கு வந்தான் எனச் செயவென் வாய்பாடு பற்றிக் குவ்விகுதி வரும் என்பதும்,

உண்டாற் பசிதீரும், உண்டக்காற் பசிதீரும், உண்டக்கடைப் பசிதீரும், உண்டவழிப் பசிதீரும், உண்டவிடத்துப் பசிதீரும், உண்ணுமேற் பசிதீரும் எனச் செய் என் வாய்பாடு பற்றி ஆல், கால், கடை, வழி, இடத்து, ஏல் விகுதிகள் வரும் என்பதும்,

எள்ளுமேனும் வரும், காண்டலும் இதுவே கூறும் என ஏனும் உம்மும் ஒரோவிடத்து விகுதிகளாய் வரும் என்பதும்,

உண்ணாமே வந்தான், உண்ணாமை வந்தான், உண்ணாமைக்கு வந்தான், உண்ணாமல் வந்தான் என எதிர்மறை இடத்து, மே, மை, மைக்கு, மல் விகுதிகள் வரும் என்பதும்,

அருள் இன்றி வந்தான், அறமல்லாதில்லை, அறமல்லாமேயில்லை, அறமல்லாமையில்லை, அறமல்லாமலில்லை, நீயல்லாலில்லை என வினையெச்சக் குறிப்புக்களுக்கு, றி, து, மே,மை மல், ஆல் என்பவை விகுதிகளாம் என்பதும் கொள்ளப்படும்.

உரையிற்கோடல் என்னும் உத்தியினாலே, செயவென் எச்சம் நிகழ்காலம் அன்றி மற்றைக்காலமும் தரும் என்பதும் கொள்ளப்படும்.அது, தனக்குரிய நிகழ்காலத்தின்கண் இது நிகழாநிற்க இது நிகழ்ந்தது என்னும் பொருட்டாயும், இறந்த காலத்தில் காரணப் பொருட்டாயும், எதிர்காலத்திற் காரியப் பொருட்டாயும் வரும்.காரணப்பொருட்டாய் வருதலாவது முடிக்கும் சொல்லால் உணரப்படும். தொழிற்கு வினை எச்சத்தால் உணரப்படும் தொழில் காரணம் என்பது பட வருதல். காரியப்பொருட்டாய் வருவதலாவது, முடிக்கும் சொல்லால் உணரப்படும் தொழிற்கு வினையெச்சத்தால் உணரப்படும் தொழில் காரியம் என்பது பட வருதல்.

சூரியன் உதிக்க வந்தான் - நிகழ்காலம்

மழை பெய்ய நெல் விளைந்தது - .இறந்த காலம்.

நெல் விளைய மழை பெய்தது - எதிர்காலம்

குறிப்பு

இன்னும், உரையிற்கோடல் என்னும் உத்தியால், வான், பான், பாக்கு என்னும் மூன்றும் சிறுபான்மை தொழிற் பெயர் விகுதிகளாயும் வரும் என்பது பெறப்படும்.

நீ வருவானேன், யானுரைப்பானேன்,"ஒழுக்கத்தி னொல்கா ருரவோ ரிழுக்கத்தி - ஏதம் படுபாக் கறிந்து" என வரும். இங்கே, வருவான், உரைப்பான் படுபாக்கு என்பன. முறையே, வருதல், உரைத்தல், படுதல் எனப் பொருள்படுதல் காண்க.

## வினையெச்ச முடிபுகள்:

அவற்றுள்,

முதலில் நான்கும் ஈற்றில் மூன்றும்

வினைமுதல் கொள்ளும் பிறவும் ஏற்கும் பிற

மேலைச் சூத்திரத்துள் சொல்லிய வினையெச்சங்களுள் முதலில் உள்ள செய்து, செய்பு,,செய்யாச், செய்யூ என்னும் நான்கும் ,இறுதியிலுள்ள வான், பான், பாக்கு என்னும் விகுதிகளை உடைய மூன்றும் வினை முதலைக் கொண்டு முடியும். நடுவிலுள்ள செய்தெனச், செயச்,செயின், செய்யிய, செய்யியர் என்னும் ஐந்தும், இவை போல்வன பிறவும் என்றதனால் வரும் செய்தால் முதலியவையும் வினையெச்சக் குறிப்புக்களும் ஆகிய இவைகள்; செய்பவனை அன்றி மற்றவைகளையும் கொண்டு முடியும்.

செய்து -தான் நடந்து வந்தான்

செய்பு – தான் உண்குபு போனான்

செய்யா- தான் கல்லாக் கழித்தான்

செய்யூ- தான் காணூஉ மகிழ்ந்தான்

வான் - தான் கொல்வான் செல்வான்

பான் - தான் அலைப்பான் புகுந்தான்

பாக்கு - தான் தருபாக்கு வருவான்

முதலில் நான்கும் ஈற்றில்மூன்றும் வினை முதல் கொண்டு முடிந்தன.

செய்தென- தானுண்டென மகிழ்ந்தான்

செய்யா - தானுண்ண வருகிறான்

குறிப்பு

செயின் - தானுண்ணின் மகிழ்வான்

பிறனுண்ணிற் கொடுப்பான்

செய்யிய - தானுண்ணிய வருவான்

பிறனுண்ணிய கொடுப்பான்

செய்யியர் - தானுண்ணியர் போவான்

பிறனுண்ணியர் வழங்குவான்

இடையினைந்தும் வினை முதலும் பிறவுங்கொண்டன.

உண்டாலுவக்கும்,உண்டாற்பசிதீரும் எனவும், மழையின்றிப் பொய்ப்பின், விருந்தின்றி யுண்டான் எனவும், இன்ன என்றதனால் வரும்செய்தால் முதலியவையும் வினை எச்சக்குறிப்பும் இப்படியே வினைமுதலும் பிறவும் ஏற்றல் காண்க.

## சினை வினைகள்:

சினை வினை சினையோடும் முதலோடும் செறியும்

முதல் நான்கும் ஈற்றில் மூன்றும் என்ற வினைஎச்சங்கள் சினைவினையாயின் அவை, முன் வினைமுதல் கொள்ளும் என்ற விதியினாலே சினையுடனே அன்றி, ஒற்றுமை பற்றி முதலுடனும் முடியும்.

காலொடிந்து விழுந்தான்

ஒடிதல் சினைவினை,

விழுதல் முதல் வினை.

சொல் திரியினும் பொருள் திரியா வினைக்குறை

முதலில் நான்கும் ஈற்றில் மூன்றும் என்ற வினை எச்ச வாய்பாடுகளாகப் பிறவினை எச்ச வாய்பாடுகள் வேறுபடினும் அவற்றின் பொருள்கள் வேறுபடாது.

ஞாயிறு பட்டு வந்தான் என்பதில், பட என்னும் செய என் வாய்பாட்டு நிகழ்கால வினையெச்சம் பட்டு எனத் திரிந்து நின்றது.

மழை பெய்து நெல் விளைந்தது என்பதில், பெய்ய என்னும் காரணப் பொருட்டாகிய செய என் வாய்பாட்டு இறந்தகால வினை எச்சம் பெய்து எனத் திரிந்து நின்றது. ஆ கிடந்து செறு விளைந்தது, பூணணிந்து

விளங்கிய புகழ் சால் மார்ப, உண்டு பசி கெட்டது என்புழிக் கிடக்க, அணிய,உண்ண என்பன, முறையே, கிடந்து, அணிந்து, உண்டு எனத்திரிந்து நின்றன.

குறிப்பு

யான் கொள்வான், பொன் கொடுத்தான் என்பதில், கொள என்னும் செய என் வாய்பாட்டு வினையெச்சம் கொள்வான் எனத் திரிந்து நின்றது.

**ஒழிபு :**

## ஆக்க வினைக் குறிப்பு:

ஆக்க வினைக்குறிப்பு ஆக்கம் இன்று இயலா

ஆக்கத்தால் வரும் வினைக்குறிப்புச் சொற்கள்,விரிந்தாயினும் தொக்காயினும் வரும் ஆக்கச்சொல் இன்றி வாராது. இதன்வழி ஆக்கச்சொல் பெற்றே வரும் என்பது பெறப்படும்.

சாத்தனல்லனாயினான்,

சாத்தனல்லன்;

கல்வியாற் பெரியனாயினான்,

கல்வியாற் பெரியன்;

கற்று வல்லனாயினான்,

கற்று வல்லன் என ஆக்கச் சொல் விரிந்தும் தொக்கும் வந்தன. எனவே, நல்லன் என்பது இயற்கைவினைக் குறிப்பாயின், விரிதல் தொகுத்தல் என்னும் இரண்டனுள் ஒருவாற்றானும் ஆக்கம் வேண்டாது, சாத்தனல்லன் என்றே வரும் என்பதாயிற்று.

## செய்யும் என்னும் முற்றுச் செல்லாத இடங்கள்:

பல்லோர் படர்க்கை முன்னிலை தன்மையில்

செல்லாது ஆகும் செய்யும்என் முற்றே

செய்யும் என்னும் எச்சத்தாலாகும் செய்யும் என்னும் முற்றானது, உயர்திணைப் பன்மைப் படர்க்கையிலும் முன்னிலையிலும் தன்மையிலும் வாராது.

எனவே, பலர் ஒழிந்த படர்க்கை நாற்பாலிலும் செல்லும் என்பது பெறப்படும்.

அவன் உண்ணும், அவள் உண்ணும், அது உண்ணும், அவை உண்ணும் என வரும்.

## யார் என்னும் குறிப்பு வினைமுற்று:

யார் என் வினாவினைக்குறிப்பு உயர் முப்பால்

குறிப்பு

வினாப் பொருளைத் தரும் யார் என்னும் வினைக்குறிப்பு முற்று உயர்திணை முப்பால்களுக்கும் பொது வினையாம்.

அவன் யார், அவள் யார், அவர் யார் என வரும்.

அ.்.தி யார், அவை யார் எனவும்,

யான் யார், யாம் யார் எனவும்,

நீ யார், நீர் யார் எனவும்,

அ.்.றிணை இருபாலிலும், மற்றை ஈரிடத்திலும் வருதல் புதியன புகுதலாம்.

யார் என்பது ஆரென விகாரப்பட்டும் வரும். இங்கே சொன்ன யார் என்பது, யாவர் என்னும் உயர்திணைப் பலர்பால் சொல் விகாரப்பட்ட யார் என்பதனை அன்று.

## எவன் என்னும் குறிப்பு வினைமுற்று:

எவன் என் வினாவினைக் குறிப்புஇழி இருபால்

வினாப்பொருளைத் தரும் எவன் என்னும் வினைக்குறிப்பு முற்று அ.்.றிணை இருபாலுக்கும் பொது வினையாம்.

அ.்.து எவன் - ஒன்றன் பால்

அவை எவன் - பலவின் பால்

எவன் என்பது, என், என்ன, என்னை என விகாரப்பட்டும் வரும். இங்கே சொன்ன எவன் என்பது, உயர்திணை ஆண்பாலை உணர்த்தும் எவன் என்பதனை அன்று.

## முற்றுகள் எச்சமாதல்:

வினைமுற்றே வினையெச்சம் ஆகலும்

குறிப்புமுற்று ஈர் எச்சம் ஆகலும் உளவே

தெரிநிலை வினைமுற்றே வினை எச்சமாகி வரும்.குறிப்பு வினைமுற்றே வினையெச்சமாகியும் பெயரெச்சமாகியும் வருதலும்உளவாம்.

கண்டனன் வணங்கினான் என்பது கண்டு வணங்கினான் எனவும்,

முகந்தனர் கொடுத்தார் என்பது முகந்து கொடுத்தார் எனவும் பொருள்படுதலால் வினைமுற்று வினை எச்சமாய் நின்றன.

அவன் வில்லினன் வந்தான் என்பது அவன் வில்லினனாகி வந்தான் எனப் பொருள்படுதலால் குறிப்பு முற்று வினையெச்சமாயிற்று.

குறிப்பு

வெந்திறலின் வழுதி யொடு என்பது வெந்திறலினன் ஆகிய வழுதி எனப் பொருள் படுதலால் குறிப்புமுற்றுப் பெயரெச்சமாயிற்று.

பயிற்சி வினாக்கள்:

1.பெயரெச்சம் என்பதனை விளக்குக.

பெயரெச்சம் :

செய்த செய்கின்ற செய்யும் என் பாட்டில்

காலமும் செயலும் தோன்றிப் பாலோடு

செய்வது ஆதி அறு பொருட்பெயரும்

எஞ்ச நிற்பது பெயரெச்சம்

பெயரெச்சம் செய்த, செய்கின்ற,செய்யும் என்று சொல்லப்படும் மூவகை வாய்பாட்டில் வரும். இறப்பு, நிகழ்வு, எதிர்வு என்னும் மூன்று காலங்களும் தொழிலும் தோற்றி வரும். பால், செய்பவன், கருவி, நிலம், செயல், காலம், செயப்படுபொருள் என்னும் அறுவகைப் பொருள் பெயர்களுள் ஏதேனும் ஒன்று எஞ்ச நிற்கும்.

நிற்பது என்பது தொகுதி ஒருமை.

ஏற்புழிக்கோடலால், தோன்றி என்பது வரைக்கும் தெரிநிலையுடன்பாட்டிற்கும்,ஏனைய விதி தெரிநிலையும் குறிப்புமாகிய உடன்பாடு எதிர்மறை இரண்டற்கும் பொருந்தும்.

| | | |
|---|---|---|
| இறந்த காலம் | நிகழ்காலம் | எதிர்காலம் |
| உண்ட | உண்கின்ற | உண்ணும் |

- சாத்தன் .... வினைமுதல் .

கலம்- கருவி.

இடம் - நிலம்.

ஊண்- தொழில்.

நாள் - காலம்.

சோறு- செயப்படுபொருள்.

வேலாண் முகத்த களிறு

குறிப்பு

மூவிலையவேல்,

உள்ளபொருள்,

கரியகுதிரை,

புதியநட்பு

எனக் குறிப்புவினைப் பெயரெச்சம் வரும்.

உண்ணாத குதிரை,

உண்கலாத குதிரை,

உண்கிலாத குதிரை

- என எதிர்மறைத் தெரிநிலை வினைப் பெயரெச்சம் வரும்.

இல்லாத பொருள்,

அல்லாத குதிரை

என எதிர்மறைக் குறிப்புவினைப் பெயரெச்சம் வரும்.

இங்கே உண்ட என்பது, உணல் என்னும் தொழிலும் இறந்த காலமும் தோன்றி, அத்தொழில் நிகழ்த்துதற்கு வேண்டும் பால் தோன்றாமையும் அப்பாலுடனே பெயர் ஒழிய நின்றமையும் அறிக.

அறுபொருட்பெயரும் என்ற உம்மையால், இன்னதற்கு, இது பயன் என்னும் இருபொருள்பெயர் எஞ்ச நிற்பனவும் பிறபெயர் எஞ்ச நிற்பனவும் கொள்க.

களை கட்ட பயிர் - இது இன்னதற்கு என்னும் பெயர் எஞ்ச நின்றது.

களை கட்ட கூலி - இது இதுபயன் என்னும் பெயர் எஞ்ச நின்றது.

உண்ட இளைப்பு, ஆறு சென்ற வியர், உண்ட எச்சில்,

குடிபோன ஊர், பழமுதிர்ந்த கோடு

பொன் பெரிய நம்பி,

எனவும், பிறபெயர்கள் எஞ்ச நின்றன.

”நின்முகங்காணு மருந்தினேன்” என்றவழி, காட்சியை மருந்து என்றதாகலின் தொழிற்பெயர் எஞ்ச நின்றது.

குறிப்பு

2.வினையெச்சம் என்பதனைச் சுட்டுக.

வினையெச்சம் :

தொழிலும் காலமும் தோன்றிப் பால்வினை

ஒழிய நிற்பது வினையெச்சம்

வினையெச்சம் தொழிலும் காலமும் விளக்கும். வினைமுற்றுதற்கு வேண்டும் பால் ஒன்றும் தோன்றாது அப்பாலுடனே வினை எஞ்ச நிற்கும்.

வினை எனப் பொதுப்படக் கூறினமையால், உடன்பாடும் எதிர்மறையும் பற்றி வரும் தெரிநிலையும் குறிப்பும் ஆகிய வினைமுற்றும், பெயர் எச்சமும், வினையெச்சமும், வினையாலணையும் பெயரும் தொழிற் பெயருமாகிய ஐவகை வினைச்சொற்களும் இதனுள் அடங்கும் என்பது தெரியவரும்.

உண்டுவந்தான் - தெரிநிலைவினையெச்சம்.

அருளின்றிச்செய்தான் - குறிப்புவினையெச்சம்.

இவற்றுள், உண்டு என்பது, உணல் என்னும் தொழிலும் இறந்தகாலமும் தோன்றி, அத் தொழில் நிகழ்த்துதற்கு வேண்டும் பால் தோன்றாமையும் அப்பாலுடனே வினை ஒழிய நின்றது.

3வினையெச்ச வாய்பாடுகளை விவரி.

வினையெச்ச வாய்பாடுகள்:

செய்து செய்பு செய்யாச் செய்யூச்

செய்தெனச் செயச் செயின் செய்யிய செய்யியர்

வான் பான் பாக்கு இன வினையெச்சம் பிற

ஐந்து ஒன்று ஆறும்முக் காலமும் முறை தரும்

செய்து என்பது முதல் செய்யியர் என்பது ஈறாகிய ஒன்பது வாய்பாட்டால் வருவனவும், வான், பான், பாக்கு என்னும் மூன்று விகுதிகளைக் கொண்டு வருவனவும்இவைபோல்வன பிறவும் வினைஎச்ச வினைகளாம். முன்னைய ஐந்தும், நடு நின்ற ஒன்றும், பின்னைய ஆறும் இறந்தகாலமும் நிகழ்காலமும் எதிர்காலமும் முறையே காட்டும்.

செய்து, செய்பு, செய்யா, செய்யூ, செய்தென - இறந்தகால வினையெச்சங்கள்

செய — நிகழ்கால வினையெச்சம்

செயின், செய்யிய, செய்யியர், வான், பான், பாக்கு – எதிர்கால வினையெச்சங்கள்

குறிப்பு

இறந்த காலம்:

செய்து– கண்டு

செய்பு – காண்குபு

செய்யா- காணா

செய்யூ- காணூ

செய்தென– கண்டென

நிகழ் காலம்:

செய – காண

எதிர்காலம்:

செயின் - காணிண்

செய்யிய - காணிய

செய்யியர் - காணியர்

வான் - காணுவான்

பான் - காண்பான்

பாக்கு– காண்பாக்கு

இவற்றுள் செய்து, செய்தென என்னும் இரண்டும் இடைநிலையாலும் ஏனையன இறுதிநிலையாலும் காலம் காட்டும்

வான், பான், பாக்கு என்பன அவ்வவ் எச்ச விகுதிகளை உடைய மொழிகளை உணர்த்திநின்ற குறிப்புச் சொல் ஆகும்.

இன என்றமையால்,

ஆடிக் கொண்டான்,

போய்க் கொண்டான் எனச் செய்து என் வாய்பாடு பற்றி இகர விகுதியும் யகரமெய் விகுதியும் வரும் என்பதும்,

தழீஇக் கொண்டான் என விகுதி விகாரப்பட்டு வரும் என்பதும்

புக்கு வந்தான் எனப் பகுதி விகாரப்பட்டு வரும் என்பதும்,

உணற்கு வந்தான் எனச் செயவென் வாய்பாடு பற்றிக் குவ்விகுதி வரும் என்பதும்,

உண்டாற் பசிதீரும், உண்டக்காற் பசிதீரும், உண்டக்கடைப் பசிதீரும், உண்டவழிப் பசிதீரும், உண்டவிடத்துப் பசிதீரும், உண்ணுமேற் பசிதீரும் எனச் செயி என் வாய்பாடு பற்றி ஆல், கால், கடை, வழி, இடத்து, ஏல் விகுதிகள் வரும் என்பதும்,

எள்ளுமேனும் வரும், காண்டலும் இதுவே கூறும் என ஏனும் உம்மும் ஒரோவிடத்து விகுதிகளாய் வரும் என்பதும்,

உண்ணாமே வந்தான், உண்ணாமை வந்தான், உண்ணாமைக்கு வந்தான், உண்ணாமல் வந்தான் என எதிர்மறை இடத்து, மே, மை, மைக்கு, மல் விகுதிகள் வரும் என்பதும்,

அருள் இன்றி வந்தான், அறமல்லாதில்லை. அறமல்லாமேயில்லை, அறமல்லாமையில்லை, அறமல்லாமலில்லை, நீயல்லாலில்லை என வினையெச்சக் குறிப்புக்களுக்கு, றி, து, மே,மை மல், ஆல் என்பவை விகுதிகளாம் என்பதும் கொள்ளப்படும்.

உரையிற்கோடல் என்னும் உத்தியினாலே, செயவென் எச்சம் நிகழ்காலம் அன்றி மற்றைக்காலமும் தரும் என்பதும் கொள்ளப்படும்.அது, தனக்குரிய நிகழ்காலத்தின்கண் இது நிகழாநிற்க இது நிகழ்ந்தது என்னும் பொருட்டாயும், இறந்த காலத்தில் காரணப் பொருட்டாயும், எதிர்காலத்திற் காரியப் பொருட்டாயும் வரும்.காரணப்பொருட்டாய் வருதலாவது முடிக்கும் சொல்லால் உணரப்படும். தொழிற்கு வினை எச்சத்தால் உணரப்படும் தொழில் காரணம் என்பது பட வருதல். காரியப்பொருட்டாய் வருவதலாவது, முடிக்கும் சொல்லால் உணரப்படும் தொழிற்கு வினையெச்சத்தால் உணரப்படும் தொழில் காரியம் என்பது பட வருதல்.

சூரியன் உதிக்க வந்தான்.- நிகழ்காலம்

மழை பெய்ய நெல் விளைந்தது.- .இறந்த காலம்.

நெல் விளைய மழை பெய்தது.- எதிர்காலம்

இன்னும், உரையிற்கோடல் என்னும் உத்தியால், வான், பான், பாக்கு என்னும் மூன்றும் சிறுபான்மை தொழிற் பெயர் விகுதிகளாயும் வரும் என்பது பெறப்படும்.

நீ வருவானேன், யானுரைப்பானேன், "ஒழுக்கத்தி னொல்கா ருரவோ ரிழுக்கத்தி - னேதம் படுபாக் கறிந்து" என வரும். இங்கே, வருவான், உரைப்பான் படுபாக்கு என்பன. முறையே, வருதல், உரைத்தல், படுதல் எனப் பொருள்படுதல் காண்க.

4.சினை வினைகள் குறித்து எழுதுக.

குறிப்பு

சினை வினைகள்:

சினை வினை சினையோடும் முதலோடும் செறியும்

முதல் நான்கும் ஈற்றில் மூன்றும் என்ற வினைஎச்சங்கள் சினைவினையாயின் அவை, முன் வினைமுதல் கொள்ளும் என்ற விதியினாலே சினையுடனே அன்றி, ஒற்றுமை பற்றி முதலுடனும் முடியும்.

காலொடிந்து விழுந்தான்

ஒடிதல் சினைவினை,

விழுதல் முதல் வினை.

5.யார், எவன் என்பன எவ்வாறு முடியும்?

யார் என்னும் குறிப்பு வினைமுற்று:

யார் என் வினாவினைக்குறிப்பு உயர் முப்பால்

வினாப் பொருளைத் தரும் யார் என்னும் வினைக்குறிப்பு முற்று உயர்திணை முப்பால்களுக்கும் பொது வினையாம்.

அவன் யார், அவள் யார், அவர் யார் என வரும்.

அ∴தி யார், அவை யார் எனவும்,

யான் யார், யாம் யார் எனவும்,

நீ யார், நீர் யார் எனவும்,

அ∴றிணை இருபாலிலும், மற்றை ஈரிடத்திலும் வருதல் புதியன புகுதலாம்.

யார் என்பது ஆரென விகாரப்பட்டும் வரும். இங்கே சொன்ன யார் என்பது, யாவர் என்னும் உயர்திணைப் பலர்பால் சொல் விகாரப்பட்ட யார் என்பதனை அன்று.

எவன் என்னும் குறிப்பு வினைமுற்று:

எவன் என் வினாவினைக் குறிப்புஇழி இருபால்

வினாப்பொருளைத் தரும் எவன் என்னும் வினைக்குறிப்பு முற்று அ∴றிணை இருபாலுக்கும் பொது வினையாம்.

அ.்.து எவன் - ஒன்றன் பால்

அவை எவன் - பலவின் பால்

எவன் என்பது, என், என்ன, என்னை என விகாரப்பட்டும் வரும். இங்கே சொன்ன எவன் என்பது, உயர்திணை ஆண்பாலை உணர்த்தும் எவன் என்பதனை அன்று.

குறிப்பு

## கூறு – 10

## பொதுவியல்

சொல்லதிகாரத்தினுள் முதற்கண் சொல்லப்பெற்ற பெயர்க்கும் வினைக்கும் இனிமேல் சொல்லப்படவிருக்கின்ற இடைக்கும் உரிக்கும் பொதுவான இலக்கணங்களை உணர்த்துகின்றதாதலின் இவ்வியல் பொதுவியல் என்னும் பெயர் பெற்றது.

### பெயரும் வினையும் பால் பொதுமை நீக்குதல்:

இரு திணை ஆண் பெணுள் ஒன்றனை ஒழிக்கும்

பெயரும் வினையும்குறிப்பி னானே

இரு திணையிலும் ஆண்பால் பெண்பால்களுக்குப் பொதுவாகிய பெயர்ச்சொற்களும் அப்படிப்பட்ட வினைச்சொற்களும் குறிப்பினால் அவ் ஆண்பால் பெண்பால்களுள் ஒருபாலை நீக்கும்.

ஆயிரம் மக்கள் போர் செய்யப் போயினார் என்றவழி,மக்கள் எனும் உயர்திணை ஆண் பெண் இருபாற்கும் பொதுப் பெயரும், போயினார் என்னும் உயர்திணை ஆண் பெண் இருபாற்கும் பொதுவினையும், போர் செயல் என்னும் குறிப்பினால் பெண்பாலை ஒழித்தன.

பெருந்தேவி பொறை உயிர்த்த கட்டிற்கீழ் நால்வர் மக்கள் உளர், என்பதில், மக்கள் என்னும் பொதுப்பெயரும் உளர் என்னும் பொது வினைக்குறிப்பும், பொறை உயிர்த்த என்னும் குறிப்பினால் ஆண்பாலை ஒழித்தன.

இப்பெற்றங்கள் உழவு ஒழிந்தன என்பதில் பெற்றங்கள் என்னும் அ.்.றிணை ஆண் பெண் இருபாற்கும் பொதுப்பெயரும்,ஒழிந்தன என்னும் அ.்.றிணை ஆண் பெண் இருபாற்கும் பொதுவினையும், உழவு என்னும் குறிப்பினால் பெண்பாலை ஒழித்தன.

இப்பெற்றங்கள் பால் சொரிந்தன என்றவழி, பெற்றங்கள் என்னும் பொதுப்பெயரும், சொரிந்தன என்னும் பொதுவினையும் பால் என்னும் குறிப்பினால் ஆண்பாலை ஒழித்தன.

## பெயரும் வினையும் செய்யுளில் திரிதல்:

பெயர் வினை இடத்து ன ள ர ய ஈற்று அயல்

குறிப்பு

ஆ ஓ ஆகலும் செய்யுளுள் உரித்தே

பெயரிடத்தும் வினை இடத்தும், னகர, ளகர, ரகர, யகர ஈற்றிற்கு அயலில் உள்ள விகுதிகளின் முதல் எழுத்தாகிய ஆகாரம்செய்யுளிடத்து ஓகாரம் ஆகும்.

வில்லோன் காலன கழலே;

தொடியோள் மெல்லடி மேலன சிலம்பே

நல்லோர் யார் கொல்

வரையாது கொடுத்தோய் - பெயரிடத்து ஆகாரம் ஓகாரமாயிற்று.

படைத்தோன் மன்றவப் பண்பிலாளன்;

நல்லோண்மன்றகூப் பெயர்த்தோளே;

“சென்றோ ரன்பிலர்தோழி”

“வந்தோய் மன்ற தெண்கடற் சேர்ப்ப” - வினையிடத்து ஆகாரம் ஓகாரமாயிற்று.

வினையாலணையும் பெயரிடத்து அன்றி வினையிடத்தும் ஒரோவழி ஆஓவாகத் திரிந்து வருதலின், அதனையும் உடன் கூறினார்.

ஆவோவாகலும் என்ற உம்மையை ஆக்க உம்மையாகக் கொண்டு ‘பழமுதிர் சோலை மலைகிழவோனே” என ஒரோவழி அகரம் ஓகாரம் ஆதலும் கொள்க.

## உருபும் வினையும் எதிர்மறையில் திரியாமை:

உருபும் வினையும் எதிர்மறுத்து உரைப்பினும்

திரியா தத்தம் ஈற்று உருபின் என்ப

எட்டுவேற்றுமை உருபுகளும் மூவகை வினைச்சொற்களும், எதிர்மறுத்துச் சொல்லும் இடத்தும் தத்தம் ஈற்றினின்றும் அவ்வவ் உருபினின்றும் வேறுபடாது என்று சொல்லுவர் புலவர்.

அதாவது எதிர்மறுத்துக் கூறினும் உருபு உருபினின்றும் திரியாது, வினை ஈற்றினின்றும் திரியாது.

சாத்தன் வாரான்

குறிப்பு

குடத்தை வனையான்,

வாளாலெறியான்,

புல்லர்க்குக் கொடான்,

நிலையினீங்கான்;

பொருளின தின்மை;

தீயர்கட் சேரான்;

சாத்தா போகேல்,

இவற்றில் எழுவாய் வேற்றுமை தொடங்கி எட்டாம் வேற்றுமை வரையிலான வேற்றுமை உருபுகள் திரியாமல் வந்துள்ளன.வாரான் தொடங்கி போகேல் வரையிலான வினைகளும் தத்தம் ஈற்றில் திரியவில்லை.

நடவான் - முற்று வினைச்சொல்

நடவாத– பெயரெச்ச வினைச்சொல்

நடவாது– வினையெச்ச வினைச்சொல்

மேற்கண்ட மூன்றும் எதிர்மறுத்தலில் வந்துள்ளன எனினும் ஈறுகள் திரியவில்லை.

ஓடாக்குதிரை- இதில் ஓடாத என்னும் பெயர் எச்சவீறு கெட்டது.

உரையிற் கோடலால், செய - செய்யாமல், செய்யாமே, செய்யாமை என வினையெச்சமும்,

நடத்தல் - நடவாமை எனத் தொழிற்பெயரும்,

உண்ணாய் - உண்ணேல், உண்ணாதே என ஒருமை ஏவலும் ஈறு திரிந்தும் வரும்.

### உருபும் வினையும் அடுக்கி முடிதல்:

உருபு பல அடுக்கினும் வினை வேறு அடுக்கினும்

ஒரு தம் எச்சம் ஈறு உற முடியும்

வேற்றுமை உருபுகள் விரிந்தும் தொக்கும் தம்முள் விரவிப் பலஅடுக்கி வரும். தன்னந் தனியாக ஒரே உருபு பலமுறை அடுக்கியும் வரும். முற்றும், பெயரெச்சம், வினையெச்சமுமாகிய வினைச் சொற்கள்

தனித்தனியே பல அடுக்கியும் வரும். இவ்வாறு அடுக்கி வருமிடத்து தத்தம் எச்சம் ஒன்று இறுதியில் வர அதனோடு அனைத்தும் முடியும்.

குறிப்பு

அரசனானவன் பகைவனை வாளால் வெட்டினான் என உருபுகள் விரித்து, தம்முள் விரவிப் பலவடுக்கி, வெட்டினான் என்னும் ஒருவினை கொண்டன. வாள் கைக்கொண்டான் இரண்டு, ஏழாம் வேற்றுமை உருபு தொக்கன

சாத்தனையும் கொற்றனையும் வாழ்த்தினான்

சாத்தனுக்கும் கொற்றனுக்கும் தந்தை

- என்பனவற்றுள் ஐயுருபும் குவ்வுருபும் விரிந்து, வேறு பலஅடுக்கி, வாழ்த்தினன் என்னும் ஒருவினையும் தந்தை என்னும் ஒருபெயரும் முறையே கொண்டன. அருளற முடையான் என உருபு தொக்கு, அவ்வாறு வந்தன.

ஆடினான் பாடினான் சாத்தன்

இளையள் மெல்லியண் மடந்தை

- என்பனவற்றுள். வினைமுற்றம் குறிப்புமுற்றும், வேறு பலஅடுக்கிச், சாத்தான் மடந்தை என்னும் ஒரு பெயர் முறையே கொண்டன.

கற்ற கேட்ட பெரியோர்

நெடிய பெரிய மனிதன்

- என்பனவற்றுள்,தெரிநிலைவினைப் பெயரெச்சமும் குறிப்பு வினைப்பெயரெச்சம், வேறு பலஅடுக்கிப் பெரியோர், மனிதன் என்னும் ஒருபெயர் முறையே கொண்டன.

கற்றுக்கேட்டறிந்தார்
விருப்பின்றி வெறுப்பின்றி இருந்தார்

- என்பனவற்றுள்,தெரிநிலை வினையெச்சமும் குறிப்பு வினையெச்சமும், வேறு பலஅடுக்கி, அறிந்தார், இருந்தார் என்னும் ஒரு வினை முறையே கொண்டன.

## இடைப்பிறவரல்:

உருபு முற்று ஈர் எச்சம் கொள்ளும்

பெயர் வினை இடை பிற வரலுமாம் ஏற்பன

வேற்றுமை உருபுகளும் முற்றுக்களும் பெயரெச்சங்களும் வினையெச்சங்களும் கொண்டு முடியும் பெயர்க்கும் வினைக்கும்

இடையே பொருந்தக் கூடிய முறையில் பிறசொற்கள் வரும்.அவை இடைப்பிறவரல் எனப்படும்.

குறிப்பு

சாத்தன் (வயிறார) உண்டான்.

அறத்தை (அழகு பெறச்) செய்தான்.

வாளான் (மாய) வெட்டினான்.

தேவர்க்குச் (செல்வம்) வேண்டிச் சிறப்பெடுத்தான்.

மலையினின்று (உருண்டு) வீழ்ந்தான்.

சாத்தனது (இத்தடக்கை) யானை.

ஊர்க்கண் (உயர்ந்தவொளி) மாடம்.

சாத்தா (விரைந்து ஓடி) வா - வேற்றுமை உருபு.

வந்தான் (அவ்வூர்க்குப் போன) சாத்தன் - வினைமுற்று.

வந்த (வடகாசி) மன்னன் - பெயர் எச்சம்,

வந்து (சாத்தன் அவ்வூர்க்குப்) போயினான் - வினை எச்சம்.

இனி "ஏற்பன" என்றதனால், ஏலாதன வரின் பொருள் கவர்படும் ஆதலால், அவை இடையில் வரப் பெறா என்பதாயிற்று. கவர்படுதல் இருபால்பட்டுத் துணிவு தோன்றா வண்ணம் நிற்றல்.

உண்டு விருந்தோடு வந்தான் என்புழி, விருந்தோடு என்பது, வருதலை விசேடியாது,உண்டலை விசேடித்தும் பொருள் கவர்படுதலால், இது போல்வன இடையில் வரப்பெறா. வல்லம் எறிந்த நல்லிளங்கோசர் தந்தை மல்லல் யானைப் பெருவழுதி என்புழி, வல்லம் எறிதல், வழுதிமேலாகாது, நல்லிளங்கோசர் மேலும் ஆகிப் பொருள் கவர்படுதலால் இது போல்வனவும் இடையில் வரப்பெறாது.

## முடிக்கும் சொல் நிற்குமிடம்:

எச்சப் பெயர் வினை எய்தும் ஈற்றினும்

எச்சப் பெயர்வினை உருபுகளும் முற்றுக்களும் பெயரெச்சங்களும் வினையெச்சங்களும் கொண்டு முடியும் எச்சமாகிய பெயரும் வினையும் அவற்றிற்கு ஈற்றிலும் வரும்

ஈற்றினும் என்ற உம்மையால், முதலினும் வருதல் உண்டு என்பது பெறப்படும்

குறிப்பு

| ஈற்றில் வந்தன | முதலில் வந்தன |
|---|---|
| சாத்தன் வந்தான் | வந்தான் சாத்தன் |
| மரத்தைக் குறைத்தான் | குறைத்தான் மரத்தை |
| சாத்தனால் வந்தான் | வந்தான் சாத்தனால் |
| சாத்தனுக்குக் கொடுத்தான் | கொடுத்தான் சாத்தனுக்கு |
| சாத்தனின் நீங்கினான் | நீங்கினான் சாத்தனின் |
| சாத்தன்கண் சென்றான் | சென்றான் சாத்தன்கண் |
| சாத்தா வா | வா சாத்தா |

வந்தான் சாத்தன்,சாத்தன் வந்தான் - முற்றெச்சங்களின் எச்சங்கள் ஈரிடத்தும் வந்தன.வந்து போயினான்,போயினான் வந்து எய்துமீற்றின் என்றாற்போல முதற்கண் வருதலை எடுத்து ஓதாது உம்மையால் தழுவிக்கொண்டார். ஆறன் உருபின் எச்சமும் ஏழன் உருபின் எச்சப்பெயரும் பெயரெச்சத்தின் எச்சமும் முதற்கண் வாரா என்பதும், ஒழிந்தன முதற்கண் வரினும் இறுதிக்கண் வருதல்போல் சிறப்பின அல்ல என்பதும் தோன்றுதற்கு என்க.

எழுவாய் உருபு வினைமுற்றுப் பயனிலையை இறுதியிலே கொண்டதும், வினைமுற்றுப் பெயர்ப் பயனிலையை முதலிலே கொண்டதும், சாத்தன் வந்தான் என வரும். தம்முள் வேற்றுமை யாதோ எனின், கேட்போர்க்குச் சாத்தன் இது செய்தான் என வினையை உணர்த்தும்போது, சாத்தன் என்னும் எழுவாய்க்கு வந்தான் என்னும் முற்றுவினை பயனிலையாகக் கொள்ளப்படும்; இது செய்தான் சாத்தன் என வினை முதலை உணர்த்தும்போது, வந்தான் என்னும் முற்றுவினைக்குச் சாத்தன் என்னும் பெயர் பயனிலையாகக் கொள்ளப்படும். வந்தான் சாத்தன் என்றும் முற்றுத் தொடருக்கும் இவ்வாறு அறிக.

## ஒரு மொழி ஒழி தன் இனம் கொளல்:

ஒரு மொழி ஒழி தன்இனம் கொளற்கு உரித்தே

பெயர், வினை, இடை,உரி என்னும் நால்வகைச் சொற்களுள் ஒவ்வொன்று, ஒழிந்து நின்ற தன்தன் இனங்களைக் கொண்டு முடிதற்கு உரித்தாகும்.

சோற்றை நனி உண்டான் என்றவழி,கறியை நனி தின்றான் என்றல் தொடக்கத்தனவும்,

பாக்கை நனி தின்றான் என்றவழி, வெற்றிலையை நனி தின்றான், சுண்ணாம்பை நனி தின்றான் என்பனவும்,

நஞ்சுண்டவன் சாவான் என்றவழி நஞ்சுண்டவள் சாவாள், நஞ்சுண்டவர் சாவார், நஞ்சுண்டது சாம், நஞ்சுண்டவை சாம் என்பனவும் கூறாதே அமைதலின், இனங்களாய் எஞ்சி நின்றன.

குறிப்பு

இவற்றுள், சோற்றை என்னும் பெயர்ச்சொல்லும் உருபிடைச்சொல்லும் கறியை என்னும் பெயர்ச்சொல்லையும் உருபிடைச் சொல்லையும், நனி உண்டான் என்னும் உரிச்சொல்லும் வினைச்சொல்லும் நனி தின்றான் என்னும் உரிச்சொல்லையும் வினைச்சொல்லையும் கொள்ளுதற்கு உரியவாய் நிற்றல் காண்க.

## திணை, பால், இடப்பொதுமை நீக்குதல்:

பொதுப் பெயர் வினைகளின் பொதுமை நீக்கும்

மேல்வரும் சிறப்புப் பெயர் வினை தாமே

சிறப்பாகிய பெயர் வினைகள்திணை பால் இடங்கட்குப் பொதுவாகிய பெயர் வினைகளுடைய பொதுத்தன்மையை நீக்கி ஒன்றற்கு உரிமை செய்யும்.

ஒன்றற்கு முன் பின் என்னும் இருமருங்கும் மேல் எனப்படுதலால், சிறப்புப் பெயர் வினை எவ்விடத்து வரினும் ஏற்றுக் கொள்ளுதல் வேண்டும்.

சாத்தனிவன், சாத்தனிது

சாத்தன் வந்தான், சாத்தன்வந்தது

- பெயர்த் திணைப் பொதுமையைப், பின் வந்த சிறப்புப் பெயரும் வினையும், நீக்கி ஒரு திணையை உணர்த்தின.

ஒருவர் என்ஜயர்; ஒருவர் என்தாயர்

மரம் வளர்ந்தது, மரம் வளர்ந்தன

பெயர்ப்பால் பொதுமையைப், பின் வந்த சிறப்புப் பெயரும் வினையும், நீக்கி ஒருபாலை உணர்த்தின.

யாமெல்லாம் வருவம்,

நீயிரெல்லாம் போமின்,

அவரெல்லாம் இருந்தார்

- எனப் பெயரிடப் பொதுமையை முன் வந்த சிறப்புப் பெயரும், பின் வந்த சிறப்பு வினையும், நீக்கி ஒவ்வோர் இடத்தை உணர்த்தின.

குறிப்பு

வாழ்க அவன்,அவள்,அவர்,அது, அவை, யான், யாம், நீ, நீர் என வினைத் திணை பால் இடப் பொதுமையைப் பின் வந்த சிறப்புப்பெயர்கள், நீக்கி ஒருதிணையையும் பாலையும் இடத்தையும் உணர்த்தின.

### எச்சங்களின் முடிவு:

பெயர் வினை உம்மை சொல் பிரிப்பு என ஒழியிசை

எதிர்மறை இசை எனும் சொல் ஒழிபு ஒன்பதும்

குறிப்பும் தத்தம் எச்சம் கொள்ளும்

பெயர் எச்சமும், வினை எச்சமும், உம்மை எச்சமும், சொல் எச்சமும், பிரிநிலை எச்சமும், என எச்சமும், ஒழி இசை எச்சமும், எதிர்மறை எச்சமும் இசை எச்சமும், என்னும் சொல் எச்சங்கள் ஒன்பதும் குறிப்பு எச்சம் ஒன்றும் தத்தம் எச்சங்களைக் கொண்டு முடியும்.

எச்சங்கள் சொல் எச்சம் குறிப்பு எச்சம் என இருவகைப்படும்.இப்பத்து எச்சங்கள் உள்ளும், பெயரெச்சம் வினையெச்சம் என எச்சம் என்னும் மூன்றற்கும் எச்சச்சொற்கள் வாக்கியங்களில் வெளிப்பட்டு நிற்கும். ஒழிந்தனவற்றிற்கு எச்சச்சொற்கள் வருவித்து உரைக்கப்படும்.

### பெயரெச்சம்:

செய்த சாத்தன்,

நல்ல சாத்தன்

எனப் பெயர் எச்சங்கள் தம் எச்சமாகிய செய்பவனது பெயர் கொண்டன.

### வினையெச்சம்:

செய்து வந்தான்,

செய்து நல்லன் ஆயினான்

என வினை எச்சங்கள் தம் எச்சமாகிய வினைமுற்றும் குறிப்பு முற்றும் கொண்டன.

### உம்மை எச்சம்:

சாத்தனும் வந்தான் என்னும் உம்மை எச்சம் முன்னே கொற்றன் வந்தான்எனத் தன்எச்சம் கொண்டது.

குறிப்பு

## சொல்லெச்சம்:

நல்லவன் என்றான் என்னும் சொல் எச்சம் நல்லவன் என்று சொன்னான் எனச் சொல் என்னும் தன் எச்சம் கொண்டது.

## பிரிநிலை எச்சம்:

சாத்தனே கொண்டான், சாத்தனோ கொண்டான் என்பன பிரிநிலை எச்சம். இவை பிறர் கொண்டிலர் எனத் தம் எச்சம் கொண்டன. கோடல் தொழிலால் சாத்தனினின்றும் பிரிக்கப்பட்டார் பிறர் ஆதலின் பிரிநிலை என்க.

## என எச்சம்:

கடல் ஒல்லென ஒலித்தது, நரம்பு விண்ணென இசைத்தது, தலைஇடியென இடித்தது என்பன என எச்சம். இவை தம் எச்சமாகிய வினை கொண்டன. மிகவும் ஒலித்தது.மிகவும் இசைத்தது மிகவும் இடித்தது என்பன இவற்றிற்குப் பொருளாம் ஆதலின், இவ் என எச்சம் மிகுதிப் பொருளைத் தருவதோர் இடைச்சொல்லாம் என்க.

## ஒழியிசை எச்சம்:

கூரியதோர் வாள்மன், உண்ணுதற்கோ வந்தான் என்பன ஒழிஇசைஎச்சம்- இவை, முறையே கோடிற்று, கலகஞ்செய்ய வந்தான் எனத் தம் எச்சம் கொண்டன.

## எதிர்மறை எச்சம்:

'மறப்பினும்ஓத்துக் கொளலாகும்,''யானோ செய்தேன்' என்பன எதிர்மறை எச்சங்கள், இவை முறையே, மறக்கலாகாது, யான் செய்திலேன் எனத் தம் எச்சம் கொண்டன.

## இசை எச்சம்:

"இசை எச்சமாவது வாக்கியங்களில் அவ் அவ்இடத்திற்கு ஏற்ப ஒரு சொல்லும் பல சொல்லுமாக வருவித்து உரைக்கப்பட்டு வருவதாம். இசையென்பது சொல். 'கற்றதனா லாய பயனென்' என்றவழி, நூலைக் கற்றதனால் என ஒரு சொல்லும்,"அந்தா மரையன்னமே நின்னை யானகன் றாற்றுவனோ" என்றவழி, என் உயிரினும் சிறந்த நின்னை எனப் பல சொற்களும் வருவிக்கப்படுதல் காண்க.

## குறிப்பெச்சம்:

குறிப்பெச்சமாவது பெயரியலிலே பன்னிரண்டாம் நூற்பாவில் "ஒன்றொழி பொதுச்சொல்" என்பது முதலாக 'இன்ன பிறவும்' என்றது வரைக்கும் சொல்லப்பட்டவைகளாம். ஆயிரம் மக்கள் பொருதார் என்பதில், மக்கள்

என்னும் பொதுச்சொல் பொருதார் என்னும் குறிப்பின்வழி, பெண்பாலை நீக்கி ஆண்பாலை உணர்த்திற்று.

குறிப்பு

## தொகைநிலைத் தொடர்மொழி:

பெயரொடு பெயரும் வினையும் வேற்றுமை

முதலிய பொருளின் அவற்றின் உருபிடை

ஒழிய இரண்டு முதலாத் தொடர்ந்தொரு

மொழி போல் நடப்பன தொகைநிலைத் தொடர்ச்சொல்

பெயர்ச் சொல்லோடு பெயர்ச் சொல்லும், பெயர்ச் சொல்லோடு வினைச்சொல்லும், வேற்றுமை முதலாகிய அறுவகைப் பொருள் புணர்ச்சிக்கண், அவற்றின் உருபுகள் நடுவிலே தொக்கு நிற்ப,இரண்டு சொற்கள் முதலாகப் பலசொற்கள் தொடர்ந்து ஒருசொல்போல நடப்பவை,தொகைநிலைத் தொடர் மொழிகளாகும்.

## தொகைநிலைத் தொடர்ப் பாகுபாடு:

**தொகை என்பது இங்கே உருபு மறைதல்.**

வேற்றுமை வினை பண்பு உவமை உம்மை

அன்மொழி என அத் தொகை ஆறு ஆகும்

வேற்றுமைத் தொகையும்; வினைத்தொகையும், பண்புத் தொகையும், உவமைத் தொகையும்,உம்மைத் தொகையும், அன்மொழித் தொகையும்என முன்னே சொல்லப்பட்ட தொகைநிலைத் தொடர்மொழிகள் ஆறு வகைப்படும்.

## வேற்றுமைத் தொகை:

இரண்டு முதலாம்இடை ஆறு உருபும்

வெளிப்படல் இல்லது வேற்றுமைத்தொகையே

எழுவாய்க்கும் விளிக்கும் இடையே நின்ற இரண்டாவது முதலிய ஆறு வேற்றுமை உருபுகளும், வெளிப்படல் இல்லது வேற்றுமைத் தொகை ஆகும்.

நிலங் கடந்தான்.- இரண்டாம் வேற்றுமைத்தொகை.

தலை வணங்கினான் - மூன்றாம் வேற்றுமைத்தொகை.

சாத்தன் மைந்தன் - நான்காம் வேற்றுமைத்தொகை.

ஊர் நீங்கினான்- ஐந்தாம் வேற்றுமைத்தொகை.

சாத்தன் கை - ஆறாம் வேற்றுமைத்தொகை.

குன்றக் கூகை -. ஏழாம் வேற்றுமைத்தொகை.

குறிப்பு

யானைக்கோட்டு நுனி குறைத்தான்- இது பன்மொழித் தொடர்.

இனி ஆறு உருபும் என்னும் முற்று உம்மையை எச்ச உம்மையாக்கிக், கைக்களிறு, பொற்குடம் என ஒரோ இடத்து உருபும் பொருளும் உடன் தொக்கனவும் வேற்றுமைத் தொகை எனக் கொள்க. அவை, விரியும் இடத்துக், கையை உடைய களிறு, பொன்னால் செய்த குடம் என விரியும்.

இனி ஆசிரியர் தொல்காப்பியனார் ஐயுங் கண்ணும் அல்லாப் பொருள்வயின் - மெய்யுருபு தொகா இறுதி யான" எனக் கூறுதலால், ஐஉருபும் கண்உருபும் அல்லாத நான்கு உருபும் இடையில் அன்றி இறுதியிலே தொகா எனவும், அவ் இரண்டு உருபும், நிலம் கடந்தான், கடந்தான் நிலம்; குன்றத்து இருந்தான், இருந்தான் குன்றத்து என இடையிலும் இறுதியிலும் தொகும் என்பதும் கொள்ளப்படும்.

வேற்றுமை உருபுகள் இடையிலே தொகும் என்றார் ஆயினும், அவை விரிந்து நிற்கும் இடத்து எப்பொருள்படுமோ அப்பொருள்படும் இடத்தே தொக்கு நிற்கப்பெறும். அப் பொருள்படா இடத்தே தொக்கு நிற்கப் பெறாவாம்

சாத்தனை அடித்தான் என ஐயுருபு விரிந்து நிற்கும் இடத்துச் செயப்படுபொருள் படுதல்போலச் சாத்தன் அடித்தான் என ஐஉருபு தொக்கு நிற்கும் இடத்து அப்பொருள் படாமையால் இங்கே ஐஉருபு தொக்கு நிற்கப் பெறாது என்றறிதல் வேண்டும்.

சாத்தனொடு வந்தான் என ஒடுஉருபு விரிந்து நிற்கும் இடத்து உடன் நிகழ்ச்சிப்பொருள் படுதல் போலச், சாத்தன் வந்தான் எனத் தொக்கு நிற்கும் இடத்து அப்பொருள் படாமையால் இங்கே ஒடுஉருபு தொக்கு நிற்கப்பெறாது என்றறிக.

### வினைத் தொகை:

காலம் கரந்த பெயரெச்சம் வினைத்தொகை

காலம் பற்றிப் புடைபெயரும் வினை உருபாகிய தம் இறுதிகள் தொக்க பெயர் எச்சவினைகள்,வினைத்தொகைகளாம். அதாவது வினைப்பகுதி தொகாது நிற்ப வினைப்பகுதியின் புடைப் பெயர்ச்சியைக் காட்டும் விகுதியும் காலம் காட்டும் இடைநிலை முதலியனவும் தொக்கும் வரும் என்பதாம்.

காலம் என்றது ஆகுபெயர். காலம்பற்றிப் புடைபெயர் வினை உருபுகள் தொகும் எனவே, முதனிலை மாத்திரம் தொகாது இருக்கும் என்பது பெற்றாம்.

**குறிப்பு**

நேற்றுக் கொல் களிறு முன் விடு கணை - இறந்தகால வினைத் தொகை

இன்று கொல் களிறு, இப்பொழுது விடு கணை - நிகழ்கால வினைத் தொகை

நாளைக் கொல் களிறு, பின் விடு கணை - எதிர்கால வினைத் தொகை

இவை, விரியும் இடத்துக், கொன்ற கொல்கின்ற, கொல்லும் எனவும், விட்ட, விடுகின்ற, விடும் எனவும் விரியும்.

கொல்களிறு விடுகணை என்றாற் போல்வன, முக்காலமும் பற்றி வரின் முக்கால வினைத்தொகை எனப்படும்.

வருபுனல், தருசுடர், நடந்திடுகுதிரை என வினைப் பகுதி விகாரப்பட்டும் வினைத்தொகை வரும்.

**பண்புத்தொகை:**

பண்பை விளக்கும் மொழி தொக்கனவும்

ஒரு பொருட்கு இரு பெயர் வந்தவும் குணத்தொகை

பண்போடு பண்பிற்கு உளதாகிய ஒற்றுமை நயத்தை விளக்குதற்கு வரும் ஆகிய என்னும் பண்பு உருபு தொக்கு நின்றவையும், ஒரு பொருளுக்குப் பொதுப்பெயரும் சிறப்புப்பெயரும் ஆகிய இருபெயர்கள் வந்தவையும் பண்புத்தொகைகளாம்.

குணத்தொகை என்றதனால், ஒருபொருளுக்கு வரும் அவ் இருபெயர் நடுவினும், ஆகிய என்னும் பண்பு உருபு தொக்குவரும் என்பது பெறப்பட்டது.

பண்பு எனப் பொதுப்படச் சொன்னதனால், வண்ணம், வடிவு, அளவு, சுவை முதலாயினவை எல்லாம் வரும் என்பதும் பெறப்படும்.

செந்தாமரை, கருங்குதிரை - வண்ணப் பண்புத் தொகை.

வட்டக்கல், சதுரப் பலகை - வடிவுப் பண்புத் தொகை.

ஒரு பொருள், முக் குணம் - அளவுப் பண்புத்தொகை.

துவர்க் காய், இன்சொல் - சுவைப் பண்புத்தொகை.

ஆயன் சாத்தன், சாரைப் பாம்பு - இருபெயர் ஒட்டுப்பண்புத் தொகை

செந்நிறக் குவளை, கரும்புருவச்சிலை - பன்மொழித் தொடர்.

இவை, விரியும் இடத்துச் செம்மையாகிய தாமரை, வட்டமாகிய கல், ஒன்றாகிய பொருள், துவர்ப்பாகிய காய், ஆயனாகிய சாத்தன், செம்மையாகிய நிறமாகிய குவளை என விரியும்.

குறிப்பு

## உவமைத்தொகை:

உவம உருபு இலது உவமத்தொகையே

வினை, பயன், மெய், உரு என்பவற்றைப் பற்றி வரும் உவம உருபுகள் தொக்க தொடர் மொழிகள் உவமத் தொகைகளாம்.

புலிக் கொற்றன், குருவி கூப்பிட்டான் - வினை உவமத் தொகை.

மழைக்கை, கற்பக வள்ளல் - பயன் உவமத்தொகை

துடியிடை, குரும்பை முலை - மெய் உவமத் தொகை

பொற் சுணங்கு, பவள வாய் - உரு உவமத் தொகை

மரகதக் கிளிமொழி, இருண் மழைக் கை - பன்மொழித்தொடர்

இவை, விரியும் இடத்துப் புலிபோலும் கொற்றன், மழைபோலும்கை, துடிபோலும் இடை, பொன் போலும் சுணங்கு, மரகதம் போலும் கிளிபோலும் மொழி என விரியும். செயப்படுபொருள் குறித்த இடத்துப், புலியைப்போலும் கொற்றன் என ஐ உருபும் உடன் விரியும்.

போல புரைய ஒப்ப உறழ

மான கடுப்ப இயைய ஏய்ப்ப

நேர நிகர அன்ன இன்ன

என்பவும் பிறவும் உவமத்து உருபே

இப்போல முதலாகிய செய என் எச்சம் பத்தும் அன்ன இன்ன என்னும் பெயரெச்சக் குறிப்பிரண்டும் இவை போல்வன பிறவும் உவம உருபுகளாம்.

பிற என்றதனால், போல், புரை என்றல் தொடக்கத்து வினையடியால் பிறத்தற்கு உரிய மற்றை வினையெச்ச விகற்பங்களும், பெயரெச்ச விகற்பங்களும், பொருவ, ஏற்ப, அனைய, இகல, எதிர, சிவண, மலைய முதலானவையும் கொள்க.

குறிப்பு

## உம்மைத்தொகை:

எண்ணல் எடுத்தல் முகத்தல் நீட்டல்

எனும் நான்கு அளவையுள் உம்இலது அத்தொகை

எண்ணல் அளவை, எடுத்தல் அளவை, முகத்தல் அளவை, நீட்டல் அளவை என்னும் நால்வகை அளவைகளால் பொருள்களைஅளக்கும் இடத்துத் தொடரும் அவ் அளவைப் பெயர்களுள் உம்மை ஆகிய உருபுதொக்கு நிற்பவை அவ் உம்மைத் தொகைகளாம்.

ஒன்றே கால், கபில பரணர் ------ எண்ணல் உம்மைத்தொகை.

கழஞ்சே கால், தொடியே க.ஃ.சு ------ எடுத்தல் உம்மைத்தொகை.

கலனே தூணி, நாழி ஆழாக்கு ------ முகத்தல் உம்மைத் தொகை.

சாணங்குலம், சாணரை ------ நீட்டல் உம்மைத்தொகை.

சேரசோழ பாண்டியர், புலி வில் கெண்டை ------ பன்மொழித்தொகை.

இவை, விரியும் இடத்து, ஒன்றுங்காலும், கழஞ்சுங்காலும், கலனுந்தூணியும், சாணும் அங்குலமும்,சேரனுஞ் சோழனும் பாண்டியனும் என விரியும்.

கபில பரணர்ப் பரவினான் என வரும்வழிக் கபிலனையும் பரணனையும் பரவினான் என வேற்றுமை உருபும் உடன் விரியுமே என்னும் வினா எழும்.இதற்கு, பரவினான் என்னும் வருமொழி நோக்கி வேற்றுமைத் தொகையாகவும், கபில பரணர் என்னும் நிலைமொழி இரண்டையும் நோக்கி உம்மைத் தொகையாகவும் கொள்ளப்படும் என்க என விளக்கம் தருவர் ஆறுமுக நாவலர்.

## அன்மொழித்தொகை:

ஐந்தொகை மொழி மேல் பிற தொகல் அன்மொழி

வேற்றுமைத்தொகை முதலிய ஐவகைத் தொகைநிலைத் தொடர் மொழிகளுக்கும் புறத்தே, அவை அல்லாத பிற மொழிகளாகிய உருபுகள் தொக்கு வருவன அன்மொழித் தொகைகளாம்.

பூங்குழல் என்பது இரண்டாம் வேற்றுமைத் தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை. இது பூவை உடைய குழலினை உடையாள் என விரியும்.

பொற்றொடி என்பது மூன்றாம் வேற்றுமைத் தொகைப்புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை. இது பொன்னால் ஆகிய தொடியினை உடையாள் என விரியும்.

குறிப்பு

கவி இலக்கணம் என்பது நான்காம் வேற்றுமைத் தொகைப்புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை. இது கவிக்கு இலக்கணம் சொல்லப்பட்ட நூல் என விரியும்.

பொற்றாலி என்பது ஐந்தாம் வேற்றுமைத் தொகைப்புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை இது பொன்னின் ஆகிய தாலியினை உடையாள் என விரியும்.

கிள்ளிகுடி என்பது ஆறாம் வேற்றுமைத் தொகைப்புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை இது கிள்ளியினது குடியிருக்கும் ஊர் என விரியும்.

கீழ்வயிற்றுக் கழலை என்பது ஏழாம் வேற்றுமைத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை. இது கீழ்வயிற்றின் கண் எழுந்த கழலைபோல்வான் என விரியும்.

தாழ்குழல் என்பது வினைத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை. இது தாழ்ந்த குழலினை உடையாள் என விரியும்.

கருங்குழல் என்பது பண்புத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை. இது கருமையாகிய குழலினை உடையாள் என விரியும்.

துடியிடை என்பது உவமத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை. இது துடிபோலும் இடையினை உடையாள் என விரியும்.

தகரஞாழல் என்பது உம்மைத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை. இது தகரமும் ஞாழலும் கலந்து உண்டாகிய சாந்து என விரியும்.

தகரஞாழன்முலை என்பது பன்மொழித் தொடர். இது தகரமும் ஞாழலும் கூடி உண்டாகிய சாந்தை அணிந்த முலையினையுடையாள் என விரியும்.

இனிப் பன்மொழித்தொடரில் அறுவகைத் தொகைகளும் கலந்து தொகுமாறு: - திகழ் செவ்வான் மதித் திருமுகப் பூங்குழல் என வரும். இவை, விரியும் இடத்துத், திகழ்ந்த செம்மையாகிய வானத்தின்கண் மதிபோலும் திருமுகத்தினையும் பூவை அணிந்த குழலினையும் உடையாள் என விரியும்.

## தொடர் மொழிகளுள் பொருள் சிறக்குமிடம்:

முன் மொழி பின் மொழி பல் மொழி புற மொழி

எனும் நான்கு இடத்தும் சிறக்கும் தொகைப் பொருள்

முன்மொழியும் பின்மொழியும்அனைத்து மொழியும் அனைத்து மொழிக்கும் புறத்து வருமொழியும், என்று சொல்லப்படும் இந்நான்கு இடங்களுள் ஒன்றிலே தொகைநிலைத் தொடர்ப்பொருள் சிறந்து நிற்கும்.

**குறிப்பு**

குடம் வனைந்தான்,

குழிசி வனைந்தான்,

வேங்கைப்பூ,

சண்பகப்பூ,

விரிபூ,

குவிபூ,

செந்தாமரை,

வெண்டாமரை,

வேற்கண்,

கயற்கண் என்பவைகளிலே, குடம் முதலிய முன்மொழிகள் இனம்விலக்கி நிற்றலால், அம்முன்மொழிகளில் பொருள் சிறந்தன.

நிலம் உழுதான்,

கண்ணிமை,

நீர்க்குவளை,

சுடுதீ,

செஞ்ஞாயிறு என்பவைகளிலே. நிலம் முதலிய முன் மொழிகள் இனமும் இனத்தை விலக்குதலும் இன்றி நிற்றலால், உழுதான் முதலிய பின்மொழிகளில் பொருள் சிறந்தன.

கபிலபரணர்,

சேரசோழபாண்டியர்,

புலிவிற் கெண்டை என்றல் தொடக்கத்து உம்மைத் தொகைகளிலே, அனைத்துமொழிகளிலும் பொருள் சிறந்தன.

பூங்குழல், என்னும் அன்மொழித்தொகையில் சொல்லுவோனுடைய கருத்து இவ்விரு மொழிப் பொருள் மேல் ஆகாது, இவ்விரு மொழியும் அல்லாத உடையாள் முதலிய புறமொழிப்பொருள் மேலது ஆதலால், அப் புறமொழிகளில் பொருள் சிறந்தன.

குறிப்பு

## இடத்தொகை பெயர்த்தொகை வேறுபாடு:

வல் ஒற்று வரினே இடத்தொகை ஆகும்

மெல் ஒற்று வரினே பெயர்த்தொகை ஆகும்

வல் ஒற்றானது இடையே வந்தால் இடத்தின் கண்ணே தொக்க தொகையாகும். மெல் ஒற்றானது இடையே வந்தால் பெயர்த்தொகை ஆகும்.

வடுகக்கண்ணன் - இது வடுகநாட்டில் பிறந்த கண்ணன் என விரியும். வடுகங்கண்ணன், இது வடுகனாகிய கண்ணன் என்றாயினும் வடுகனுக்கு மகனாகிய கண்ணன் என்றாயினும் விரியும்.

துளுவச்சாத்தன் இது துளுவநாட்டில் பிறந்த சாத்தன் என விரியும்.

துளுவஞ்சாத்தன் - இது துளுவனாகிய சாத்தன் என்றாயினும், துளுவனுக்கு மகனாகிய சாத்தன் என்றாயினும் விரியும்.

வல்லொற்று வரின் மெல்லொற்று வரின் என்றதனால், வல்லின முதன்மொழி வந்து புணர்ந்து இடத்தொகையும் பெயர்த்தொகையுமாய் ஐயுற நிற்கும்போது இக்குறியினாலே துணியப்படும் என்பதும், வடுகநாகன், வடுகவணிகன், வடுகவரசன் எனவரின் சொல்லுவான் குறிப்பால் அன்றி இவ்வாறு துணியப்படா என்பதும் தாமே போதரும் என்க.

உயர்திணை உம்மைத்தொகை பலர் ஈறே

உயர்திணை ஒருமையில் வரும் உம்மைத்தொகைகள் ஆனவை ரவ்வொற்றும் கள்ளும் ஆகிய பலர்பால் விகுதியை உடையனவேயாம்.

கபிலபரணர்,

கல்லாடமாமூலர்,

சேர சோழ பாண்டியர்,

தேவன் தேவிகள் என வரும். னகர ஈறு இடையே கெடுதல் "சில விகாரமா முயர்திணை" என்பதனாலும், இறுதிக்கண் கெடுதல் இதனுள்'பலரீறே' என்பதானாலும் கொள்க. பலரீறே என்னும் தேற்றத்தால், அஃறிணை ஒருமையில் வரும் உம்மைத்தொகைகளும் பொதுத்திணை ஒருமையில் வரும் உம்மைத் தொகைகளும் தத்தம் பன்மை ஈறாகவே வரல் வேண்டும் என்னும் நியதி இன்றி உண்மை இன்மைகள், உண்மை இன்மை, இராப்பகல்கள், இராப்பகல் எனவும், தந்தை தாயர் தந்தைதாய்கள், தந்தை தாய்சாத்தன் சாத்தியர், சாத்தன் சாத்திகள்,சாத்தன் சாத்தி எனவும் பன்மை ஈற்றாலும் இயல்பாய ஒருமை ஈற்றாலும் வரும் என்பதாயிற்று. இயல்பாகிய ஒருமை ஈற்றால் வந்தன

ஆயின் உம்மைத்தொகை ஆகாது. கபிலன் பரணன் இருவரும் வந்தார் என்றால் போலச் செவ் எண்ணாம் அன்றோ எனின், பல மொழிகளையும் திரட்டி ஒரு பிண்டமாகக் கூறிய போது உம்மைத்தொகையாகவும், பிளவுபடக் கூறிய போது செவ் எண்ணாகவும் கொள்ளப்படும் என்க.

குறிப்பு

## தொகைநிலைத் தொடர்கள் பலபொருள் படுதல்:

தொக்குழி மயங்குந இரண்டு முதல் ஏழ்

எல்லைப் பொருளின் மயங்கும் என்ப

வேற்றுமை உருபு முதலாகிய உருபுகள் தொக்கு நின்றவழிப் பொருள்களினாலே மயங்கும். வேற்றுமை முதலாகிய தொகைநிலைத் தொடர்மொழிகள்,இரண்டு முதல் ஏழாம் ஈறாகிய பொருள்களால் மயங்கும் என்று சொல்லுவர் புலவர்.

தெய்வவணக்கம் - தெய்வத்தை வணங்கும் வணக்கம். தெய்வத்துக்கு வணக்கம் என இருபொருள்களினாலே மயங்கியது.

தற்சேர்ந்தார் - தன்னைச் சேர்ந்தார், தன்னொடு சேர்ந்தார். தன்கண் சேர்ந்தார் என மூன்று பொருள்களினாலே மயங்கியது.

சொல்லிலக்கணம் - சொல்லினதிலக்கணம், சொற்கு இலக்கணம், சொல்லின்கண் இலக்கணம், சொல்லினது இலக்கணம் சொன்னநூல் என நான்கு பொருள்களினாலே மயங்கியது.

பொன்மணி - பொன்னாலாகிய மணி, பொன்னாகிய மணி, பொன்னின்கண் மணி, பொன்னொடு சேர்ந்த மணி, பொன்னும் மணியும் என ஐந்து பொருள்களினாலே மயங்கியது.

மரவேலி - மரத்தைக் காக்கும் வேலி,மரத்திற்கு வேலி, மரத்தினது வேலி, மரத்தின் புறத்து வேலி, மரத்தால் ஆகிய வேலி, மரமாகிய வேலி என ஆறு பொருள்களினாலே மயங்கியது

சொற்பொருள் - சொல்லால் அறியப்படும் பொருள், சொல்லினது பொருள், சொற்குப்பொருள், சொல்லின்கண் பொருள், சொல்லும் பொருளும், சொல்லாகிய பொருள், சொல்லானது பொருள் என ஏழு பொருள்களினாலே மயங்கியது.சொல்லானது பொருள் என்றது தொகாநிலைப் பொருளாகிய எழுவாய்த்தொடர்.

புலி கொல் யானை - பன்மொழித் தொடர், புலியைக் கொன்ற யானை, புலியானது கொன்ற யானை, புலியினாலே கொல்லப் பட்ட யானை என மூன்று பொருள்களினாலே மயங்கியது.

இவ்வாறு செம்பொருள் கொள்ளாது வலிந்து பொருள் கொள்ளப் புகின், ஏழ் எல்லை என்னும் வரையறையின் நில்லாது பலவாமாதலின், அது தொன்நெறி அன்று என்பது விளக்குதற்கு என்ப என்றார்.

குறிப்பு

## தொகாநிலைத் தொடர்மொழி:

முற்று ஈர் எச்சம் எழுவாய் விளிப் பொருள்

ஆறு உருபு இடை உரி அடுக்கு இவை தொகாநிலை

வினைமுற்றும் பெயரெச்சமும் வினையெச்சமும் எழுவாயும் விளியும் ஆகிய ஐவகைப் பொருள்களிலே பெயர் வினைகள் புணரும் புணர்ச்சியும், வேற்றுமைப் பொருள்களில் அவற்றின் உருபுகளாகிய இரண்டாவது முதலிய ஆறு உருபுகளும் இடையே விரிந்து நிற்கப் பெயர் வினைகள் புணரும் புணர்ச்சியும்,இடைச்சொல் புணர்ச்சியும் உரிச்சொல் புணர்ச்சியும்; ஒருசொல் அடுக்கி வரும் புணர்ச்சியும் ஆகிய; இவைஇவ் ஒன்பதும் தொகாநிலைத் தொடர்மொழிகளாம்.

உண்டான் சாத்தன்

குழையன் கொற்றன் - வினைமுற்றுத்தொடர்

உண்ட சாத்தன்

கரிய சாத்தன் - பெயரெச்சத் தொடர்.

உண்டுவந்தான்

உழுதன்றியுண்ணான் - வினையெச்சத்தொடர்.

சாத்தன் வந்தான் - எழுவாய்த்தொடர்.

சாத்தா வா - விளித்தொடர்.

குடத்தை வனைந்தான்

வாளால் வெட்டினான்

இரப்போர்க்கீந்தான்

மலையினிழிந்தான்

சாத்தனது கை

மலையின்கண் ஒளி -வேற்றுமைத் தொகாநிலைத் தொடர்.

மற்றொன்று - இடைச்சொல் தொடர்.

நனிபேதையே - உரிச்சொல் தொடர்.

குறிப்பு

பாம்பு பாம்பு. - அடுக்குத் தொடர்.

வேற்றுமைத் தொகை விரிந்த இடத்து வேற்றுமைத் தொகாநிலைத் தொடராம்.வேற்றுமை உருபும் பொருளும் உடன் தொக்கத்தொகை விரிந்த இடத்து, முன்னது வேற்றுமைத் தொகாநிலைத் தொடரும், பின்னது. பெயரெச்சத் தொகாநிலைத் தொடரும் ஆகும்.வினைத்தொகை விரிந்த இடத்துப் பெயரெச்சத் தொகாநிலைத் தொடராம்.பண்புத்தொகையும் உம்மைத்தொகையும் விரிந்த இடத்து இடைச்சொல் தொடராம்.உவமத்தொகை விரிந்த இடத்து, முன்னது இடைச்சொல் தொடரும்,பின்னது இடைச்சொல் அடியாகப் பிறந்த பெயரெச்ச வினையெச்சத் தொடருமாம்.அன்மொழித்தொகை விரிந்த இடத்து வேற்றுமைத் தொகாநிலைத்தொடர் முதல் ஏற்பனவாம்

**வழாநிலை வழுவமைதி**:

திணையே பால் இடம் பொழுது வினா இறை

மரபாம் ஏழும் மயங்கினாம் வழுவே

இருதிணையும் ஐம்பாலும் மூவிடமும் முக்காலமும் வினாவும் விடையும் பலவகை மரபுகளும் ஆகிய ஏழும், தத்தம் நெறி மயங்கின் வழுவாம்.

திணை முதலிய அனைத்தும் மரபாம் ஆயினும், இங்ஙனம் விதவாது ஒழிந்தனவற்றை மரபு எனக்கொள்க வென்பார், அதனை இறுதியிலே சொன்னார். மரபாவது தொன்றுதொட்டு வழங்கும் முறைமை ஆகும்.

அவன் வந்தது -திணை வழு.

அவன் வந்தாள் -பால் வழு.

யான் வந்தான்-இட வழு.

நாளை வந்தான் - கால வழு.

கறக்கின்ற எருமை பாலோ சினையோ?--வினா வழு.

கடம்பூர்க்கு வழியாது? எனின்இடம்பூணி என்னாவின்கன்றன்று என்பது - விடை வழு.

யானைமேய்ப்பானை இடையன் - ஆடுமேய்ப்பானைப் பாகன் என்பன - மரபு வழு

இவ்வாறே எழுவகை வழுக்களையும் உணரந்து வழக்கின் உள்ளும் செய்யுள் உள்ளும் அவை வாராமல் நீக்குக.

இடம்பூணி - இடப்பக்கத்தில் பூட்டப்பட்ட எருது.

குறிப்பு

### வினா விடைகள் வழுவாமல் காத்தல்:

ஐயம் திணை பால் அவ்வப் பொதுவினும்

மெய் தெரி பொருள் மேல் அன்மையும் விளம்புப

திணை ஐயத்தையும் பால் ஐயத்தையும் அவ்அவற்றின் பொதுச்சொல்லாலும் துணிந்த பொருள்மேல் அல்லாத தன்மையை வைத்தும் சொல்லுவர் புலவர்.

ஒரு பொருளைக் கண்ட இடத்துக் குற்றியோ மகனோ என்று திணையில் ஐயம் தோன்றிய போது, குற்றியோ மகனோ அவ்விடத்துத் தோன்றுகின்ற உரு எனப் பொதுச்சொல்லால் வினவ வேண்டும்.குற்றிக்கும் மகனுக்கும் உருப் பொதுப்பட நிற்றலால், உருப் பொதுச்சொல் ஆயிற்று, குற்றி - மரக்கட்டை.. இங்ஙனம் கூறாது, தோன்றா நின்றது, தோன்றா நின்றான் எனச் சிறப்புச் சொல்லால் கூறின் திணைவழுவும் வினாவழுவுமாம்.

ஆண்மகனோ பெண்மகளோ என உயர் திணையில் பால் ஐயம் தோன்றியபோது, ஆண்மகனோ பெண்மகளோ அங்கே தோன்றுகிறவர் எனப் பொதுச் சொல்லால் வினவல் வேண்டும். ஆண்பெண் இரண்டல்லது பலர் பாலென வேறொன்று இன்றி அவ்விரு பாற்கும் பொதுப்பட நிற்றலால் தோன்றுகிறவர் என்பது பொதுச்சொல் ஆயிற்று. இங்ஙனம் கூறாது, தோன்றுகிறவன். தோன்றுகிறவள் எனச் சிறப்புச் சொல்லால் கூறின் பால்வழுவும் வினாவழுவும் ஆம்.

ஒன்றோ பலவோ என அஃறிணையில் பால் ஐயம் தோன்றியபோது, ஒன்றோ பலவோ இச்செய் புக்க பெற்றம் எனப் பொதுச்சொல்லால் வினவுதல் வேண்டும். பெற்றம் என்பது பால்பகா அஃறிணைப் பெயராய் அத்திணை இருபாற்கும் பொதுப்பட நிற்றலால் பொதுச்சொல் ஆயிற்று,செய் - வயல், பெற்றம் என்பது பசுவும் காளையும். இங்ஙனம் கூறாது, புக்கது, புக்கன எனச் சிறப்புச் சொல்லால் கூறின் பால்வழுவும் வினாவழுவுமாம்.

விடை குற்றியோ மகனோ என்று ஐயுற்றபோது, துணிந்த பொருள் குற்றி எனின், மகன் அன்று எனவும், மகன் எனில் குற்றி அல்லன் எனவும், துணிந்த பொருள்மேல் மற்றொன்று அல்லாத தன்மையை வைத்துக் கூறுதல் வேண்டும்..

ஆண்மகனோ பெண்மகளோ என்று ஐயுற்ற போது, துணிந்த பொருள் ஆண்மகன் எனின் பெண் மகள் அல்லன் எனவும், பெண்மகள் எனின்,

ஆண்மகன் அல்லள் எனவும் துணிந்த பொருள்மேல் மற்றொன்று அல்லாத தன்மையை வைத்துக் கூறுதல் வேண்டும்

குறிப்பு

ஒன்றோ பலவோ என்று ஐயுற்றபோது, துணிந்த பொருள் ஒன்று எனின், பலஅன்று எனவும், பலஎனின், ஒன்று அல்ல எனவும் துணிந்த பொருள்மேல் மற்றொன்று அல்லாத தன்மையை வைத்துக் கூறல் வேண்டும்.

மகன் அன்று என்பதை மகனின் அன்று என ஐந்தாம் வேற்றுமைப் புணர்ச்சி என்பாரும் உளர். அதுபோல் வரும் நீயல்லன் என்பதும் அங்ஙனம் விரித்தல் கூடாமையால், அல்வழிப் புணர்ச்சியுள் எடுத்து விதந்த பதினான்கின் புறத்தாய் அடங்கும் என்க. ஒழிந்த ஐந்து உதாரணங்களும் அவ்வாறே ஆகும் என்க.

மகன் அல்லன் அவ்உருகுற்றி எனக் கூறின் சொல் பல்குதல் என்னும் விடைவழுவாம்.

## திணை வழுவமைதி:

உயர்திணை தொடர்ந்த பொருள் முதல் ஆறும்

அதனொடு சார்த்தின் அத்திணை முடிபின

உயர்திணை எழுவாயைத் தொடர்ந்த அஃறிணைப் பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில் என்ற ஆறும் அவ் உயர்திணையோடு சேர்த்து முடித்தால் அவ் உயர்திணை முடிபினைப் பெறும்.

தொடர்தலாவது அஃறிணைப் பொருளாதி ஆறும் உயர்திணைக்குக் கிழமைப் பொருள்களாய் நிற்றல். சார்த்தலாவது உயர்திணை எழுவாயின் பயனிலையோடு அஃறிணையெழுவாயையும் உடன் முடித்தல்.

நம்பி பொன் பெரியன்

நம்பி நாடு பெரியன்

நம்பி வாழ்நாள் பெரியன்

நம்பி மூக்குக் கூரியன்

நம்பி குடிமை நல்லன்

நம்பி நடை கடியன் -- இங்கே உயர்திணை எழுவாயின் பயனிலையோடு அஃறிணை எழுவாயும் முடிந்தது.

“சொற்றொறு மிற்றிதன் பெற்றி” என்பதனாலே. கிணறு நீரூறிற்று, மாடு கோடு கூரிது என அஃறிணையோடு சேர்ப்பின், அஃறிணை முடிபின ஆதலும் கொள்க.

சார்த்தின் எனவே, சார்த்தாவிடின், வழாநிலையாக, நம்பிக்குப் பொன் பெரிது, மூக்குக் கூரிது எனத் தம் முடிபு கொள்ளும்.

குறிப்பு

பொன் என்னும் அ∴றிணை எழுவாய், நம்பி என்னும் உயர்திணை எழுவாயினது பயனிலையாகிய பெரியன் என்னும் உயர்திணை வினையைக் கொண்டு முடிதலால் வழு ஆகித், தொடர்பு உண்டாயிருத்தல்பற்றிச் சார்த்தி முடித்தலால் வழு அமைதி ஆயிற்று.

### திணை, பால், மரபு வழுவமைதி:

திணை பால் பொருள் பல விரவின சிறப்பினும்

மிகவினும் இழிபினும் ஒரு முடிபினவே

திணைகளும் பால்களும் வெவ்வேறு வினைக்கு உரிய பல பொருள்களும் தத்தமில் கலந்து ஒருதொடராக வருவன ஆயின் அவை சிறப்பினாலும் மிகுதியினாலும் இழிவினாலும் ஒருமுடிபினவாகும்.

### திணை:

அங்கண் விசும்பி னகனிலாப் பாரிக்குந்

திங்களுஞ் சான்றோரு மொப்பர் மன் - திங்கண்

மறுவாற்றுஞ் சான்றோர்அ∴ தாற்றார் தெருமந்து.

தேய்வ ரொருமா சுறின்

- என்பதில், இருதிணையும் கலந்து, சிறப்பினால் ஒப்பர் என்னும் உயர்திணை முடிபைப் பெற்றன, சான்றோர் திங்கள்போல மறுத் தாங்க மாட்டாமை இங்கே சிறப்பு.

“பார்ப்பார் தவரே சுமந்தார் பிணிப்பட்டார்

மூத்தாரிளையார் பசுப்பெண்டி ரென்றிவர்கட்

காற்ற வழி விலங்கி னாரே பிறப்பிடைப்

போற்றி யெனப்படுவார்”

என்பதனில், இருதிணையும் கலந்து, மிகுதியால் “இவர்கள்” என்னும் உயர்திணை முடிபைப் பெற்றன. பசு என அ∴றிணைப்பொருள் ஒன்றே ஆகப் பார்ப்பார் முதலிய உயர்திணைப் பொருள் ஏழு ஆதல் இங்கே மிகுதி.

“மூர்க்கனு முதலையுங் கொண்டது விடா” என்புழி, இருதிணையும் கலந்து, இழிவினால் விடா என அ∴றிணைமுடிபைப் பெற்றன.

குறிப்பு

**பால்:**

நானும்என்சிந்தையு நாயகனுக் கெவ்விடத்தோந்

தானுந்தன் றையலுந் தாழ்சடையோ னாண்டிலனேல்...

வானுந் திசைகளு மாகடலு மாயபிரான்.

தேனுந்து சேவடிக்கே சென்றூதாய் கோத்தும்பீ" என்பதில், ஆண்பாலும் பெண்பாலும் கலந்து, சிறப்பினால் "ஆண்டிலன்" என ஆண்பால் முடிபைப் பெற்றன.பெண்ணினும் ஆண் உயர்ந்தமை இங்கே சிறப்பு.

"சொற்றொறு மிற்றிதன் பெற்றி" என்பதனாலே கலவாது எண்ணித், தோழனும் தானும் வந்தான். தோழியும் தானும் வந்தாள் என முடிதலும் கொள்க.

**மரபு:**

கறியுஞ் சோறும் உண்டான்; மாலையும் முடியும் கவித்தான் என்புழி, வேறுவினைப் பல்பொருள்கள் கலந்து, சிறப்பினால் 'உண்டான்''கவித்தான்' என ஒருபொருட்கு உரிய வினை முடிபைப் பெற்றன. உண்டல் என்னும் வினைக்கு உரிய சோறு தின்றல் என்னும் வினைக்கு உரிய கறியினும் தலைமை உடைமையும்,கவித்த என்னும் வினைக்கு உரிய முடி சூடுதல் என்னும் வினைக்கு உரிய மாலையினும் தலைமை உடைமையும் இங்கே சிறப்பு.

**பால் திணை வழுவமைதி**:

உவப்பினும் உயர்வினும் சிறப்பினும் செறலினும்

இழிப்பினும் பால் திணை இழுக்கினும் இயல்பே

மகிழ்ச்சியினாலும் மேன்மையினாலும், சிறப்பினாலும் கோபத்தினாலும் பழிப்பினாலும் பாலும் திணையும் வழுவி வரினும் இயல்பாம்.

**பால் வழுவமைதி:**

தன் புதல்வனை என்னம்மை வந்தாள் என்பது, உவப்பினால் ஆண்பால் பெண்பால் ஆயிற்று.

ஒருவனை 'அவர் வந்தார்' என்பது, உயர்வினால் ஒருமைப்பால் பன்மைப்பால் ஆயிற்று.

'தாதாய் மூவேழ் உலகுக்குந் தாயே' என்பது சிறப்பினால் ஆண்பால் பெண்பால் ஆயிற்று.

”எனைத்துணைய ராயினு மென்னாந் தினைத்துணையுந் தேரான் பிறனில் புகல்” என்பது, செறலினால் பன்மைப்பால் ஒருமைப்பால் ஆயிற்று.

குறிப்பு

பெண்வழிச் செல்வானை நோக்கி “இவன் பெண்” என்பது, இழிப்பினால் ஆண்பால் பெண்பால் ஆயிற்று.

## திணை வழுவமைதி:

ஓரு பசுவை“என்னம்மை வந்தாள்:” என்பது, உவப்பினால் அ.்.றிணை உயர்திணை ஆயிற்று.

“செந்தார்ப் பசுங்கிளியார் சென்றார்க்கோ ரின்னுரை தந்தாரேற் றந்தாரென் னின்னுயிர்” என்பது உயர்வினால் அ.்.றிணை உயர்திணை ஆயிற்று.

“தம்பொரு ளென்பதம் மக்கள்” என்பது சிறப்பினால் உயர்திணை அ.்.றிணை ஆயிற்று.

“ஏவவுஞ் செய்கலான் றான்றேரா னவ்வுயிர் -போஒ மளவுமோர் நோய்” என்பது செறலினால் உயர்திணை அ.்.றிணை ஆயிற்று.

நாமரனுடைமை என்பது இழிப்பினால் உயர்திணை அ.்.றிணை ஆயிற்று.

இனிச் “சொற்றொறு மிற்றிதன் பெற்றி” என்பதனாலே, புதல்வனை “அப்பன் வந்தான்” என்றும், புதல்வியை “அம்மை வந்தாள்” என்றும்,வழங்கும் மரபு வழுவமைதிகளும் கொள்க.

## பால் இட வழுவமைதி:

ஒருமையின் பன்மையும் பன்மையின் ஒருமையும்

ஓரிடம் பிற இடம் தழுவலும் உளவே

ஒருமைப்பாலில் பன்மைப்பால் சொல்லையும், பன்மைப்பாலில் ஒருமைப்பால் சொல்லையும் ஓரிடத்தில் பிற இடச் சொல்லையும் தழுவிக் கூறுதல்களும் உண்டு. இவை பால் இட வழுவமைதிகள் எனப்படும்.

## பால் :

வெயிலெல்லாம் மறைத்தது மேகம் - அ.்.றிணையிலே வெயில் என்னும் ஒருமைப்பாலின் எல்லாம் என்னும் பன்மைச்சொல் சேர்த்துச் சொல்லப்பட்டது.

“அ.்.தை தந்தை அண்ணல் யானை அடுபோர்ச் செழியர்”- உயர்திணையிலே தந்தை என்னும் ஒருமைப்பாலில் செழியர் என்னும் பன்மைச்சொல் சேர்த்துச் சொல்லப்பட்டது.

குறிப்பு

தந்தை என்னும் ஒருமையில் செழியர் எனப்பன்மை வந்தது வழு; தனித்தனி ஒவ்வொருவராகக் கூடிச் செழியர் என நின்ற பன்மையில், ஒவ்வொருவரும் தனித்தனி அ∴தைக்குத் தந்தை போல்வர் ஆதலால், வழு அமைதி ஆயிற்று.

இரண்டுகண்ணும் சிவந்தது - அ∴றிணையிலே இரண்டு என்னும் பன்மைப்பாலில் சிவந்தது என்னும் ஒருமைச்சொல் சேர்த்துச் சொல்லப்பட்டது.

புலையன் எறிந்த பூசற் றண்ணுமை - ஏவலிளையர் தாய் வயிறு கரிப்ப" - உயர்திணையிலே ஏவல் இளையர் என்னும் பன்மைப் பாலில் தாய் என்னும் ஒருமைச்சொல் சேர்த்துச் சொல்லப்பட்டது

சேனை முழுமையும் உள்ள இளையருக்குத் தாய் ஒருத்தி ஆதல் கூடாமையால், இங்கே தாயென ஒருமை வருதல் வழு; இச்சேனையிலே திரண்டு நின்ற இளையருள் ஒவ்வொருவருக்கும் தாய் எனத் தனித்தனி சென்று இயைதலால் வழுவமைதி ஆயிற்று.

**இடம்**:

சாத்தன் தாய் இவை செய்வலோ - யான் எனச் சொல்லல் வேண்டும் தன்மையிலே சாத்தன் தாய் எனப் படர்க்கைச் சொல் சேர்த்துச் சொல்லப்பட்டது. சாத்தன் தாயாகிய யான் என்பது

எம்பியை ஈங்குப் பெற்றே னென்னெனக் கரியதென்றான்" - தன்தம்பியை முன்னிலைப்படுத்து அவனையே நோக்கிக் கூறுதலால், நின்னை எனச் சொல்லல்வேண்டும். முன்னிலையிலே எம்பியை எனப் படர்க்கைச் சொல் சேர்த்துச் சொல்லப்பட்டது.

நீயோ அவனோ யாரிது செய்தார், யானோ அவனோ யாரிது செய்தார், நீயோ யானோ யாரிது செய்தார்; நீயோ அவனோ யானோ யாரிது செய்தார் என விரவி ஓரிடத்தில் பிற இடம் வருதலும் கொள்க.

**இடம் வழுவாமற் காத்தல்:**

தரல் வரல் கொடை செலல் சாரும் படர்க்கை

எழுவாய் இரண்டும் எஞ்சிய ஏற்கும்

தரல், வரல், கொடை, செலல் என்னும் இந்நான்கு சொற்களும் படர்க்கையில் வரும். இவற்றுள் முதலிலே நின்ற தரல், வரல் என்னும் இரண்டு சொற்களும் தன்மை முன்னிலைகளில்வரும்.

தரல், வரல், கொடை, செலல் என்பன அவ்வப் பகுதிகளை உணர்த்தி நின்றன. ஆதலால், அப்பகுதிகளால் பிறக்கும் வினைவிகற்பங்கள் அனைத்தும் கொள்க.

குறிப்பு

அவனுக்குத் தந்தான்;

அவனிடத்து வந்தான்;

அவனுக்குக் கொடுத்தான்;

அவனிடத்துச் சென்றான்

- படர்க்கையில் வந்தன.

எனக்குத் தந்தான்;

என்னிடத்து வந்தான்

தன்மையிடத்தில் வந்தன.

உனக்குத் தந்தான்;

உன்னிடத்து வந்தான்

- முன்னிலையில் வந்தன.

தரல், வரல் என்னும் இரண்டையும் தன்மை முன்னிலைக்கும் கூட்டினமையால் படர்க்கைக்கே சிறந்தன. கொடைசெலல் என்னும் இரண்டும் என்பதும், ஒழிந்த தரலும் வரலும் அத்துணைச் சிறப்பின அல்ல என்பதும் பெறப்படும்.

**காலம்:**

இறப்பு எதிர்வு நிகழ்வு எனக் காலம் மூன்றே

இறந்தகாலமும் எதிர்காலமும் நிகழ்காலமும் எனக் காலம் மூன்றாம்.

**கால வழுவமைதி:**

முக் காலத்தினும் ஒத்து இயல் பொருளை

செப்புவர் நிகழும் காலத் தானே

தந்தொழில் இடைவிடாமல் மூன்று காலங்களிலும் ஒரு தன்மையை உடையனவாய் நிகழும் பொருள்களை, நிகழ்காலத்தினால் சொல்லுவர் புலவர்.

மலைநிற்கின்றது

தெய்வம் இருக்கின்றது

கடவுள் அளிக்கின்றார்

குறிப்பு

என வரும். மலைக்கு நிற்றலும், தெய்வத்திற்கு இருத்தலும், கடவுட்கு அளித்தலும் முக்காலத்தினும் உள்ளன ஆதல் காண்க.

விரைவினும்மிகவினும் தெளிவினும் இயல்பினும்

பிறழவும் பெறூஉம் முக்காலமும் ஏற்புழி

விரைவினாலும், மிகுதியினாலும், தெளிவினாலும், இயல்பினாலும் மூன்று காலங்களும் பொருந்தும் இடத்து ஒன்று மற்றொன்றாகச் சொல்லப்படவும் பெறும்.

சோறு வேவாநிற்க அதனை உண்டுபோதற்கு இருப்பானை, விரைவில் உடன் கொண்டுபோக வேண்டிய மற்றொருவன் பார்த்து இன்னும் உண்டிலையோ என்றால், உண்டேன் உண்டேன் என்பான், உண்ணாநிற்பானை அவ்வாறு வினாவினாலும், “உண்டேன் உண்டேன்” என்பான். இங்கே விரைவுபற்றி எதிர்காலமும் நிகழ்காலமும் இறந்தகாலமாகச் சொல்லப்பட்டன.

அக்காட்டில் புகின் கூறை பறிகொடுத்தான், களவு செய்ய நினையின் கை அறுப்புண்டான் என்றவழி, மிகுதிபற்றி எதிர்காலம் இறந்தகாலமாகச் சொல்லப்பட்டது. கூறை பறிகொடுத்தலும் கை அறுப்புண்ணுதலும் தவறினும் தவறும் ஆதலால் மிகுதி எனப்பட்டன.

அறம் செயின் சுவர்க்கம் புக்கான், எறும்பு முட்டை கொண்டு திட்டை ஏறின் மழை பெய்தது என்றவழித், தெளிவினால் எதிர்காலம் இறந்தகாலமாகச் சொல்லப்பட்டது. சுவர்க்கம் புகுதற்கு அறம் செய்தல் காரணம் என்பது உரை அளவையினாலும், மழைபெய்தற்கு எறும்பு முட்டை எடுத்து மேட்டில் ஏறுதல் காரணம் என்பது காட்சி அளவையினாலும் தெளியப்பட்டமையினாலே, தெளிவாயின.

யாம் பண்டு விளையாடுவது இச்சோலை; யாம்பண்டு விளையாடுகிறது இச்சோலை என்ற வழிக், காரணம் இன்றி இயல்பினால் இறந்தகாலம் எதிர்காலமும் நிகழ்காலமும் ஆகச் சொல்லப்பட்டது.

### பயிற்சி வினாக்கள்:

1.பத்துவகை எச்சங்கள் குறித்து எழுதுக.

எச்சங்களின் முடிவு:

பெயர் வினை உம்மை சொல் பிரிப்பு என ஒழியிசை

எதிர்மறை இசை எனும் சொல் ஒழிபு ஒன்பதும்

குறிப்பும் தத்தம் எச்சம் கொள்ளும்

பெயர் எச்சமும், வினை எச்சமும், உம்மை எச்சமும், சொல் எச்சமும், பிரிநிலை எச்சமும், என எச்சமும், ஒழி இசை எச்சமும், எதிர்மறை எச்சமும் இசை எச்சமும், என்னும் சொல் எச்சங்கள் ஒன்பதும் குறிப்பு எச்சம் ஒன்றும் தத்தம் எச்சங்களைக் கொண்டு முடியும்.

**குறிப்பு**

எச்சங்கள் சொல் எச்சம் குறிப்பு எச்சம் என இருவகைப்படும் இப்பத்து எச்சங்கள் உள்ளும், பெயரெச்சம் வினையெச்சம் என எச்சம் என்னும் மூன்றற்கும் எச்சச்சொற்கள் வாக்கியங்களில் வெளிப்பட்டு நிற்கும். ஒழிந்தனவற்றிற்கு எச்சச்சொற்கள் வருவித்து உரைக்கப்படும்.

பெயரெச்சம்:

செய்த சாத்தன்,

நல்ல சாத்தன்

எனப் பெயர் எச்சங்கள் தம் எச்சமாகிய செய்பவனது பெயர் கொண்டன.

வினையெச்சம்:

செய்து வந்தான்,

செய்து நல்லன் ஆயினான்

என வினை எச்சங்கள் தம எச்சமாகிய வினைமுற்றும் குறிப்பு முற்றும் கொண்டன.

உம்மை எச்சம்:

சாத்தனும் வந்தான் என்னும் உம்மை எச்சம் முன்னே கொற்றன் வந்தான்எனத் தன்எச்சம் கொண்டது.

சொல்லெச்சம்:

நல்லவன் என்றான் என்னும் சொல் எச்சம் நல்லவன் என்று சொன்னான் எனச் சொல் என்னும் தன் எச்சம் கொண்டது.

பிரிநிலை எச்**சம்:**

சாத்தனே கொண்டான், சாத்தனோ கொண்டான் என்பன பிரிநிலை எச்சம். இவை பிறர் கொண்டிலர் எனத் தம எச்சம் கொண்டன. கோடல் தொழிலால் சாத்தனினின்றும் பிரிக்கப்பட்டார் பிறர் ஆதலின் பிரிநிலை என்க.

குறிப்பு

என எச்சம்:

கடல் ஒல்லென ஒலித்தது, நரம்பு விண்ணென இசைத்தது, தலைஇடியென இடித்தது என்பன என எச்சம். இவை தம் எச்சமாகிய வினை கொண்டன. மிகவும் ஒலித்தது,மிகவும் இசைத்தது மிகவும் இடித்தது என்பன இவற்றிற்குப் பொருளாம் ஆதலின், இவ் என எச்சம் மிகுதிப் பொருளைத் தருவதோர் இடைச்சொல்லாம் என்க.

ஒழியிசை எச்சம்:

கூரியதோர் வாள்மன், உண்ணுதற்கோ வந்தான் என்பன ஒழிஇசைஎச்சம்- இவை, முறையே கோடிற்று, கலகஞ்செய்ய வந்தான் எனத் தம் எச்சம் கொண்டன.

எதிர்மறை எச்சம்:

'மறப்பினும்ஓத்துக் கொளலாகும்,''யானோ செய்தேன்' என்பன எதிர்மறை எச்சங்கள், இவை முறையே, மறக்கலாகாது", யான் செய்திலேன் எனத் தம் எச்சம் கொண்டன.

இசை எச்சம்:

இசை எச்சமாவது வாக்கியங்களில் அவ் அவ்இடத்திற்கு ஏற்ப ஒரு சொல்லும் பல சொல்லுமாக வருவித்து உரைக்கப்பட்டு வருவதாம். இசையென்பது சொல். 'கற்றதனா லாய பயனென்' என்றவழி, நூலைக் கற்றதனால் என ஒரு சொல்லும், "அந்தா மரையன்னமே நின்னை யானகன் றாற்றுவனோ" என்றவழி, என் உயிரினும் சிறந்த நின்னை எனப் பல சொற்களும் வருவிக்கப்படுதல் காண்க.

குறிப்பெச்சம்:

குறிப்பெச்சமாவது பெயரியலிலே பன்னிரண்டாம் நூற்பாவில் "ஒன்றொழி பொதுச்சொல்" என்பது முதலாக 'இன்ன பிறவும்' என்றது வரைக்கும் சொல்லப்பட்டவைகளாம். ஆயிரம் மக்கள் பொருதார் என்பதில், மக்கள் என்னும் பொதுச்சொல் பொருதார் என்னும் குறிப்பின்வழி, பெண்பாலை நீக்கி ஆண்பாலை உணர்த்திற்று.

2.தொகைநிலைத் தொடர்மொழி பற்றி விளக்குக.

தொகைநிலைத் தொடர்மொழி:

பெயரொடு பெயரும் வினையும் வேற்றுமை

முதலிய பொருளின் அவற்றின் உருபிடை

ஒழிய இரண்டு முதலாத் தொடர்ந்தொரு

மொழி போல் நடப்பன தொகைநிலைத் தொடர்ச்சொல்

குறிப்பு

பெயர்ச் சொல்லோடு பெயர்ச் சொல்லும், பெயர்ச் சொல்லோடு வினைச்சொல்லும், வேற்றுமை முதலாகிய அறுவகைப் பொருள் புணர்ச்சிக்கண், அவற்றின் உருபுகள் நடுவிலே தொக்கு நிற்ப,இரண்டு சொற்கள் முதலாகப் பலசொற்கள் தொடர்ந்து ஒருசொல்போல நடப்பவை,தொகைநிலைத் தொடர் மொழிகளாகும்.

தொகை என்பது இங்கே உருபு மறைதல்.

தொகைநிலைத் தொடர்ப் பாகுபாடு:

வேற்றுமை வினை பண்பு உவமை உம்மை

அன்மொழி என அத் தொகை ஆறு ஆகும்

வேற்றுமைத் தொகையும்; வினைத்தொகையும், பண்புத் தொகையும், உவமைத் தொகையும்,,உம்மைத் தொகையும், அன்மொழித் தொகையும்என முன்னே சொல்லப்பட்ட தொகைநிலைத் தொடர்மொழிகள் ஆறு வகைப்படும்.

வேற்றுமைத் தொகை:

இரண்டு முதலாம்இடை ஆறு உருபும்

வெளிப்படல் இல்லது வேற்றுமைத்தொகையே

எழுவாய்க்கும் விளிக்கும் இடையே நின்ற இரண்டாவது முதலிய ஆறு வேற்றுமை உருபுகளும், வெளிப்படல் இல்லது வேற்றுமைத் தொகை ஆகும்.

நிலங் கடந்தான்.- இரண்டாம் வேற்றுமைத்தொகை.

தலை வணங்கினான் - மூன்றாம் வேற்றுமைத்தொகை.

சாத்தன் மைந்தன் - நாலாம் வேற்றுமைத்தொகை.

ஊர் நீங்கினான்- ஐந்தாம் வேற்றுமைத்தொகை.

சாத்தன் கை - ஆறாம் வேற்றுமைத்தொகை .

குன்றக் கூகை -. ஏழாம் வேற்றுமைத்தொகை.

யானைக்கோட்டு நுனி குறைத்தான்- இது பன்மொழித் தொடர்.

இனி ஆறு உருபும் என்னும் முற்று உம்மையை எச்ச உம்மையாக்கிக், கைக்களிறு, பொற்குடம் என ஒரோ இடத்து உருபும் பொருளும் உடன்

தொக்கனவும் வேற்றுமைத் தொகை எனக் கொள்க. அவை, விரியும் இடத்துக், கையை உடைய களிறு, பொன்னால் செய்த குடம் என விரியும்.

**குறிப்பு**

இனி ஆசிரியர் தொல்காப்பியனார் :ஐயுங் கண்ணும் அல்லாப் பொருள்வயின் - மெய்யுருபு தொகா இறுதி யான" எனக் கூறுதலால், ஐஉருபும் கண்உருபும் அல்லாத நான்கு உருபும் இடையில் அன்றி இறுதியிலே தொகா எனவும், அவ் இரண்டு உருபும், நிலம் கடந்தான், கடந்தான் நிலம்; குன்றத்து இருந்தான், இருந்தான் குன்றத்து என இடையிலும் இறுதியிலும் தொகும் என்பதும் கொள்ளப்படும்.

வேற்றுமை உருபுகள் இடையிலே தொகும் என்றார் ஆயினும், அவை விரிந்து நிற்கும் இடத்து எப்பொருள்படுமோ அப்பொருள்படும் இடத்தே தொக்கு நிற்கப்பெறும். அப் பொருள்படா இடத்தே தொக்கு நிற்கப் பெறாவாம்

சாத்தனை அடித்தான் என ஐயுருபு விரிந்து நிற்கும் இடத்துச் செயப்படுபொருள் படுதல்போலச் சாத்தன் அடித்தான் என ஐஉருபு தொக்கு நிற்கும் இடத்து அப்பொருள் படாமையால் இங்கே ஐஉருபு தொக்கு நிற்கப் பெறாது என்றறிதல் வேண்டும்.

சாத்தனொடு வந்தான் என ஒடுஉருபு விரிந்து நிற்கும் இடத்து உடன் நிகழ்ச்சிப்பொருள் படுதல் போலச், சாத்தன் வந்தான் எனத் தொக்கு நிற்கும் இடத்து அப்பொருள் படாமையால் இங்கே ஒடுஉருபு தொக்கு நிற்கப்பெறாது என்றறிக.

வினைத் தொகை:

காலம் கரந்த பெயரெச்சம் வினைத்தொகை

காலம் பற்றிப் புடைபெயரும் வினை உருபாகிய தம் இறுதிகள் தொக்க பெயர் எச்சவினைகள் ,வினைத்தொகைகளாம். அதாவது வினைப்பகுதி தொகாது நிற்ப வினைப்பகுதியின் புடைப் பெயர்ச்சியைக் காட்டும் விகுதியும் காலம் காட்டும் இடைநிலை முதலியனவும் தொக்கும் வரும் என்பதாம்.

காலம் என்றது ஆகுபெயர். காலம்பற்றிப் புடைபெயர் வினை உருபுகள் தொகும் எனவே, முதனிலை மாத்திரம் தொகாது இருக்கும் என்பது பெற்றாம்.

நேற்றுக் கொல் களிறு முன் விடு கணை - இறந்தகால வினைத் தொகை

இன்று கொல் களிறு, இப்பொழுது விடு கணை - நிகழ்கால வினைத் தொகை

நாளைக் கொல் களிறு, பின் விடு கணை - எதிர்கால வினைத் தொகை

இவை, விரியும் இடத்துக், கொன்ற கொல்கின்ற, கொல்லும் எனவும், விட்ட, விடுகின்ற, விடும் எனவும் விரியும்.

குறிப்பு

கொல்களிறு விடுகணை என்றாற் போல்வன, முக்காலமும் பற்றி வரின் முக்கால வினைத்தொகை எனப்படும்.

வருபுனல், தருசுடர், நடந்திடுகுதிரை என வினைப் பகுதி விகாரப்பட்டும் வினைத்தொகை வரும்.

பண்புத்தொகை:

பண்பை விளக்கும் மொழி தொக்கனவும்

ஒரு பொருட்கு இரு பெயர் வந்தவும் குணத்தொகை

பண்போடு பண்பிற்கு உளதாகிய ஒற்றுமை நயத்தை விளக்குதற்கு வரும் ஆகிய என்னும் பண்பு உருபு தொக்கு நின்றவையும், ஒரு பொருளுக்குப் பொதுப்பெயரும் சிறப்புப்பெயரும் ஆகிய இருபெயர்கள் வந்தவையும் பண்புத்தொகைகளாம்.

குணத்தொகை என்றதனால், ஒருபொருளுக்கு வரும் அவ் இருபெயர் நடுவினும், ஆகிய என்னும் பண்பு உருபு தொக்குவரும் என்பது பெறப்பட்டது.

பண்பு எனப் பொதுப்படச் சொன்னதனால், வண்ணம், வடிவு, அளவு, சுவை முதலாயினவை எல்லாம் வரும் என்பதும் பெறப்படும்.

செந்தாமரை, கருங்குதிரை - வண்ணப் பண்புத் தொகை.

வட்டக்கல், சதுரப் பலகை - வடிவுப் பண்புத் தொகை.

ஒரு பொருள், முக் குணம் - அளவுப் பண்புத்தொகை.

துவர்க் காய், இன்சொல் - சுவைப் பண்புத்தொகை.

ஆயன் சாத்தன், சாரைப் பாம்பு - இருபெயர் ஒட்டுப்பண்புத் தொகை

செந்நிறக் குவளை, கரும்புருவச்சிலை - பன்மொழித் தொடர்.

இவை, விரியும் இடத்துச் செம்மையாகிய தாமரை, வட்டமாகிய கல், ஒன்றாகிய பொருள், துவர்ப்பாகிய காய், ஆயனாகிய சாத்தன், செம்மையாகிய நிறமாகிய குவளை என விரியும்.

உவமைத்தொகை:

உவம உருபு இலது உவமத்தொகையே

குறிப்பு

வினை, பயன், மெய், உரு என்பவற்றைப் பற்றி வரும் உவம உருபுகள் தொக்க தொடர் மொழிகள் உவமத் தொகைகளாம்.

புலிக் கொற்றன், குருவி கூப்பிட்டான் - வினை உவமத் தொகை.

மழைக்கை, கற்பக வள்ளல் - பயன் உவமத்தொகை

துடியிடை, குரும்பை முலை - மெய் உவமத் தொகை

பொற் சுணங்கு, பவள வாய் - உரு உவமத் தொகை

மரகதக் கிளிமொழி, இருண் மழைக் கை - பன்மொழித்தொடர்

இவை, விரியும் இடத்துப் புலிபோலும் கொற்றன், மழைபோலும்கை, துடிபோலும் இடை, பொன் போலும் சுணங்கு, மரகதம் போலும் கிளிபோலும் மொழி என விரியும். செயப்படுபொருள் குறித்த இடத்துப், புலியைப்போலும் கொற்றன் என ஐஉருபும் உடன் விரியும்.

போல புரைய ஒப்ப உறழ

மான கடுப்ப இயைய ஏய்ப்ப

நேர நிகர அன்ன இன்ன

என்பவும் பிறவும் உவமத்து உருபே

இப்போல முதலாகிய செய என் எச்சம் பத்தும் அன்ன இன்ன என்னும் பெரெச்சக் குறிப்பிரண்டும் இவை போல்வன பிறவும் உவம உருபுகளாம்.

பிற என்றதனால், போல், புரை என்றல் தொடக்கத்து வினையடியால் பிறத்தற்கு உரிய மற்றை வினையெச்ச விகற்பங்களும், பெயரெச்ச விகற்பங்களும், பொருவ, ஏற்ப, அனைய, இகல, எதிர, சிவண, மலைய முதலானவையும் கொள்க.

உம்மைத்தொகை:

எண்ணல் எடுத்தல் முகத்தல் நீட்டல்

எனும் நான்கு அளவையுள் உம்இலது அத்தொகை

எண்ணல் அளவை எடுத்தல் அளவை முகத்தல் அளவை நீட்டல் அளவை என்னும் நால்வகை அளவைகளால் பொருள்களைஅளக்கும் இடத்துத் தொடரும் அவ் அளவைப் பெயர்களுள் உம்மை ஆகிய உருபுதொக்கு நிற்பவை அவ் உம்மைத் தொகைகளாம்.

ஒன்றே கால், கபில பரணர் ------ எண்ணல் உம்மைத்தொகை.

கழஞ்சே கால், தொடியே கஃசு ------ எடுத்தல் உம்மைத்தொகை.

கலனே தூணி, நாழி ஆழாக்கு ------ முகத்தல் உம்மைத் தொகை.

குறிப்பு

சாணங்குலம், சாணரை ------ நீட்டல் உம்மைத்தொகை.

சேரசோழ பாண்டியர், புலி வில் கெண்டை ------ பன்மொழித்தொகை.

இவை, விரியும் இடத்து, ஒன்றுங்காலும், கழஞ்சுங்காலும், கலனுந்தூணியும், சாணும் அங்குலமும்,சேரனுஞ் சோழனும் பாண்டியனும் என விரியும்.

கபில பரணர்ப் பரவினான் என வரும்வழிக் கபிலனையும் பரணனையும் பரவினான் என வேற்றுமை உருபும் உடன் விரியுமே என்னும் வினா எழும்.இதற்கு பரவினான் என்னும் வருமொழி நோக்கி வேற்றுமைத் தொகையாகவும், கபில பரணர் என்னும் நிலைமொழி இரண்டையும்நோக்கி உம்மைத் தொகையாகவும் கொள்ளப்படும் என்க என விளக்கம் தருவர் ஆறுமுக நாவலர்.

அன்மொழித்தொகை:

ஐந்தொகை மொழி மேல் பிற தொகல் அன்மொழி

வேற்றுமைத்தொகை முதலிய ஐவகைத் தொகைநிலைத் தொடர் மொழிகளுக்கும் புறத்தே, அவை அல்லாத பிற மொழிகளாகிய உருபுகள் தொக்கு வருவன அன்மொழித் தொகைகளாம்.

பூங்குழல் என்பது இரண்டாம் வேற்றுமைத் தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை. இது பூவை உடைய குழலினை உடையாள் என விரியும்.

பொற்றொடி என்பது மூன்றாம் வேற்றுமைத் தொகைப்புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை. இது பொன்னால் ஆகிய தொடியினை உடையாள் என விரியும்.

கவி இலக்கணம் என்பது நான்காம் வேற்றுமைத் தொகைப்புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை. இது கவிக்கு இலக்கணம் சொல்லப்பட்ட நூல் என விரியும்.

பொற்றாலி என்பது ஐந்தாம் வேற்றுமைத் தொகைப்புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை இது பொன்னின் ஆகிய தாலியினை உடையாள் என விரியும்.

கிள்ளிகுடி என்பது ஆறாம் வேற்றுமைத் தொகைப்புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை இது கிள்ளியினது குடியிருக்கும் ஊர் என விரியும்.

**குறிப்பு**

கீழ்வயிற்றுக் கழலை என்பது ஏழாம் வேற்றுமைத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை. இது கீழ்வயிற்றின் கண் எழுந்த கழலைபோல்வான் என விரியும்.

தாழ்குழல் என்பது வினைத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை. இது தாழ்ந்த குழலினை உடையாள் என விரியும்.

கருங்குழல் என்பது பண்புத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை. இது கருமையாகிய குழலினை உடையாள் என விரியும்.

துடியிடை என்பது உவமத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை. இது துடிபோலும் இடையினை உடையாள் என விரியும்.

.தகரஞாழல் என்பது உம்மைத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை. இது தகரமும் ஞாழலும் கலந்து உண்டாகிய சாந்து என விரியும்.

தகரஞாழன்முலை என்பது பன்மொழித் தொடர். இது தகரமும் ஞாழலும் கூடி உண்டாகிய சாந்தை அணிந்த முலையினையுடையாள் என விரியும்.

இனிப் பன்மொழித்தொடரில் அறுவகைத் தொகைகளும் கலந்து தொகுமாறு: - திகழ் செவ்வான் மதித் திருமுகப் பூங்குழல் என வரும். இவை, விரியும் இடத்துத், திகழ்ந்த செம்மையாகிய வானத்தின்கண் மதிபோலும் திருமுகத்தினையும் பூவை அணிந்த குழலினையும் உடையாள் என விரியும்.

3.தொகாநிலைத் தொடர்மொழியினை விவரி.

தொகாநிலைத் தொடர்மொழி:

முற்று ஈர் எச்சம் எழுவாய் விளிப் பொருள்

ஆறு உருபு இடை உரி அடுக்கு இவை தொகாநிலை

வினைமுற்றும் பெயரெச்சமும் வினையெச்சமும் எழுவாயும் விளியும் ஆகிய ஐவகைப் பொருள்களிலே பெயர் வினைகள் புணரும் புணர்ச்சியும், வேற்றுமைப் பொருள்களில் அவற்றின் உருபுகளாகிய இரண்டாவது முதலிய ஆறு உருபுகளும் இடையே விரிந்து நிற்கப் பெயர் வினைகள் புணரும் புணர்ச்சியும் ,இடைச்சொல் புணர்ச்சியும்

உரிச்சொல் புணர்ச்சியும்; ஒருசொல் அடுக்கி வரும் புணர்ச்சியும் ஆகிய; இவைஇவ் ஒன்பதும் தொகாநிலைத் தொடர்மொழிகளாம்.

குறிப்பு

உண்டான் சாத்தன்

குழையன் கொற்றன - வினைமுற்றுத்தொடர்

உண்ட சாத்தன்

கரிய சாத்தன் - பெயரெச்சத் தொடர்.

உண்டுவந்தான்

உழுதன்றியுண்ணான் - வினையெச்சத்தொடர்.

சாத்தன் வந்தான்.- எழுவாய்த்தொடர்.

சாத்தா வா. - விளித்தொடர்.

குடத்தை வனைந்தான

வாளால் வெட்டினான்

இரப்போர்க்கீந்தான்

மலையினிழிந்தான்

சாத்தனது கை

மலையின்கண் ஒளி -வேற்றுமைத் தொகாநிலைத் தொடர்.

மற்றொன்று - இடைச்சொல் தொடர்.

நனிபேதையே - உரிச்சொல் தொடர்.

பாம்பு பாம்பு. - அடுக்குத் தொடர்.

வேற்றுமைத் தொகை விரிந்த இடத்து வேற்றுமைத் தொகாநிலைத் தொடராம்.வேற்றுமை உருபும் பொருளும் உடன் தொக்கத்தொகை விரிந்த இடத்து, முன்னது வேற்றுமைத் தொகாநிலைத் தொடரும், பின்னது. பெயரெச்சத் தொகாநிலைத் தொடரும் ஆகும்.வினைத்தொகை விரிந்த இடத்துப் பெயரெச்சத் தொகாநிலைத் தொடராம்.பண்புத்தொகையும் உம்மைத்தொகையும் விரிந்த இடத்து இடைச்சொல் தொடராம்.உவமத்தொகை விரிந்த இடத்து, முன்னது இடைச்சொல் தொடரும்,பின்னது இடைச்சொல் அடியாகப் பிறந்த பெயரெச்ச வினையெச்சத் தொடருமாம்.அன்மொழித்தொகை விரிந்த இடத்து வேற்றுமைத் தொகாநிலைத்தொடர் முதல் ஏற்பனவாம்

5.வழாநிலை, வழுவமைதி குறித்து எழுதுக.

குறிப்பு

வழாநிலை வழுவமைதி:

திணையே பால் இடம் பொழுது வினா இறை

மரபாம் ஏழும் மயங்கினாம் வழுவே

இருதிணையும் ஐம்பாலும் மூவிடமும் முக்காலமும் வினாவும் விடையும் பலவகை மரபுகளும் ஆகிய ஏழும், தத்தம் நெறி மயங்கின் வழுவாம்.

திணை முதலிய அனைத்தும் மரபாம் ஆயினும், இங்ஙனம் விதவாது ஒழிந்தனவற்றை மரபு எனக்கொள்க வென்பார், அதனை இறுதியிலே சொன்னார். மரபாவது தொன்றுதொட்டு வழங்கும் முறைமை ஆகும்.

அவன் வந்தது..-.திணை வழு.

அவன் வந்தாள்.-.பால் வழு.

யான் வந்தான்-இட வழு.

நாளை வந்தான்- கால வழு.

கறக்கின்ற எருமை பாலோ சினையோ?--.வினா வழு.

கடம்பூர்க்கு வழியாது? எனின் இடம்பூணி என்னாவின்கன்றன்று என்பது - .விடை வழு.

யானைமேய்ப்பானை இடையன் - ஆடுமேய்ப்பானைப் பாகன் என்பன - மரபு வழு

இவ்வாறே எழுவகை வழுக்களையும் உணரந்து வழக்கின் உள்ளும் செய்யுள் உள்ளும் அவை வாராமல் நீக்குக.

இடம்பூணி - இடப்பக்கத்தில் பூட்டப்பட்ட எருது.

வினா விடைகள் வழுவாமல் காத்தல்:

ஐயம் திணை பால் அவ்வப் பொதுவினும்

மெய் தெரி பொருள் மேல் அன்மையும் விளம்புப

திணை ஐயத்தையும் பால் ஐயத்தையும் அவ்அவற்றின் பொதுச்சொல்லாலும் துணிந்த பொருள்மேல் அல்லாத தன்மையை வைத்தும் சொல்லுவர் புலவர்.

ஒரு பொருளைக் கண்ட இடத்துக் குற்றியோ மகனோ என்று திணையில் ஐயம் தோன்றிய போது, குற்றியோ மகனோ அவ்விடத்துத் தோன்றுகின்ற உரு எனப் பொதுச்சொல்லால் வினவ வேண்டும்.குற்றிக்கும் மகனுக்கும்

உருப் பொதுப்பட நிற்றலால், உருப் பொதுச்சொல் ஆயிற்று, குற்றி - மரக்கட்டை. இங்ஙனம் கூறாது, தோன்றா நின்றது, தோன்றா நின்றான் எனச் சிறப்புச் சொல்லால் கூறின் திணைவழுவும் வினாவழுவுமாம்.

குறிப்பு

ஆண்மகனோ பெண்மகளோ என உயர் திணையில் பால் ஐயம் தோன்றியபோது, ஆண்மகனோ பெண்மகளோ அங்கே தோன்றுகிறவர் எனப் பொதுச் சொல்லால் வினவல் வேண்டும்.. ஆண்பெண் இரண்டல்லது பலர் பாலென வேறொன்று இன்றி அவ்விரு பாற்கும் பொதுப்பட நிற்றலால் தோன்றுகிறவர் என்பது பொதுச்சொல் ஆயிற்று. இங்ஙனம் கூறாது. தோன்றுகிறவன். தோன்றுகிறவள் எனச் சிறப்புச் சொல்லால் கூறின் பால்வழுவும் வினாவழுவும் ஆம்.

ஒன்றோ பலவோ என அ்ிறிணையில் பால் ஐயம் தோன்றியபோது, ஒன்றோ பலவோ இச்செய் புக்க பெற்றம் எனப் பொதுச்சொல்லால் வினவுதல் வேண்டும். பெற்றம் என்பது பால்பகா அ்ிறிணைப் பெயராய் அத்திணை இருபாற்கும் பொதுப்பட நிற்றலால் பொதுச்சொல் ஆயிற்று,செய் - வயல், பெற்றம் என்பது பசுவும் காளையும். இங்ஙனம் கூறாது, புக்கது, புக்கன எனச் சிறப்புச் சொல்லால் கூறின் பால்வழுவும் வினாவழுவுமாம்.

விடை குற்றியோ மகனோ என்று ஐயுற்றபோது, துணிந்த பொருள் குற்றி எனின், மகன் அன்று எனவும், மகன் எனில் குற்றி அல்லன் எனவும், துணிந்த பொருள்மேல் மற்றொன்று அல்லாத தன்மையை வைத்துக் கூறுதல் வேண்டும்..

ஆண்மகனோ பெண்மகளோ என்று ஐயுற்ற போது, துணிந்த பொருள் ஆண்மகன் எனின் பெண் மகள் அல்லன் எனவும், பெண்மகள் எனின், ஆண்மகன் அல்லள் எனவும் துணிந்த பொருள்மேல் மற்றொன்று அல்லாத தன்மையை வைத்துக் கூறுதல் வேண்டும்

ஒன்றோ பலவோ என்று ஐயுற்றபோது, துணிந்த பொருள் ஒன்று எனின், பலஅன்று எனவும், பலஎனின், ஒன்று அல்ல எனவும் துணிந்த பொருள்மேல் மற்றொன்று அல்லாத தன்மையை வைத்துக் கூறல் வேண்டும்.

மகன் அன்று என்பதை மகனின் அன்று என ஐந்தாம் வேற்றுமைப் புணர்ச்சி என்பாரும் உளர். அதுபோல் வரும் நீயல்லன் என்பதும் அங்ஙனம் விரித்தல் கூடாமையால், அவ்வழிப் புணர்ச்சியுள் எடுத்து விதந்த பதினான்கின் புறத்தாய் அடங்கும் என்க. ஒழிந்த ஐந்து உதாரணங்களும் அவ்வாறே ஆகும் என்க.

மகன் அல்லன் அவ்உருகுற்றி எனக் கூறின் சொல் பல்குதல் என்னும் விடைவழுவாம்.

குறிப்பு

திணை வழுவமைதி:

உயர்திணை தொடர்ந்த பொருள் முதல் ஆறும்

அதனொடு சார்த்தின் அத்திணை முடிபின

உயர்திணை எழுவாயைத் தொடர்ந்த அஃறிணைப் பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில் என்ற ஆறும் அவ் உயர்திணையோடு சேர்த்து முடித்தால் அவ் உயர்திணை முடிபினைப் பெறும்.

தொடர்தலாவது அஃறிணைப் பொருளாதி ஆறும் உயர்திணைக்குக் கிழமைப் பொருள்களாய் நிற்றல். சார்த்தலாவது உயர்திணை எழுவாயின் பயனிலையோடு அஃறிணையெழுவாயையும் உடன் முடித்தல்.

நம்பி பொன் பெரியன்

நம்பி நாடு பெரியன்

நம்பி வாழ்நாள் பெரியன்

நம்பி மூக்குக் கூரியன்

நம்பி குடிமை நல்லன்

நம்பி நடை கடியன் -- இங்கே உயர்திணை எழுவாயின் பயனிலையோடு அஃறிணை எழுவாயும் முடிந்தது.

“சொற்றொறு மிற்றிதன் பெற்றி” என்பதனாலே. கிணறு நீரூறிற்று, மாடு கோடு கூரிது என அஃறிணையோடு சேர்ப்பின், அஃறிணை முடிபின ஆதலும் கொள்க.

சார்த்தின் எனவே, சார்த்தாவிடின், வழாநிலையாக, நம்பிக்குப் பொன் பெரிது, மூக்குக் கூரிது எனத் தம் முடிபு கொள்ளும்.

பொன் என்னும் அஃறிணை எழுவாய், நம்பி என்னும் உயர்திணை எழுவாயினது பயனிலையாகிய பெரியன் என்னும் உயர்திணை வினையைக் கொண்டு முடிதலால் வழு ஆகித், தொடர்பு உண்டாயிருத்தல்பற்றிச் சார்த்தி முடித்தலால் வழு அமைதி ஆயிற்று.

திணை, பால், மரபு வழுவமைதி:

திணை பால் பொருள் பல விரவின சிறப்பினும்

மிகவினும் இழிபினும் ஒரு முடிபினவே

திணைகளும் பால்களும் வெவ்வேறு வினைக்கு உரிய பல பொருள்களும் தத்தமில் கலந்து ஒருதொடராக வருவன ஆயின் அவை சிறப்பினாலும் மிகுதியினாலும் இழிவினாலும் ஒருமுடிபினவாகும்.

குறிப்பு

திணை:

அங்கண் விசும்பி னகனிலாப் பாரிக்குந்

திங்களுஞ் சான்றோரு மொப்பர் மன் - திங்கண்

மறுவாற்றுஞ் சான்றோர.ஃ. தாற்றார் தெருமந்து.

தேய்வ ரொருமா சுறின்

- என்பதில், இருதிணையும் கலந்து, சிறப்பினால் ஒப்பர் என்னும் உயர்திணை முடிபைப் பெற்றன, சான்றோர் திங்கள்போல மறுத் தாங்க மாட்டாமை இங்கே சிறப்பு.

"பார்ப்பார் தவரே சுமந்தார் பிணிப்பட்டார்

மூத்தாரிளையார் பசுப்பெண்டி ரென்றிவர்கட்

காற்ற வழி விலங்கி னாரே பிறப்பிடைப்

போற்றி யெனப்படுவார்"

என்பதனில், இருதிணையும் கலந்து, மிகுதியால் "இவர்கள்" என்னும் உயர்திணை முடிபைப் பெற்றன. பசு என அ.ஃறிணைப்பொருள் ஒன்றே ஆகப் பார்ப்பார் முதலிய உயர்திணைப் பொருள் ஏழு ஆதல் இங்கே மிகுதி.

"மூர்க்கனு முதலையுங் கொண்டது விடா" என்புழி, இருதிணையும் கலந்து, இழிவினால் விடா என அ.ஃறிணைமுடிபைப் பெற்றன.

பால்:

நானும்என்சிந்தையு நாயகனுக் கெவ்விடத்தோந்

தானுந்தன் றையலுந் தாழ்சடையோ னாண்டிலனேல்...

வானுந் திசைகளு மாகடலு மாயபிரான்.

தேனுந்து சேவடிக்கே சென்றூதாய் கோத்தும்பீ" என்பதில், ஆண்பாலும் பெண்பாலும் கலந்து, சிறப்பினால் "ஆண்டிலன்" என ஆண்பால் முடிபைப் பெற்றன.பெண்ணினும் ஆண் உயர்ந்தமை இங்கே சிறப்பு.

"சொற்றொறு மிற்றிதன் பெற்றி" என்பதனாலே கலவாது எண்ணித், தோழனும் தானும் வந்தான். தோழியும் தானும் வந்தாள் என முடிதலும் கொள்க.

மரபு::

குறிப்பு

கறியுஞ் சோறும் உண்டான்; மாலையும் முடியும் கவித்தான் என்புழி, வேறுவினைப் பல்பொருள்கள் கலந்து, சிறப்பினால் 'உண்டான்''கவித்தான்' என ஒருபொருட்கு உரிய வினை முடிபைப் பெற்றன. உண்டல் என்னும் வினைக்கு உரிய சோறு தின்றல் என்னும் வினைக்கு உரிய கறியினும் தலைமை உடைமையும்,கவித்த என்னும் வினைக்கு உரிய முடி சூடுதல் என்னும் வினைக்கு உரிய மாலையினும் தலைமை உடைமையும் இங்கே சிறப்பு.

பால் திணை வழுவமைதி:

உவப்பினும் உயர்வினும் சிறப்பினும் செறலினும்
இழிப்பினும் பால் திணை இழுக்கினும் இயல்பே

மகிழ்ச்சியினாலும் மேன்மையினாலும், சிறப்பினாலும் கோபத்தினாலும் பழிப்பினாலும் பாலும் திணையும் வழுவி வரினும் இயல்பாம்.

பால் வழுவமைதி:

தன் புதல்வனை என்னம்மை வந்தாள் என்பது, உவப்பினால் ஆண்பால் பெண்பால் ஆயிற்று.

ஒருவனை 'அவர் வந்தார்' என்பது, உயர்வினால் ஒருமைப்பால் பன்மைப்பால் ஆயிற்று.

'தாதாய் மூவேழ் உலகுக்குந் தாயே' என்பது சிறப்பினால் ஆண்பால் பெண்பால் ஆயிற்று.

"எனைத்துணைய ராயினு மென்னாந் தினைத்துணையுந் தேரான் பிறனில் புகல்" என்பது, செறலினால் பன்மைப்பால் ஒருமைப்பால் ஆயிற்று.

பெண்வழிச் செல்வானை நோக்கி "இவன் பெண்" என்பது, இழிப்பினால் ஆண்பால் பெண்பால் ஆயிற்று.

திணை வழுவமைதி:

ஒரு பசுவை"என்னம்மை வந்தாள்:" என்பது, உவப்பினால் அ.ஃறிணை உயர்திணை ஆயிற்று.

"செந்தார்ப் பசுங்கிளியார் சென்றார்க்கோ ரின்னுரை தந்தாரேற் றந்தாரென் னின்னுயிர்" என்பது உயர்வினால் அ.ஃறிணை உயர்திணை ஆயிற்று.

"தம்பொரு ளென்பதம் மக்கள்" என்பது சிறப்பினால் உயர்திணை அ.ஃறிணை ஆயிற்று.

“ஏவவுஞ் செய்கலான் றான்றேரா னவ்வுயிர் -போஒ மளவுமோர் நோய்” என்பது செறலினால் உயர்திணை அ∴றிணை ஆயிற்று.

.நாமரனுடைமை என்பது இழிப்பினால் உயர்திணை அ∴றிணை ஆயிற்று.

குறிப்பு

இனிச் ” சொற்றொறு மிற்றிதன் பெற்றி ” என்பதனாலே, புதல்வனை “அப்பன் வந்தான்“ என்றும், புதல்வியை “அம்மை வந்தாள்” என்றும்,வழங்கும் மரபு வழுவமைதிகளும் கொள்க.

பால் இட வழுவமைதி:

ஒருமையின் பன்மையும் பன்மையின் ஒருமையும்

ஓரிடம் பிற இடம் தழுவலும் உளவே

ஒருமைப்பாலில் பன்மைப்பால் சொல்லையும், பன்மைப்பாலில் ஒருமைப்பால் சொல்லையும் ஓரிடத்தில் பிற இடச் சொல்லையும் தழுவிக் கூறுதல்களும் உண்டு. இவை பால் இட வழுவமைதிகள் எனப்படும்.

பால் :

. வெயிலெல்லாம் மறைத்தது மேகம் - அ∴றிணையிலே வெயில் என்னும் ஒருமைப்பாலின் எல்லாம் என்னும் பன்மைச்சொல் சேர்த்துச் சொல்லப்பட்டது.

“அ∴தை தந்தை அண்ணல் யானை அடுபோர்ச் செழியர்”- உயர்திணையிலே தந்தை என்னும் ஒருமைப்பாலில் செழியர் என்னும் பன்மைச்சொல் சேர்த்துச் சொல்லப்பட்டது.

தந்தை என்னும் ஒருமையில் செழியர் எனப்பன்மை வந்தது வழு; தனித்தனி ஒவ்வொருவராகக் கூடிச் செழியர் என நின்ற பன்மையில், ஒவ்வொருவரும் தனித்தனி அ∴தைக்குத் தந்தை போல்வர் ஆதலால், வழு அமைதி ஆயிற்று.

இரண்டுகண்ணும் சிவந்தது - அ∴றிணையிலே இரண்டு என்னும் பன்மைப்பாலில் சிவந்தது என்னும் ஒருமைச்சொல் சேர்த்துச் சொல்லப்பட்டது.

புலையன் எறிந்த பூசற் றண்ணுமை - ஏவலிளையர் தாய் வயிறு கரிப்ப” - உயர்திணையிலே ஏவல் இளையர் என்னும் பன்மைப் பாலில் தாய் என்னும் ஒருமைச்சொல் சேர்த்துச் சொல்லப்பட்டது

சேனை முழுமையும் உள்ள இளையருக்குத் தாய் ஒருத்தி ஆதல் கூடாமையால், இங்கே தாயென ஒருமை வருதல் வழு; இச்சேனையிலே

திரண்டு நின்ற இளையருள் ஒவ்வொருவருக்கும் தாய் எனத் தனித்தனி சென்று இயைதலால் வழுவமைதி ஆயிற்று.

இடம்:

குறிப்பு

சாத்தன் தாய் இவை செய்வலோ - யான் எனச் சொல்லல் வேண்டும் தன்மையிலே சாத்தன் தாய் எனப் படர்க்கைச் சொல் சேர்த்துச் சொல்லப்பட்டது. சாத்தன் தாயாகிய யான் என்பது

எம்பியை ஈங்குப் பெற்றே னென்னெனக் கரியதென்றான்" - தன்றம்பியை முன்னிலைப்படுத்து அவனையே நோக்கிக் கூறுதலால், நின்னை எனச் சொல்லல்வேண்டும் முன்னிலையிலே எம்பியை எனப் படர்க்கைச் சொல் சேர்த்துச் சொல்லப்பட்டது.

நீயோ அவனோ யாரிது செய்தார், யானோ அவனோ யாரிது செய்தார், நீயோ யானோ யாரிது செய்தார்; நீயோ அவனோ யானோ யாரிது செய்தார் என விரவி ஓரிடத்தில் பிற இடம் வருதலும் கொள்க.

இடம் வழுவாமற் காத்தல்:

தரல் வரல் கொடை செலல் சாரும் படர்க்கை

எழுவாய் இரண்டும் எஞ்சிய ஏற்கும்

தரல் வரல் கொடை செலல் என்னும் இந்நான்கு சொற்களும் படர்க்கையில் வரும்., இவற்றுள் முதலிலே நின்ற தரல் வரல் என்னும் இரண்டு சொற்களும் தன்மை முன்னிலைகளில்வரும்.

தரல், வரல், கொடை, செலல் என்பன அவ்வப் பகுதிகளை உணர்த்தி நின்றன ஆதலால், அப்பகுதிகளால் பிறக்கும் வினைவிகற்பங்கள் அனைத்தும் கொள்க.

அவனுக்குத் தந்தான்;

அவனிடத்து வந்தான்;

அவனுக்குக் கொடுத்தான்;

அவனிடத்துச் சென்றான்

- படர்க்கையில் வந்தன.

எனக்குத் தந்தான்;

என்னிடத்து வந்தான்

- தன்மையிடத்தில் வந்தன..

உனக்குத் தந்தான்;

உன்னிடத்து வந்தான்

- முன்னிலையில் வந்தன.

குறிப்பு

தரல், வரல் என்னும் இரண்டையும் தன்மை முன்னிலைக்கும் கூட்டினமையால் படர்க்கைக்கே சிறந்தன கொடைசெலல் என்னும் இரண்டும் என்பதும், ஒழிந்த தரலும் வரலும் அத்துணைச் சிறப்பின அல்ல என்பதும் பெறப்படும்.

காலம்:

இறப்பு எதிர்வு நிகழ்வு எனக் காலம் மூன்றே

இறந்தகாலமும் எதிர்காலமும் நிகழ்காலமும் எனக் காலம் மூன்றாம்.

கால வழுவமைதி:

முக் காலத்தினும் ஒத்து இயல் பொருளை

செப்புவர் நிகழும் காலத் தானே

தந்தொழில் இடைவிடாமல் மூன்று காலங்களிலும் ஒரு தன்மையை உடையனவாய் நிகழும் பொருள்களை, நிகழ்காலத்தினால் சொல்லுவர் புலவர்.

மலைநிற்கின்றது

தெய்வம் இருக்கின்றது

கடவுள் அளிக்கின்றார்

என வரும். மலைக்கு நிற்றலும், தெய்வத்திற்கு இருத்தலும், கடவுட்கு அளித்தலும் முக்காலத்தினும் உள்ளன ஆதல் காண்க.

விரைவினும் மிகவினும் தெளிவினும் இயல்பினும்

பிறழவும் பெறூஉம் முக்காலமும் ஏற்புழி

விரைவினாலும், மிகுதியினாலும், தெளிவினாலும், இயல்பினாலும் மூன்று காலங்களும் பொருந்தும் இடத்து ஒன்று மற்றொன்றாகச் சொல்லப்படவும் பெறும

சோறு வேவாநிற்க அதனை உண்டுபோதற்கு இருப்பானை, விரைவில் உடன் கொண்டுபோக வேண்டிய மற்றொருவன் பார்த்து இன்னும் உண்டிலையோ என்றால், உண்டேன் உண்டேன் என்பான்,

உண்ணாநிற்பானை அவ்வாறு வினாவினாலும், “உண்டேன் உண்டேன்” என்பான். இங்கே விரைவுபற்றி எதிர்காலமும் நிகழ்காலமும் இறந்தகாலமாகச் சொல்லப்பட்டன.

குறிப்பு

அக்காட்டில் புகின் கூறை பறிகொடுத்தான், களவு செய்ய நினையின் கை அறுப்புண்டான் என்றவழி, மிகுதிபற்றி எதிர்காலம் இறந்தகாலமாகச் சொல்லப்பட்டது. கூறை பறிகொடுத்தலும் கை அறுப்புண்ணுதலும் தவறினும் தவறும் ஆதலால் மிகுதி எனப்பட்டன.

அறம் செயின் சுவர்க்கம் புக்கான், எறும்பு முட்டை கொண்டு திட்டை ஏறின் மழை பெய்தது என்றவழித், தெளிவினால் எதிர்காலம் இறந்தகாலமாகச் சொல்லப்பட்டது. சுவர்க்கம் புகுதற்கு அறம் செய்தல் காரணம் என்பது உரை அளவையினாலும், மழைபெய்தற்கு எறும்பு முட்டை எடுத்து மேட்டில் ஏறுதல் காரணம் என்பது காட்சி அளவையினாலும் தெளியப்பட்டமையினாலே, தெளிவாயின.

யாம் பண்டு விளையாடுவது இச்சோலை; யாம்பண்டு விளையாடுகிறது இச்சோலை என்ற வழிக்,காரணம் இன்றி இயல்பினால் இறந்தகாலம் எதிர்காலமும் நிகழ்காலமும் ஆகச் சொல்லப்பட்டது.

## கூறு 11

### அறுவகை வினா:

அறிவு அறியாமை ஐயுறல் கொளல் கொடை

ஏவல் தரும் வினா ஆறும் இழுக்கார்

அறிவு அறியாமை ஐயுறல் கொள்ளுதலும் கொடுத்தலும் ஏவுதலும் ஆகிய அறுவகைப் பொருளையும் தருதலால் வரும் வினாக்கள் ஆறனையும் களையாது கொள்வர் புலவர்.

ஆசிரியன் இச்சூத்திரத்திற்குப் பொருள்யாது என வினவல் - அறிவினா.

மாணாக்கன் அப்படிச் சொல்வது - அறியா வினா.

குற்றியோ மகனோ - ஐய வினா.

பயறு உளதோ வணிகீர் - கொளல் வினா.

சாத்தனுக்கு ஆடையில்லையா - கொடை வினா.

சாத்தா உண்டாயா - ஏவல் வினா.

## எண்வகை விடை:

சுட்டு மறை நேர் ஏவல் வினாதல்

உற்றது உரைத்தல் உறுவது கூறல்

இனமொழி எனும் எண் இறையுள் இறுதி

நிலவிய ஐந்தும் அப் பொருண்மையின் நேர்ப

குறிப்பு

சுட்டும்,எதிர்மறுத்தலும் உடன்படலும், ஏவுதலும், எதிர்வினாவுதலும், உற்றதைச் சொல்லுதலும் உறுவதைச் சொல்லுதலும்,இனத்தைச் சொல்லுதலும், என்னும் இவ் எட்டு விடைகளுள் ஈற்றில் விளங்கிய ஐந்தும் அவ்விடைப் பொருளைத் தருதலினாலே விடைகளாகவே தழுவிக் கொள்வார் புலவர்.

எனவே, முதன் மூன்றும் செவ்வன் இறையும், பின்னைய ஐந்தும் இறைபயப்பனவுமாம் என்பது ஆயிற்று.

தில்லைக்கு வழி யாது எனின், இது என்பது சுட்டு விடை.

சாத்தா இது செய்வாயா என்ற போது, செய்யேன் என்பது மறைவிடை

செய்வேன் என்பது நேர்விடை.

நீ செய் என்பது ஏவல் விடை.

செய்வேனோ என்பது வினாவிடை.

உடம்பு நொந்தது, நோவாநின்றது என்பன உற்றது உரைத்தல் விடை.

உடம்பு நோம் என்பது உறுவது கூறல் விடை.

மற்றையது செய்வேன் என்பது இனமொழிவிடை.

## வினா விடைகளில் சினை முதல் வழுவாமை காத்தல்:

வினாவினும் செப்பினும் விரவா சினை முதல்

வினாவுதல் கண்ணும் விடை கொடுத்தல் கண்ணும் சினையும் முதலும் ஒற்றுமை கருதி மயங்கச் சொல்லப்படாவாம்.

கண் பிறழ்ந்ததோ,கயல் பிறழ்ந்ததோ

சாத்தன் நல்லனோ கொற்றன் நல்லனோ

இவ்வாறு வினாவினார்க்குக், கண் பிறழ்ந்தது, கயல் பிறழ்ந்தது, சாத்தன் நல்லன், கொற்றன் நல்லன் எனவும் வரும்.

குறிப்பு

பிறவும் அன்ன, எனவே, கண் பிறழ்ந்ததோ எனச் சினையை வினவுவான் அதனை ஒழித்து அதனை உடையாளைக் கருதி இவள் பிறழ்ந்தாளோ கயல் பிறழ்ந்ததோ என வினவுதலும், இவள் பிறழ்ந்தாள் எனச் செப்புதலும், இவ்வாறு முதலை வினவுவானும் செப்புவானும் அதனை ஒழித்துச் சினையை வினவுதலும் செப்புதலும் வழுவாம் என்பதாயிற்று.

**மரபு:**

எப்பொருள் எச்சொலின் எவ்வாறு உயர்ந்தோர்

செப்பினர் அப்படிச் செப்புதல் மரபே

யாதொரு பொருளை யாதொரு சொல்லால் யாதொரு வழியால் அறிவுடையோர்கள் சொன்னார்களோ அப்பொருளை அச்சொல்லால் அவ்வழியால் சொல்லுதல் மரபு ஆம்.

குதிரைக்குட்டி, யானைக்குட்டி, புலிக்குட்டி

யானைக்கன்று, பசுக்கன்று, மான்கன்று

யானையிலண்டம், ஆட்டுப்புழுக்கை, எருமைச்சாணம்

இப்படி அன்றிப், பசுவின்குட்டி, குதிரைக்கன்று, யானைச்சாணம், எருமையிலண்டம் எனக் கூறின், மரபு வழுவாம்.

**மரபு வழாநிலை:**

வேறு வினை பல் பொருள் தழுவிய பொதுச் சொல்லும்

வேறு அவற்று எண்ணும் ஓர் பொது வினை வேண்டும்

வெவ்வேறு வினைகளுக்கு உரிய பல பொருள்களையும் ஒருங்கு தழுவி நிற்கும் ஒரு பொதுச்சொல்லும் அவற்றின் சிறப்புச் சொற்களாக எண்ணி நிற்கும் பல சொற்களும் ஒன்றற்கு உரிய சிறப்புவினையை வேண்டாது எல்லாவற்றிற்கும் உரியதோர் பொதுவினையைக் கொண்டு முடியும்.

அடிசில் என்பது உண்பன, தின்பன, நக்குவன, பருகுவனவற்றிற்கு எல்லாம் பொதுச்சொல் ஆதலால், அடிசில் அயின்றார், அடிசில் மிசைந்தார் என்க,

அணி என்பது கவிப்பன, கட்டுவன, இடுவன, தொடுவனவற்றிற்கு எல்லாம் பொதுச்சொல் ஆதலால், அணி அணிந்தார் அணி தாங்கினார் என்க.

இயம் என்பது கொட்டுவன, ஊதுவனவற்றிற்கு எல்லாம் பொதுச்சொல் ஆதலால், இயம் இயம்பினார் இயம்படுத்தார் என்க.

படை என்பது எய்வன எறிவன, வெட்டுவன, குத்துவனவற்றிற்கு எல்லாம் பொதுச்சொல் ஆதலால்,படை வழங்கினார் படைதொட்டார் என்க.

சில நாள் சோறும் சிலநாள் மாவும் சிலநாள் பாலும் சிலநாள் நீரும் சிலநாள் சருகும் அயின்றார் அல்லது மிசைந்தார் என்க.

முடியும் குழையும் மோதிரமும், நெடுநாணும் அணிந்தார்;

பறையும் குழலும் இயம்பினார்

வாளும் வேலும் வழங்கினார் என்க.

குறிப்பு

வினை சார்பு இனம் இடம் மேவி விளங்காப்

பல பொருள் ஒரு சொல் பணிப்பர் சிறப்பு எடுத்தே

குறித்த பொருளை விளக்கும் வினையும் சார்பும் இனமும் இடமும் பொருந்தி விளங்காத பலபொருள் ஒருசொல்லைச் சிறப்புச் சொல்லோடு கூட்டிச் சொல்லுவர் புலவர்.

எனவே, வினை முதலியவற்றுள் ஒன்றைப் பொருந்தி விளங்கிக் கிடந்த பலபொருள் ஒருசொல்லை இயல்பாயக் கூறுவர் என்பதாயிற்று.

மா என்பது மாமரத்திற்கும் வண்டிற்கும் ஒருசார் விலங்கிற்கும் திருவிற்கும் பொதுவான பல பொருளொருசொல். இப் பொருள்களுள், மாப் பூத்தது, மாக் காய்த்தது என்றவழி, மரம் என்பது வினையால் விளங்கிற்று. மாவீழ் மலர் என்றவழி, வண்டு என்பது சார்பால் விளங்கிற்று. தேர்,கரிமா காலாள் என்ற வழிக், குதிரை என்பது இனத்தால் விளங்கிற்று, மாமறுத்த மார்பன் என்ற வழித், திரு என்பது இடத்தால் விளங்கிற்று. இவை வாளா கூறப்பட்டன.

இனி, மா ஏறினான், மாவி யாது என்ற வழிக்,குறித்த பொருள் விளங்காமையால், விளங்கு தற் பொருட்டுப் பாய்மா ஏறினான், மாமரம் ஏறினான், பாய்மா யாது, மாமரம் யாது எனச் சிறப்புச் சொல்லோடு கூட்டிக் கூறப்பெறும்.

எழுத்து இயல் திரியாப் பொருள்திரி புணர்மொழி

இசை திரிபால் தெளிவு எய்தும் என்ப

எழுத்தினது தன்மை வேறுபடாது பொருள் வேறுபட்டுச் சொல்லும் பொருளும் ஐயுற நிற்கும் தொடர்மொழிகள் குறிக்கப்பட்ட சொற்களின் இறுதியும் முதலும் தோன்ற இசையறுத்துச் சொல்லும் வேறுபாட்டினாலே துணியப்படும் என்று சொல்லுவர் புலவர்.

செம்பொன்பதின்றொடி- செம் - பொன்பதின்தொடி என இசையறுத்துக் கூறின் செம்பு ஒன்பது பலம் என வரும்.

நாகன்தேவன்போத்து - நாகன் - தேவன் - போத்து என இசையறுத்துக் கூறின், நாகனும் தேவனும் போத்தும் எனவும். நாகன்றே- வன்போத்து என இசையறுத்துக் கூறின், இளம்பெண் எருமையன்று, முதிர்ந்த எருமைக்கடா எனவும் வரும்.

குன்றேறாமா - குன்றேறா - மா என இசையறுத்துக் கூறின், குன்றின்மேல் ஏறாத விலங்கு எனவும், குன்றே - றாமா என இசையறுத்துக் கூறின். குன்றின்மேல் ஏறுங் காட்டுப்பசு எனவும். வரும்.

குறும்பரம்பு - குறும்ப - ரம்பு என இசையறுத்துக் கூறின், குறுநில மன்னருடைய அம்பு எனவும், குறும் - பரம்பு என இசையறுத்துக்கூறின், குறுமையாகிய கழனி திருத்தும் பலகை எனவும் பொருள்துணியக் கிடக்கும்.

## மரபு வழாநிலையும் வழுவமைதியும்:

ஒரு பொருள் மேல் பல பெயர் வரின் இறுதி

ஒரு வினை கொடுப்ப தனியும் ஒரோ வழி

ஒரு பொருளின் மேலே பலபெயர்கள் வருமாயின், பொருள் ஒன்றே என்பது தோன்ற இறுதியில் ஒருமுடிக்கும் சொல்லைக் கொடுத்துக் கூறுவர். ஒருபொருளே என்பது தெரிய வருமிடத்து பெயர்தோறும் முடிக்கும் சொல்லைக் கொடுத்தும் கூறுவர் புலவர்.

ஆசிரியன் பேரூர்க்கிழான் சாத்தன் வந்தான் எனவும்,

“குயிலைச் சிலம்படிக் கொம்பினைத் தில்லையெங் கூத்தப்பிரான்

கயிலைச் சிலம்பிற்பைம் பூம்புனங் காக்குங் கருங்கட் செவ்வாய்

மயிலைச் சிலம்பகண்டியான் போய் வருவன் வண் பூங்கொடிகள்

“பயிலச் சிலம்பெதிர் கூய்ப் பண்ணை நண்ணும் பளிக்கறைக்கே” எனவும், இவை, இறுதியிலே முறையே, வந்தான் எனவும், கண்டு எனவும் ஒரு முடிக்குஞ் சொல்லைக் கொண்டன.

“மூவர்கண் முதல்வன் வந்தான் முக்கணான் குமரன் வந்தான்

மேவலர் மடங்கல் வந்தான் வேற்படை வீரன் வந்தான்

ஏவருந் தெரிதறேற்றா திருந்திடுமொருவன் வந்தான்

தேவர்காடவன் வந்தான்என்றன சின்ன மெல்லாம்” என்பதில், முதல்வன், குமரன், மடங்கல், வீரன், ஒருவன், தேவன் என்பன முருகன் என்னும் ஒரு பொருளே என்பது தெளிய நின்றமையினாலே, பெயர்தோறும் வந்தான் என ஒருவினை கொடுக்கப்பட்டமை காண்க.

குறிப்பு

திணை நிலம் சாதி குடியே உடைமை

குணம் தொழில் கல்வி சிறப்பாம் பெயரோடு

இயற்பெயர் ஏற்றிடின் பின் வரல் சிறப்பே

ஐந்திணையும் நிலமும், குலமும், குடியும், உடைமையும், குணமும், தொழிலும், கல்வியும் ஆகிய இவற்றைப்பற்றி வரும் சிறப்புப் பெயருடனே இயற்பெயரை ஒருபொருள் ஒருங்கு ஏற்குமாயின் அவ் இயற்பெயர் பின் வருதல் சிறந்த மரபாம்.

பின்வரல் சிறப்பே என்றதனால். முன் வரும் என்பதும் அது வழுவமைதி என்பதும் பெறப்படும்.

குன்றவன் கொற்றன், கொற்றன் குன்றவன் - திணை.

அருவாளன் அழகன், அழகன் அருவாளன் -நிலம்.

பார்ப்பான் பாராயணன், பாராயணன் பார்ப்பான்-சாதி.

ஊர்கிழான் ஓணன், ஓணன் ஊர்கிழான்--குடி.

பொன்னன் பொறையன், பொறையன் பொன்னன் -உடைமை.

கரியன் கம்பன், கம்பன் கரியன்--குணம்.

நாடகி நம்பி, நம்பி நாடகி---தொழில்.

ஆசிரியன் அமிழ்தன், அமிழ்தன் ஆசிரியன்- கல்வி.

இன்னும், இயற்பெயர் முன்வரும் இடத்து வைத்தியநாத நாவலன், கச்சியப்பப் புலவன் என இறுதி விகாரமாக வருதலும் காண்க.

படர்க்கை முப் பெயரோடு அணையின் சுட்டுப்

பெயர் பின் வரும்: வினை எனின் பெயர்க்கு எங்கும்

மருவும் வழக்கு இடைச் செய்யுட்கு ஏற்புழி

படர்க்கை இடத்தையுடைய உயர்திணைப்பெயர் அ.்.றிணைப்பெயர், விரவுப்பெயர் என்னும் மூவகைப் பெயர்களோடு சுட்டுப்பெயர் சேரின், அச்சுட்டுப் பெயர் அம்மூவகைப் பெயர்க்கும் பின் வரும். அவ்விடத்தே வினையாகிய முடிக்கும்சொல் வருமாயின் அம்முடிக்கும் சொல் இல்லையாயின் அப்பெயர்க்குப் பின்னும் முன்னும் வரும். இம்மரபு வழக்கத்தின் இடத்தேயாம். செய்யுளிடத்தே முன், பின் வேறுபாடு இன்றி வேண்டியவாறே வரப்பெறும்.

நம்பி வந்தான், அவனுக்குச் சோறிடுக

எருது வந்தது, அதற்குப் புல்லிடுக

குறிப்பு

சாத்தன் தெய்வம் அவனுக்குப் பலி இடுக

சாத்தன் வந்தது அதற்குப் புல் இடுக

- எனவும் வினை நிகழ் வழிச் சுட்டுப்பெயர் பின் வந்தன.

நம்பியவன்,

அவன் நம்பி

- எனப் பெயர்க்குப் பின்னும் முன்னும் சுட்டுப்பெயர் வந்தன.

அவனணங்கு நோய்செய்தா னாயிழாய் வேலன்

விறன்மிகுதார்ச் சேந்தன்பேர் வாழ்த்தி முகனமர்ந்

தன்னை யலர்கடப் பந் தாரணியி னென்னைகொல்

பின்னை ஆதன்கண் விழைவு

- எனச் செய்யுளில் வினை வருவழியும் முன் வந்தது.

சுட்டுப்பெயர் செய்யுளிடத்துப் பின் வருதல் வழாநிலை; முன்வருதல் வழுவமைதி, வழக்கிடத்து வினை நிகழ் வழிப் பின்வருதல் வழாநிலை.

## அடுக்குத் தொடர்:

அசைநிலை பொருள்நிலை இசைநிறைக்கு ஒரு சொல்

இரண்டு மூன்று நான்கு எல்லை முறை அடுக்கும்

அசைநிலைக்கும் விரைவு, வெகுளி, உவகை, அச்சம், அவலம் முதலிய பொருள் நிலைக்கும் இசைநிறைக்கும்,ஒரு மொழி இரண்டு மூன்று நான்கு அளவு முறையே அடுக்கும்.

எனவே, அசைநிலைக்கு இரண்டும் பொருள் நிலைக்கு இரண்டும் மூன்றும் இசைநிறைக்கு இரண்டும் மூன்றும் நான்கும் அடுக்கும் என்பதாயிற்று.

அன்றே அன்றே- அசைநிலை

உண்டேன் உண்டேன், போ போ போ - விரைவு.

எய் எய், எறி எறி எறி - .வெகுளி.

வருக வருக, பொலிக பொலிக பொலிக - உவகை.

பாம்பு பாம்பு; தீத்தீத்தீ - அச்சம்

உய்யேன் உய்யேன்; வாழேன் வாழேன் வாழேன் - அவலம்.

குறிப்பு

ஏயே யம் பன் மொழிந்தனள் யாயே

நல்குமே நல்குமே நல்குமே நாமகள்

பாடுகோ பாடுகோபாடுகோ - இசைநிறை.

ஒருசொல்லைப் பலகாற் சொல்லுதல் வழுவாயினும் இவ்விடத்தே ஆம் என்றல் வழுவமைதியும் , இதற்கு இவ் எல்லை கடவாது என்றல் வழுவாமல் காத்தலுமாம்.

## இரட்டைக் கிளவி:

இரட்டைக்கிளவி இரட்டு இன் பிரிந்து இசையா

இரட்டைச் சொற்கள்இவ் இரட்டிப்பினின்றும் பிரிந்து தனித்து ஒலியாவாம்.

எனவே வலிந்து பிரித்துக் கூறிற் பொருள்படாது என்பதும் இரட்டித்துக் கூறுதலே மரபு என்பதும் ஆயிற்று.

“சல சல மும்மதம் பொழிய”

“கல கல கூந்துணை அல்லால்”

குறுகுறு நடந்து,

“வற்றியவோலை கலகலக்கும்”

“துடி துடித்துத் துள்ளிவரும்”

துடிதுடித்து

என்பதில் பின்னையது பிரிந்து இசைக்கும் ஆயினும், முன்னையது பிரிந்து இசையாமையால் இரட்டைச் சொல்லேயாம்.

## ஒருபொருட் பல்பெயர்:

ஒரு பொருள் பல் பெயர் பிரிவில வரையார்

ஒருபொருளைக் குறித்து வரும் பல்பெயர் அப்பொருள்களினின்றும் பிரிதல் இல்லாதவற்றை நீக்காது கூறுவர் புலவர்.

ஆசிரியன் பேரூர்க்கிழான் சாத்தன் வந்தான்

பல்யாக சாலை முதுகுடுமிப் பெருவழுதி வந்தான்.

## ஒருபொருட் பன்மொழி:

ஒருபொருட்பன்மொழி சிறப்பினின் வழா

குறிப்பு

ஒருபொருளைக் குறித்து வரும் பலசொற்கள் அவ்வாறு வருதற்கு ஓர் காரணம் இன்றாயினும் சிறந்து நிற்கையால் அவை வழு என்று நீக்கப்படாவாம்.

சிறந்துநிற்றல் - செவிக்குச் சொல்லின்பம் தோன்ற நிற்றல்.

மீமிசை ஞாயிறு, புனிற்றிளங் கன்று, நாகிளங் கமுகு, உயர்ந்தோங்கு பெருவரை, குழிந்தாழ்ந்த கண் எனவரும்.

## இனைத்தென அறி பொருள்:

இனைத்து என்று அறி பொருள் உலகின் இலாப் பொருள்

வினைப்படுத்து உரைப்பின் உம்மை வேண்டும்

இவ் அளவினது என்று வரையறை உணரப்படும் பொருளும் எக்காலத்தும் எவ் இடத்தும் இல்லாத பொருளும் வினைப்படுத்துச் சொல்லும் போது முற்றும்மையை வேண்டி நிற்கும்.

தமிழ்நாட்டு மூவேந்தரும் வந்தார்

இறைவற்குக் கண் மூன்றும் முச்சுடர்

வேதம் நான்கும் உணர்ந்தான்

- என இனைத்து என்று அறி பொருள்கள் வினைப்படுத்துச் *சொல்லும் போது முற்றும்மை வேண்டி நின்றன.*

முயற்கோடு ஆகாயப்பூ என்றும் இல்லை

ஒளி முன்இருள் எங்கும் இல்லை

- என உலகின் இலாப் பொருள்கள் வினைப்படுத்துச் சொல்லும் போது முற்றும்மை வேண்டி நின்றன.

## செயப்படு பொருள்:

செயப்படு பொருளைச் செய்தது போலத்

தொழிற்படக் கிளத்தலும் வழக்கினுள் உரித்து

செயப்படுபொருளைக் கருத்தாவைப்போல வைத்து அதன்மேல் அவ்வினைமுதல் வினை ஏற்றிக் கூறுதலும் வழக்கின் இடத்து உரித்தாம்.

குறிப்பு

இம்மாடு யான் கொண்டது

இச்சோறு யான் கொடுத்தது

இவ்வெழுத்து யான் எழுதியது - என வரும்

கிளத்தலும் என்ற உம்மையினாலே, கருமத்தைக் கருத்தாவாகக் கூறுதலே அன்றிக் , கருவி நிலம், செயல், காலங்களைக் கருத்தாவாகக் கூறுதலும் அமையும் என்பது பெறப்படும்.

இவ் எழுத்தாணி யான் எழுதியது - கருவி

இவ்வீடு யான் இருந்தது - நிலம்

இத்தொழில் யான் செய்தது - செயல்

இந்நாள் யான் பிறந்தது - காலம்

## அடையடுத்து வரும் மொழியினம்:

பொருள் முதல் ஆறாம் அடை சேர் மொழி இனம்

உள்ளவும் இல்லவும் ஆம்: இரு வழக்கினும்

பொருளாதி ஆறாகிய பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில் என்ற ஆறாகிய அடைகள் அடுத்து வரும் மொழிகள் இனம் உள்ளவையே அன்றி இனம் இல்லாதவையாயும் வரும்.இவை உலக வழக்கின் உள்ளும் செய்யுள் வழக்கின் உள்ளும் வரும் என்பதாம்.

அடையினால் அடுக்கப்பட்டது அடைகொளி எனப்படும். அடை எனினும் விசேடணம் எனினும் பொருந்தும். அடைகொளி எனினும் விசேடியம் எனினும் பொருந்தும். இனச்சுட்டுள்ள அடை பிறிதின் இயைபு நீக்கிய விசேடணம் எனவும் இனச்சுட்டில்லா அடை தன்னோடு இயைபின்மை நீக்கிய விசேடணம் எனவும் பெயர் பெறும்.

இனம் உள்ளன இனம் இல்லன

நெய்க்குடம் உப்பளம் - பொருள்

குளநெல் ஊர்மன்று - இடம்

கார்த்திகைவிளக்கு நாளரும்பு -காலம்

பூமரம் இலைமரம் -சினை

செந்தாமரை செம்போத்து - குணம்

ஆடுபாம்பு தோய்தயிர் - தொழில்

குறிப்பு

என வழக்கு இடத்து வந்தன.

அளம் எனவே உப்பு என்பதும் மன்று எனவே ஊர் என்பதும் அரும்பு எனவே நாள் என்பதும் மரம் எனவே இலை என்பதும் போத்து எனவே செம்மை என்பதும் தயிர் எனவே தோய்தல் என்பதும் தாமேவந்து இயைதலால் அளம் முதலியன அடை இன்றியும் இப்பொருளாதி ஆறையும் உணர்த்தும். உப்பில்லா அளமும் ஊரில்லா மன்றும் நாள் இல்லா அரும்பும் இலையில்லா மரமும் செம்மையில்லாப் போத்தும் தோய்தல் இல்லாத் தயிரும் இல்லை ஆதலால் இவை இனமில்லன ஆயின. இனி முற்கூறிய நெய்க்குடம் முதலிய இனம் உள்ளனவற்றை அடை கொடாது கூறில் குறித்தபொருள் விளங்காமல் பொதுமையின் நிற்கும், ஆதலால்அவற்றிற்கு அடைகொடுத்துக் கூறுதலே மரபாயிற்று.

இனிச் செய்யுள்வழக்கில் வருமாறு : -

பொருட் பெண்டிர் பொய்ம்மை முயக்கம் - பொருள்

கான்யாற்றடைகரை - இடம்.

முந்நாட் பிறையின் முனியாது வளர்ந்தது - காலம்.

கலவமா மயிலெருத்திற் கடிமல ரவிழ்ந்தன காயா - சினை.

சிறுகோட்டுப் பெரும்பழந் தூங்கியாங் கிவள் - குணம்.

ஆடர வாட வாடும் அம்பலத் தமிர்தே - தொழில்

இவை இன முள்ளன.

பொற்கோட் டிமயமும் பொதியமும் போன்றே - பொருள்.

வடவேங்கடந் தென்குமரி - இடம்

வேனிற் கோங்கின் பூம்பொகுட் டன்ன - காலம்.

சிறகர் வண்டு செல்வழி பாட - சினை.

செஞ்ஞாயிற்று நிலவு வேண்டினும் - குணம்

முழங்கு கடலோத மூழ்கிப் போக - தொழில் இவை இனம் இல்லன

இனம் உள்ளனவற்றை அடை கொடுத்துக் கூறுதல் வழாநிலையும் இனம் இல்லனவற்றை அடை கொடுத்துக் கூறுதல் வழுவமைதியுமாம் என்க.

அடை மொழி இனம் அல்லதும் தரும் ஆண்டு உறின்

பொருளாதி ஆறாகிய பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில் என்ற ஆறாகிய அடைகள் அடுத்து வரும் மொழிஇனத்தைத் தருதலே அன்றி, பொருந்தும் இடத்துஅதனோடு இனம் அல்லாததையும் தரும்.

குறிப்பு

பாவஞ் செய்தான் நரகம் புகுவான் என்ற அளவிலே புண்ணியம் செய்தான் சுவர்க்கம் புகுவான் என இனத்தைத் தருதலே அன்றி, அவன் இது செய்யின் இது வரும் என்னும் அறிவிலி என்னும் இனம் அல்லாததையும் தந்தது

மேலைச்சேரிச் சேவல் அலைத்தது என்ற அளவிலே,கீழைச்சேரிச் சேவல் அலைப்புண்டது என இனத்தைத் தருதலே அன்றி, அச்சேவலை உடையார்க்கு வெற்றி ஆயிற்று என்னும் இனம் அல்லாததையும் தந்தது.

## அடை சினை முதற் சொற்கள்:

அடை சினை முதல் முறை அடைதலும் ஈர் அடை

முதலோடு ஆதலும் வழக்கு இயல்:ஈர் அடை

சினையொடு செறிதலும் மயங்கலும் செய்யுட்கே

ஓரடையும் ஒருசினையும் ஒருமுதலும் ஒன்றையொன்று விசேடித்து வரும். இரண்டு அடை முதலை விசேடித்து வரும். இங்ஙனம் உலக வழக்கில் வரும். ஆனால் செய்யுள் வழக்கிலோ இரண்டு அடைச் சொற்கள் சினையை விசேடித்து வரும்.இவ்வரம்பு கடந்தும் வரும்.

**வழக்கு:-**

வேற்கை முருகன்

செங்கால் நாரை

முழங்கு திரைக்கடல்

- இவை ஓரடையும் ஒருசினையும் ஒருமுதலுமாகி ஒன்றை ஒன்று விசேடித்து வந்தன.

மனைச்சிறு கிணறு

சிறுகருங் காக்கை

- இவை இரண்டடை முதலைச் சிறப்பித்து வந்தன.

செய்யுள்:-

சிறுபைந் தூவியிற் செயிரறச் செய்த

கருநெடுங் கண்டருங் காம நோயே

- இவை இரண்டடை சினையை விசேடித்து வந்தன.

பெருந்தோட் சிறுமருங்குற் பேரமர்க்கட் பேதை

குறிப்பு

சிறுநுதற் பேரமர்க் கட்செய்ய வாயைய நுண்ணிடையாய்

- இவை இவ்வரம்பு கடந்து வந்தன.

அடைசினை முதன் முறை அடைதல் ஒன்றும் வழுவாமற் காத்தல். ஏனைய மூன்றும் வழு ஆகும்.

## இயற்கைப் பொருள்:

இயற்கைப் பொருளை இற்றெனக் கிளத்தல்

இயற்கைப் பொருள், செயற்கைப்பொருள் என இருவகைப்படும் பொருள்களுள் இயற்கைப் பொருளை ,இத்தன்மைத்து என்று சொல்லுதல் வேண்டும்.

இயற்கைப் பொருள் தனக்குப் பின்தோன்றாது தான்தோன்றும்போது உடன்தோன்றிய தன்மையை உடைய பொருள்

செயற்கைப் பொருள் தனக்கும் பின்தோன்றிய தன்மையை உடைய பொருள்

நிலம் வலிது; நீர் தண்ணிது; தீ வெய்து; மயிர் கரிது; பால் வெளிது; பயிர் பசியது; மெய் உள்ளது; பொய் இல்லது எனவரும்.

இயற்கைப் பொருளை இற்று என்னும் வினைக்குறிப்பாகிய செயற்படுத்துக் கூறுதலின், இது வழுவமைதி ஆயிற்று.

## செயற்கைப் பொருள்:

காரணம் முதலாஆக்கம் பெற்றும்

காரணம் இன்றி ஆக்கம் பெற்றும்

ஆக்கம் இன்றிக் காரணம் அடுத்தும்

இருமையும் இன்றியும் இயலும் செயும் பொருள்

செயற்கைப் பொருள், காரணச்சொல் முன்வர ஆக்கச்சொல் பின்வரப் பெற்றும், காரணச்சொல் தொக்கு நிற்க ஆக்கச் சொல் வரப்பெற்றும் ஆக்கச்சொல் தொக்கு நிற்கக் காரணச்சொல் வரப்பெற்றும்இவ் இருவகைச் சொல்லும் தொக்கு நிற்கவும் நடக்கும்.

கடுவுங் கைபிழி யெண்ணெயும் பெற்றமையான் மயிர் நல்லவாயின:

குறிப்பு

எருப்பெய்து இளங்களைகட்டு நீர்கால் யாத்தமையால் பயிர் நல்ல வாயின.

- இவை முன் காரணச்சொல்லும் பின் ஆக்கச்சொல்லும் வரப்பெற்றன.

மயிர் நல்லவாயின பயிர்நல்ல வாயின

- இவை காரணச்சொல் தொக்கு நிற்க ஆக்கச்சொல் வரப்பெற்றன.

கடுவும் கைபிழி எண்ணெயும் பெற்றமையான் மயிர் நல்ல

எருப் பெய்து இளங்களை கட்டு நீர்கால் யாத்தமையால் பயிர் நல்ல

- இவை ஆக்கச்சொல் தொக்கு காரணச்சொல் வரப்பெற்றன.

மயிர் நல்ல

பயிர்நல்ல

- இவை காரணச்சொல் ஆக்கச் சொல் இரண்டும் தொக்கு நிற்கப் பெற்றன.

காரணமுதலா ஆக்கம் பெறுதல் ஒன்றும் வழுவாமல் காத்தலும் ஒழிந்த மூன்றும் வழுவமைதியுமாம் என்க.

## வினாவிடை மரபு:

தம்பால் இல்லது இல் எனின் இனனாய்

உள்ளது கூறி மாற்றியும் உள்ளது

சுட்டியும் உரைப்பர் சொல்சுருங் குதற்கே

வினாவும் விடையும் ஆகிய சொற்கள் சுருங்குதல் பொருட்டு .தம்மிடத்து இல்லாத பொருளைச் சொல்லி அச்சொல்லைக் கொண்டு அதனை இல்லை என்றும் உள்ள பொருளாயின் இவ்வளவு உண்டென்றும் உரைப்பர்.

குன்றக் கூறல் முதலிய குற்றங்களை நீக்கிச் சுருங்கச் சொல்லல் முதலிய அழகோடு கூறுதல் வழக்கிற்கும் வேண்டும் என்பார் சொல் சுருங்குதற்கே என்றார்.

பயறுண்டோ வணிகீரே என்றவருக்கு அ.ஃது இல்லை என்பார் உழுந்துண்டு உழுந்தும் துவரையும் உண்டு என அதன் இனத்தைந் சொல்லக் கடவர். இவ் இனமொழிகள் பயறு இல்லை என்னும் விடைப்பொருள் தந்துநிற்றலே அன்றி,மேலே உழுந்துண்டோ.

துவரையுண்டோ என்னும் வினாக்களும் அவற்றிற்கு விடைகளும் பல்காமல் காத்து நிற்றலும் உடையனவாதல் காண்க.

குறிப்பு

பயறுண்டோ வணிகீரே என்றவருக்கு அஃது உண்டென்பார் இருகலம் உண்டு இருதூணி உண்டு என அதன் அளவைச் சொல்லக்கடவர். இவ் அளவை மொழிகள் பயறு உண்டென்னும் விடைப்பொருளைத் தந்து நிற்றலேயன்றி, மேலே எவ்வளவு உண்டு என்னும் வினாவும் அதற்கு விடையும் பல்காமல் காத்து நிற்றலும் உடையன ஆதல் காண்க.

**இரப்புரைச் சொற்கள்:**

ஈ தா கொடு எனும் மூன்றும் முறையே

இழிந்தோன் ஒப்போன் மிக்கோன் இரப்புரை

ஈ, தா, கொடு என்னும் மூன்று சொற்களும் முறையே இழிந்தவனும் ஒப்பவனும் உயர்ந்தவனும் இரத்தற்கு வரும் சொற்களாகும்.

எனவே, "ஈ" என்பது இழிந்தோன் உயர்ந்தோனிடத்து இரக்கும் இரப்புரையும் 'தா' என்பது உயர்ந் தோன் இழிந்தோனிடத்து இரக்கும் இரப்புரையுமாம் எனக் கொள்க.

தலைவா ஈ - இழிந்தோன் இரப்பு

தோழா தா - ஒப்போன் இரப்பு

மைந்தா கொடு - உயர்ந்தோன் இரப்பு என வரும்

முன்னத்தின் உணரும் கிளவியும் உளவே

வெளிப்படையான் அன்றிக் குறிப்பினால் பொருள் அறியப்படும் சொற்களும் சில உளவாம்,

அவையாவன ஒன்றொழி பொதுச்சொல் முதற் சொல்லுவான் குறிப்பு ஈறாகப் பெயரியலிலே பன்னிரண்டாம் சூத்திரத்துச் சொல்லப்பட்டனவாம்.

குழை கொண்டு கோழி எறியும் வாழ்க்கையர் என்றவழிப், பெருஞ்செல்வ வாழ்க்கையர் என்பது குறிப்பினால் உணரப்பட்ட பொருளாம்.

கேட்பவர்கள் வருத்தப்படாமல் அவர்களுக்குப் பொருள்விளங்கச் சொல்லல் மரபு ஆதலால், இது வழுவமைதி ஆயிற்று.

**அஃறிணை மருங்கினும் அறையப்படுதல்:**

கேட்குந போலவும் கிளக்குந போலவும்

இயங்குந போலவும் இயற்றுந போலவும்

அ.ஃறிணை மருங்கினும் அறையப்படுமே

கேளாதனவற்றைக் கேட்பன போலவும் பேசாதனவற்றைப் பேசுவன போலவும் நடவாதனவற்றை நடப்பன போலவும்இத்தொழில்கள் அல்லன பிற செய்யாதனவற்றைச் செய்வன போலவும் அ.ஃறிணை இடத்தும் சொல்லப்படும்.

குறிப்பு

"நன்னீரை வாழி அனிச்சமே" என்புழிக் கேளாதது கேட்பது போலச் சொல்லப் பட்டது.

"பகைமையும் கேண்மையும் கண்ணுரைக்கும்" என்புழிப் , பேசாதது பேசுவது போலச் சொல்லப்பட்டது.

"இவ்வழி அவ்வூர்க்குப் போகும்" என்புழி, நடவாதது நடப்பதுபோலச் சொல்லப்பட்டது.

"தன்னெஞ்சே தன்னைச் சுடும்" என்புழிச்,செய்யாதது செய்வது போலச் சொல்லப் பட்டது.

**உருவக உவமைகள்:**

உருவக உவமையில் திணை சினை முதல்கள்

பிறழ்தலும் பிறவும் பேணினர் கொளலே

உருவகத்திலும் உவமையிலும் உயர்திணை அ.ஃறிணை ஆகிய இவை தம்முள் மயங்குதலும் பிறவும் போற்றிக் கொள்ள வேண்டும்

மன்னர் மடங்கல் மறையவர் சொன்மாலை

அன்ன நடையினர்க்கு ஆரமுதம் - துன்னும்

பரிசிலர்க்கு வானம் பனிமலர்ப்பூம் பைந்தார்

எரிசினவேல் தானை எங்கோ

இதில் அரசனைப் பகைமன்னர்க்குச் சிங்கமாகவும் மறையவர்க்குச் சொல் மாலையாகவும் உருவகித்திருப்பதனை அறியலாம். அரசன் - உயர்திணை – மடங்கல் - அ.ஃறிணை- இவ் உருகவத்தில் உயர்திணை அ.ஃறிணையோடு மயங்கி வந்தது.

மல்லல் மலையனைய மாதவரை வைதுரைக்கும்

அதிர் மலையனைய என:னும் உவமை வந்துள்ளது, மலை – அ.ஃறிணை- மாதவர் – உயர்திணை: இவ் உருகவத்தில் உயர்திணை அ.ஃறிணையோடு மயங்கி வந்தது.

**பொருள்கோள் :**

குறிப்பு

யாற்றுநீர் மொழிமாற்று நிரல்நிறை விற்பூண்

தாப்பிசை அளைமறிபாப்பு கொண்டுகூட்டு

அடிமறிமாற்று எனப் பொருள்கோள் எட்டே

யாற்றுநீர்ப் பொருள்கோளும் மொழிமாற்றுப் பொருள்கோளும் நிரனிறைப் பொருள்கோளும் விற்பூட்டுப் பொருள்கோளும் தாப்பிசைப் பொருள்கோளும் அளைமறி பாப்புப் பொருள்கோளும் கொண்டு கூட்டுப் பொருள்கோளும் அடிமறிமாற்றுப் பொருள்கோளும் எனப் பொருள் கோள் எட்டாம்.

### யாற்றுநீர்ப் பொருள்கோள்:

மற்றைய நோக்காது அடி தொறும் வான் பொருள்

அற்று அற்று ஒழுகும் அ.்.து யாற்றுப்புனலே

மொழிமாற்று முதலியவை போலப் பிறழ்ந்து செல்ல வேண்டாது யாற்று நீர் ஒழுக்குப்போல நெறிப்பட்டு அடிதோறும் சிறந்த பொருள் அற்று அற்று ஒழுகுவதாகிய அப்பொருள்கோள் யாற்று நீர்ப் பொருள்கோளாம்.

"சொல்லருஞ் சூற்பசும் பாம்பின் தோற்றம் போல்

மெல்லவே கருவிருந் தீன்று - மேலலார்

செல்வமே போற்றலை நிறுவித் தேர்ந்தநூற்

கல்விசேர் மாந்தரி னிறைஞ்சிக் காய்த்தவே"

என வரும். இப்பாட்டினுள் சொல் என்னும் எழுவாயினை முதல் எடுத்து, அதன் தொழிலாகிய இருந்து,ஈன்று, நிறுவி, இறைஞ்சி என்னும் வினை எச்சங்கள் ஒன்றனை ஒன்று கொள்ள இடையே முறை நிறுத்திக், காய்த்த என்னும் பயனிலையை இறுதியிலே தந்து முடித்தமையால், இப்பொருள் ஒழுகுதல் யாற்று நீர் ஒழுக்குப் போலுதல் காண்க.

### மொழிமாற்றுப் பொருள்கோள்:

ஏற்ற பொருளுக்கு இயையும் மொழிகளை

மாற்றி ஓர் அடியுள் வழங்கல் மொழிமாற்றே

ஏற்ற இரண்டு பயனிலைகளுக்குப் பொருந்தும் மொழிகளை மாற்றி ஏலாத பயனிலைகளுக்குத் தனித்தனி கூட்டி ஓர் அடியுள்ளே சொல்லும் பொருள்கோள் மொழிமாற்றுப் பொருள்கோளாம்.

குறிப்பு

“சுரையாழ அம்மி மிதப்ப வரையனைய

யானைக்கு நீத்து முயற்கு நிலையென்ப

கானக நாடன் சுனை”

என வரும். இதனுள், ஆழ என்னும் பயனிலைக்கு இயைந்த அம்மி என்னும் மொழியினை மிதப்ப என்னும் பயனிலைக்கும், மிதப்பவென்னும் பயனிலைக்கு இயைந்த சுரை யென்னும் மொழியினை ஆழவென்னும் பயனிலைக்கும், நீத்து என்னும் பயனிலைக்கு இயைந்த முயல்என்னும் மொழியினை நிலை என்னும் பயனிலைக்கும், நிலை என்னும் பயனிலைக்கு இயைந்த யானை என்னுமொழியினை நீத்து என்னும் பயனிலைக்குமாக மாற்றிப் பொருள் கொள்ளல் வேண்டும்.

## நிரனிறைப் பொருள்கோள்:

பெயரும் வினையுமாம் சொல்லையும்பொருளையும்

வேறு நிரல் நிறீஇ முறையினும் எதிரினும்

நேரும் பொருள்கோள் நிரல்நிறை நெறியே

பெயரும் வினையுமாகிய சொற்களையும் அவை கொள்ளும் பெயரும் வினையுமாகிய பயனிலைகளையும் வேறுவேறு வரிசையாக நிறுத்தி முறையாகவேனும் எதிராகவேனும் இதற்கு இது பயனிலை என்பதுபடக் கூறும் பொருள்கோள் நெறிப்பட்ட நிரல் நிறைப் பொருள்கோளாம்.

கொடிகுவளை கொட்டை நுசுப்புண்கண் மேனி –

மதிபவள முத்த முகம்வாய் முறுவல்

பிடிபிணை மஞ்ஞை நடைநோக்குச் சாயல்

வடிவினளே வஞ்சி மகள்

இது, கொடி நுசுப்பு, குவளை உண்கண், கொட்டை மேனி எனவும்; மதி முகம், பவளம் வாய்,முத்தம் முறுவல் எனவும்; பிடி நடை, பிணை நோக்கு, மஞ்ஞை சாயல் எனவும் பெயர்ச்சொற்களும் பெயர்ப் பயனிலைகளுமாய் நின்ற முறைநிரல் நிறை.

காதுசேர் தாழ்குழையாய் கன்னித் துறைச்சேர்ப்ப

போதுசேர் தார்மார்ப போர்ச்செழிய – நீதியான்

மண்ணமிர்த மங்கையர்தோள் மாற்றாரை யேற்றார்க்கு

குறிப்பு

நுண்ணிய வாய பொருள்.

இது, கா மண், து அமிர்தம், சேர் மங்கையர் தோள், தாழ் மாற்றாரை, குழை ஏற்றார்க்கு, ஆய் நுண்ணிய வாய பொருள் என வினைப் பயனிலைகளும் பெயர்களுமாய் நின்ற முறைநிரல் நிறை.

களிறுங் கந்தும் போல நளிகடற்

கூம்புங் கலனுந் தோன்றுந்

தோன்றன் மறந்தோர் துறைகெழு நாட்டே

இது, களிறு கலன், கந்து கூம்பு எனப் பெயர்ச்சொற்களும் பெயர்ப் பயனிலைகளுமாய் நின்ற எதிர்நிரல் நிறை

“ஆடவர்க ளெவ்வா றகன்றொழிவார் வெ·.காவும்

பாடகமு மூரகமும் பஞ்சரமா - நீடியமா

னின்றா னிருந்தான் கிடந்தானிது வன்றோ

மன்றார் மதிற்கச்சி மாண்பு.”

இது, வெ·.கா கிடந்தான், பாடகம் இருந்தான், ஊரகம் நின்றான் எனப் பெயர்ச் சொற்களும் வினைப் பயனிலைகளுமாய் நின்ற எதிர்நிரல் நிறை.

## பூட்டுவிற் பொருள்கோள்:

எழுவாய் இறுதி நிலை மொழி தம்முள்

பொருள் நோக்கு உடையது பூட்டுவில் ஆகும்

செய்யுள் முதலிலும் இறுதியிலும் நிற்கும் மொழிகள் தம்முள்ளே பொருளை நோக்குதலுடைய பொருள்கோள் பூட்டுவில் பொருள்கோளாம்.

திறந்திடுமின் றீயவை பிற்காண்டு மாத

ரிறந்து படிற்பெரிதா மேத - முறந்தையர்கோன்

றண்ணார மார்பிற் றமிழர் பெரு மானைக்

கண்ணாரக் காணக் கதவு”

இதிலே, திறந்திடுமின் கதவு என நோக்கிற்று. அதாவது திறந்திடுமின் என முதலில் நிற்கும் மொழியினையும் கதவு என இறுதியில் நிற்கும் மொழியினையும் இணைத்துத் திறந்திடுமின் கதவு எனப் பொருள் கொள்ள வேண்டும்.

குறிப்பு

## தாப்பிசைப் பொருள்கோள்:

இடை நிலை மொழியே ஏனைஈர் இடத்தும்

நடந்து பொருளை நண்ணுதல் தாப்பிசை

இடையிலே நிற்கும் மொழி ஒழிந்த முதலினும் ஈற்றினும் சென்று பொருளைக்கூடும் பொருள்கோள் தாப்பிசைப் பொருள்கோளாம்.

தாப்பிசை என்பதற்கு ஊசல்போல் இடைநின்று இருமருங்கும் செல்லும் சொல் என்பது பொருள். தாம்பு - ஊசல். இசை -சொல்.

“உண்ணாமை உள்ளது உயிர்நிலை ஊன் உண்ண

அண்ணாத்தல் செய்யாது அளறு”

இதனுள், ஊன் என இடையிலே நின்ற மொழி ஊனுண்ணாமை உள்ளது என முதலிலும், ஊன் உண்ண எனப் பின்னரும் சென்றுகூடுதல் காண்க.

## அளைமறிப் பாப்புப் பொருள்கோள்:

செய்யுள் இறுதி மொழி இடை முதலினும்

எய்திய பொருள்கோள் அளைமறிபாப்பே

செய்யுளில் இறுதியில் நின்றசொல்இடையிலும் முதலிலும் சென்ற பொருள்கோள் அளைமறிபாப்புப் பொருள்கோளாம்.

புற்றிலே தலைவைத்து மடங்கும் பாம்பு போலுதலால், அப்பெயர் பெற்றது. அளை - புற்று. மறிதல் - மடங்குதல்.

”தாழ்ந்த உணர்வினராய்த் தாளுடைந்து

தண்டூன்றித் தளர்வார் தாமுஞ்

சூழ்ந்த வினையாக்கை சுடவிளிந்து

நாற்கதியிற் சுழல்வார் தாமும்

மூழ்ந்த பிணிநலிய முன்செய்த

வினையென்றே முனிவார் தாமும்

வாழ்ந்தபொழுதினே

வானெய்தும் நெறி முன்னி முயலா தாரே” என வரும்.

குறிப்பு

இதனுள், வாழ்ந்த பொழுதினே

வானெய்து நெறி முன்னி முயலாதார்

மூழ்ந்த பிணி நலிய முன் செய்த

வினையென்றே முனிவார்

சூழ்ந்த வினையாக்கை சுடவிளிந்து

நாற்கதியில் சுழல்வார்,

தாழ்ந்த உணர்வினராய்த் தாளுடைந்து

தண்டூன்றித் தளர்வார்

- எனத் தலைகீழாய் இடையிலும் முதலிலும் சென்று கூடுதல் காண்க.

### கொண்டுகூட்டுப் பொருள்கோள்:

யாப்பு அடி பலவினும் கோப்புடை மொழிகளை

ஏற்புழி இசைப்பது கொண்டுகூட்டே

செய்யுள் அடிகள் பலவற்றினும் கோக்கப் படுதலையுடைய சொற்களை, எடுத்த பொருளுக்கு ஏற்ற இடத்துக் கூட்டும் பொருள்கோள் கொண்டுகூட்டுப் பொருள்கோளாம்.

"தெங்கங்காய் போலத் திரண்டுருண்ட பைங்கூந்தல்

வெண்கோழி முட்டை யுடைத்தன்ன மாமேனி

யஞ்சனத்தன்ன பசலை தணிவாமே

வங்கத்துச் சென்றார் வரின்" என வரும்.

இதனுள், வங்கத்துச் சென்றார் வரின் அஞ்சனத்தன்ன பைங்கூந்தலையுடையாளது மாமேனிமேல் தெங்கங்காய் போலத் திரண்டு உருண்டகோழிவெண்முட்டை உடைத்தன்ன பசலை தணிவாம் எனக் கொண்டு கூட்டுக.

### அடிமறிமாற்றுப் பொருள்கோள்:

ஏற்புழி எடுத்து உடன் கூட்டுறும் அடியவும்

யாப்பு ஈறு இடை முதல் ஆக்கினும் பொருள் இசை

மாட்சியும் மாறா அடியவும் அடிமறி

குறிப்பு

பொருளுக்கு ஏற்கும் இடத்து எடுத்து நீங்காது கூட்டும் அடியை உடையவையும் யாதானும் ஓர் அடியை எடுத்து அச்செய்யுளின் இறுதி நடு முதல்களில் யாதானும் ஓரிடத்துக் கூட்டினும் பொருளோடு ஓசை மாட்சியும் ஓசை ஒழியப் பொருள் மாட்சியும் வேறுபடாத அடியை உடையவையும்அடிமறிமாற்றுப் பொருள்கோளாம்.

நடுக்குற்றுத் தற்சேர்ந்தார் துன்பந் துடையார்

கொடுத்துத் தான் றுய்ப்பினும் ஈண்டுங்கா லீண்டு

மிடுக்குற்றுப் பற்றினு நில்லாது செல்வம்

விடுக்கும் வினையுலந்தக் கால்”

என்பதனுள், கொடுத்துத்தான் றுய்ப்பினு மீண்டுங்கால் ஈண்டும் விடுக்கும் வினை உலந்தக்கால் இடுக்குற்றுப் பற்றினும் நில்லாது செல்வம் (இ∴தறியார்) நடுக்குற்றுத் தற்சேர்ந்தார் துன்பம் துடையார் என அடிகளை ஏற்கும் இடத்து எடுத்துக் கூட்டுக.

”மாறாக் காதலர் மலைமறந் தனரே

யாறாக் கட்பனி வரலா னாவே

வேறா மென்றோள் வளை நெகி ழும்மே

கூறாய் தோழியான் வாழுமாறே

இதனுள் எவ்வடியைஎங்கே கூட்டினும் பொருளும் ஓசையும் வேறுபடாமை காண்க.

அலைப்பான் பிறிதுயிரை யாக்கலுங்குற்றம்

விலைப்பாலிற் கொண்டூன் மிசைதலுங் குற்றம்

சொலற் பால வல்லாத சொல்லுதலுங் குற்றங்

கொலைப்பாலுங் குற்றமேயாம்.

இதனுள்,ஈற்றடி ஒழிந்த மூன்றடியுள் யாதானும் ஒன்றை எடுத்து யாதானும் ஓரிடத்துக் கூட்டி உச்சரித்துப் பொருளும் ஓசையும் வேறுபடாமையும்,ஈற்றடியை எடுத்து யாதானும் ஓரிடத்துக் கூட்டி உச்சரித்து ஓசை வேறுபட்டுப் பொருள் வேறுபடாமையும் காண்க.

## பயிற்சி வினாக்களா:

1.அறுவகை வினாக்கள் குறித்து எழுதுக.

அறுவகை வினா:

அறிவு அறியாமை ஐயுறல் கொளல் கொடை

ஏவல் தரும் வினா ஆறும் இழுக்கார்

குறிப்பு

அறிவு அறியாமை ஐயுறல் கொள்ளுதலும் கொடுத்தலும் ஏவுதலும் ஆகிய அறுவகைப் பொருளையும் தருதலால் வரும் வினாக்கள் ஆறனையும் களையாது கொள்வர் புலவர்.

ஆசிரியன் இச்சூத்திரத்திற்குப் பொருள்யாது என வினவுவது

- அறிவினா.

மாணாக்கன் அப்படிச் சொல்வது - அறியா வினா.

குற்றியோ மகனோ - ஐய வினா.

பயறு உளதோ வணிகீர் - கொளல் வினா.

சாத்தனுக்கு ஆடையில்லையா - கொடை வினா.

சாத்தா உண்டாயா - ஏவல் வினா

2.எண்வகை விடைகள் யாவை?.

எண்வகை விடை:

சுட்டு மறை நேர் ஏவல் வினாதல்

உற்றது உரைத்தல் உறுவது கூறல்

இனமொழி எனும் எண் இறையுள் இறுதி

நிலவிய ஐந்தும் அப் பொருண்மையின் நேர்ப

சுட்டும்,எதிர்மறுத்தலும் உடன்படலும், ஏவுதலும், எதிர்வினாவுதலும், உற்றதைச் சொல்லுதலும் உறுவதைச் சொல்லுதலும்,இனத்தைச் சொல்லுதலும், என்னும் இவ் எட்டு விடைகளுள் ஈற்றில் விளங்கிய ஐந்தும் அவ்விடைப் பொருளைத் தருதலினாலே விடைகளாகவே தழுவிக் கொள்வார் புலவர்.

எனவே, முதன் மூன்றும் செவ்வன் இறையும், பின்னைய ஐந்தும் இறைபயப்பனவுமாம் என்பது ஆயிற்று.

தில்லைக்கு வழி யாது எனின், இது என்பது சுட்டு விடை.

சாத்தா இது செய்வாயா என்ற போது, செய்யேன் என்பது மறைவிடை

செய்வேன் என்பது நேர்விடை.

நீ செய் என்பது ஏவல் விடை.

செய்வேனோ என்பது வினாவிடை.

உடம்பு நொந்தது, நோவாநின்றது என்பன உற்றது உரைத்தல் விடை.

உடம்பு நோம் என்பது உறுவது கூறல் விடை.

மற்றையது செய்வேன் என்பது இனமொழிவிடை

3.ஈ,தா,கொடு என்பன எவ்வாறு வரும்?

இரப்புரைச் சொற்கள்:

ஈ தா கொடு எனும் மூன்றும் முறையே

இழிந்தோன் ஒப்போன் மிக்கோன் இரப்புரை

ஈ, தா, கொடு என்னும் மூன்று சொற்களும் முறையே இழிந்தவனும் ஒப்பவனும் உயர்ந்தவனும் இரத்தற்கு வரும் சொற்களாகும்.

எனவே, "ஈ" என்பது இழிந்தோன் உயர்ந்தோனிடத்து இரக்கும் இரப்புரையும் 'தா' என்பது உயர்ந் தோன் இழிந்தோனிடத்து இரக்கும் இரப்புரையுமாம் எனக் கொள்க.

தலைவா ஈ - இழிந்தோன் இரப்பு

தோழா தா - ஒப்போன் இரப்பு

மைந்தா கொடு - உயர்ந்தோன் இரப்பு என வரும்

4..இனைத்தென அறிபொருளை எவ்வாறு சுட்டல் வேண்டும்?

இனைத்தென அறி பொருள்:

இனைத்து என்று அறி பொருள் உலகின் இலாப் பொருள்

வினைப்படுத்து உரைப்பின் உம்மை வேண்டும்

இவ் அளவினது என்று வரையறை உணரப்படும் பொருளும் எக்காலத்தும் எவ் இடத்தும் இல்லாத பொருளும் வினைப்படுத்துச் சொல்லும் போது முற்றும்மையைச் சேர்த்துச்சொல்லவேண்டும்.

தமிழ்நாட்டு மூவேந்தரும் வந்தார்

இறைவற்குக் கண் மூன்றும் முச்சுடர்

குறிப்பு

வேதம் நான்கும் உணர்ந்தான்

- என இனைத்து என்று அறி பொருள்கள் வினைப்படுத்துச் *சொல்லும் போது முற்றும்மை வேண்டி நின்றன.*

**குறிப்பு**

முயற்கோடு ஆகாயப்பூ என்றும் இல்லை

ஒளி முன்இருள் எங்கும் இல்லை

- என உலகின் இலாப் பொருள்கள் வினைப்படுத்துச் சொல்லும் போது முற்றும்மை வேண்டி நின்றன.

5.இயற்கைப்பொருள், செயற்கைப்பொருள் குறித்து எழுதுக.

இயற்கைப் பொருள்:

இயற்கைப் பொருளை இற்றெனக் கிளத்தல்

இயற்கைப் பொருள், செயற்கைப்பொருள் என இருவகைப்படும் பொருள்களுள் இயற்கைப் பொருளை,இத்தன்மைத்து என்று சொல்லுதல் வேண்டும்.

இயற்கைப் பொருள் தனக்குப் பின்தோன்றாது தான்தோன்றும்போது உடன்தோன்றிய தன்மையை உடைய பொருள்

செயற்கைப் பொருள் தனக்கும் பின்தோன்றிய தன்மையை உடைய பொருள்

நிலம் வலிது ; நீர் தண்ணிது ; தீ வெய்து ; மயிர் கரிது ; பால் வெளிது ; பயிர் பசியது ; மெய் உள்ளது ; பொய் இல்லது எனவரும்.

இயற்கைப் பொருளை இற்று என்னும் வினைக்குறிப்பாகிய செயற்படுத்துக் கூறுதலின், இது வழுவமைதி ஆயிற்று.

செயற்கைப் பொருள்:

காரணம் முதலா ஆக்கம் பெற்றும்

காரணம் இன்றி ஆக்கம் பெற்றும்

ஆக்கம் இன்றிக் காரணம் அடுத்தும்

இருமையும் இன்றியும் இயலும் செயும் பொருள்

செயற்கைப் பொருள், காரணச்சொல் முன்வர ஆக்கச்சொல் பின்வரப் பெற்றும், காரணச்சொல் தொக்கு நிற்க ஆக்கச் சொல் வரப்பெற்றும் ஆக்கச்சொல் தொக்கு நிற்கக் காரணச்சொல் வரப்பெற்றும்இவ் இருவகைச் சொல்லும் தொக்கு நிற்கவும் நடக்கும் .

கடுவுங் கைபிழி யெண்ணெயும் பெற்றமையான் மயிர் நல்லவாயின:

எருப்பெய்து இளங்களைகட்டு நீர்கால் யாத்தமையால் பயிர் நல்ல வாயின

குறிப்பு

- இவை முன் காரணச்சொல்லும் பின் ஆக்கச்சொல்லும் வரப்பெற்றன.

மயிர் நல்லவாயின பயிர்நல்ல வாயின

- இவை காரணச்சொல் தொக்கு நிற்க ஆக்கச்சொல் வரப்பெற்றன .

கடுவும் கைபிழி எண்ணெயும் பெற்றமையான் மயிர் நல்ல

எருப் பெய்து இளங்களை கட்டு நீர்கால் யாத்தமையால் பயிர் நல்ல

- இவை ஆக்கச்சொல் தொக்கு காரணச்சொல் வரப்பெற்றன

மயிர் நல்ல

பயிர்நல்ல

- இவை காரணச்சொல் ஆக்கச் சொல் இரண்டும் தொக்கு நிற்கப் பெற்றன.

காரணமுதலா ஆக்கம் பெறுதல் ஒன்றும் வழுவாமல் காத்தலும் ஒழிந்த மூன்றும் வழுவமைதியுமாம் என்க.

6.பொருள்கோள் என்பதனை விளக்கி வரைக.

பொருள்கோள் :

யாற்றுநீர் மொழிமாற்று நிரல்நிறை விற்பூண்

தாப்பிசை அளைமறிபாப்பு கொண்டுகூட்டு

அடிமறிமாற்று எனப் பொருள்கோள் எட்டே

யாற்றுநீர்ப் பொருள்கோளும் மொழிமாற்றுப் பொருள்கோளும் நிரனிறைப் பொருள்கோளும் விற்பூட்டுப் பொருள்கோளும் தாப்பிசைப் பொருள்கோளும் அளைமறி பாப்புப் பொருள்கோளும் கொண்டு கூட்டுப் பொருள்கோளும் அடிமறிமாற்றுப் பொருள்கோளும் எனப் பொருள் கோள் எட்டாம்.

யாற்றுநீர்ப் பொருள்கோள்:

மற்றைய நோக்காது அடி தொறும் வான் பொருள்

குறிப்பு

அற்று அற்று ஒழுகும் அஃது யாற்றுப்புனலே

மொழிமாற்று முதலியவை போலப் பிறழ்ந்து செல்ல வேண்டாது யாற்று நீர் ஒழுக்குப்போல நெறிப்பட்டு அடிதோறும் சிறந்த பொருள் அற்று அற்று ஒழுகுவதாகிய அப்பொருள்கோள் யாற்று நீர்ப் பொருள்கோளாம்.

"சொல்லருஞ் சூற்பசும் பாம்பின் தோற்றம் போல்

மெல்லவே கருவிருந் தீன்று - மேலலார்

செல்வமே போற்றலை நிறுவித் தேர்ந்தநூற்

கல்விசேர் மாந்தரி னிறைஞ்சிக் காய்த்தவே"

என வரும். இப்பாட்டினுள் சொல் என்னும் எழுவாயினை முதல் எடுத்து, அதன் தொழிலாகிய இருந்து,ஈன்று, நிறுவி, இறைஞ்சி என்னும் வினை எச்சங்கள் ஒன்றனை ஒன்று கொள்ள இடையே முறை நிறுத்திக்,காய்த்த என்னும் பயனிலையை இறுதியிலே தந்து முடித்தமையால், இப்பொருள் ஒழுகுதல் யாற்று நீர் ஒழுக்குப் போலுதல் காண்க.

மொழிமாற்றுப் பொருள்கோள்:

ஏற்ற பொருளுக்கு இயையும் மொழிகளை

மாற்றி ஓர் அடியுள் வழங்கல் மொழிமாற்றே

ஏற்ற இரண்டு பயனிலைகளுக்குப் பொருந்தும் மொழிகளை மாற்றி ஏலாத பயனிலைகளுக்குத் தனித்தனி கூட்டி ஓர் அடியுள்ளே சொல்லும் பொருள்கோள் மொழிமாற்றுப் பொருள்கோளாம்.

"சுரையாழ அம்மி மிதப்ப வரையனைய

யானைக்கு நீத்து முயற்கு நிலையென்ப

கானக நாடன் சுனை"

என வரும். இதனுள், ஆழ என்னும் பயனிலைக்கு இயைந்த அம்மி என்னும் மொழியினை மிதப்ப என்னும் பயனிலைக்கும், மிதப்பவென்னும் பயனிலைக்கு இயைந்த சுரை யென்னும் மொழியினை ஆழவென்னும் பயனிலைக்கும், நீத்து என்னும் பயனிலைக்கு இயைந்த முயல்என்னும் மொழியினை நிலை என்னும் பயனிலைக்கும், நிலை என்னும் பயனிலைக்கு இயைந்த யானை என்னுமொழியினை நீத்து என்னும் பயனிலைக்குமாக மாற்றிப் பொருள் கொள்ளல் வேண்டும்.

நிரனிறைப் பொருள்கோள்:

பெயரும் வினையுமாம் சொல்லையும்பொருளையும்

வேறு நிரல் நிறீஇ முறையினும் எதிரினும்

நேரும் பொருள்கோள் நிரல்நிறை நெறியே

குறிப்பு

பெயரும் வினையுமாகிய சொற்களையும் அவை கொள்ளும் பெயரும் வினையுமாகிய பயனிலைகளையும் வேறுவேறு வரிசையாக நிறுத்தி முறையாகவேனும் எதிராகவேனும் இதற்கு இது பயனிலை என்பதுபடக் கூறும் பொருள்கோள் நெறிப்பட்ட நிரல் நிறைப் பொருள்கோளாம்.

கொடிகுவளை கொட்டை நுசுப்புண்கண் மேனி –

மதிபவள முத்த முகம்வாய் முறுவல்

பிடிபிணை மஞ்ஞை நடைநோக்குச் சாயல்

வடிவினளே வஞ்சி மகள்

இது, கொடி நுசுப்பு, குவளை உண்கண், கொட்டை மேனி எனவும்; மதி முகம், பவளம் வாய்,முத்தம் முறுவல் எனவும்; பிடி நடை, பிணை நோக்கு, மஞ்ஞை சாயல் எனவும் பெயர்ச்சொற்களும் பெயர்ப் பயனிலைகளுமாய் நின்ற முறைநிரல் நிறை.

காதுசேர் தாழ்குழையாய் கன்னித் துறைச்சேர்ப்ப

போதுசேர் தார்மார்ப போர்ச்செழிய – நீதியான்

மண்ணமிர்த மங்கையர்தோள் மாற்றாரை யேற்றார்க்கு

நுண்ணிய வாய பொருள்.

இது, கா மண், து அமிர்தம், சேர் மங்கையர் தோள், தாழ் மாற்றாரை, குழை ஏற்றார்க்கு, ஆய் நுண்ணிய வாய பொருள் என வினைப் பயனிலைகளும் பெயர்களுமாய் நின்ற முறைநிரல் நிறை.

களிறுங் கந்தும் போல நளிகடற்

கூம்புங் கலனுந் தோன்றுந்

தோன்றன் மறந்தோர் துறைகெழு நாட்டே

இது, களிறு கலன், கந்து கூம்பு எனப் பெயர்ச்சொற்களும் பெயர்ப் பயனிலைகளுமாய் நின்ற எதிர்நிரல் நிறை

”ஆடவர்க ளெவ்வா றகன்றொழிவார் வெ.்.காவும்

பாடகமு மூரகமும் பஞ்சரமா – நீடியமா

னின்றா னிருந்தான் கிடந்தானிது வன்றோ

மன்றார் மதிற்கச்சி மாண்பு."

**குறிப்பு**

இது, வெ∴கா கிடந்தான், பாடகம் இருந்தான், ஊரகம் நின்றான் எனப் பெயர்ச் சொற்களும் வினைப் பயனிலைகளுமாய் நின்ற எதிர்நிரல் நிறை.

பூட்டுவிற் பொருள்கோள்:

எழுவாய் இறுதி நிலை மொழி தம்முள்

பொருள் நோக்கு உடையது பூட்டுவில் ஆகும்

செய்யுள் முதலிலும் இறுதியிலும் நிற்கும் மொழிகள் தம்முள்ளே பொருளை நோக்குதலுடைய பொருள்கோள் பூட்டுவில் பொருள்கோளாம்.

திறந்திடுமின் றீயவை பிற்காண்டு மாத

ரிறந்து படிற்பெரிதா மேத - முறந்தையர்கோன்

றண்ணார மார்பிற் றமிழர் பெரு மானைக்

கண்ணாரக் காணக் கதவு"

இதிலே, திறந்திடுமின் கதவு என நோக்கிற்று. அதாவது திறந்திடுமின் என முதலில் நிற்கும் மொழியினையும் கதவு என இறுதியில் நிற்கும் மொழியினையும் இணைத்துத் திறந்திடுமின் கதவு எனப் பொருள் கொள்ள வேண்டும்.

தாப்பிசைப் பொருள்கோள்:

இடை நிலை மொழியே ஏனைஈர் இடத்தும்

நடந்து பொருளை நண்ணுதல் தாப்பிசை

இடையிலே நிற்கும் மொழி ஒழிந்த முதலினும் ஈற்றினும் சென்று பொருளைக்கூடும் பொருள்கோள் தாப்பிசைப் பொருள்கோளாம்.

தாப்பிசை என்பதற்கு ஊசல்போல் இடைநின்று இருமருங்கும் செல்லும் சொல் என்பது பொருள். தாம்பு - ஊசல். இசை -சொல்.

"உண்ணாமை உள்ளது உயிர்நிலை ஊன் உண்ண

அண்ணாத்தல் செய்யாது அளறு"

இதனுள், ஊன் என இடையிலே நின்ற மொழி ஊனுண்ணாமை உள்ளது என முதலிலும், ஊன் உண்ண எனப் பின்னரும் சென்றுகூடுதல் காண்க.

அளைமறிப் பாப்புப் பொருள்கோள்:

செய்யுள் இறுதி மொழி இடை முதலினும்
எய்திய பொருள்கோள் அளைமறிபாப்பே

செய்யுளில் இறுதியில் நின்றசொல்இடையிலும் முதலிலும் சென்ற பொருள்கோள் அளைமறிபாப்புப் பொருள்கோளாம்.

புற்றிலே தலைவைத்து மடங்கும் பாம்பு போலுதலால், அப்பெயர் பெற்றது. அளை - புற்று. மறிதல் - மடங்குதல்.

"தாழ்ந்த உணர்வினராய்த் தாளுடைந்து

தண்டூன்றித் தளர்வார் தாமுஞ்

சூழ்ந்த வினையாக்கை சுடவிளிந்து

நாற்கதியிற் சுழல்வார் தாமும்

மூழ்ந்த பிணிநலிய முன்செய்த

வினையென்றே முனிவார் தாமும்

வாழ்ந்தபொழுதினே

வானெய்தும் நெறி முன்னி முயலா தாரே" என வரும்.

இதனுள், வாழ்ந்த பொழுதினே

வானெய்து நெறி முன்னி முயலாதார்

மூழ்ந்த பிணி நலிய முன் செய்த

வினையென்றே முனிவார்

சூழ்ந்த வினையாக்கை சுடவிளிந்து

நாற்கதியில் சுழல்வார்,

தாழ்ந்த உணர்வினராய்த் தாளுடைந்து

தண்டூன்றித் தளர்வார்

- எனத் தலைகீழாய் இடையிலும் முதலிலும் சென்று கூடுதல் காண்க.

கொண்டுகூட்டுப் பொருள்கோள்:

யாப்பு அடி பலவினும் கோப்புடை மொழிகளை

குறிப்பு

ஏற்புழி இசைப்பது கொண்டுகூட்டே

செய்யுள் அடிகள் பலவற்றினும் கோக்கப் படுதலையுடைய சொற்களை, எடுத்த பொருளுக்கு ஏற்ற இடத்துக் கூட்டும் பொருள்கோள் கொண்டுகூட்டுப் பொருள்கோளாம்.

"தெங்கங்காய் போலத் திரண்டுருண்ட பைங்கூந்தல்

வெண்கோழி முட்டை யுடைத்தன்ன மாமேனி

யஞ்சனத்தன்ன பசலை தணிவாமே

வங்கத்துச் சென்றார் வரின்" என வரும்.

இதனுள், வங்கத்துச் சென்றார் வரின் அஞ்சனத்தன்ன பைங்கூந்தலையுடையாளது மாமேனிமேல் தெங்கங்காய் போலத் திரண்டு உருண்டகோழிவெண்முட்டை உடைத்தன்ன பசலை தணிவாம் எனக் கொண்டு கூட்டுக.

அடிமறிமாற்றுப் பொருள்கோள்:

ஏற்புழி எடுத்து உடன் கூட்டுறும் அடியவும்

யாப்பு ஈறு இடை முதல் ஆக்கினும் பொருள் இசை

மாட்சியும் மாறா அடியவும் அடிமறி

பொருளுக்கு ஏற்கும் இடத்து எடுத்து நீங்காது கூட்டும் அடியை உடையவையும் யாதானும் ஓர் அடியை எடுத்து அச்செய்யுளின் இறுதி நடு முதல்களில் யாதானும் ஓரிடத்துக் கூட்டினும் பொருளோடு ஓசை மாட்சியும் ஓசை ஒழியப் பொருள் மாட்சியும் வேறுபடாத அடியை உடையவையும்அடிமறிமாற்றுப் பொருள்கோளாம்.

நடுக்குற்றுத் தற்சேர்ந்தார் துன்பந் துடையார்

கொடுத்துத் தான் றுய்ப்பினும் ஈண்டுங்கா லீண்டு

மிடுக்குற்றுப் பற்றினு நில்லாது செல்வம்

விடுக்கும் வினையுலந்தக் கால்"

என்பதனுள், கொடுத்துத்தான் றுய்ப்பினு மீண்டுங்கால் ஈண்டும் விடுக்கும் வினை உலந்தக்கால் இடுக்குற்றுப் பற்றினும் நில்லாது செல்வம்

(இ.'.தறியார்) நடுக்குற்றுத் தற்சேர்ந்தார் துன்பம் துடையார் என அடிகளை ஏற்கும் இடத்து எடுத்துக் கூட்டுக.

குறிப்பு

"மாறாக் காதலர் மலைமறந் தனரே

யாறாக் கட்பனி வரலா னாவே

வேறா மென்றோள் வளை நெகி ழும்மே

கூறாய் தோழியான் வாழுமாறே

இதனுள் எவ்வடியையெங்கே கூட்டினும் பொருளும் ஓசையும் வேறுபடாமை காண்க.

அலைப்பான் பிறிதுயிரை யாக்கலுங்குற்றம்

விலைப்பாலிற் கொண்டூன் மிசைதலுங் குற்றம்

சொலற் பால வல்லாத சொல்லுதலுங் குற்றங்

கொலைப்பாலுங் குற்றமேயாம்.இதனுள்,

ஈற்றடி ஒழிந்த மூன்றடியுள் யாதானும் ஒன்றை எடுத்து யாதானும் ஓரிடத்துக் கூட்டி உச்சரித்துப் பொருளும் ஓசையும் வேறுபடாமையும்,ஈற்றடியை எடுத்து யாதானும் ஓரிடத்துக் கூட்டி உச்சரித்து ஓசை வேறுபட்டுப் பொருள் வேறுபடாமையும் காண்க.

## கூறு - 12

## இடையியல்

வேற்றுமை வினை சாரியை ஒப்பு உருபுகள்

தத்தம் பொருள இசைநிறை அசைநிலை

குறிப்பு என் எண் பகுதியின் தனித்து இயல் இன்றிப்

பெயரினும் வினையினும் பின் முன் ஓர் இடத்து

ஒன்றும்˙ பலவும் வந்து ஒன்றுவது இடைச்சொல்

ஐம் முதலிய வேற்றுமை உருபுகள், விகுதிகளும் இடைநிலைகளும் ஆகிய வினை உருபுகள், அன் ஆன் முதலிய சாரியை உருபுகள், போலப் புரைய முதலிய உவம உருபுகள்,பிறவாறு தத்தமக்கு உரிய பொருளை உணர்த்தி வருபவை, வேறு பொருள் இன்றி இசைநிறையே பொருளாக வருபவை, அசைநிலையே பொருளாக நிற்பவை,வெளிப்படையின் வரும் இவை போலாது ஒலி, அச்சம், விரைவு,இவற்றைக் குறிப்பால் உணர்த்தி வருபவை,என்னும்

குறிப்பு

எட்டுவகையினை உடையனவாய் தனித்து நடத்தல் இன்றிப் பெயரின் அகத்தும் வினையின் அகத்தும் அவற்றின் புறமாகிய பின்னும் முன்னும் இவ்விடங்கள் ஆறனுள் ஓரிடத்து,ஒன்றாயினும் பலவாயினும் வந்து அப்பெயர் வினைகளுக்கு அகத்து உறுப்பாயும் புறத்து உறுப்பாயும் ஒன்றுபட்டு நடக்கும் தன்மையது இடைச்சொல் ஆகும்.

பெயர்ச்சொல் வினைச்சொற்களும் ஆகாது அவற்றின் வேறும் ஆகாது இடைநிகரனவாய் நிற்றலின் இடைச் சொல் எனப்பட்டன. தனித்து நடத்தல் இன்றிப் பெயர் வினைகள் இடமாக நடத்தலின், இடைச்சொல் எனப்பட்டன எனினும் அமையும்.

இசைநிறை என்பது வேறுபொருள் உணர்த்தாது செய்யுளில் ஓசையை நிறைத்து நிற்பது.

அசைநிலை என்பது வேறுபொருள் உணர்த்தாது பெயர்ச்சொல்லோடும் வினைச்சொல்லோடும் சார்த்திச் சொல்லப்பட்டு நிற்பது.

குழையன் என்பதில் பெயரின் அகத்து உறுப்பாய் விகுதி இடைச்சொல் ஒன்று வந்தது.

'தச்சிச்சி' நிலத்தினன்' என்பதில், பெயரின் அகத்து உறுப்பாய் முறையே இடைநிலையும் விகுதியும், இடைநிலையும் சாரியையும் விகுதியுமாகிய இடைச்சொற்கள் பல வந்தன.

உண்ணாய் என்புழி வினையின் அகத்துறுப்பாய் விகுதி இடைச்சொல் ஒன்று வந்தது. நடந்தான் நடந்தனன் என்பதில் வினையின் அகத்துறுப்பாய் முறையே இடைநிலையும் விகுதியும், இடைநிலையும் சாரியையும் விகுதியுமாகிய இடைச்சொற்கள் பல வந்தன.

அதுமன், கொன்னூர் என்பதில், பெயரின் புறத்து உறுப்பாய்ப் பின்னும் முன்னும் ஒன்று வந்தது. அது மற்றம்ம, இனி மற்றொன்று என்புழிப் பெயரின் புறத்துறுப்பாய்ப் பின்னும் முன்னும் பல வந்தன.

வந்தானோ, ஐயோ இறந்தான் என்பதில் வினையின் புறத்து உறுப்பாய்ப் பின்னும் முன்னும் ஒன்று வந்தது.

கொன்றான் கூகூ, சீசீ போ என்றவழி, வினையின் புறத்து உறுப்பாய்ப் பின்னும் முன்னும் பல வந்தன.

### இடைச்சொற்களின் பொருள்:

தெரிநிலை தேற்றம் ஐயம் முற்று எண் சிறப்பு

எதிர்மறை எச்சம் வினா விழைவு ஒழியிசை

பிரிப்பு கழிவு ஆக்கம் இன்னன இடைப் பொருள்

தெரிநிலை, தெளிவு,ஐயம்,முற்று, எண், சிறப்பு, எதிர்மறை, எச்சம், வினா, விருப்பம், ஒழியிசை, பிரிநிலை, கழிவு, ஆக்கம்,இவை போல்வன பிறவும் இடைச்சொற்களுடைய பொருள்களாம் .

குறிப்பு

இன்னன என்றதனால் சில வருமாறு :-

அ, இ, உ என்பன சுட்டுப்பொருளைத் தருவன.

எ,ஏ, யா,ஆ, ஓ என்பன வினாப்பொருளைத் தருவன.

முன், பின் என்பன காலப்பொருளையும் இடப்பொருளையும் தருவன.

இனி என்பது கால இடங்களின் எல்லைப் பொருளைத் தருவது.

தொறும், தோறும் என்பன இடப்பன்மைப் பொருளையும் தொழில் பயில்வுப் பொருளையும் தருவன.

வாளா, சும்மா என்பன பயன் இன்மைப் பொருளைத் தருவன.

ஆவது,ஆதல், ஆயினும், தான் என்பன விகற்பப் பொருளைத் தருவன.

ஐயோ, அந்தோ முதலியவை இரக்கப் பொருளைத் தருவன.

ஆ, அம்ம, ஓ, ஓகோ முதலியவை வியப்புப் பொருளைத் தருவன.

கூகூ,ஐயோ முதலியவை அச்சப்பொருளைத் தருவன.

சீ, சிச்சீ, சை முதலியவை இகழ்ச்சிப் பொருளைத் தருவன.

குறிப்பின்வரும் இடைச் சொற்கள் வருமாறு :-

அம்மென, இம்மென, கோவென, சோவென, துடுமென, ஒல்லென, க∴றென,சு∴றென எனவும் கடகடென, களகளென, திடுதிடென, நெறுநெறென, படபடென எனவும் வருவன ஒலிக்குறிப்புப் பொருளைத் தருவன.

துண்ணென, துணுக்கென, திட்கென, திடுக்கென என்றால் போல்வன அச்சக் குறிப்புப் பொருளைத் தருவன.

பொள்ளென, பொருக்கென, கதுமென, ஞெரேலென, சரேலென, என்றால்போல்வன விரைவுக் குறிப்புப் பொருளைத் தருவன.

## ஏகார இடைச்சொல்:

பிரிநிலை வினா எண் ஈற்றசை தேற்றம்

இசைநிறை என ஆறு ஏகாரம்மே

குறிப்பு

பிரிநிலை, வினா, எண்,ஈற்றசை, தெளிவு,இசைநிறை என்று ஆறு பொருளைத் தரும் ஏகார இடைச் சொல்.

அவருள் இவனே கள்வன் - இங்கே ஒரு கூட்டத்தினின்றும் ஒருவனைப் பிரித்து நிற்றலால் பிரிநிலை.

நீயே கொண்டாய் - இங்கே நீயா கொண்டாய் என்னும் பொருளைத் தரும் இடத்து வினா.

நிலமே நீரே தீயே வளியே - இங்கே நிலமும் நீரும் தீயும் வளியும் எனப் பொருள்பட எண்ணி நிற்றலால் எண்.

என்றும் ஏத்தித் தொழுவோம் யாமே" - இங்கே வேறு பொருள் இன்றி இறுதியிலே சார்த்தப்பட்டு நிற்றலால் ஈற்றசை.

உண்டே மறுமை - இங்கே உண்டு என்பதற்கு ஐயம் இல்லை என்னும் தெளிவுப் பொருளைத் தருதலால் தேற்றம்.

ஏயே இவளொருத்தி பேடியோ என்றார்"- இங்கே வேறுபொருள் இன்றிச் செய்யுளில் இசை நிறைத்து நிற்றலால் இசைநிறை.

அவனே கொண்டான் என்பது ஓர் ஓரிடத்து அவன் கொண்டிலன் என எதிர்மறைப் பொருள் பட நிற்றல் புதியன புகுதலும் வழுவல என்பதனால் கொள்க.

## ஓகார இடைச்சொல்:

ஒழியிசை வினா சிறப்பு எதிர்மறை தெரிநிலை

கழிவு அசைநிலை பிரிப்பு என எட்டு ஓவே

ஒழியிசை, வினா, சிறப்பு, எதிர்மறை, தெரிநிலை, கழிவு, அசைநிலை, பிரிநிலை, என்று எட்டுப் பொருளைத்தரும் ஓகார இடைச் சொல்.

சிறப்பு, உயர்வுசிறப்பும் இழிவுசிறப்பும் என இருவகைப்படும். உயர்வுசிறப்பு ஒரு பொருளினது உயர்வைச் சிறப்பித்தல்.இழிவுசிறப்பு ஒரு பொருளினது இழிவைச் சிறிப்பித்தல், இங்கே சிறப்பித்தல் என்றது, உயர்வே ஆயினும் இழிவே ஆயினும் அதனது மிகுதியை விளக்குதல்.

படிக்கவோ வந்தாய் - இங்கே படித்தற்கு அன்று விளையாடுதற்கு வந்தாய் என ஒழிந்த சொற்களைத் தருதலால் ஒழியிசை.

குற்றியோ மகனோ - இங்கே குற்றியா மகனா என வினாப்பொருளைத் தருதலால் வினா.

ஓ ஒ பெரியன் - இங்கே ஒருவனது பெருமையாகிய உயர்வின் மிகுதியை விளக்குதலால் உயர்வு சிறப்பு

குறிப்பு

ஓ ஒ கொடியன்-இங்கே ஒருவனது கொடுமையாகிய இழிவின் மிகுதியை விளக்குதலால் இழிவு சிறப்பும்மை.

அவனோ கொண்டான் - இங்கே கொண்டிலன் என்னும் பொருளைத் தரும் இடத்து எதிர் மறை.

ஆணோ? அதுவுமன்று பெண்ணோ? அதுவுமன்று - இங்கே அத்தன்மை இல்லாமையைத் தெரிவித்து நிற்றலால் தெரிநிலை.

உறுதி உணராது கெட்டாரை 'ஓஒ தமக்கோ ருறுதி யுணராரோ' என்னும் இடத்துக் கழிவிரக்கப் பொருளைத் தருதலால் கழிவு, கழிவிரக்கம் - கழிந்ததற்கு இரங்குதல்

காணிய வம்மினோ - இங்கே வேறு பொருள் இன்றிச் சார்த்தப்பட்டு நிற்றலால் அசைநிலை.

இவனோ கொண்டான் - இங்கே பலருள் நின்றும் ஒருவனைப் பிரித்து நிற்கும் இடத்துப் பிரிநிலை.

**என என்று இடைச்சொற்கள்:**

வினை பெயர் குறிப்பு இசை எண் பண்பு ஆறினும்
என எனும் மொழி வரும்: என்றும் அற்றே

வினை, பெயர்,குறிப்பு,இசை,எண்,பண்பு ஆகிய ஆறு பொருளில், என என்னும் இடைச்சொல் சேர்ந்து வரும், என்று என்னும் இடைச்சொல்லும் அப்படியே ஆறு பொருளிலும் வரும்.

மைந்தன் பிறந்தானெனத் தந்தை உவந்தான் - வினையோடு இயைந்தது.

அழுக்கா றெனவொரு பாவி - பெயரோடு இயைந்தது.

பொள்ளென வாங்கே புறம் வேரார் - குறிப்போடு இயைந்தது.

பொம்மென வண்டலம்பும் புரிகுழலை -இசையோடு இயைந்தது.

நிலமென நீரென தீயென வளியென வானெனப் பூதங்கள் ஐந்து - எண்ணோடு இயைந்தது.

வெள்ளென விளர்த்தது - இங்கே பண்போடு இயைந்தது, என்று என்பதையும் இப்படியே இவைகளோடும் ஒட்டிக்கொள்க.

குறிப்பு

**உம்மை இடைச்சொல்:**

எதிர்மறை சிறப்பு ஐயம் எச்சம் முற்று அளவை
தெரிநிலை ஆக்கமோடு உம்மை எட்டே

எதிர்மறை, சிறப்பு, ஐயம், எச்சம், அளவை,தெரிநிலை, ஆக்கம் ஆகிய எட்டுப் பொருளையும் தரும் உம்மை இடைச்சொல்.

எச்சம் இறந்தது தழீஇய எச்சமும், எதிரது தழீஇய எச்சமும் என இருவகைப்படும்.

மறப்பினும் ஓத்துக் கொளலாகும் மறக்கல் ஆகாது என்னும் பொருளைத் தருதலால் எதிர்மறை.

குறவரும் மருளுங் குன்றம் - இங்கே குன்றின் உயர்வைச் சிறப்பித்தலால் உயர்வுசிறப்பு புலையனும் விரும்பாப் புன்புலால் யாக்கை- உடம்பின் இழிவைச் சிறப்பித்தலால் இழிவுசிறப்பு

அவன் வெல்லினும் வெல்லும் - துணியாமையை உணர்த்தலால் ஐயம்.

சாத்தனும் வந்தான் - கொற்றன் வந்தது அன்றி என்னும் பொருளைத் தந்தால் இறந்தது தழீஇயவெச்சம் ; இனிக்கொற்றனும் வருவான் என்னும் பொருளைத் தந்தால் எதிரது தழீஇய எச்சம்.

எல்லாரும் வந்தார் - எஞ்சாப் பொருளைத் தருதலால் முற்று.

இராவும் பகலும் - எண்ணுதற்கண் வருதலால் எண்.

ஆணுமன்று பெண்ணுமன்று -இன்னது எனத் தெரிவித்து நிற்றலால் தெரிநிலை.

பாலுமாயிற்று - அதுவே மருந்தும் ஆயிற்று என்னும் பொருளைத் தருதலால் ஆக்கம்

முற்று உம்மை ஒரோ வழி எச்ச மும் ஆகும்

மேற்கூறிய முற்றும்மை ஒரோவிடத்து எச்ச உம்மையும் ஆம்.

எல்லாரும் வந்திலர், அவர் பத்துங் கொடார், இங்கே சிலர் வந்தார், சிலகொடுப்பார் எனவும் பொருள்படுதலால், எச்ச உம்மையும் ஆயிற்று.

செவ்வெண் ஈற்றதாம் எச்ச உம்மை

எச்ச உம்மை செவ் வெண்ணில் வருமாயின் ஈற்றில் வரும்.

செவ்வெண்ணாவது எண்ணிடைச்சொல் தொக்கு நிற்ப வருவது.

கல்வி, செல்வம், குடிப்பிறப்பும் பெறுவாரும் உளர் என்றவழி, இவற்றுள் சில பெறுவாரும் உளர் எனப் பொருள்படுதலால் செவ்வெண் ஆயிற்று,

குறிப்பு

## சில இடைச்சொற்கள்:

பெயர்ச்செவ்வெண்ணே என்றா எனா எண்

நான்கும் தொகை பெறும்: உம்மை என்று என ஒடு

இந்நான்கு எண்ணும் அஃது இன்றி யுஹும் இயலும்

பெயர்களின் இடையே எண்ணிடைச்சொல் தொக்கு நிற்ப வரும் செவ்வெண்ணும் பெயரோடு தொகாது வரும் ஏகார எண்ணும் என்றா எண்ணும் எனா எண்ணும் ஆகிய நான்கு எண்களும் தொகையைப் பெற்று நடக்கும். உம்மை எண்ணும் என்று எண்ணும் என எண்ணும் ஒடு எண்ணும் ஆகிய இந்த நான்கு எண்களும் அத்தொகை பெறாதும் நடக்கும்.

சாத்தன் கொற்றன் இருவரும் வந்தார்

சாத்தனே கொற்றனே இருவரும் வந்தார்.

சாத்தனென்றா கொற்றனென்றா இருவரும் வந்தார்

சாத்தனெனாக் கொற்றனெனா இருவரும் வந்தார்.

- இவை தொகை பெற்றே வந்தன.

இவை வழக்கிடத்து ஒரோவழித் தொகைபெறாது வரின் இசை எச்சமாகவும், செய்யுளிலே தொகை பெறாது வரின் தொகுத்தல் விகாரமாகவும் கொள்ளல் வேண்டும்.

சாத்தனும் கொற்றனும் இருவரும் வந்தார்

சாத்தனென்று கொற்றனென்று இருவர் உளர்

சாத்தனெனக் கொற்றனென இருவருளர்

சாத்தனோடு கொற்றனோடு இருவருளர்

- இவை தொகை பெற்று வந்தன.

சாத்தனும் கொற்றனும் வந்தார்

நிலனென்று நீரென்று தீயென்று காற்றென்று அளவறு காயமென் றாகிய உலகம்

நிலமென நீரெனத் தீயெனக் காற்றென அளவறு காயமென ஆகியவுலகம்

நிலனோடு நீரோடு தீயோடு காற்றோடு அளவறு காயமோடு ஆகிய பூதம்

குறிப்பு

- இவை தொகை பெறாது வந்தன.

என்றும் எனவும் ஒடுவும் ஒரோ வழி

நின்றும் பிரிந்து எண் பொருள்தொறும் நேரும்

என்று, என, ஒடு என்னும் இம்மூன்று இடைச் சொற்களும் எண்ணப்படும் பொருள் தோறும் நிற்றலே அன்றி ஓரிடத்து நின்றும் பிரிந்து எண்ணப்படும் பொருள் தோறும் சென்று பொருந்தும்.

வினைபகை யென்றிரண்டி னெச்ச நினையுங்காற்

றீயெச்சம் போலத் தெறும் - இங்கே என்றென்பது, வினையென்று பகை என்று என நின்றவிடத்துப் பிரிந்து, பிற வழியும் சென்று பொருந்தியது.

பகைபாவ மச்சம் பழியென நான்கு

மிகவாவா மில்லிறப்பான் கண் - இங்கே என என்பது, பகை எனப் பாவம் என அச்சம் எனப் பழி என என்று நின்ற இடத்துப் பிரிந்து பிறவழியும் சென்று பொருந்தியது.

பொருள் கருவி காலம் வினையிடனோடைந்து

மிருடீர வெண்ணிச் செயல்; - இங்கே ஒடு என்பது, பொருளொடு கருவி யொடு காலத்தொடு வினையொடு இடனொடு என நின்ற இடத்துப் பிரிந்து, பிற வழியும் சென்று பொருந்தியது.

வினையொடு வரினும் எண் இனைய ஏற்பன

எண்ணிடைச் சொற்கள் வினையோடு வரினும் மேல்பெயரோடு வந்தாற் போலவாகும்.

மயிலாடக் குயில் வாட மாமுகில் எழுந்தது - இது செவ்வெண்

கற்றும் கேட்டும் கற்பனை கடந்தார் - உம்மை எண்.

உண்ண என்று உடுக்க என்று வந்தான் - என்று எண்.

உண்ண என உடுக்க என வந்தான் - என எண்.

உண்ண உடுக்க என்று வந்தான் - இது பிரிந்து கூடும் எண்.

## தில் இடைச்சொல்:

விழைவே காலம் ஒழியிசை தில்லே

குறிப்பு

விழைவு, காலம், ஒழியிசை ஆகிய மூன்று பொருளையும் தரும் 'தில்' என்னும் இடைச்சொல்.

வார்ந்தி லங்குவை யெயிற்றுச் சின்மொழி

யரிவையைப் பெறுகதில் லம்ம யானே - அரிவையைப் பெறுதல் வேட்கையை உணர்த்தலால் விழைவு

பெற்றாங் கறிகதில் லம்மவிவ் வூரே - பெற்றகாலத்து அறிக எனக் காலத்தை உணர்த்தலால் காலம்.

வருகதில் லம்மவெஞ் சேரி சேர - வந்தால் ஒன்று செய்வேன் என்னும் ஒழிந்த சொற்பொருளை உணர்த்தலால் ஒழியிசை.

## மன் இடைச்சொல்:

மன்னே அசைநிலை ஒழியிசை ஆக்கம்

கழிவு மிகுதி நிலைபேறு ஆகும்

மன் என்னும் இடைச்சொல்அசைந்து நிற்றல் பொருளிலும் ஆக்கப்பொருளிலும் கழிதல் பொருளிலும் மிகுதிப் பொருளிலும் நிலைபெறுதல் பொருளிலும் வரும்.

"அதுமன் கொண்கன் தேரே" - வேறு பொருளின்றிச் சார்த்தப்பட்டு நிற்றலால் அசைநிலை.

"கூரியதோர் வாள் மன்"- இரும்பை அறத்துணித்தது என்னும் ஒழிந்த சொற்களைத் தருதலால் ஒழியிசை.

"பண்டு காடுமன்" -இன்று வயல் ஆயிற்று என்னும் ஆக்கப் பொருளைத் தருதலால் ஆக்கம்.

"சிறியகள் பெறினே எமக்கீயும் மன்னே" -இப்பொழுது அவன் இறந்ததனால் எமக்குக் கொடுத்தல் கழிந்தது என்னும் பொருளைத் தருதலால் கழிவு.

"எந்தை எமக்கு அருளுமன்" - மிகுதியும் அருளுவன் என்னும் பொருளைத் தருதலால் மிகுதி.

மன்னா வுலகத்து மன்னியது புரிமோ - இவ் இடைச்சொல் அடியாகப்பிறந்த வினைகள் நிலைபெறாத உலகத்திலே நிலைத்ததைச் செய், என்னும் பொருள்பட நிற்றலால் நிலைபேறு.

## மற்று எனும் இடைச்சொல்:

வினைமாற்று அசைநிலை பிறிது எனும் மற்றே

குறிப்பு

மற்று என்னும் இடைச்சொல் வினைமாற்றுப் பொருளையும் அசைத்து நிற்றல் பொருளையும் பிறிது பொருளையும் தரும்.

மற்றறிவா நல்வினை யாமிளைய மென்னாது " - விரைந்து அறிவாம் என்னும் வினையை ஒழித்து விரையாது அறிவாம் என்னும் வினையைத் தருதலால் வினைமாற்று.

மற்றென்னை யாள்க. - வேறு பொருளின்றிச் சார்த்தப்பட்டு நிற்றலால் அசை நிலை.

ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று

சூழினுந் தான்முந் துறும் - ஊழல்லது ஒன்று என்னும் பொருளைத் தருதலால் பிறிது.

மற்றையது என்பது சுட்டியதற்கு இனம்

மற்றையது என்னும் பொருளாகிய வினைமாற்றும் பிறிதும், கருதியதற்கு இனமாகிய மறுதலை வினையும் இனமாகிய பிறிதுமாம்.

முன் உதாரணங்களுள், நல்வினையை விரைந்து அறிவாம் எனக் கருதியதற்கு இனமாகிய வினைமாற்று ஆவது, விரையாது அறிவாம் என்பது; ஊழ் எனக் கருதியதற்கு இனமாகிய பிறிதாவது ஊழல்லது ஒன்று என்பது.

## கொல் என்னும் இடைச்சொல்:

கொல்லே ஐயம் அசைநிலை கூற்றே

கொல் என்பது ஐயப் பொருளையும் அசைநிலைப் பொருளையும் தரும் இடைச்சொல்லாம்.

இவ்வுருக் குற்றிகொல் மகன்கொல் - குற்றியோ மகனோ என்னும் பொருளைத் தருதலால் ஐயம்.

கற்றதனா லாய பயனென்கொல் - வேறு பொருள் இன்றிச் சார்த்தப்பட்டு நிற்றலால் அசைநிலை.

## ஒடு, தெய்ய என்னும் இடைச்சொல்:

ஒடுவும் தெய்யவும் இசைநிறை மொழியே

ஒடு,தெய்ய என்னும் இரண்டும்இனசநிறைத்தல் பொருளைத் தரும் சொற்களாம்.

“விதைக்குறு வட்டிற் போதொடு பொதுள” - இசைநிறை

“சொல்லேன் தெய்ய நின்னொடு பெயர்த்தே”- இசைநிறை

குறிப்பு

## அந்தில் ஆங்கு என்னும் இடைச்சொற்கள்:

அந்தில் ஆங்கு அசைநிலை இடப் பொருள் அவ்வே

அந்தில் ஆங்கு என்னும் இவ்விரண்டு இடைச்சொல்லும் அசைநிலைப் பொருளையும் இடப் பொருளையும் தரும்.

அந்திற் கழலினன் கச்சினன் - வேறு பொருளின்றிச் சார்த்தப்பட்டு நிற்றலால் அசைநிலை.

வருமே - சேயிழை யந்திற் கொழுநற் காணிய. - அவ்விடத்து வரும் என்னும் பொருளைத் தருதலால் இடம்.

ஆங்கத் திறனல்ல யாங்கழற - வேறு பொருளின்றிச் சார்த்தப்பட்டு நிற்றலால் அசைநிலை. இதனுள், ஆங்கு என்னும் அசைநிலை ஆங்க என இறுதி விகாரமாய் நின்றது.

ஆங்காங் காயினு மாக. - அவ்விடத்து என்னும் பொருளைத் தருதலால் இடம்.

## அம்ம என்னும் இடைச்சொல்:

அம்ம உரையசை கேண்மின் என்று ஆகும்

அம்ம என்பது உரை அசைப் பொருளைத் தருவதும் சொல்லுவேன் கேண்மின் என்னும் ஏவல்பொருளைத் தருவதுமாம்.

‘அதுமற்றம்ம’ - கட்டுரைக்கண் வருதலால் உரையசை.

‘அம்ம வாழி தோழி’— ஒன்று சொல்வேன் கேள் என்னும் ஏவல்பொருளில் வந்தது.

## மாவென் கிளவி:

மா என் கிளவி வியங்கோள் அசைச்சொல்

மா என்னும் சொல் வியங்கோள் இடத்துவரும் அசைச் சொல்லாம்.

“உப்பின்று - புற்கை யுண்கமா கொற்கை யோனே”

இங்கே மா என்னும் அசைச்சொல் உண்க என்னும் வியங்கோள் வினையை அடுத்து வந்தது.

குறிப்பு

**முன்னிலை அசைச் சொற்கள்:**

மியா இக மோ மதி அத்தை இத்தை

வாழிய மாள ஈ யாழ முன்னிலை அசை

மியா, இக, மோ, மதி, அத்தை, இத்தை,வாழிய, மாள,ஈ, யாழ என்னும் பத்து இடைச்சொற்களும் முன்னிலை இடத்து வரும் அசைச் சொற்களாம்.

மியா --- “சிலையன் செழுந்தழையன் சென்மியா வென்றுமலையகலான் வாடி வரும்.

இக --- “தண்டுறையூர காணிக வெனவே.”

மோ --- “காமஞ் செப்பாது கண்டது மொழிமோ”

மதி --- “சென்மதி பெரும.”

அத்தை --- “சொல்லிய ரத்தைநின் வெகுளி.”

இச்தை --- “வேய்நரல் விடரக நீயொன்று பாடித்தை.”

வாழிய --- “காணிய வாவா ழியமலைச் சாரல்.”

மாள --- “சிறிது -- தவிர்ந்தீக மாளநின் பரிசில ருய்ம்மார்.”

ஈ --- “சென்றீ பெருமநிற் றகைக்குநர் யாரே”

யாழ ---- “நீயே - செய்வினை மருங்கிற் செல வயர்ந் தியாழ.”

**எல்லா இடத்தும் வரும் அசைச்சொற்கள்:**

யா கா பிற பிறக்கு அரோ போ மாது இகும்

சின் குரை ஓரும் போலும் இருந்து இட்டு

அன்று ஆம் தாம் தான் கின்று நின்று அசைமொழி

யா, கா, பிற, பிறக்கு, அரோ, போ, மாது, இகும்,சின், குரை, ஓரும், போலும், இருந்து, இட்டு,அன்று, ஆம், தாம், தான், கின்று என்னும் இருபது இடைச்சொற்களும் எல்லா இடங்களிலும் வரும் அசைச்சொற்களாம்.

குறிப்பு

யா --- “யா பன்னிருவர் மாணாக்கர் அகத்தியனார்க்கு”

கா --- “புறநிழற் பட்டாளோ விவளிவட் காண்டிகா.”

பிற --- “ஆயனை யல்ல பிற.”

பிறக்கு --- “பிறக்கிதனுட் செல்லான் பெருந்தவம் பட்டான். ”

அரோ --- “நோதக விருங்குயி லாலு மரோ.”

போ --- “பிரியின் வாழா தென்போ.”

மாது ---“விளிந்தன்று மாதவர்த் தெளிந்தவென் நெஞ்சே.”

”இகும் --- “காண்டிகு மல்லமோ கொண்க”

சின் --- “தீங்கா கியவா லென்றிசின்”

குரை --- “அது பெறலருங் குரைத்தே.”

ஒரும் --- “அஞ்சுவ தோரு மறனே.”

போலும் --- “வடுவென்ற கண்ணாய் வருந்தினை போலும்.”

இருந்து - ”நனவென் றெழுந்திருந்தே னல்வினையொன் றில்லேன்.”

இட்டு - “நெஞ்சம் பிளந்திட்டு.”

அன்று - ”பிரமாபுர மேவிய பெம்மானிவ னன்றே.”

ஆம் - “பணியுமாம் என்றும் பெருமை சிறுமை அணியுமாந் தன்னை வியந்து.”

தாம் - நீர்தாம்.

தான் - நீ தான்.

கின்று - ”வாழ்வா னாசைப்பட் டிருக்கின்றேன்.”

நின்று - ”அழலடைந்த மன்றத் தரந்தையராய் நின்றார்

நிழலடைந்தே நின்னையென் றேத்த.”

**பயிற்சி வினாக்கள்:**

1.இடைச்சொல் என்பதன் இலக்கணத்தைத் தருக.

வேற்றுமை வினை சாரியை ஒப்பு உருபுகள்

குறிப்பு

தத்தம் பொருள இசைநிறை அசைநிலை

குறிப்பு என் எண் பகுதியின் தனித்து இயல் இன்றிப்

பெயரினும் வினையினும் பின் முன் ஓர் இடத்து

ஒன்றும்˙ பலவும் வந்து ஒன்றுவது இடைச்சொல்

ஐம் முதலிய வேற்றுமை உருபுகள், விகுதிகளும் இடைநிலைகளும் ஆகிய வினை உருபுகள், அன் ஆன் முதலிய சாரியை உருபுகள், போலப் புரைய முதலிய உவம உருபுகள்,பிறவாறு தத்தமக்கு உரிய பொருளை உணர்த்தி வருபவை, வேறு பொருள் இன்றி இசைநிறையே பொருளாக வருபவை, அசைநிலையே பொருளாக நிற்பவை,வெளிப்படையின வரும் இவை போலாது ஒலி, அச்சம், விரைவு இவற்றைக் குறிப்பால் உணர்த்தி வருபவை,என்னும் எட்டுவகையினை உடையனவாய் தனித்து நடத்தல் இன்றிப் பெயரின் அகத்தும் வினையின் அகத்தும் அவற்றின் புறமாகிய பின்னும் முன்னும் இவ்விடங்கள் ஆறனுள் ஓரிடத்து ,ஒன்றாயினும் பலவாயினும் வந்து அப்பெயர் வினைகளுக்கு அகத்து உறுப்பாயும் புறத்து உறுப்பாயும் ஒன்றுபட்டு நடக்கும் தன்மையது ,இடைச்சொல் ஆகும்.

2.இடைச்சொற்களின் பொருள்கள் யாவை?

இடைச்சொற்களின் பொருள்:

தெரிநிலை தேற்றம் ஐயம் முற்று எண் சிறப்பு

எதிர்மறை எச்சம் வினா விழைவு ஒழியிசை

பிரிப்பு கழிவு ஆக்கம் இன்னன இடைப் பொருள்

தெரிநிலை, தெளிவு,ஐயம்,முற்று, எண், சிறப்பு, எதிர்மறை, எச்சம், வினா, விருப்பம், ஒழியிசை,பிரிநிலை, கழிவு, ஆக்கம்,இவை போல்வன பிறவும் இடைச்சொற்களுடைய பொருள்களாம் .

இன்னன என்றதனால் சில வருமாறு :-

அ, இ, உ என்பன சுட்டுப்பொருளைத் தருவன .

எ,ஏ, யா,ஆ, ஓ என்பன வினாப்பொருளைத் தருவன .

முன், பின் என்பன காலப்பொருளையும் இடப்பொருளையும் தருவன .

இனி என்பது கால இடங்களின் எல்லைப் பொருளைத் தருவது .

தொறும், தோறும் என்பன இடப்பன்மைப் பொருளையும் தொழில் பயில்வுப் பொருளையும் தருவன.

வாளா, சும்மா என்பன பயன் இன்மைப் பொருளைத் தருவன .

ஆவது,ஆதல், ஆயினும், தான் என்பன விகற்பப் பொருளைத் தருவன.

ஐயோ, அந்தோ முதலியவை இரக்கப் பொருளைத் தருவன.

ஆ, அம்ம, ஓ, ஓகோ முதலியவை வியப்புப் பொருளைத் தருவன.

கூகூ,ஐயோ முதலியவை அச்சப்பொருளைத் தருவன .

சீ, சிச்சீ, சை முதலியவை இகழ்ச்சிப் பொருளைத் தருவன.

குறிப்பின்வரும் இடைச் சொற்கள் வருமாறு :-

அம்மென, இம்மென, கோவென, சோவென, துடுமென, ஒல்லென, கஃறென,சுஃறென எனவும் கடகடென, களகளென, திடுதிடென, நெறுநெறென, படபடென எனவும் வருவன ஒலிக்குறிப்புப் பொருளைத் தருவன

துண்ணென, துணுக்கென, திட்கென, திடுக்கென என்றால் போல்வன அச்சக் குறிப்புப் பொருளைத் தருவன.

பொள்ளென, பொருக்கென, கதுமென, ஞெரேலென, சரேலென, என்றால்போல்வன விரைவுக் குறிப்புப் பொருளைத் தருவன.

3.இடைச்சொற்கள் உணர்த்தும் பொருள்கள் குறித்துக் கட்டுரைக்க.

இடையியலில் இடைச்சொற்கள் குறித்து நிற்கும் பொருள்களைப் பாடப்பகுதியில் இருந்து விரித்து எழுதுதல் வேண்டும்.

4.அசைச்சொற்கள் குறித்து எழுதுக.

முன்னிலை அசைச் சொற்கள்:

மியா இக மோ மதி அத்தை இத்தை

வாழிய மாள ஈ யாழ முன்னிலை அசை

மியா, இக, மோ, மதி, அத்தை, இத்தை,வாழிய, மாள,ஈ, யாழ என்னும் பத்து இடைச்சொற்களும் முன்னிலை இடத்து வரும் அசைச் சொற்களாம்.

மியா --- "சிலையன் செழுந்தழையன் சென்மியா வென்றுமலையகலான் வாடி வரும்.

இக --- "தண்டுறையூர காணிக வெனவே."

குறிப்பு

மோ --- "காமஞ் செப்பாது கண்டது மொழிமோ"

மதி --- "சென்மதி பெரும."

குறிப்பு

அத்தை --- "சொல்லிய ரத்தைநின் வெகுளி."

இச்தை --- "வேய்நரல் விடரக நீயொன்று பாடித்தை."

வாழிய --- "காணிய வாவா ழியமலைச் சாரல்."

மாள --- "சிறிது -- தவிர்ந்தீக மாளநின் பரிசில ருய்ம்மார்."

ஈ --- "சென்றீ பெருமநிற் றகைக்குநர் யாரே"

யாழ ---- "நீயே - செய்வினை மருங்கிற் செல வயர்ந் தியாழ."

எல்லா இடத்தும் வரும் அசைச்சொற்கள்:

யா கா பிற பிறக்கு அரோ போ மாது இகும்
சின் குரை ஓரும் போலும் இருந்து இட்டு
அன்று ஆம் தாம் தான் கின்று நின்று அசைமொழி

யா, கா, பிற, பிறக்கு, அரோ, போ, மாது, இகும்,சின், குரை, ஓரும், போலும், இருந்து, இட்டு,அன்று, ஆம், தாம், தான், கின்று என்னும் இருபது இடைச்சொற்களும் எல்லா இடங்களிலும் வரும் அசைச்சொற்களாம்.

யா --- "யா பன்னிருவர் மாணாக்கர் அகத்தியனார்க்கு"

கா --- "புறநிழற் பட்டாளோ விவளிவட் காண்டிகா."

பிற --- "ஆயனை யல்ல பிற."

பிறக்கு --- " பிறக்கிதனுட் செல்லான் பெருந்தவம் பட்டான். "

அரோ --- "நோதக விருங்குயி லாலு மரோ."

போ --- "பிரியின் வாழா தென்போ."

மாது ---"விளிந்தன்று மாதவர்த் தெளிந்தவென் நெஞ்சே."

"இகும் --- "காண்டிகு மல்லமோ கொண்க"

சின் --- "தீங்கா கியவா லென்றிசின்"

குரை --- "அது பெறலருங் குரைத்தே."

ஒரும் --- "அஞ்சுவ தோரு மறனே."

போலும் --- "வடுவென்ற கண்ணாய் வருந்தினை போலும்."

குறிப்பு

இருந்து - "நனவென் றெழுந்திருந்தே னல்வினையொன் றில்லேன்."

இட்டு - " நெஞ்சம் பிளந்திட்டு. "

அன்று - "பிரமாபுர மேவிய பெம்மானிவ னன்றே."

ஆம் - "பணியுமாம் என்றும் பெருமை சிறுமை அணியுமாந் தன்னை வியந்து."

தாம் - நீர்தாம்.

தான் - நீ தான்.

கின்று - "வாழ்வா னாசைப்பட் டிருக்கின்றேன்."

நின்று - "அழலடைந்த மன்றத் தரந்தையராய் நின்றார்

நிழலடைந்தே நின்னையென் றேத்த."

# பிரிவு - 4

**பயன்: செய்யுட்கு உரிமையுடைய சொற்களை அறிதல்**

**குறிப்பு**

**உரிச்சொற்களின் இயல்புகளையும் அவை பயன்படும் இடங்களையும் அறிதல்**

**உயிரின வகைப்பாடுகளை அறிதல்**

**உயிர்ப்பொருட்களின் பண்பு நலன்களையும் உயிரில் பொருட்களின் பண்பு நலன்களையும் அறிதல்**

**ஒருகுணம் தழுவிய உரிச்சொல், பலகுணம் தழுவிய உரிச்சொல் என்பனவற்றை அறிந்து பயன்பெறல்**

**நடைமுறைத் தமிழின் இலக்கணத்தை உணர்தல்**

**கால், அரை, முக்காற் புள்ளி, மேற்கோள், வியப்புக்குறி, வினாக்குறி போன்றவை வருகின்ற இடங்களை அறிந்து பயன்படுத்தல்**

## கூறு - 13

உரிச்சொல் என்பது உரிமைப்பட்டு வரும் சொல் ஆகும். உரிச்சொற்களைப் பற்றி உணர்த்துதலால் உரியியல் என்பது பெயராயிற்று,

பல் வகைப் பண்பும் பகர் பெயர் ஆகி

ஒரு குணம் பல குணம் தழுவிப் பெயர் வினை

ஒருவா செய்யுட்கு உரியன உரிச்சொல்

இசையும் குறிப்பும் பண்பும் ஆகிய பல்வேறு வகைப்பட்ட பண்புகளையும் உணர்த்தும் பெயராகி, அவ்வாறு உணர்த்தும்போது ஒருசொல் ஒரு குணத்தை உணர்த்துவனவும் பல குணங்களை உணர்த்துவனவுமாய்ப் பெயர் வினைகளை விட்டு நீங்காது செய்யுளுக்கு உரியவையாய்ப் பொருட்கு உரிமை பூண்டு நிற்பவை உரிச்சொற்களாம்.

இசை, ஓசை, குறிப்பு மனத்தால் குறித்து உணரப்படுவது. பண்பு பொறியால் உணரப்படும் குணம்.

உயிர் உயிர் அல்லதாம் பொருள் குணம் பண்பே

குறிப்பு

உயிராகிய பொருளும் உயிர் அல்லாத பொருளும் என இருவகையுள் அடங்கும் உலகத்துப் பொருள்களின் குணங்கள் பண்புகளும் ஆம்.

மெய் நா மூக்கு நாட்டம் செவிகளின்

ஒன்று முதலாக் கீழ்க் கொண்டு மேல் உணர்தலின்

ஓரறிவு ஆதியா உயிர் ஐந்து ஆகும்

மெய், நா, நாசி, கண், காது ஆகிய ஐம்பொறிகளாலும், ஐந்து புலன்களை உணர்வது உயிர்ப் பண்பு, இவ்வாறு ஐந்து புலன்களை உணருங்கால் மெய்யால் உணரப்படும் உற்று உணர்வு முதலாக மேல் வரும் ஒவ்வோர் உணர்வையும் சேர்த்து எண்ணி ஓர் அறிவு உயிர் முதலாக ஐந்துவகையாகும் அவ்வுயிர் எனப் பிரிப்பர்.

மெய்- ஓரறிவுயிர்

மெய், நாக்கு - ஈரறிவுயிர்

மெய், நாக்கு, மூக்கு - மூவறிவுயிர்

மெய், நாக்கு, மூக்கு, கண் - நாலறிவுயிர்

மெய், நாக்கு, மூக்கு, கண், செவி – ஐயறிவுயிர்

## ஓரறிவுயிர்:

புல் மரம் முதல உற்று அறியும் ஓர் அறிவு உயிர்

புல்லும் மரமும் முதலியவை மெய்யால் தொடு உணர்வினை அறியும் ஓர் அறிவு உயிர்களாம்.

## ஈரறிவுயிர்:

முரள் நந்து ஆதி நா அறிவொடு ஈர் அறிவு உயிர்

இப்பியும் சங்கும், முதலியவை கீழ்ப்போன மெய்யறிவே அன்றி நாவால் சுவையை அறியும் அறிவோடு ஈர் அறிவு உயிர்களாம்.

## மூவறிவுயிர்

சிதல் எறும்பு ஆதி மூக்கு அறிவின் மூ அறிவு உயிர்

கறையானும் எறும்பும் முதலியவை கீழ்ப்போன இரண்டு அறிவுகளே அன்றி மூக்கால் மணத்தை அறியும் அறிவோடு மூவறி உயிர்களாம்.

### நாலறிவுயிர்

தும்பி வண்டு ஆதிகண் அறிவின் நால் அறிவு உயிர்

குறிப்பு

தும்பியும் வண்டும் முதலியவை கீழ்ப்போன மூன்று அறிவுகளே அன்றிக் கண்ணால் உருவத்தை அறியும் அறிவோடு நாலறிவு உயிர்களாம்.

### ஐயறிவுயிர்

வானவர் மக்கள் நரகர் விலங்கு புள்

ஆதி செவி அறிவோடு ஐயறிவு உயிரே

தேவரும் மனிதரும் நரகரும் மிருகங்களும் பறவைகளும் முதலியவை கீழ்ப்போன நாலறிவுகளே அன்றிச் செவியால் ஓசையை அறியும் அறிவோடு ஐயறிவு உயிர்களாம்.

### உயிரில்லாப் பொருள்:

உணர்வு இயல் ஆம் உயிர் ஒன்றும் ஒழித்த

உடல் முதல் அனைத்தும் உயிர் அல் பொருளே

அறிவு மயமாகிய உயிர் ஒன்றைத் தவிர உடம்பு முதலாகிய உலகத்துப் பொருள்கள் எல்லாம் உயிர் அல்லாத பொருள்களாம்.

ஒற்றுமை நயத்தின் ஒன்று எனத் தோன்றினும்

வேற்றுமை நயத்தின் வேறே உடல் உயிர்

எவ் உயிர் எவ் உடம்பை எடுத்ததோ அவ் உடம்பின் நிற்கும் ஒற்றுமை நயம் கருதியவழி, ஒன்றுபோல் தோன்றுமாயினும் உயிர் சித்தாயும் உடம்பு சடமாயும் நிற்கும் வேற்றுமை நயமாகிய உண்மை கருதியவழி அவ் உடலும் உயிரும் வேறு ஆம்.

### உயிருள்ள பொருள்களின் பண்புகள்:.

அறிவு அருள் ஆசை அச்சம் மானம்

நிறை பொறை ஓர்ப்பு கடைப்பிடி மையல்

நினைவு வெறுப்பு உவப்பு இரக்கம் நாண் வெகுளி

துணிவு அழுக்காறு அன்பு எளிமை எய்த்தல்

துன்பம் இன்பம் இளமை மூப்பு இகல்

வென்றி பொச்சாப்பு ஊக்கம் மறம் மதம்

மறவி இனைய உடல் கொள் உயிர்க் குணம்

குறிப்பு

அறிவு, அருள், ஆசை,,அச்சம், மானம், நிறை, பொறை, ஓர்ப்பு, கடைப்பிடி, மையல், நினைவு, வெறுப்பு, உவப்பு,,இரக்கம், நாண், வெகுளி, துணிவு, அழுக்காறு, அன்பு,எளிமை, எய்த்தல், துன்பம், இன்பம், இளமை, மூப்பு, இகல், வென்றி, பொச்சாப்பு, ஊக்கம், மறம், மதம், மறவி என்னும் முப்பத்திரண்டும் இவை போல்வன பிறவும் உடம்போடு கூடிய உயிர்களினுடைய குணங்களாம்.

## உயிர்ப் பொருள்களின் பண்புகள்:

துய்த்தல் துஞ்சல் தொழுதல் அணிதல்

உய்த்தல் ஆதி உடல் உயிர்த் தொழில் குணம்

துய்த்தல், துஞ்சல், தொழுதல், அணிதல், உய்த்தல் என்னும் ஐந்தும்இவை போல்வன பிறவும் உடம்பொடு கூடிய உயிரினுடைய தொழில் குணங்களாம்.

## உயிரல்லாப் பொருள்களின் குணங்கள்:.

பல் வகை வடிவு இரு நாற்றம் ஐவண்ணம்

அறு சுவை ஊறுஎட்டு உயிர் அல் பொருள் குணம்

வட்டம், இருகோணம், முக்கோணம், சதுரம் முதலிய பலவகை வடிவுகளும் நல்மணம், துர்மணம் என்னும் இருநாற்றங்களும் வெண்மை, செம்மை, கருமை, பொன்மை, பசுமை என்னும் ஐந்து வண்ணங்களும் கைப்பு, புளிப்பு, துவர்ப்பு, உவர்ப்பு, கார்ப்பு, இனிப்பு என்னும் அறுசுவைகளும் வெம்மை, தண்மை, மென்மை, வன்மை, நொய்மை, சீர்மை, இழுமெனல்,சருச்சரை என்னும் எட்டு ஊறுகளும் உயிர் அல்லாத பொருள்களின் உடைய குணங்களாம்.

## உயிர்ப் பொருள் - உயிரல்லாப் பொருள் - பொதுப் பண்புகள்:

தோன்றல் மறைதல் வளர்தல் சுருங்கல்

நீங்கல் அடைதல் நடுங்கல் இசைத்தல்

ஈதல் இன்னன இரு பொருள் தொழில் குணம்

தோன்றல், மறைதல், வளர்தல், சுருங்கல், நீங்கல், அடைதல், நடுங்கல், இசைத்தல்,ஈதல் எனப்பெறும் ஒன்பது குணங்களும் உயிர்ப் பொருள், உயிரல் பொருள் எனப்பெறும் இருவகைப் பொருளுக்கும் பொதுவாகிய தொழிற் பண்புகள் ஆகும்.

குறிப்பு

## ஒருகுணம் தழுவிய உரிச்சொல்:

மிகுதிப் பொருள் தருவது:

சால உறு தவ நனி கூர் கழி மிகல்

சால என்பது முதலாகிய இவ் ஆறு உரிச்சொற்களும் மிகுதி ஆகிய ஒரு குணத்தை உணர்த்தும் உரிச்சொற்கள்.

சால –"பருவந்து சாலப் பலகொலென் றெண்ணி"

உறு –"உறுவளி துரக்கு முயர்சினை மாவின்."

தவ –"தவச்சேய் நாட்டா ராயினும்."

நனி –"வந்துநனி வருந்தினை வாழிய நெஞ்சே"

கூர் –"துனிகூ ரெவ்வமொடு"

கழி–"காமங் கழிகண் ணோட்டம்.

சால என்பது சால் என்னும் உரிச்சொல் அடியாகப் பிறந்த வினை எச்சக் குறிப்பு.

மாற்றம் நுவற்சி செப்பு உரை கரை நொடி இசை

கூற்றுப் புகறல் மொழி கிளவி விளம்பு அறை

பாட்டு பகர்ச்சி இயம்பல் சொல்லே

மாற்றம் முதலாகிய பதினாறும் சொல் என்னும் ஒருகுணத்தை உணர்த்தும் உரிச்சொற்களாம் .

மாற்றம் - கோவலர்வாய் மாற்ற முணர்ந்து

நுவற்சி - இரு பிறப்பாளர் பொழுதறிந்து நுவல

செப்பு - தெருண்டாரவை செப்பலுற்றேன்.

உரை - உரைப்பா ருரைப்பவை யெல்லாம்;

கரை - அறங்கரைநாவி னான்மறை முற்றிய

நொடி - அஞ்சொற் பெரும்பணைத்தோ ளாயிழையா டானொடியும்;"

இசை - நசையுநர்க் கடையா நன்பெருவாயி-லிசை எனப் புக்கு"

கூற்று -உற்றது நாங்கள் கூற வுணர்ந்தனை"

புகறல் - புகன்ற வன்றியும் பூமி கவருமே”

மொழி - காமஞ் செப்பாதுகண்டது மொழிமோ

கிளவி - ”கிளந்த கிளைமுத லுற்ற”

குறிப்பு

விளம்பி -மெய்ம்மூவாறென விளம்பினர்புலவர்

அறை - ”அச்சுதனடிதொழு தறைகுவன் சொல்லே

பாட்டு - ”ஒருவன் செய்ந்நன்றி கொன்றார்க்

குய்தியில்லென வறம் பாடின்றே”

பகர்ச்சி - வார்த்தை பகர்குற்றேன்

இயம்பல் - இடிபோல வியம்பினானே” என்ன முறையே காண்க.

முழக்கு இரட்டு ஒலி கலி இசை துவை பிளிறு இரை
இரக்கு அழுங்கு இயம்பல் இமிழ் குளிறு அதிர் குரை
கனை சிலை சும்மை கௌவை கம்பலை
அரவம் ஆர்ப்பொடு இன்னன ஓசை

முழக்கு முதலாகிய இருபத்திரண்டும்இவை போல்வன பிறவும் ஓசை என்னும் ஒருகுணத்தை உணர்த்தும் உரிச்சொற்களாகும்.

முழக்கு - முழங்கு முந்நீர் முழுவதும் வளைஇ

இரட்டு - குடிஞையிரட்டுங் கோடுயர் நெடுவரை

ஓலி - ஒல்லென வொலிக்கு மொலிபுன லூரற்கு

கலி -கலிகெழு மூதூர்;

இசை - பறையிசை யருவி;

துவை - பல்லியந்துவைப்ப;

பிளிறு - பிளிறுவார் முரசம்

இரை - இரைக்கு மஞ்சிறைப் பறவைகள்

இரக்கு -இரங்கு முரசினம்

அழுங்கு - இரும்பிழிமாரி யழுங்கின மூதூர்

இயம்பல் - காலை முரசம் இயம்பஇமிழ்கடல் வளைஇய

குளிறு - குளிறு முரசங்குணில்பாய

அதிர் - களிறு களித்ததிருங் கார்

குறிப்பு

குரை - குரைபுனற் கன்னி

கனை - கனை கடற் சேர்ப்ப;

சிலை - சிலைத்தார் முரசங் கறங்க

சும்மை - தள்ளாத சும்மை மிகு தக்கிண நாடுநண்ணி

கௌவை -கௌவை நீர்வேலி

கம்பலை - வினைக் கம்பலை மனைச் சிலம்பவும்

அரவம் - அறைகட லரவத்தானை;

ஆர்ப்பு - ஆர்த்த பல்லியக்குழாம் என முறையே காண்க.

**பல குணம் தழுவிய உரிச்சொல்:**

கடி என் கிளவி காப்பே கூர்மை

விரையே விளக்கம் அச்சம் சிறப்பே

விரைவே மிகுதி புதுமை ஆர்த்தல்

வரைவே மன்றல் கரிப்பின் ஆகும்

கடி என்னும் உரிச்சொல் காவலும் கூர்மையும் வாசனையும் விளக்கமும் அச்சமும் சிறப்பும் விரைவும் மிகுதியும் புதுமையும் ஒலித்தலும் நீக்கலும் மணமும் கரிப்பும் ஆகிய பதின்மூன்று குணங்களிலும் வரும்.

கடி நகரடைந்து - காப்பு

கடி நுனைப் பகழி - கூர்மை

கடிமாலை சூடி - நாற்றம்

கண்ணாடி அன்ன கடிமார்பன் - விளக்கம்

கடி யரமளிர்க்கே கைவிளக்காகி –அச்சம்

அம்பு துஞ்சுங்கடியரண் - சிறப்பு

எம்மம்பு கடி விடுதும் - விரைவு

கடியுண் கடவுட்கிட்ட செழுங்குரல் - .மிகுதி

குறிப்பு

கடிமணச்சாலை - புதுமை

கடிமுரசு - ஆர்த்தல்

கடிமது நுகர்வ - வரைவு

கடிவினை முடுகினி - மன்றல்

”கடி மிளகுதின்ற கல்லாமந்தி - கரிப்பு

இன்னது இன்னுழி இன்னணம் இயலும்

என்று இசை நூலுள் குணகுணிப்பெயர்கள்

சொல்லாம் பரத்தலின் பிங்கலம் முதலாம்

நல்லோர் உரிச்சொலின் நயந்தனர் கொளலே

பெயர், வினை இடை உரிகளில் இன்னசொல்தன்மை, முன்னிலை, படர்க்கைகளிலும் வழக்குச் செய்யுள்களிலும் இவ் இடத்தே இவ் இலக்கணம் உடையதாய் நடக்கும் என்று சொல்லக் கூடியதாகிய சொல்லும்நன்னூலுள் வேண்டிய அளவே கூறப்பட்டுள்ளன. குணப்பெயர்களையும் குணிப்பெயர்களையும் வேண்டிய மட்டும் சொல்வதன்றி விரித்துச் சொல்லப்படவில்லை. விரிக்கின் மற்றொன்று விரித்தல் என்னும் குற்றம் வரும் ஆதலின், நல்லோர் பிங்கலம் முதலாகிய உரிச்சொல் நிகண்டுகளில் கூறினர். எனவே அவற்றைக் கண்டறிய வேண்டினோர் மற்றைப் புலவரால் கூறப்பட்ட பிங்கலந்தை, திவாகரம் முதலிய நூல்களில் உரிச்சொல் தொகுதியுள் விரும்பிக் கொள்க என்பார் நன்னூலார்,

எனவே, பெயரியலுள் பெயர்ச்சொல் தொகுதியையும் வினையியலுள் வினைச்சொல் தொகுதியையும்,இடையியலுள் இடைச்சொல் தொகுதியையும், விரிக்காமைக்கும் இதுவே புறனடையாம் என்பதாயிற்று.

சொல் தொறும் இற்று இதன் பெற்றி என்று அனைத்தும்

முற்ற மொழிகுறின் முடிவு இல ஆதலின்

சொற்றவற்று இயலான் மற்றைய பிறவும்

தெற்றென உணர்தல் தெள்ளியோர் திறனே

சொல் தோறும் இத்தன்மைத்து இதன் இலக்கணம் என்று, முழுதும் நிறைவுறச் சொல்லப் புகுந்தால் முடிவு இல்லை. ஆதலால் எடுத்துச் சொல்லப்பட்ட சொற்களுடைய இலக்கணங்களைக் கொண்டு, சொல்லப்படாதவற்றின் இலக்கணங்களையும் ஒப்புமைகருதி இதுவும் அதுவென உணர்தல் தெளிதற்கு உரிய மாணாக்கரது கடனாம்.

இவற்றிற்கும் உதாரணம் முன் வந்தன காண்க.

குறிப்பு

பழையன கழிதலும் புதியன புகுதலும்

வழுவல கால வகையின் ஆனே

முற்காலத்துள்ள இலக்கணங்களுள் சில பிற்காலத்து இறத்தலும் முற்காலத்து இல்லன சில பிற்காலத்து இலக்கணம் ஆதலும் குற்றம் அல்ல. அது கால வேற்றுமையால் அமையும்.

சொல்லதிகாரம் முற்றுப்பெற்றது

**பயிற்சி வினாக்கள்:**

1.உரிச்சொல்லின் இலக்கணம் யாது?

உரிச்சொல் என்பது உரிமைப்பட்டு வரும் சொல் ஆகும். உரிச்சொற்களைப் பற்றி உணர்த்துதலால் உரியியல் என்பது பெயராயிற்று,

பல் வகைப் பண்பும் பகர் பெயர் ஆகி

ஒரு குணம் பல குணம் தழுவிப் பெயர் வினை

ஒருவா செய்யுட்கு உரியன உரிச்சொல்

இசையும் குறிப்பும் பண்பும் ஆகிய பல்வேறு வகைப்பட்ட பண்புகளையும் உணர்த்தும் பெயராகி , அவ்வாறு உணர்த்தும்போது ஒருசொல் ஒரு குணத்தை உணர்த்துவனவும் பல குணங்களை உணர்த்துவனவுமாயப் பெயர் வினைகளை விட்டு நீங்காவாய் செய்யுளுக்கு உரியவையாய்ப் பொருட்கு உரிமை பூண்டு நிற்பவை உரிச்சொற்களாம்.

2.உயிர்ப்பாகுபாடு குறித்து எழுதுக.

ஓரறிவுயிர்:

புல் மரம் முதல உற்று அறியும் ஓர் அறிவு உயிர்

புல்லும் மரமும் முதலியவை மெய்யால் தொடு உணர்வினை அறியும் ஓர் அறிவு உயிர்களாம்.

ஈரறிவுயிர்:

முரள் நந்து ஆதி நா அறிவொடு ஈர் அறிவு உயிர்

இப்பியும் சங்கும், முதலியவை கீழ்ப்போன மெய்யறிவே அன்றி நாவால் சுவையை அறியும் அறிவோடு ஈர் அறிவு உயிர்களாம்.

குறிப்பு

மூவறிவுயிர்

சிதல் எறும்பு ஆதி மூக்கு அறிவின் மூ அறிவு உயிர்

கறையானும் எறும்பும் முதலியவை கீழ்ப்போன இரண்டு அறிவுகளே அன்றி மூக்கால் மணத்தை அறியும் அறிவோடு மூவறி உயிர்களாம்.

நாலறிவுயிர்

தும்பி வண்டு ஆதிகண் அறிவின் நால் அறிவு உயிர்

தும்பியும் வண்டும் முதலியவை கீழ்ப்போன மூன்று அறிவுகளே அன்றிக் கண்ணால் உருவத்தை அறியும் அறிவோடு நாலறிவு உயிர்களாம்.

ஐயறிவுயிர்

வானவர் மக்கள் நரகர் விலங்கு புள்

ஆதி செவி அறிவோடு ஐயறிவு உயிரே

தேவரும் மனிதரும் நரகரும் மிருகங்களும் பறவைகளும் முதலியவை கீழ்ப்போன நாலறிவுகளே அன்றிச் செவியால் ஓசையை அறியும் அறிவோடு ஐயறிவு உயிர்களாம்.

3.உயிர்ப்பொருள்களின் பண்புகளைச் சுட்டுக.

உயிர்ப் பொருள்களின் பண்புகள்:

துய்த்தல் துஞ்சல் தொழுதல் அணிதல்

உய்த்தல் ஆதி உடல் உயிர்த் தொழில் குணம்

துய்த்தல், துஞ்சல், தொழுதல், அணிதல், உய்த்தல் என்னும் ஐந்தும்இவை போல்வன பிறவும் உடம்பொடு கூடிய உயிரினுடைய தொழில் குணங்களாம்.

உயிரல்லாப் பொருள்களின் குணங்கள்:.

பல் வகை வடிவு இரு நாற்றம் ஐவண்ணம்

அறு சுவை ஊறுஎட்டு உயிர் அல் பொருள் குணம்

வட்டம், இருகோணம், முக்கோணம், சதுரம் முதலிய பலவகை வடிவுகளும் நல்மணம் துர்மணம் என்னும் இருநாற்றங்களும் வெண்மை, செம்மை, கருமை, பொன்மை, பசுமை என்னும் ஐந்து வண்ணங்களும்

*Self-Instructional Material*

கைப்பு, புளிப்பு, துவர்ப்பு, உவர்ப்பு, கார்ப்பு, இனிப்பு என்னும் அறுசுவைகளும் வெம்மை, தண்மை, மென்மை, வன்மை, நொய்மை,சீர்மை, இழுமெனல்,சருச்சரை என்னும் எட்டு ஊறுகளும் உயிர் அல்லாத பொருள்களின் உடைய குணங்களாம்.

குறிப்பு

4. ஒருகுணம் தழுவிய, பலகுணம் தழுவிய உரிச்சொற்களை விவரித்துக் கட்டுரைக்க.

ஒருகுணம் தழுவிய உரிச்சொல்:

மிகுதிப் பொருள் தருவது:

சால உறு தவ நனி கூர் கழி மிகல்

சால என்பது முதலாகிய இவ் ஆறு உரிச்சொற்களும் மிகுதி ஆகிய ஒரு குணத்தை உணர்த்தும் உரிச்சொற்கள்.

சால –“பருவந்து சாலப் பலகொலென் றெண்ணி”

உறு –“உறுவளி துரக்கு முயர்சினை மாவின்.”

தவ –“தவச்சேய் நாட்டா ராயினும்.”

நனி –“வந்துநனி வருந்தினை வாழிய நெஞ்சே”

கூர் –“துனிகூ ரெவ்வமொடு”

கழி–“காமங் கழிகண் ணோட்டம்”.

சால என்பது சால் என்னும் உரிச்சொல் அடியாகப் பிறந்த வினை எச்சக் குறிப்பு.

மாற்றம் நுவற்சி செப்பு உரை கரை நொடி இசை

கூற்றுப் புகறல் மொழி கிளவி விளம்பு அறை

பாட்டு பகர்ச்சி இயம்பல் சொல்லே

மாற்றம் முதலாகிய பதினாறும் சொல் என்னும் ஒருகுணத்தை உணர்த்தும் உரிச்சொற்களாம் .

மாற்றம் - கோவலர்வாய் மாற்ற முணர்ந்து

நுவற்சி - இரு பிறப்பாளர் பொழுதறிந்து நுவல

செப்பு - தெருண்டாரவை செப்பலுற்றேன்.

உரை - உரைப்பா ருரைப்பவை யெல்லாம்;

குறிப்பு

கரை - அறங்கரைநாவி னான்மறை முற்றிய

நொடி - அஞ்சொற் பெரும்பணைத்தோ ளாயிழையா டானொடியும்;"

இசை - நசையுநர்க் கடையா நன்பெருவாயி-லிசை எனப் புக்கு;"

கூற்று -உற்றது நாங்கள் கூற வுணர்ந்தனை;"

புகறல் - புகன்ற வன்றியும் பூமி கவருமே;"

மொழி - காமஞ் செப்பாதுகண்டது மொழிமோ ,

கிளவி - "கிளந்த கிளைமுத லுற்ற;"

விளம்பி -மெய்ம்மூவாறென விளம்பினர்புலவர்

அறை - "அச்சுதனடிதொழு தறைகுவன் சொல்லே

பாட்டு - "ஒருவன் செய்ந்நன்றி கொன்றார்க்

குய்தியில்லென வறம் பாடின்றே;"

பகர்ச்சி - வார்த்தை பகர்குற்றேன்

இயம்பல் - இடிபோல வியம்பினானே" என்ன முறையே காண்க.

முழக்கு இரட்டு ஒலி கலி இசை துவை பிளிறு இரை
இரக்கு அழுங்கு இயம்பல் இமிழ் குளிறு அதிர் குரை
கனை சிலை சும்மை கௌவை கம்பலை
அரவம் ஆர்ப்பொடு இன்னன ஓசை

முழக்கு முதலாகிய இருபத்திரண்டும்இவை போல்வன பிறவும் ஓசை என்னும் ஒருகுணத்தை உணர்த்தும் உரிச்சொற்களாகும்.

முழக்கு - முழங்கு முந்நீர் முழுவதும் வளைஇ

இரட்டு - குடிஞையிரட்டுங் கோடுயர் நெடுவரை

ஒலி - ஒல்லென வொலிக்கு மொலிபுன லூரற்கு

கலி -கலிகெழு மூதூர்;

இசை - பறையிசை யருவி;

துவை - பல்லியந்துவைப்ப;

பிளிறு - பிளிறுவார் முரசம்

இரை - இரைக்கு மஞ்சிறைப் பறவைகள்

இரக்கு -இரங்கு முரசினம்

குறிப்பு

அழுங்கு - இரும்பிழிமாரி யழுங்கின மூதூர்

இயம்பல் - காலை முரசம தியம்பஇமிழ்கடல் வளைஇய

குளிறு - குளிறு முரசங்குணில்பாய

அதிர் - களிறு களித்ததிருங் கார்

குரை - குரைபுனற் கன்னி

கனை - கனை கடற் சேர்ப்ப;

சிலை - சிலைத்தார் முரசங் கறங்க

சும்மை - தள்ளாத சும்மை மிகு தக்கிண நாடுநண்ணி

கௌவை -கௌவை நீர்வேலி

கம்பலை - வினைக் கம்பலை மனைச் சிலம்பவும்

அரவம் - அறைகட லரவத்தானை;

ஆர்ப்பு - ஆர்த்த பல்லியக்குழாம் என முறையே காண்க.

பல குணம் தழுவிய உரிச்சொல்:

கடி என்னும் உரிச்சொல் பல குணம் தழுவிய உரிச்சொல் ஆகும்.

கடி என் கிளவி காப்பே கூர்மை
விரையே விளக்கம் அச்சம் சிறப்பே
விரைவே மிகுதி புதுமை ஆர்த்தல்
வரைவே மன்றல் கரிப்பின் ஆகும்

கடி என்னும் உரிச்சொல் காவலும் கூர்மையும் வாசனையும் விளக்கமும் அச்சமும் சிறப்பும் விரைவும் மிகுதியும் புதுமையும் ஒலித்தலும் நீக்கலும் மணமும் கரிப்பும் ஆகிய பதின்மூன்று குணங்களிலும் வரும் .

கடி நகரடைந்து - காப்பு

கடி நுனைப் பகழி - கூர்மை

கடிமாலை சூடி - நாற்றம்

கண்ணாடி அன்ன கடிமார்பன் - விளக்கம்

கடி யரமளிர்க்கே கைவிளக்காகி –அச்சம்

அம்பு துஞ்சுங்கடியரண் - சிறப்பு

எம்மம்பு கடி விடுதும் - விரைவு

கடியுண் கடவுட்கிட்ட செழுங்குரல் - மிகுதி

கடிமணச்சாலை - புதுமை

கடிமுரசு - ஆர்த்தல்

கடிமது நுகர்வ - வரைவு

கடிவினை முடுகினி - மன்றல்

கடி மிளகுதின்ற கல்லாமந்தி - கரிப்பு

குறிப்பு

## கூறு 14

பாடத்திட்டதின் இப்பகுதியானது நிறுத்தற் குறிகள் என்பதனை விளக்குவதாய் அமைகின்றது, மொழியின் அடிப்படைப் பண்புகளுள் மிகவும் இன்றியமையாத பண்பு பொருளினை ஐயம் பிழையற உணர்த்தி நிற்றலேயாம். அவ்வாறு உணர்தற்குப் பெரிதும் உதவுபவை நிறுத்தற்குறிகள், வினாக்குறிகள், வியப்புக்குறிகள் போன்றவை ஆகும்.

### நிறுத்தல் குறிகள்:

(.)முற்றுப்புள்ளி,

(,)காற்புள்ளி,

(-)ஒற்றைச் சமக்குறி,

(!)வியப்புக்குறி,

(?) வினாக்குறி,

(;)அரைப்புள்ளி,

(:)முக்காற்புள்ளி,

(” ”)இரட்டை மேற்கோள்குறி,

(“ “) ஒற்றை மேற்கோள் குறி,

()மேற்காற்புள்ளி,

()அடைப்புக்குறி,

குறிப்பு

()இரட்டைச் சமக்குறி,

(т) ஒற்றை இணைப்புக் குறி,

(ኘ) இரட்டை இணைப்புக்குறி,

நிறுத்தக் குறிகள்

வாக்கியங்களை அமைத்து எழுதும்போது,அவற்றை நிறுத்த வேண்டிய இடங்களில், சில குறிகளை (அடையாளங்களை) இட்டு எழுதுகிறோம். அப்போதுதான் படிப்பவர்கள், நிறுத்த வேண்டிய இடங்களில், நிறுத்த வேண்டிய அளவுக்கு, குறிகளால் தெரிந்து கொண்டு, நிறுத்திப் படிப்பார்கள். இவ்வாறு, பொருள் எளிதில் விளங்குமாறு, எந்த எந்த இடங்களில் எந்த எந்த அளவு நிறுத்திப் படிக்க வேண்டும் என அறிவிக்கும் குறிகளே “நிறுத்தக் குறிகள்“ எனப்படும்.

1.முற்றுப்புள்ளி (.)

சான்று 1: நான் நாளை மதுரைக்கு வருவேன். இது ஒரு செயல்நிறைவுற்ற வாக்கியம் ஆகும்.

சான்று 2: முனைவர் பரந்தாமன்.தமிழ்ப் பேராசிரியர் கோயம்புத்தூர்.

இதில் முனைவர் பரந்தாமன் என்ற இடத்திலும், முகவரியின் முடிவிலும் முற்றுப்புள்ளி வந்திருக்கிறது. எனவே, வாக்கியங்கள் முடிந்தவுடனும், சொற்களின் குறுக்கங்களுக்குப் பிறகும், முகவரியின் முடிவிலும், முற்றுப்புள்ளிகள் இடவேண்டும். அவ்விடங்களில் நான்கு மாத்திரை நேரம் நிறுத்த வேண்டும்.

(ஒரு மாத்திரை நேரம் - ஒரு முறை இயல்பாகக் கண் இமைக்கும் நேரம் அல்லது கைநொடிக்கும் நேரம்)

2. அரைப்புள்ளி (;)

சான்று 1: கந்தன் நல்லதேகூறுவார்; நட்பாகப் பேசுவார்; நல்லதே செய்வார்.

இது ஒரு தொடர் வாக்கியம். கந்தன் என்ற எழுவாய்க்கு மூன்று பயனிலைகள் வருகின்றன. ஒவ்வொரு பயனிலைக்கும் பிறகு அரைப்புள்ளி வருகிறது.

சான்று 2: முருகன் விளையாட்டுத் திடலுக்குப் போவார்; விளையாடமாட்டார்.

இதில் உடன்பாடும் எதிர்மறையுமான இரண்டு வாக்கியங்கள் தொடர்ந்து வரும்போதும் அரைப்புள்ளி வந்திருக்கிறது.

எனவே ஒரே எழுவாய், பல பயனிலைகள் கொண்டு முடியும் போது வாக்கியத்தின் இடையில், ஒவ்வொரு பயனிலைக்குப் பிறகும், மாறுபட்ட

கருத்துக்கள் தொடர்ந்து ஒரு வாக்கியத்தில் வரும்போதும் அரைப்புள்ளி இடவேண்டும். இந்த இடங்களில் இரண்டு மாத்திரை நேரம் நிறுத்த வேண்டும்.

குறிப்பு

3. காற்புள்ளி (,)

சான்றுகள்:

நிலம், நீர்,தீ,காற்று, ஆகாயம் – பொருள்களை எண்ணல்.

அலைந்து, திரிந்து, களைத்து – வினையெச்சம்.

தம்பி வா,திருக்கோயிலுக்குச் செல்லலாம்– விளித்தல்.

நீண்ட காலம் ஓய்வின்றி உழைத்தால், உடல் நலம் பாதிக்கப்படும்– எச்சச் சொற்றொடர்.

பொருள்களை எண்ணும்போதும், வினையெச்சங்களின் பின்னும், விளிக்கும்போதும், எச்சச் சொற்றொடர் வரும்போதும், காற்புள்ளி இடவேண்டும். இங்கு ஒரு மாத்திரை நேரம் நிறுத்த வேண்டும்.

4. வினாக்குறி (?)

சான்று: இன்று கண்காட்சி இருக்கிறதா?

சில நேரங்களில் சில மனிதர்கள் புதினத்தை எழுதியவர் யார்?

வினாக்களுக்குப் பிறகு இடப்படும் குறி வினாக்குறியாகும். இங்கு நான்கு மாத்திரை நேரம் நிறுத்தலாம்.

5. உணர்ச்சிக்குறி (!)

எப்படி நீ கம்பத்தின் மேல் ஏறினாய்! - வியப்பு

அய்யோ! பாவம்– இரக்கம்

பாம்பு! பாம்பு! - அச்சம்

நகை தொலைந்து போனதே! - அழுகை

அண்ணா! இங்கே காண் - விளித்தல்

பகைவனை அழிக்காமல் விடமாட்டேன்! – சினம்

வியப்பு, இரக்கம், அச்சம், அழுகை, விளித்தல், சினம் முதலிய உணர்ச்சிகள் வெளிப்படுவதை விளக்கும் சொற்களுக்குப் பிறகு உணர்ச்சிக்குறி இடப்படும். இங்கும் நான்கு மாத்திரை நேரம் நிறுத்தலாம்.

6. (இரட்டை) மேற்கோட்குறி (“....”)

குறிப்பு

"நானும்என்சிந்தையு நாயகனுக் கெவ்விடத்தோந்

தானுந்தன் றையலுந் தாழ்சடையோ னாண்டிலனேல்...

வானுந் திசைகளு மாகடலு மாயபிரான்.

தேனுந்து சேவடிக்கே சென்றூதாய் கோத்தும்பீ"

என்று மாணிக்கவாசகர் திருவாகத்தில் கூறுகிறார். ஒருவர் சொல்லியதை அப்படியே மேற்கோளாக எடுத்துக் காட்டும்போது முன்னும் பின்னும் இரட்டை மேற்கோட்குறிகள் இடவேண்டும்.

பயிற்சி வினாக்கள்:

1.வினாக்குறி எங்கு அமைதல் வேண்டும்?

வினாக்குறி (?)

சான்று: இன்று கண்காட்சி இருக்கிறதா?

சில நேரங்களில் சில மனிதர்கள் புதினம் எழுதியவர் யார்?

வினாக்களுக்குப் பிறகு இடப்படும் குறி வினாக்குறியாகும். இங்கு நான்கு மாத்திரை நேரம் நிறுத்தலாம்.

2.அரைப்புள்ளி அமைய வேண்டிய இடங்களைச் சுட்டுக.

அரைப்புள்ளி (;)

சுான்று 1: கந்தன் நல்லதேகூறுவார்; நட்பாகப் பேசுவார்; நல்லதே செய்வார்.

இது ஒரு தொடர் வாக்கியம். கந்தன் என்ற எழுவாய்க்கு மூன்று பயனிலைகள் வருகின்றன. ஒவ்வொரு பயனிலைக்கும் பிறகு அரைப்புள்ளி வருகிறது.

சான்று 2: முருகன் விளையாட்டுத் திடலுக்குப் போவார்; விளையாடமாட்டார்.

இதில் உடன்பாடும் எதிர்மறையுமான இரண்டு வாக்கியங்கள் தொடர்ந்து வரும்போதும் அரைப்புள்ளி வந்திருக்கிறது.

எனவே, ஒரே எழுவாய், பல பயனிலைகள் கொண்டு முடியும் போது வாக்கியத்தின் இடையில், ஒவ்வொரு பயனிலைக்குப் பிறகும், மாறுபட்ட கருத்துக்கள் தொடர்ந்து ஒரு வாக்கியத்தில் வரும்போதும் அரைப்புள்ளி இடவேண்டும். இந்த இடங்களில் இரண்டு மாத்திரை நேரம் நிறுத்த வேண்டும்.

**மாதிரி வினாத்தாள் - I**

**அழகப்பா பல்கலைக்கழகம்**

**தொலைநிலைக் கல்வி இயக்ககம்**

**பி.லிட் - தமிழ் - முதலாமாண்டு - இரண்டாம் பருவம்**

**10722 - இலக்கணம் நன்னூல் - சொல்லதிகாரம்**

**பகுதி - அ**

**I. அனைத்து வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடை தருக.( 10 x 2 = 20 )**

1.ஒருமொழி என்றால் என்ன?

2.ஐம்பாலைச் சுட்டியுரைக்க

3.பெயர்ச்சொல்லின் பொது இலக்கணம் யாது?

4.மூன்றாம் வேற்றுமை உருபுகள் யாவை?

5.குறிப்பு வினை குறித்து எழுதுக.

6.ஒருமொழி ஒழி தன் இனங்கொளற்குரித்தே – சுட்டியுரைக்க.

7.இரட்டைக்கிளவி - குறிப்பிடுக.

8.இடைச்சொல் என்றால் என்ன?

9.ஒருகுணம் தழுவிய உரிச்சொல்லிற்குச் சான்று காட்டுக.

10.இரட்டை மேற்கோள் எவ்விடத்து வரும்?

**பகுதி – ஆ**

**II. ஒரு பக்க அளவில் விடை தருக.( 5 x5= 25 )**

11 (அ)தகுதி வழக்கு என்பதனை விளக்குக.

( அல்லது )

ஆ,அறுவகை வினா குறித்து எழுதுக.

12(அ) விளியேலாப் பெயர்கள் யாவை?

( அல்லது )

(ஆ ) முதல் வேற்றுமை குறித்து எழுதுக.

13. (அ) பெயரெச்சம் என்பதனைச் சான்றுகளுடன் சுட்டுக.

(அல்லது )

( ஆ ) வினையெச்ச வாய்பாடுகள் யாவை?

14(அ) இடைப்பிறவரல் என்பதனை விளக்குக.

(அல்லது )

(ஆ) தாப்பிசைப் பொருள்கோள் குறித்து எழுதுக.

15(அ) முன்னிலை அசைச்சொற்கள் குறித்து எழுதுக

(அல்லது )

(ஆ ) உயிரல் பொருள்களின் குணப்பண்புகள் யாலை?

**பகுதி - இ**

**III. எவையேனும் மூன்றனுக்குக் கட்டுரை வடிவில் விடை தருக. ( 3 x10= 30 )**

16.சொற்களின் பாகுபாட்டினை விளக்கி வரைக.

17.வினையியல் செய்திகளைத் தொகுத்துரைக்க.

18.தொகைநிலைத் தொடர்மொழிகளை விவரி

19.ஆகுபெயர் குறித்துக் கட்டுரைக்க.

20.இடையியல் செய்திகளைத் தொகுத்துரைக்க.

## மாதிரி வினாத்தாள் - 2

### அழகப்பா பல்கலைக்கழகம்

### தொலைநிலைக் கல்வி இயக்ககம்

### பி.லிட் - தமிழ் - முதலாமாண்டு - இரண்டாம் பருவம்

### 10722 - இலக்கணம் நன்னூல் - சொல்லதிகாரம்

### பகுதி - அ

**I.அனைத்து வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடை தருக. ( 10 x 2 = 20 )**

1.மூவகை மொழிகள் யாவை?

2.திரிசொல் என்றால் என்ன?

3.தற்கிழமை, பிறிதின் கிழமை என்பதனைக் குறிப்பிடுக.

4.விளியுருபு ஏலாப்பெயர்கள் யாவை?

5.உருபு மயக்கம் என்பதனைக் குறிப்பிடுக.

6.தெரிநிலை வினை என்பதனைத் தருக

7.வினையெச்சம் என்பதனைச் சுட்டியுரைக்க.

8.செயப்படுபொருளைச் செய்தது போலக் கிளத்தல் எவ்விடத்து வரும்?

9.ஏகார இடைச்சொல் எவ்வெப் பொருள்களில் வரும்?

10.காற்புள்ளி எவ்விடத்து வரும்?

### பகுதி – ஆ

**II.ஒரு பக்க அளவில் விடை தருக. ( 5 x 5= 25 )**

11 (அ) வழக்கு என்பதனை விளக்குக

( அல்லது )

(ஆ ) செய்யுள் என்பதன் இலக்கணத்தைத் தருக.

12 (அ) வடசொல் குறித்து எழுதுக.

( அல்லது )

( ஆ ) விளிக்கப்படும் பெயர்களைக் குறிப்பிடுக.

13 (அ ) பண்புத்தொகை – சான்றுடன் நிறுவுக.

( அல்லது )

(ஆ ) உவம உருபுகளைத் தருக.

14 (அ ) எண்வகை விடைகளை விளக்குக.

(அல்லது )

( ஆ )ஈ, தா, கொடு என்பன பயின்றுவரும் இடங்கள் யாவை?

15 ( அ ) ஓகார, உம்மை இடைச்சொல் பயின்று வரும் இடங்கள் யாவை?

( அல்லது )

( ஆ ) பலகுணம் தழுவிய உரிச்சொல்லைச் சான்றுடன் விளக்குக.

பகுதி - இ

**III.எவையேனும் மூன்றனுக்குக் கட்டுரை வடிவில் விடை தருக. ( 3 x 10= 30 )**

16. இருதிணைப் பொதுப்பெயர்கள் குறித்து கட்டுரைக்க.

17.ஆறாம் வேற்றுமை உணர்த்தும் செய்திகளைத் தொகுத்துரைக்க.

18.பத்து வகை எச்சங்கள் குறித்து விவரி

19. வழாநிலை, வழுவமைதி குறித்து எழுதுக.

20. உரியியல் செய்திகளைத் தருக.

**மாதிரி வினாத்தாள் - 3**

**அழகப்பா பல்கலைக்கழகம்**

**தொலைநிலைக் கல்வி இயக்ககம்**

**பி.லிட் - தமிழ் - முதலாமாண்டு - இரண்டாம் பருவம்**

**10722 - இலக்கணம் நன்னூல் - சொல்லதிகாரம்**

**பகுதி - அ**

**I.அனைத்து வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடை தருக. ( 10 x 2 = 20 )**

1.அஃறிணைப் பால்கள் யாவை?

2.அன்மொழித்தொகை என்றால் என்ன?

3. முறைப்பெயர் இரண்டு யாவை?

4.கண் உருபினை ஏற்கும் வேற்றுமை யாது?

5.சினைவினை எவ்வாறு வரும்?

6.காலம் கரந்த பெயரெச்சம் எவ்வாறு அழைக்கப்படும்?

7.மரபு என்றால் என்ன?

8..முன்னத்தின் உணரும் கிளவியும் உளவே – சுட்டியுரைக்க

9.தில் இடைச்சொல் எவ்வாறு வரும்?

10. இரட்டை மேற்கோள் எவ்விடத்தில் பயன்படுத்தப்படும்?

**பகுதி – ஆ**

**II.ஒரு பக்க அளவில் விடை தருக. ( 5 x 5= 25 )**

11(அ ) இருதிணை ஐம்பால் குறித்து விளக்குக.

( அல்லது )

(ஆ )இயல்பு வழக்கு குறித்து எழுதுக.

12 (அ ) திரிசொல் - விளக்குக.

( அல்லது )

(ஆ) பெயரின் பொது இலக்கணத்தை விளக்குக.

13. ( அ ) ஐந்தாம் வேற்றுமை – விளக்கியுரை

(அல்லது )

(ஆ ) வினைச்சொல்லின் இலக்கணத்தைத் தருக.

14.( அ ) வினைமுற்று விகுதிகள் குறித்து எழுதுக.

( அல்லது )

(ஆ ) உவமைத்தொகையை விளக்குக.

15. (அ ) திணை, பால் வழுவமைதி - சுட்டியுரைக்க

( அல்லது )

( ஆ ) தமிழில் அரைப்புள்ளி, முக்காற்புள்ளி பயின்று வரும் இடங்கள் யாவை?

**பகுதி - இ**

**III. எவையேனும் மூன்றனுக்குக் கட்டுரை வடிவில் விடை தருக. ( 3 x 10= 30 )**

16. உயர்திணை ஆண்பாற்பெயர்கள் - விளக்கி வரைக.

17. இருதிணைப் பொதுவினைகள் குறித்துக் கட்டுரைக்க.

18.தொகைநிலை, தொகாநிலைத் தொடர்மொழிகள் குறித்து விவரி.

19.இடைச்சொற்களின் இலக்கணத்தைச் சுட்டி அவை பயின்று வரும் இடங்களையும் விவரி.

20.உயிரின் வகைப்பாடு, உயிருள்ள,உயிரற்ற பொருள்களின் பண்புகள் போன்றவற்றை உரியியல்வழித் தருக.